# முதன் முதலாய் மயங்குகிறேன்!



வஹிஷா

# முதன் முதலாய் மயங்குகிறேன்!

வநிஷா

## ப்ரோலோக் (முன்னுரை)

**2010, உதகமண்டலம்**

“சட்டையைக் கழட்டி காமிச்சாத்தான் நீ பொண்ணுன்னு ஒத்துக்குவோம். இல்லைனா எங்க கேங்குல அசைண்ட்மேண்ட் செய்ய நீ சேர முடியாது” என சொல்லி சிரித்த

பெண்களை அடக்கப்பட்ட கோபத்துடன் பார்த்தாள் இவள்.

கண்கள் கலங்கும் போல இருந்தது அந்த பதினைந்து வயது மடந்தைக்கு. கண்ணில் இருந்து ஒரு சொட்டு கண்ணீர் கீழே இறங்கினாலும் கன்னம் பழுக்கும் அளவுக்கு அறைந்தே தள்ளி விடுவார் இவள் அப்பா. அடிக்குப் பயந்தே பழகிய பழக்கம், அப்பா பக்கத்தில் இல்லாத போதும் தொடர்ந்தது. கண்ணை சிமிட்டி அழுகையை அடக்கியவள், அந்தப் பெண்களை புறக்கணித்து விட்டு வீட்டுக்கு நடையை எட்டிப் போட்டாள்.

அது உதகமண்டலம் என அழைக்கப்படும் ஊட்டி. ஒத்தக்கல் மந்து(ஒற்றைக்கல் மந்தை) என அழைக்கப்பட்ட இடம் ஆங்கிலேயர்களால் உதகமண்ட் என மறுவி இப்பொழுது உதகமண்டலமாகி இருந்தது.

இவள் ஆண் பெண் என இருபாலரும் படிக்கும் கோஎட் பள்ளியில் தான் படித்து வருகிறாள். ஆண் பையனைப் போல ஒட்ட வெட்டிய தலை முடி, கூரான மூக்கு, சின்னதாய் உதடு,

வில்லாய் வளையாமல் நேர் கோட்டில் இருந்த புருவம், ஒல்லியான உடல்வாகு. தினம் செய்யும் கடுமையான உடற்பயிற்சியால் அந்த ஒல்லி உடம்பு கூட முறுக்கேறி தெரிந்தது. அவள் வயது பெண்களை விடவும் நெடு நெடு வளர்த்தி. இவள் பெண்ணாக இருப்பாளோ என நம்மை யோசிக்க வைக்கக் கூடியது அவளின் பெரிய கண்கள் மட்டுமே! பெண்கள் உடைக்குள் இருக்கும் ஓர் ஆண்மகன் என்பது போலத்தான் அவள் நடை உடை பாவனைகள் இருக்கும். பள்ளிக்கு பெண்கள் பாவாடை மற்றும் ஓவர்கோட்

அணிய வேண்டும் எனும் கட்டாயம் இருந்ததினால் தான் அதை உடுத்தி வருகிறாள். வீட்டில் இருக்கும் நேரம் டீஷெர்ட், ஜீன்ஸ், ஷோர்ட்ஸ், ஸ்வெட்டர் என எல்லாம் ஆண்கள் அணியும் வகையிலேயே இருக்கும்.

பள்ளியின் கராத்தே டீமில் இருக்கிறாள் இவள். அதோடு ஹோக்கி டீமிலும் டிபென்ஸாக விளையாடுகிறாள். விழுந்து வாரி ரத்தக் காயம் ஆனாலும் துடைத்துப் போட்டு விட்டு மீண்டும் போய்

ஃபீல்டில் நிற்பாள் இவள். படிப்பிலும் மிக மிக கெட்டிக்காரி.

இப்படி பல திறமைகள் கொண்டிருந்தால், கண்டிப்பாக பல எதிரிகளையும் சில துரோகிகளையும் சந்தித்துத்தானே ஆக வேண்டும். மற்ற விஷயங்களில் அவளை சாய்க்க முடியாது என்பதால், அவளின் பாலினத்தை கைகளில் எடுத்துக் கொண்டார்கள் இவர்கள்.

எதாவது ஒரு போட்டியில் வென்று வந்தால்,

“இது பொம்பள சட்டைப் போட்ட ஆம்பள! மத்த பொண்ணுங்கள ஜெயிச்சு கப்பு வாங்கறது பெருசா என்ன?” என அவள் காது படவே பேசி செல்வார்கள்.

“இது பாய்ப்ரெண்ட் தேடுமா, இல்ல கேர்ள்ப்ரேண்ட் தேடுமா? எதுக்கும் நாம, பொண்ணுங்களாம் கொஞ்சம் கவனமா இருக்கனும்டி! உரசி கிரசி வச்சிடப் போகுது நம்மள” என கேலி பேசி சிரிப்பார்கள் பெண் பிள்ளைகள்.

ஆண் பிள்ளைகளோ,

“உன்னை நான் மச்சின்னு கூப்பிடவா, மச்சினினு கூப்பிடவா? ஒரே கன்பீயூசனா இருக்கே!” என சொல்லி இவள் தோள் மேல் கைப்போடுவார்கள்.

தோளில் விழுந்த கையைப் பிடித்து முறுக்கி,

“மேல கைய வச்ச, செத்துருவடா!” என மிரட்டி விட்டு அசால்டாக கிளம்பிப் போய் விடுவாள் சின்னவள்.

இதனால் ஆண்கள் பக்கமும் அவளுக்கு நல்ல நண்பர்கள் இல்லை.

**பெண்கள் பக்கமும் நல்ல நட்புக்கள் இல்லை.**

**இப்பொழுது கூட குரூப்பாக அசைமேண்ட் செய்ய வேண்டும் என ஆசிரியர் சொல்லி இருந்ததனால் தான் அந்தப் பெண்களிடம் பேசப் போய் அவமானப்பட்டு வந்தாள்.**

**நடந்தே வீட்டை அடைந்தவள், கேட்டைத் திறந்து உள்ளே போனாள். போட்டிருந்த நீல ஸ்வேட்டரையும் மீறி குளிர் உடலை விறைக்க**

வைத்தது. வீட்டுக் கதவைத் திறக்கும் முன்னே, ஓடி வந்தது அவளது நாய் ஜோனா! ஜோனா, பார்டர் கூலி வகையை சேர்ந்த கருப்பு வெள்ளை நிறத்து நாய். கீழே அமர்ந்து, அதன் கழுத்தை சொரிந்து கொடுத்தவள்,

“ஐ மிஸ்ட் யூ ஜோனா! மிஸ்ட் யூ சோ மச்” என்றாள்.

அதுவும் லொல் லொல் என குரைத்து தனது மகிழ்ச்சியைக் காட்டியது.

“ராசா, டீ குடிக்க வாங்க! குளிருக்கு இதமா இருக்கும்” என சமையல்

அறையில் இருந்து அழைத்தார் அவர்கள் வீட்டின் வேலைக்காரி மீனாக்குமாரி.

“வரேன் மீனம்மா!” என பதில் அளித்தவள்,

“ஜோனா, லெட் மீ வாஷ் அப் அண்ட் கம்” என தன் நாயிடமும் சொல்லி விட்டு குளியலறைக்கு சென்றாள்.

தன்னை சுத்தப்படுத்திக் கொண்டு, உடை மாற்றி சமையல் அறைக்கு வந்தாள். இனிப்பில்லாத டீ, காய்கறி சாலட், மற்றும் அவித்து பெப்பர்

**போட்ட சிக்கன் ப்ரேஸ்ட் அவளுக்காக காத்திருந்தது. நாற்காலியில் அமர்ந்தவள்,**

**“மீனம்மா, டாடிதான் இல்லையே! கொஞ்சமா காரசாரமா எதாச்சும் கண்ணுக்குக் காட்டக் கூடாதா?” என பாவமாய் கேட்டாள்.**

**“ஐயாவுக்கு தெரிஞ்சது, எனக்கு வேலை காலி ராசா!” என்றவருக்கு மனது கேட்கவில்லை.**

**தனக்கென வைத்திருக்கும் இஞ்சி ஊறுகாயை ஒரு கரண்டி அள்ளி**

**அவள் தட்டில் வைத்தார் மீனம்மா. பட்டென வழித்து அதை வாயில் போட்டுக் கொண்டவள், கண் மூடி அதன் ருசியை அனுபவித்தாள்.**

**“என்னத்த பணம் இருந்து என்னத்த செய்ய! பெத்தப் புள்ளைக்கு வாய்க்கு ருசியா சாப்பாடு போட மனசு வரலியே இந்த ஐயாவுக்கு. எப்போ பாரு வெந்ததும் வேகாததுமா போட்டு வாட்டறாரே! என்ன டயட்டோ, என்ன கருமமோ!” என முணுமுணுத்தவாறே வேலையைப் பார்க்கப் போனார் அவர்.**

**உணவு உண்டதும், ஸ்டடி ரூமுக்குப் போய் நோட்பேட்டை எடுத்துப் பார்த்தாள் சின்னவள். அன்றைக்கு என்ன என்ன செய்ய வேண்டும் என அவளுடைய தந்தையால் பட்டியலிடப்பட்டிருந்தது அதில்.**

**என்சைக்ளோப்பீடியா பேஜ் நம்பர் 118ல் உள்ள எல்லாவற்றையும் மனனம் செய்ய வேண்டும்.**

**டைம்ஸ் டேபிள் 6யை மனனம் செய்ய வேண்டும்.**

**டிக்சனரியில் நேற்று எங்கு நிறுத்தினாயே அங்கிருந்து அடுத்த**

பக்கம் முழுவதும் மனனம் செய்ய வேண்டும்.

“அப்பாடா! இன்னிக்கு மூனு டாஸ்க் தான்! நேத்து மாதிரி அஞ்சு இல்ல!” என சந்தோசப்பட்டுக் கொண்டவள், கடகடவென படித்து மனனம் செய்ய ஆரம்பித்தாள்.

தந்தைக் கொடுத்த வேலையை முடித்தவள், அதன் பிறகே பள்ளிப் பாடங்களை செய்ய ஆரம்பித்தாள். அதையெல்லம் முடிப்பதற்குள் வீட்டிற்கு வந்திருந்தார் அவள் டாடி. உணவை முடித்துக் கொண்டவர் அவளது ஸ்டடி ரூமுக்கு வந்தார்.

**“குட் ஈவ்னிங் டாடி”**

**“குட் ஈவ்னிங்” என்றவாறே, என்சைக்ளோபேடியாவைக் கையில் எடுத்தவர்,**

**“டெல் மீ அபாவ்ட் ரெய்ன்போ!” என்றார்.**

**“சன்லைட் தூறல் போடற மழைத்துளி மேல பாஸ் ஆகறப்போ ரெய்ன்போ வருது டாடி!”**

“குட்!” என்றவர் மற்ற மற்ற கேள்விகளையும் மிஷின் கன்னில் இருந்து தெறிக்கும் தோட்டா போல தெறிக்க விட்டார். இவளும் படபடவென பதிலளித்தாள்.

“குட் குட்! லவ் யூ சன்(son)”

தந்தையின் பாராட்டில் மலர்ந்த முகம், சன் எனும் அழைப்பில் கூம்பிப் போனது.

“லெட்ஸ் டூ சம் சபார்ர்ரிங் சன்(sparring—பலமாக தாக்கிக் கொள்ளாமல், சண்டை போடுவது).”

நாற்காலியில் இருந்து எழுந்தவள், இரு கைகளையும் சண்டைப் போடுவது போல முகத்துக்கு முன்னே நீட்டிக் கொண்டாள். அவள் தகப்பனும் அப்படியே நின்றார். முதலில் அவர் தாக்க, இவள் கையைக் கொண்டு முகத்தை மறைத்துக் கொண்டு தடுத்துக் கொண்டே வந்தவள், அவர் அசந்த நேரம் பார்த்து அவர் முகத்துக்கு ஒரு குத்து விட, மூக்கில் பட்டு ரத்தம் கொட்டியது அவள் தந்தைக்கு.

ரத்தத்தைப் புறங்கையால் துடைத்துக் கொண்டவரின் முகமெல்லாம் மலர்ந்து விகசித்தது.

“ஐம் சோ ப்ரவுட் ஆப் யூ மை சன்!” என்றவர் அவளைக் கட்டிக் கொண்டார்.

இந்த மாதிரி அணைப்பு எல்லாம் அத்திப் பூத்தாற் போலத்தான் கிடைக்கும் இவளுக்கு. தன் தந்தையின் அருகாமை கொடுத்த இதத்தை ஆழ்ந்து அனுபவித்தாள் அந்தக் குட்டிப் பெண்.

வீட்டுப் பாடங்களை முடித்து, படுக்க தனது அறைக்கு வந்தாள். கதவை சாற்றி பூட்டிவிட்டு, ஜன்னல்களையும் பூட்டிவிட்டு திரைச்சீலையை இழுத்து மூடினாள். போன முறை கராத்தே போட்டியில் தங்கம் வென்றிருக்க, அவள் தந்தை புத்தம் புதிய சம்சோங் கேலக்சி போன் ஒன்று வாங்கித் தந்திருந்தார். அவளுக்கு நண்பர்களா இருக்கிறார்கள் போன் செய்ய! அந்த போனை பாட்டு கேட்பதற்காக மட்டுமே பயன்படுத்துவாள்.

மெல்லிய சத்தத்தில் அவளது கனவு கண்ணன், பேவரேட் சிங்கர் ஜோனாவின் பாடல்களை ஒலிக்க

விட்டாள். டீஷர்டை இடுப்புக்கு மேலே ஏற்றி ஒரு முடிச்சு போட்டு, வயிற்றை கொஞ்சம் காட்டியவள், பைஜாமா பேண்டையும் கொஞ்சம் கீழே இறக்கி விட்டாள். தந்தைக்குத் தெரியாமல் வாங்கி மறைத்து வைத்திருக்கும் செக்க சிவப்பு நிற லிப்ஸ்டிக்கை எடுத்து உதட்டுக்கு தடவியவள், பவுடரை எடுத்து முகத்தில் அப்பிக் கொண்டாள். கட்டிலின் மேல் ஏறி நின்றவள், மெல்லிய குரலில் பாடிக் கொண்டே உடலை வளைத்து நெளித்து நளினத்துடன் ஜோனாவின் ஆங்கில பாடல்களுக்கு ஆட ஆரம்பித்தாள்.

ஜோனாவின் பாடல்கள் தான் அவளது இருட்டடித்த வாழ்க்கைக்கு ஒரு விடிவெள்ளி. அவனின் பாடல்கள் தான் நொந்து போன அவள் இதயத்துக்கு மருந்து. ஜோனாவைத்தான் தனது குட்டி இதயத்தில் பூட்டி பூஜித்து வந்தாள் சின்னவள். இது காதலில்லை, ஒருவரின் திறமையைப் பார்த்து ஏற்படும் விடலைப் பருவத்து பெண்ணின் ஈர்ப்பு!

அவள் வாழ்க்கை ஜோனா, பள்ளி, படிப்பு, உடற்பயிற்சி, தந்தை, மீனம்மா என எப்பொழுதும் போல போய் கொண்டிருந்தது. இதெல்லாம்

**ஆணாக வளர்ந்து வரப்பட்டவள் பூப்பெய்தி தான் பெண்தான் என நிரூபிக்கும் வரைதான்!!!!!**

**அத்தியாயம் 1**

**லாஸ் ஏஞ்சல்ஸ்—இன்றைய தினம்**

**(ஆங்கில உரையாடல்கள் உங்களுக்காக தமிழில்)**

**“நோ வே இன் ஹெல்!”**

**கண்கள் சிவக்க, நெற்றி நரம்பு புடைக்கக் கத்திய மகனை**

அமைதியாகவே எதிர் கொண்டார் சூசன்.

“அவர் உனக்கு அப்பாடா! உன்னைக் கூட வச்சிக்கனும்னு அவருக்கும் ஆசை இருக்கும்தானே!”

“அப்பான்னு சொல்லாதீங்க! ஹீ இஸ் ஜஸ்ட் அ ஸ்பெர்ம் டொனெர்”

“அலெக்சாண்டர்!!!”

“கத்தாதீங்க மாம்! அவருக்காக நாம ரெண்டு பேரும் சண்டைப் போட்டுக்கறத நெனைச்சா சிரிப்பு சிரிப்பா வருது! அவர் உங்கள ஓர் உடம்பாத்தான் பார்த்தாரு! அப்படி............ புனிதமா வாழ்ந்த உங்க வாழ்க்கையில நான் வந்தது கூட

ஆக்சிடேண்ட் மாதிரிதான்! என்னமோ தவம் இருந்து என்னைப் பெத்து போற்றி பாதுகாத்து வளர்த்த மாதிரி பில்ட் அப்லாம் வேணா!" என்றவன் அலட்சியமாக சோபாவில் சரிந்தான்.

அடிக்கடி அப்பா, அப்பா என ஏங்கிய மகனிடம் வெளிப்படையாக எல்லாவற்றையும் சொல்லி வளர்த்தது தப்போ என நொந்துப் போனார் சூசன்.

சூசன், லாஸ் ஏஞ்சல்சில் மிக ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். பதினாறு வயதுக்கே வேலைக்குப் போக வேண்டிய கட்டாயம். அந்த வயதுக்கு என்ன வேலை கிடைக்கும்! ரெஸ்டாரண்டுகளில் வெய்ட்ரெஸ்

வேலைப் பார்த்தார். பதினெட்டு ஆனதும் பார்களிலும், பிஸ்ட்ரோக்களிலும் பார்டெண்டர் வேலைக்கு மாறினார். சம்பளமும் டிப்ஸிம் ஓரளவு குடும்பத்துக்கு உதவும் அளவு வந்தது.

பார்களில் வேலை செய்யும் போது சாதாரணமாக நாட்கள் கடந்து விடாது. டிப்ஸ் கொடுக்கிறேன் பேர்வழி என மேற் சட்டைக்குள் பணத்தை நுழைப்பார்கள். நம்மூரில் கரகாட்ட பெண்ணுக்கு சில பொருக்கி ஜந்துக்கள் பணத்தை ரவிக்கைக்குள் சொருகுவார்களே அந்த மாதிரி! கையைப் பிடித்து இழுப்பது, நான் ரெடி நீ ரெடியா என அழைப்பது,

நடந்துப் போகும் போது பின்னால் தட்டுவது, இன்னும் சில போதை தலைக்கு ஏறிப் போன கேஸ்கள் கட்டாய முத்தமிட முயல்வது வரை நடக்கும். தினம் தினம் போராட்டம் தான் சூசனுக்கு. வேலையையும் விட்டு விட முடியாத சூழல். தனக்கும் கீழே பள்ளி செல்லும் வயதில் மூன்று தம்பிகள். அப்பா இல்லாத குடும்பத்தில், மீன் மார்க்கேட்டில் வேலை செய்யும் அம்மாவின் சம்பளமும் சொற்பமே!

பணத்துக்கு குறை வைத்த ஆண்டவன் அவருக்கு குரல் வளத்தைக் கொட்டிக் கொடுத்திருந்தான். அவர் பாடினால்,

கேட்பவருக்கு உயிர் உருகி போகும்! பாத்ரூம் சிங்கராக இருந்தவருக்கு ஒரு நாள் அடித்தது அதிர்ஸ்டம். அவர்கள் பாரில் வியாபாரத்தைப் பெருக்குவதற்காக சிங்கிங் காண்டேஸ்ட் அறிவித்திருந்தார்கள். விளையாட்டுத்தனமாக முயன்றுதான் பார்ப்போமே என முதலாளியிடம் அனுமதி வாங்கி போட்டியில் பங்கெடுத்துக் கொண்டவருக்கு முதற் பரிசு கிட்டியது. சந்தோஷமாக பரிசுப் பணத்தை வாங்கிக் கொண்டவருக்கு இன்னொரு பரிசையும் தர காத்திருந்தது விதி.

அன்று இரவு ஷிப்ட் முடிந்து வீட்டுக்குப் புறப்பட்டுக்

கொண்டிருந்தவரை எதிர்கொண்டார் ஓர் அழகான இந்திய இளைஞர்.

“ஹாய் சூசன்!”

தன் ஓட்டைக் காரில் ஏற முயன்றவரை வழிமறித்த அந்த இளைஞரை அச்சத்துடன் பார்த்தார் சூசன்.

“ஹாய்! நீங்க யாருன்னு தெரியலையே எனக்கு!”

“பயப்படாத சூசன்! நீ இன்னிக்குப் பாடனத நான் கேட்டேன்! வாவ்! என்ன சொல்லன்னு தெரியல! இட்ஸ் டிவைன்! உன் குரலால அப்படியே என்னை மயக்கி கட்டிப் போட்டுட்ட!”

**“ஓ! தேங்கஸ்” என பட்டும் படாமல் சொன்ன தூசன்,**

**“நான் கிளம்பனும்! லேட் நைட் ஆகிடுச்சு” என கிளம்பிவிட்டார்.**

**தங்கள் நாட்டு ஆண்களின் லட்சணமே மணத்துப் போய் கிடக்கிறது. இதில் அந்நிய நாட்டு ஆடவனிடம் நின்று பேச பைத்தியமா அவருக்கு. அதோடு அந்த இளைஞனின் கண்ணில் தெரிந்த மயக்கமும் குரலில் தெரிந்த குழைவும் பயத்தைக் கொடுக்க, விட்டால் போதும் என ஓடிவிட்டார் தூசன்.**

“குரல் மட்டும் இல்ல ஆளும் அழகாத்தான் இருக்கா! வாட் அ வெள்ளை!” என தனக்குள் முணுமுணுத்துக் கொண்டார் ஜெய்க்குமார்.

ஜெய்க்குமார் பரம்பரை பணக்காரர். ரூபாய் நோட்டில் காதை குடைந்து அதை குப்பையில் தூக்கிப் போடும் அளவுக்கு வசதி படைத்தவர். சோப் போடுவதில் வல்லவர் அவர். அதாவது அவருக்கு குடும்பத் தொழில் சோப் தயாரிப்பது என சொல்ல வந்தேன். அதோடு சின்ன வயதில் இருந்தே சினிமா மோகம் அவருக்கு. டைரக்டராக வேண்டும் எனும் ஆசைக்குத் தந்தை பச்சைக்

கொடி காட்ட, லாஸ் ஏஞ்சல்சில் அது சம்பந்தமாக படிக்க வந்திருந்தார். திங்கள் முதல் வெள்ளி வரை படித்து கிழிப்பவர், வீக்கேண்ட்களில் நண்பர்கள் பட்டாளத்துடன் இப்படி பார் பாராக குடித்து விட்டு குட்டிகளுடன் கூத்தடிப்பார். அந்நாட்டில் தான் ஓன் நைட் ஸ்டாண்ட் சர்வசாதாரணமாயிற்றே! (ஓன் நைட் ஸ்டாண்ட் என்றால், இரவில் பிக்கப், காலையில் ட்ராப் அப். (குடி போதையில் யாருடன் இருந்தோம் என்று கூட பலருக்குத் தெரியாது.) எந்த பெண்ணுடனும் நிரந்தர தொடர்பு வைத்திருக்கவில்லை அவர். ஆனால்

சூசனின் மயக்கும் குரலும் கட்டி இழுக்கும் அழகும் ஓர் இரவுக்கு மட்டும் போதாது என புரிந்துப் போனது ஜெய்க்குமாருக்கு.

சூசன் வேலைப் பார்க்கும் பாருக்கு தினம் வர ஆரம்பித்தார் அவர். முடிய முடிய கோக் மட்டும் வாங்கி வைத்துக் கொண்டு, ஒன்றும் பேசாமல் பார்வையாலே அவளைப் பின் தொடர்ந்தார். பார்களில் பீரை விட கோக் போன்ற பானங்கள் தான் இன்னும் விலை அதிகம். குட்டைப் பாவாடை, வெள்ளை ப்ளவுஸ், இடுப்பில் இறுக்கிக் கட்டிய ஏப்ரன் என அங்கும் இங்கும் நடமாடிக் கொண்டிருந்த மாதுவே போதையூட்டி

**சித்தம் கலங்க வைத்துக் கொண்டிருக்கும் போது, மதுவுக்கு அங்கே என்ன அவசியம்!**

**சேட்டைகள் ஒன்றும் செய்யாமல் பார்வையால் தன்னை வருடும் ஜெய்யை சூசனும் கவனிக்காதது போல கவனித்துக் கொண்டுதான் இருந்தார். அந்நிய நாட்டவர் என தயக்கம் இருந்தாலும், டீசண்டாக தன்னை சைட் அடிப்பவரை இந்த சின்னப் பெண்ணுக்கும் பிடிக்கத்தான் செய்தது. அங்கே வரும் மற்ற ஆண்களைப் போல தொப்பை இல்லாமல், மாநிறத்தில், கத்தை மீசையுடன், திடகாத்திரமாக தெரிந்தவரை காண காண மனம்**

தடுமாறியது. தன் மீது வந்து விழும் மற்ற பெண்களை மறுத்து விட்டு தன்னையே பார்க்கிறாரே என மனம் பெருமையில் விம்மவும் செய்தது.

அந்த வார இறுதியில் ஜெய்யின் மேசை அருகே போய் நின்ற சூசன்,

“என்ன வேணும் உங்களுக்கு?” என கேட்டார்.

“யூ!”

அவரின் ஒற்றை வார்த்தை பதிலில் புருவத்தை உயர்த்தினார் சூசன்.

“எனக்கு உன்னையும் உன் பட்டு போன்ற குரலையும் ரொம்ப பிடிச்சிருக்கு! உன் வாழ்க்கையில

ஒரு அங்கமா இருக்க எனக்கு ஒரு சான்ஸ் குடுப்பியா பேபி?"

சட்டென சரி சொல்ல முடியவில்லை சூசனுக்கு. என்னவோ தயக்கம்.

ஜெய்க்கோ ஒரே கொண்டாட்டம். இத்தனை நாள் திரும்பிக் கூட பார்க்காமல் இருந்தவள், தானாக வந்து பேசவும், பட்சி சிக்கி விட்டது என புரிந்துப் போனது அவருக்கு. அதற்கு மேல் சோப் கம்பேனி ஓனருக்கு சின்ன வயது பெண்ணுக்கு சோப் போடுவதை சொல்லிக் கொடுக்கவா வேண்டும்.

இரண்டே வாரத்தில் அவளைத் தன் வசமாக்கி இருந்தார். நண்பர்களுடன்

தங்கி இருந்தவர், தங்களுக்காக குட்டி அபார்ட்மேண்ட் ஒன்றை வாடகைக்கு எடுத்தார். காதல் மொழி பேசி, அக்கறை காட்டி, அன்பு செலுத்தி, நான் இருக்கிறேன் என புரிய வைத்து இரண்டாவது வாரத்தில் அந்தக் குட்டியை சொந்தக் குட்டி ஆக்கி இருந்தார். ஆங்கிலேயன் தான் இந்தியனை ஆள முடியுமா? ஓர் இந்தியனும் ஆங்கிலேயனை ஆளலாம் என நிரூபித்தார் ஜெய்க்குமார். சூசன் இன்னும் கன்னியாய் இருந்தது அவருக்கே ஆச்சரியம்தான். முதல் விருந்தை தனக்களித்தவள் மீது, கொஞ்சமாய் பாசம் துளிர் விட்டது ஜெய்க்கு.

அந்த நாட்டில் இருந்த வரை சூசனை தனக்கே தனக்கு என வைத்துக் கொண்டார். வைத்துக் கொண்டார் என்பது சரியான உவமைதான் இங்கே. அவளை ராணி போல தாங்கினார். அவள் குடும்பத்துக்கும் சேர்த்து செலவு செய்தார். சூசனும் ஜெய்யின் அன்பில், அவர் காட்டிய காதலில் மயங்கித்தான் நின்றார். ஜெய் கேட்கும் போதெல்லாம் சலிக்காமல் பாடி அவரை மகிழ்விப்பார் சூசன். இப்படியே இவர்களின் உறவு, ஜெய்யின் படிப்பு முடியும் வரை தொடர்ந்தது.

அவர் கிளம்பும் போது கண்ணில் நீருடன் நின்றவரைப் பார்த்து,

“உனக்கு செலவுக்கு மாசம் மாசம் பணம் வர மாதிரி ஏற்பாடு செஞ்சிருக்கேன் பேபி! நாம தங்கி இருந்த அபார்ட்மேண்டையும் உன் பேருக்கு வாங்கிருக்கேன். என் சூழ்நிலையைப் பொருத்து அடிக்கடி வந்து பார்த்துக்கறேன் உன்னை. ப்ளிஸ் டோண்ட் க்ரை” என அணைத்து சமாதானப்படுத்தினார்.

சொன்னதற்கேற்ப அடிக்கடி வரத்தான் செய்தார். பெற்றவர்கள் அவருக்கென்று ஒரு பணக்கார பெண்ணைப் பார்த்து திருமணம் முடித்து வைத்தார்கள். பணம் பணத்தோடு சேர்வது தானே இயல்பு. பணம் இருந்தால் மனம் கவரும்

அம்சங்கள் இருந்து விடுமா என்ன! அவர் மனம் என்னவோ வெளியூர் ஆட்டக்காரி சூசனையும் உள்ளூர் வீட்டுக்காரி சூர்யாவையும் ஒப்பிட்டுப் பார்த்து சுணங்கியது. அதனாலேயே வெளியூர் பயணம் அடிக்கடி நடக்க ஆரம்பித்தது. அப்பொழுதுதான் சூசனின் வயிற்றில் உதித்தான் அலெக்சாண்டர் ஜோனா! விஷயம் கேள்விப்பட்டு இவர் பிள்ளை தனது என நம்பக்கூட இல்லை. வெள்ளைக்காரி டபுள் கேம் ஆடிவிட்டாளா என சந்தேகம் பிடித்து ஆட்டியது.

பையன் பிறக்க, மனம் கேட்காமல் வந்து பார்த்தார். வெள்ளை வெளேர்

என சூசனின் நிறத்தில் இருந்தாலும், மூக்கும் முழியும் இவரை ஒத்திருந்தது. அது கூட தன் மாதிரி இருப்பது, கண்கள் ஆடும் கபட நாடகமோ என பயந்து, டி,என்,ஏ டெஸ்ட் எடுத்து உறுதியானதும் தான் ஒழுங்காகவே மூச்சு விட்டார் ஜெய்க்குமார்.

ஊரில் சூர்யாவும் வயிற்றைத் தள்ளிக் கொண்டு தான் இருந்தார். என்னதான் சூசனுக்குப் பிறந்தது தன் குழந்தையானாலும், சூர்யா பெற்றுக் கொடுப்பது தானே குடும்ப வாரிசு! சூசனுக்குத் தேவையானதை செய்து விட்டு இந்தியாவுக்குப் பறந்து விட்டார் ஜெய்க்குமார்.

அவர் எடுத்த முதல் படமும் ஹிட் அடிக்க, அதன் பிறகு அவருக்கு ஏறு முகம்தான். அமெரிக்காவுக்கு ஷூட்டிங் என போனால் மட்டும் சூசனைப் பார்த்து, விட்ட குறை தொட்ட குறை என மேட்டரை முடித்து விட்டு வருவார். டாடி, டாடி என காலை சுற்றி வரும் வெள்ளை மகனைத் தூக்கி,

“அழகன்டா நீ!” என குண்டு கன்னத்தில் முத்தமிடுவதோடும் அவன் பராமரிப்புக்கு காசு கொடுப்பதோடும் கடமை முடிந்தது அவருக்கு.

இந்த வாழ்க்கை முறையால் சலிப்படைந்துப் போனார் சூசன்.

ஏழ்மை நிலையில் இருந்தவருக்கு, ஆரம்பத்தில் ஜெய் கொட்டிக் கொடுக்கும் பணம் பெரிதாக தெரிந்தது. வயது ஏற, பணம் மட்டுமே வாழ்க்கைக்கு எல்லாமும் ஆகி விடாது என உணர்ந்துக் கொண்டார். எப்பொழுதாவது கொட்டி போகும் வான் மழையை நம்பி இருந்தால், தரிசாக போய்விடாதா நிலம்!

அடுத்த முறை ஜெய் வந்த போது, தான் இன்னொருவரை திருமணம் முடிக்கப் போவதாக அறிவித்தார் சூசன். இது நாள் வரை, சென்னையில் இருக்கும் போது, இங்கே இவள் இன்னொருவனுடன் இருப்பாளோ என அடிக்கடி மனதை உளப்பிக்

**கொள்பவருக்கு, இத்தோடு முடித்துக் கொள்வோம் என தோன்றி விட்டது. அதோடு இவர் பிரபலமான டைரக்டராகி இருந்தார். இம்மெனுமுன் மேலே வந்து விழ பல நடிகைகள் காத்திருந்தனர்.**

**அன்றோடு அவர்களின் காதல் சகாப்தம் ஒரு நிறைவையடைந்தது. மகன் தன்னுடனே இருக்கட்டும் என சொல்லி விட்டார் சூசன். தம்பிகளையே வளர்த்து ஆளாக்கியவருக்கு, மகனை விட்டுவிட மனம் வருமா! தனக்குப் பிடித்த ஒருவரை காதலித்து மணந்தும் கொண்டார். அவருடன் ஒரு பெண்ணும் ஒரு பையனையும்**

பெற்றுக் கொண்டார். பெரியவனை பாசமகத்தான் வளர்ந்தார். ஆனாலும் ஒரு கட்டத்துக்கு மேல் விலகிப் போக ஆரம்பித்து விட்டான் அலெக்ஸ்.

தந்தையின் கம்பீரமும், தாயின் குரல் வளமும் சொத்தாய் இருக்க, வேறெதுவும் தேவையில்லை என பதினாறு வயதில் வீட்டை விட்டு வெளியேறிவிட்டான் அலேக்ஸ். படித்தது கூட ஹை ஸ்கூல் வரைதான். அங்கேதான் ஹை ஸ்கூல் வரை கவர்மேண்ட் பள்ளியில் படிக்கலாமே. அதற்கு பிறகு தானே காலேஜ் செல்ல வேண்டும் என்றால் சொந்த

பணத்தைப் பயன்படுத்த வேண்டும். நல்ல பெற்றவர்கள் என்றால் குழந்தைப் பிறந்த உடனே, காலேஜ் ஃபண்ட் என சேமிக்கத் தொடங்கி விடுவார்கள். ஜெய்யும் பணம் கொடுக்க சம்மதித்தார்தான். எட்டிப் பார்க்காத தந்தையின் பணமும் கூட எட்டிக்காயாய் கசந்தது இவனுக்கு.

நண்பர்கள் நால்வர் ஒன்றாய் சேர்ந்து பேண்ட் ஒன்றை நிறுவி, பார் பிஸ்ட்ரோ என பாடி ஆடி சம்பாதிக்க ஆரம்பித்தார்கள். அலேக்ஸ் பாட்டெழுதி பாடுவான். கிட்டாரும் வாசிப்பான். மற்ற மூவரும் ட்ரம், ரிதம் கிட்டார், பேஸ் கிட்டார் என வாசித்து பட்டையைக் கிளப்புவார்கள்.

‘ஃபோர்(4) டைரக்‌ஷன்’ என்பது இவர்களின் பேண்டின் பெயர். ஜோனா எனதான் பாடும் முன்னே தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வான் அலேக்ஸ். ஷோ செய்து கிடைக்கும் பணமெல்லாம் தண்ணி, தம், பெண்கள் என சரியாக இருக்கும். சில சமயம் ஜோய்ண்ட்(கனாபிஸ் என அழைக்கப்படும் போதை வஸ்து. சிகரேட் போல சுருட்டி புகைப்பார்கள்) கூட வாங்கி உபயோகிப்பார்கள்.

ஊர் ஊராக போய் கிடைத்த மோட்டேல்களில்(ஹோட்டேல் போல தான் ஆனால் விலை மலிவு) தங்கி, அனுமதி கொடுத்த பார்களில் பாடி என இளமையை அனுபவித்து

வாழ்ந்தார்கள் நால்வரும். இதெல்லாம் அவர்களுக்கு ப்ரேக் கிடைக்கும் வரைதான். ஒரு பாரில் இவர்கள் பாடியது, யூடியூபில் வைரலாக ஜோனாவுக்கு மட்டும் சோனி மியூசிக்கில் ஆல்பம் செய்ய வாய்ப்பு வந்தது. வளர்ந்து வரும் இசை கலைஞர்களுக்கு இது மிக பெரிய வாய்ப்பாகும். நண்பர்களை விட்டு எப்படி என மறுக்கப் போனவனை மூவரும் சேர்ந்து ஒப்புக் கொள்ள வைத்தார்கள்.

அதன் பிறகு அவன் தொட்டது எல்லாம் துலங்கியது. அவனே எழுதி பாடியது எல்லாம் ஹிட்டடித்தது. அழகனாய் இருந்தவனை கிழவியில்

இருந்து குழந்தை வரை தங்களது ஐடலாக(idol) வைத்துக் கொண்டார்கள். எங்கே போனாலும் ஜோனா, ஜோனா என கோஷம்தான். க்ரெம்மி அவார்ட், பில்போர்ட் மியூசிக் அவார்ட் என வந்து குவிந்தது.

பெயர் புகழ் வரவும் முன்பு போல சுதந்திரமாக உலாவ முடியவில்லை. பணம் கொட்டிக் கிடந்தது, ஆனால் நிம்மதி இல்லாமல் போனது அலெக்ஸுக்கு. புகழ் ஏற ஏற அதை தக்க வைத்துக் கொள்ள போராட்டம். அடுத்த ஆல்பத்தையும் ஜெய்க்க வைக்க வேண்டும் எனும் நிர்ப்பந்தம். காளானாய் முளைத்து வரும் புதிய வரவுகளோடு போராடி பந்தயத்தில்

முன் நிற்க வேண்டுமே! பாட்டெழுத உட்கார்ந்தால் ஸ்ட்ரெஸ்சில் மைண்ட் ப்ளாக் ஆகியிருந்தது. அவன் கூட இருந்து பாசம் காட்டி பரிவாய் தலை வருட யார் இருக்கிறார்கள்!

நண்பர்கள் மூவரும் தங்கள் வாழ்க்கையோடு ஒன்றிட, தாயும் தன் பிள்ளைகளோடு வாழ்ந்திட இவனுக்கு அனாதையாய் ஆகி விட்ட உணர்வு. ஸ்ட்ரெசில் போதை மாத்திரை ஓவர் டோஸ் ஆகிட, இரண்டு வாரங்கள் பேச்சு மூச்சின்றி கிடந்தான் அலேக்ஸ். எப்படியோ டாக்டர்கள் உயிரை மீட்டு கொண்டு வந்திருந்தார்கள்.

மகனின் நிலை கண்டு ஓடி வந்தார் சூசன். அவன் கையைப் பற்றிக் கொண்டு அழுதேவிட்டார். ஜெய்க்குமார் சில வாரங்களுக்கு முன் தான் இவரைத் தொடர்பு கொண்டு மகனை இந்தியா அனுப்பி வைக்க முடியுமா என கேட்டிருந்தார். ரீசன்டாக அவர் எடுத்த படங்கள் எல்லாம் படு தோல்வி.

தற்பொழுது இன்ஸ்டாவில் அலேக்ஸ் பதிவேற்றிய ஒரு பாடலால், இந்தியாவிலும் வைரலாகி இருந்தான் அவன். ஆம்! எப்பொழுதாவது வரும் தந்தை தன்னைப் பாராட்டி விடமாட்டாரா, மற்ற தந்தைகளைப் போல

தன்னுடனே இருந்து விடமாட்டாரா என சிறு வயதிலேயே பணம் கட்டி தமிழ் பயின்றிருந்தான் அவன். அட்சர சுத்தமாக பேசாவிட்டாலும் ஓரளவு பேசுவான். அவ்வளவு கியூட்டாக இருக்கும் அவன் பேசுவதை கேட்கும் போது. பொழுது போகாமல் தமிழில் சில வரிகள் பாடி பதிவேற்றி இருந்த போஸ்ட் இந்தியா முழுதும் பரவி அவனுக்கு இன்னும் ரசிகைகளை(கொஞ்சூண்டு ரசிகனும் இருக்காங்க) அள்ளி குவித்திருந்தது.

புகழடைந்திருக்கும் மகனை நாயகனாக வைத்து படம் எடுத்தால் மீண்டும் ஒரு ரவுண்ட் வரலாம் திரையுலகில் எனும் எண்ணத்தில்

தான் சூசனை அழைத்திருந்தார் ஜெய்க்குமார். இடமாற்றம் மகனின் ஸ்ட்ரெஸ்சைக் குறைத்து அவனுக்கு நல்ல பாதையைக் காட்டக் கூடும் என நம்பிய சூசன் அவனை இந்தியா கிளப்ப முயன்றார். அவர் முயற்சி கைக்கூடுமா?

இங்கே இந்தியாவில் ஆயிரமாவது முறையாக ஜோனா பாடிய அந்த தமிழ் பாடல் வீடியோ கிளிப்பைக் கேட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

“பறவையே எங்கு இருக்கிறாய்

பறக்கவே என்னை அழைக்கிறாய்

தடயங்கள் தேடி வருகிறேன்

அன்பே!!!!”

**அந்த குரலில் ஒலித்த ஏக்கத்தில், இவள் கண்களில் கண்ணீர் நிற்காமல் வழிய ஆரம்பித்தது!**

**“ஐ லவ் யூ ஜோனா!” என மிக மிக மென்மையாக முணுமுணுத்தாள் அந்த யுவதி.**

## அத்தியாயம் 2

**‘உலகத்திலே பயங்கரமான ஆயுதம் எது?**

**நிலைக்கெட்டுப் போன நயவஞ்சகரின் நாக்கு தான் அது!’ என பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எம்.ஜி.ஆர் நடித்த படத்துக்கு பாடல் வரி எழுதியிருப்பார்.**

அலெக்ஸை கேட்டால், உலகத்தில் பயங்கரமான ஆயுதம் பெண்களின் கண்ணீர்தான் என்பான். அந்தக் கண்ணீர் தானே அவனை ப்ளைட் ஏற்றி இருந்தது.

ஒரு வாரமாய் அவன் கூடவே இருந்து, பேசி, அழுது, அரற்றி கரையாய் கரைத்திருந்தார் மகனை. தன்னை தானே செதுக்கிக் கொண்டவனுக்கு பிடிவாதம் மிக மிக அதிகமாக இருந்தது. இந்தியாவுக்கு போகவே மாட்டேன் என ஒற்றைக் காலில் நின்றவனை,

“நிரந்தரமா உன்னைப் போக சொல்லல அலேக்ஸ்! ஒரு ஹோலிடேவா நினைச்சிக்கோ!

**எத்தனை தடவை தான் ரீஹேபிலிட்டேஷன் செண்டர்ல**(**குடி, போதை இப்படிப்பட்ட விஷயங்களுக்கு அடிமையானவர்களை இங்கே கொண்டு சேர்ப்பார்கள். ட்ரைனிங், தெரெப்பி, மருந்து மாத்திரை என இவர்களை திருத்தி அனுப்புவார்கள். பிரபலங்கள் மிக ரகசியமாக அங்கே தங்கி இருந்து தங்களை குணப்படுத்திக் கொள்வார்கள்**) **அட்மிட் ஆகுவ நீ**! **புது இடம், புது சூழ்நிலை, புது மக்கள் இப்படின்னு இந்தப் பயணம் உன் ஸ்ட்ரெசை குறைக்கலாம். மைண்ட் ஃப்ரீயாகலாம்**! **மீண்டும் பாட்டு எழுத**

தூண்டலாம்! இவ்ளோ நன்மைகள் இருக்கு அலேக்ஸ்! ப்ளிஸ், எனக்காக! டேக் அ பிரேக் மை சன்" என சொன்னவர் மகனைக் கட்டிக் கொண்டார்.

"என்னை மன்னிச்சிடு அலேக்ஸ்! என்னாலதான் இப்படி ஆகிட்டியோன்னு ரொம்ப கில்ட்டியா இருக்கு!" என அழுது கரைந்தவரை இவன் தான் தேற்றும் படி ஆனது.

ஜெய்க்குமார் கேட்டிருந்ததைப் போல படத்தில் நடிப்பதைப் பற்றி இவனால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. பாடுவதில் இருந்த ஈடுபாடு, தன் பாடல் வீடியோ க்ளிப்பில் நடிப்பதில் இருந்ததில்லை

இவனுக்கு. அப்படிப்பட்டவனை முழு நடிகனாக சொன்னால், ஒத்துக் கொள்வானா! அரைகுறை ஆடையில் வரும் பெண்களை தொட்டுத் தடவி முத்தமிட்டு, ஆடி, வாயசைத்து, கடனே என நடித்துக் கொடுப்பான். இண்ட்ரேஸ்ட் இல்லாமல் நடிக்கும் க்ளிப்பிங்கே சக்கைப் போடு போடும். மில்லியன் கணக்கில் வியூஸ் அள்ளும். அதனால் தான் இவனை நடிக்க வைத்து மீண்டும் தன் இடத்தை கோலிவூட்டில் தக்க வைத்துக் கொள்ள முடிவெடுத்தார் ஜெய்.

“போறேன் மாம்! நீங்க சொன்ன மத்த காரணத்துக்காக போறேன்! ஆனா

என்னால படத்துல எல்லாம் நடிக்க முடியாது! இத அந்த ஸ்பெர்ம் டொனெர் கிட்ட சொல்லிடுங்க”

அவன் வருகிறேன் என ஒத்துக் கொண்டதே பெரிய விஷயம். இங்கு வந்தவுடன் எப்படியாவது படம் நடிக்க ஒத்துக் கொள்ள வைத்து விடலாம் என நினைத்த ஜெய் சந்தோஷமாக அவனை வரவேற்க ரெடியானார். அப்படி இப்படி என அங்கே எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்து விட்டு அலேக்ஸ் இந்தியா வர ஒரு மாதம் பிடித்தது.

அவன் வருகிறேன் என ஒத்துக் கொண்ட நொடியே, கிழக்கு கடற்கரை சாலையில் இருந்த அவரது

விருந்தினர் மாளிகையை இவனுக்காக ரெடி செய்ய ஆரம்பித்திருந்தார் ஜெய். தன் ரகசிய மகனை எப்படியும் தனது வீட்டில் கொண்டு போய் தங்க வைக்க முடியாது. அதை ஈடுகட்ட பணத்தை வாரி இறைத்து அந்த மாளிகையை சொர்க்கபுரியாக மாற்றி இருந்தார் ஜெய்.

அவன் வருவதற்குள் தற்பொழுது எடுத்துக் கொண்டிருக்கும் பட ஷூட்டைங்கை முடித்து விடலாம் என கேரளாவுக்குப் பயணப்பட்டிருந்தார் அவர். ஒரு வார ஸ்கேடியூல், ஹீரோவின் சொதப்பலால் இரு வாரமாக

இழுத்தடித்திருந்தது. அதனால் அவரது அசிஸ்டெண்டை அரேஞ் செய்திருந்தார் அவனை பிக் அப் செய்து நல்ல படி கவனித்துக் கொள்ள.

தமிழ்நாட்டு மண்ணில் இவன் காலடி வைத்த நேரம், மழை கொட்டோ கொட்டு என கொட்டியது! மழை மகள் வாழ்த்தி ஆசிர்வதித்து வரவேற்றாளோ! கண்ணுக்கு கூலர்ஸ் அணிந்துக் கொண்டவன், தொப்பியையும் மாட்டிக் கொண்டான். தனது லக்கேஜை கலேக்ட் செய்து கொண்டவன் தந்தை அனுப்பி வைக்கிறேன் என சொன்ன மனிதரை தேடி கண்களை சுழற்றினான்.

அவன் பின்னால் இருந்து தோளைத் தொட்டது ஒரு கரம். மெல்ல திரும்பிப் பார்த்தான் அலெக்ஸ்.

“ஹாய் மிஸ்டர் ஜோனா, ஐம் தீரன். மிஸ்டர் ஜெய் கிட்ட அசிஸ்டண்ட் டைரக்டரா இருக்கேன்!” என சிரித்த முகமாக கை குலுக்குவதற்காக தன் கையை நீட்டியபடி நின்றிருந்தான் ஓர் ஆடவன்.

“ஹாய்!” என்றவன் தன் கையை மடக்கிக் காட்டினான்.

“ஓ அமெரிக்கன் ஸ்டைல்!” என சொல்லி சிரித்தப்படியே தீரனும் தன் கையை மடக்கி அவன் கையோடு

இடித்து ஃபிஸ்ட் பம்ப் செய்து கொண்டான்.

“சாரி மிஸ்டர் ஜோனா! டைரக்டர் சார் இன்னிக்கு சென்னை வரதா இருந்தாங்க! ஆனா அங்க வேலை இழுத்தடிச்சிருச்சு! அவர் வர வரைக்கும் உங்கள நான் ரொம்ப நல்லா பார்த்துப்பேன்! கம், லெட்ஸ் கோ” என அழைத்தவன், அலெக்ஸின் லக்கேஜை வாங்கிக் கொண்டான்.

ஏற்கனவே இவன் ப்ளைட் எடுக்கும் முன்னே, தனது அசிஸ்டெண்ட் தீரன் வந்து அழைத்துக் கொள்வார் என தனது பிசி வேலைகளின் நடுவே மேசேஜ் செய்திருந்தார் ஜெய்.

“பை தி வே, நேர்ல பார்க்க நீங்க இன்னும் ரொம்ப ஹெண்ட்சமா இருக்கீங்க! நீங்க மட்டும் எங்க படத்துல நடிச்சீங்க, பொண்ணுங்க விடப் போற ஜொள்ளுல நீர் மட்டம் உயர்ந்து எங்க ஊரு வெள்ளக்காடு ஆகிடும்” என ஆங்கிலத்தில் உரையாடியபடியே வந்தான் தீரன்.

பல நாள் பழகியவன் போல சரளமாக தீரன் பேசினாலும், இவன் அமைதியாகவே அவனைப் பின் தொடர்ந்தான். முகமும் இறுக்கமாகவே இருந்தது.

“ஜோனா சார், இங்க உட்காருங்க! நான் வந்துடறேன்” என ஒரு

இருக்கையைக் காட்டி விட்டு சென்றான் தீரன்.

‘எங்க போறான் இவன்’ என சலித்தப்படியே அவ்விருக்கையில் அமர்ந்தவன் சுற்றும் முற்றும் வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்தான். முன்பொரு காலமென்றால் இவனைப் போல ஆங்கிலேயனைக் கண்டுவிட்டால் அப்படியே நின்று பேரதிசயத்தைப் பார்ப்பது போல பார்ப்பார்கள் ஆசிய மக்கள்.(சின்னப்புள்ளைல நான் அப்படித்தான் பேன்னு பார்ப்பேன். ஒரு வெள்ளைக்காரனை கட்டிக்கனும்னு தான் லட்சியம் வச்சிருந்தேன்! ஆசை தோசை

அப்பளவடையாகிருச்சு. ஜோ ஜேட்!) இப்பொழுது தான் இவர்கள் வருகை சர்வ சாதாரணமாகி விட்டதே! அதனால் யாரும் இவனைக் கண்டு கொள்ளவில்லை.

அவன் முன்னே டேக் அவே காபி கப் ஒன்று நீட்டப்பட்டது.

“ஃபிஸ்ட் பம்ப் செய்யறப்பவே கை ஜில்லுன்னு இருந்தது. அதான் சூடா காபி வாங்கி வந்தேன்! குடிங்க” என உபசரித்தான் தீரன்.

இவ்வளவு நேரம் தீரன் பேசிய எதற்கும் ஒப்புக்குக் கூட ஹ்ம்ம் கொட்டாதவன் முகத்தில், மெல்லிய புன்னகை வந்தது.

“தேங்க்ஸ் டூட்(dude)” என்றவன் காபியை வாங்கிக் கொண்டான்.

‘அப்பாடா புன் சிரிப்ப சிந்திட்டான். புன்னகைக்க ஒரு கப் காபின்னா, மலர்ந்து சிரிக்கனும்னா காபி கடையே வாங்கி குடுக்கனுமோ’ என ஏதேதோ யோசித்தப்படியே அலெக்ஸை பார்த்திருந்தான் தீரன்.

அவன் காபி அருந்தி முடித்ததும், ஏர்போர்ட்டில் இருந்து கிளம்பினார்கள் இருவரும். தீரன் காரை சென்னையில் மிக பிரபலமான ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் ஒன்றில் கொண்டு போய் நிறுத்தினான். காரை வேலட் பார்க்கிங்குக்கு கொடுத்து விட்டு,

**லக்கேஜை ஹோட்டல் பணியாளர்களிடம் ஒப்படைத்தான் தீரன்.**

**“ஏற்கனவே ரூம் புக் பண்ணி கார்ட் எடுத்துட்டேன்! வாங்க சார்” என தீரன் முன்னே நடக்க, அவனைப் பின் தொடர்ந்தான் அலேக்ஸ்.**

**ஹோட்டல் ரூமை திறந்து அலேக்ஸை உள்ளே விட்டவன்,**

**“நீங்க ரிப்ரேஷ் ஆகிட்டு கொஞ்ச நேரம் தூங்கி எழுங்க சார். இப்ப பசிக்குதா? ரூம் சர்வீஸ்க்கு சொல்லவா?” என கேட்டான்.**

**“இல்ல, பசிக்கல!”**

“சரி! நான் ஒரு த்ரீ ஹவர் கழிச்சு வரேன்! சாப்பிட வெளிய போகலாம். அப்படியே எங்க சிங்கார சென்னைய கொஞ்சமா சுத்திப் பார்க்கலாம். நீங்க ரெஸ்ட் எடுக்கற வரைக்கும் நான் கீழ லோபில இருக்கேன்” என்றான் தீரன்.

தீரனின் கைப் பிடித்து உள்ளே இழுத்த அலேக்ஸ்,

“யூ கேன் ச்சில் ஹியர் டூட் அண்ட்டில் ஐ டேக் அ நேப்! ஐ டோண்ட் மைண்ட்” என்றான்.

அதற்குள் லக்கேஜ் வந்திருக்க, பெல்பாய்க்கு டிப்ஸ் கொடுத்து அனுப்பி விட்டு உள்ளே வந்தான் தீரன். அங்கே ஏற்கனவே உடைகளை

களைந்து இடுப்பில் துண்டுடன் நின்றிருந்தான் அலேக்ஸ்.

“தீரன், என் லக்கேஜ்ல இருந்து பாக்ஸர்(ஆங்கில பட்டாபட்டி ஜட்டி) ஒன்னு எடுத்து வைங்க! நான் குளிச்சிட்டு வந்துடறேன்” என சொல்லியபடியே பாத்ரூம் போனான்.

‘ஜிம் பாடிடா இவனுக்கு! வயித்துல இருந்து நெஞ்சு வரைக்கும் அடுக்கடுக்கா படிக்கட்டு கட்டிருக்கான். இவனுக்கு வாய்த்த கொத்தனார்(ஜிம் ட்ரைனர்) மிக்க திறமைசாலி!’ என நினைத்துக் கொண்டே அவன் பேக்கைத் திறந்து பாக்ஸரை வெளியே எடுத்து வைத்தான்.

அவன் கொண்டு வந்திருந்த கிட்டாரை மெல்லத் தடவிப் பார்த்து பத்திரமாக அலமாரியின் உள்ளே எடுத்து வைத்தான் தீரன். பெட்சைட் லைட் ஒன்றை மட்டும் எரிய வைத்தவன், மற்ற விளக்குகளை அடைத்துவிட்டு, தொலைக்காட்சி முன்னே இருந்த சோபாவில் அமர்ந்துக் கொண்டான்.

குளித்து விட்டு வந்தவன், பாக்ஸரை அணிந்துக் கொண்டு அப்படியே கட்டிலில் விழுந்தான். சற்று நேரத்திலேயே, ஆழ்ந்த உறக்கத்திற்கு சென்றிருந்தான் அவன். அருகே எழுந்து வந்த தீரன், கம்போர்டரை

இழுத்து குளிருக்கு இதமாக போர்த்தி விட்டான்.

தூக்கக் கலக்கத்திலேயே,

“தேங்க்ஸ் டூட்” என்றவனைப் பார்த்து தீரனுக்கு புன்னகை வந்தது.

நன்றாக தூங்கட்டும் என அவன் போனை எடுத்து அடைத்து வைத்தான். ஏற்கனவே அந்தப் போன் ரோமிங்கால் லைன் இல்லாமல் கிடந்தது. அலெக்ஸின் லக்கேஜை திறந்து ஜீன்ஸ் ஒன்றை எடுத்து வெளியே வைத்தவன், டீ ஷர்ட் ஒன்றை எடுத்து அயர்ன் செய்து வைத்தான். எல்லா வேலைகளையும்

தூங்குபவனை டிஸ்டர்ப் செய்யாதபடி சத்தமில்லாமல் செய்தான்.

மூன்று மணி நேரமாகியும் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தான் அலேக்ஸ்.

“ஜோனா! ஜோனா!”

அந்தக் குரலில் மெல்ல அசைந்தான் அலேக்ஸ்.

“வேக் அப் ஜோனா சார்! சாப்பிட போகலாம்” என அவன் தோள் தொட்டு அசைத்து எழுப்பினான் தீரன்.

“ஹ்ம்ம்!” என்றவன் கஸ்டப்பட்டு கண்ணைத் திறந்தான்.

தூங்கி எழுந்ததும் தான் எங்கே இருக்கிறோம் என புரியாமல் மலங்க

மலங்க விழித்தவனை புன்னகையுடன் பார்த்தான் தீரன்.

“நம்ம வோர்ல்ட்ல ஏழு கண்டங்கள் இருக்காம்! அதுல நார்த் அமெரிக்காவுல இருந்த ஜோனாவாகிய நீங்க, ஆசிய கண்டத்துல இருக்கற இந்தியாவுக்கு இன்னைக்கு காலைல தான் வந்து இறங்கிருக்கீங்க! கண்டம் விட்டு கண்டம் வந்த ஜோனாவுக்கு அடிமையா அதாவது அசிஸ்டண்டா இருக்க இந்த ஆள நேர்ந்து விட்டுருக்காங்க” என இடுப்பை வளைத்து வணங்கினான் தீரன்.

அவன் செயலில் சிரித்து விட்டான் அலேக்ஸ்.

அதன் பிறகு முகம் கழுவி வந்தவன், தீரன் எடுத்து வைத்திருந்த உடைகளை தேங்க்ஸ் சொல்லி, அணிந்துக் கொண்டான்.

ரூமை பூட்டி விட்டு இருவரும் காரில் கிளம்பினார்கள்.

“வெஸ்டர்ன் வேணுமா? இல்ல இந்தியன் ஃபுட் ட்ரை செய்றீங்களா?”

“வந்த முத நாளே என் வயித்துக்கு அதிர்ச்சி குடுக்க வேணா தீரன். லெட்ஸ் கோ வெஸ்டர்ன். கொஞ்சம் கொஞ்சமா இங்க உள்ள உணவை சாப்பிட கத்துக்கறேன்” கொஞ்சும் தமிழ், கொஞ்சம் ஆங்கிலம் கலந்து பேசினான்.

“நீங்க தமிழ்ல பேசறது ரொம்ப கியூட்ட இருக்கு. கேட்டுட்டே இருக்கலாம் போல இருக்கு”

தீரன் வளவள என பேச அலேக்ஸும் சகஜமாக பேசத் தொடங்கி இருந்தான்.

உணவை உண்டுக் கொண்டே,

“எப்ப வருவாரு மிஸ்டர் ஜெய்?” என கேட்டான் அலேக்ஸ்.

“ஹ்ம்ம்... இன்னும் ஒரு டூ டேய்ஸ்ல வந்துடுவாரு! போன் பண்ணனுமா? உங்க போன்ல லைன் இல்லன்னதும் அடைச்சிப் போட்டுருக்கேன். அப்புறம் லோல்லல் சிம் கார்ட் ஒன்னு வாங்கி தந்துடறேன்”

“இல்ல பரவாயில்ல! நீயே மிஸ்டர் ஜெய் கிட்ட சொல்லிடு தீரன், நான் வந்துட்டேன்னு! அங்க இப்போ நைட், மாம் தூங்கிட்டு இருப்பாங்க. லேட்டர் பேசிக்கறேன் அவங்க கிட்ட”

உணவை முடித்ததும், காரிலேயே ஊரை சுற்றிக் காட்டினான் தீரன். மழை நின்று வெயில் எட்டிப் பார்க்க ஆரம்பித்திருந்தது.

“நீங்க கூலர்ஸ் போட்டு கேப் போட்டிருக்கவும் உங்கள அடையாளம் தெரியல மக்களுக்கு. இருந்தாலும் ஏன் ரிஸ்க்னு தான் காரிலேயே உக்கார வச்சி சுத்திக் காட்டுறேன்.”

**“நோ ப்ராப்ளம்! அண்ட் தேங்க்ஸ் தீரன்”**

**“எ..எதுக்கு தேங்க்ஸ்?”**

**“நான் சட்டுன்னு யார் கிட்டயும் பழகிட மாட்டேன். ஆனா உன் கிட்ட பேச, பழக ரொம்ப கம்பர்டபளா இருக்கு! யூ மேக் மீ ஃபீல் வெல்கம்” என சொன்னவன் கைகளை கிட்டார் வாசிப்பது போல செய்து கொண்டே பாட ஆரம்பித்தான்.**

**“You make me feel**

**You make me real**

**For the rest of my days, in so many ways**

**You make me feel”**

அவனோடு தீரனும் சேர்ந்துக் கொண்டான். பாட்டு முடியும் போது இருவருமே,

“வெஸ்ட்லைப்!”(வெஸ்ட்லைப் 1990-2000 ஆண்டுகளில் பேமசான பேண்ட்) என சொல்லி புன்னகைத்துக் கொண்டார்கள்.

“இங்லிஸ் பாட்டுலாம் கேப்பியா நீ?” என வியந்தான் அலேக்ஸ்.

“நீங்க பறவையே எங்கு இருக்கிறாய்னு பாடறப்போ நாங்க இங்லிஸ்ல பாட மாட்டோமா!” என கேட்டு சிரித்தான் தீரன்.

அந்தி சாயும் நேரம், கேப், கூலர்ஸ், ஜேக்கேட் என எல்லாம் போட

சொல்லி அலேக்ஸை பெசண்ட் நகர் பீச்சுக்கு அழைத்துப் போனான் தீரன். அங்கே கடல் காற்றை அனுபவித்தப்படி இருவரும் இசை, பாட்டு, ஜோனாவின் ஆல்பம், என நிறைய பேசினார்கள்.

பேச்சு வாக்கில்,

“நிம்மதி தேடி இங்க வந்திருக்கேன் தீரன் ! ஐ வாண்ட் பீஸ் ஆப் மைண்ட்!” என சொன்னான் அலேக்ஸ். அந்தக் குரலில் இழையோடிய சோகத்தை உள்வாங்கிக் கொண்டான் தீரன்.

“நீ பழைய தமிழ் பாட்டுலாம் கேட்டுருக்கியா ஜோனா?”

“இல்ல தீரன். கேட்டது இல்ல”

“சரி வா! கார்ல ஏறனதும் அந்த பாட்ட போட்டு விடறேன்” என அவனை காருக்கு அழைத்துப் போனான் தீரன்.

“எல்லோருக்கும் நீ தானே பாடுவ! உனக்காக இப்போ ஒரு பாட்டு நான் டெடிகேட் செய்யறேன் ஜோனா!”

“கோ ஆன்”

தன் போனில் இருந்து ப்ளூதூத் கனேக்ட் செய்து பாட்டை போட்டு விட்டு சேர்ந்து பாடினான் தீரன்.

“என்ன நினைத்து என்னைப் படைத்தான்

இறைவன் என்பவனே!”

என பாடியபடியே தன் பாக்கேட்டிலிருந்து கைக்குட்டையை எடுத்து அலேக்ஸின் முகத்தை துடைப்பது போல மூக்கில் அழுத்தினான். என்ன நடக்கிறது என உணர்ந்து தடுப்பதற்குள், அவன் தலையை இறுக்கிப் பிடித்து அசைய முடியாதபடி செய்தான் தீரன். மெல்ல மயங்கி அப்படியே தீரன் மேல் சாய்ந்தான் அலேக்ஸ். சீட்டை நன்றாக கீழிறக்கி, அவனை படுக்க வைத்து குளிராமல் இருக்க போர்த்தி விட்டான் தீரன்.

மறுநாள் வந்த சுவடு தெரியாமல் காணாமல் போயிருந்தான் அலெக்சாண்டர் ஜோனா!

## அத்தியாயம் 3

ஒரே கும்மிருட்டு. அந்த இருட்டில் ஓர் இடத்தில் மட்டும் ஒளி ஊடுருவி வருகிறது. அங்கே உயரமான நாற்காலி ஒன்று போட பட்டிருக்கிறது. மெல்ல நடந்து வந்து அந்த நாற்காலியில் அமர்கிறான் அலேக்ஸ். கையில் அவன் உயிராய் போற்றி பாதுகாக்கும் கிட்டார். கிட்டாரை டியூன் செய்தபடியே, ஸ்டேஜிக்கு கீழே பார்க்கிறான்.

ஜனங்கள் யாரும் இன்றி அவ்விடமே வெறிச்சோடிப் போய் கிடந்தது. ஏன் யாரும் தன் காண்சேர்ட்டுக்கு வரவில்லை என யோசித்தப்படியே, கிட்டாரை வாசித்துக் கொண்டே பாட வாயைத் திறக்கிறான் அவன். குரல் வெளியே வரவில்லை. இருமி, கணைத்து, செறுமி என எல்லா வகையிலும் முயன்று பார்க்கிறான். இல்லை, குரல் வெளி வரவேயில்லை. குரல் போய் விட்டதோ என பயம் நெஞ்சைக் கவ்வ, தொண்டையை இரு கை கொண்டு பரபரவென தடவி விட்டவன் மீண்டும் முயற்சித்தான். அப்பொழுதும் தோல்விதான். எது அவனின் வாழ்வாதாரமாக

இருந்ததோ, எது அவன் புகழ் பெற காரணமாக இருந்ததோ, எது கோடானு கோடி ரசிகர்களை பெற்று தந்ததோ அது இப்பொழுது அவனிடத்தில் இல்லை. பயத்தில் முத்து முத்தாய் வேர்க்க, கண்கள் கலங்க ஓவென பெருங் குரலெடுத்துக் கத்தினான் அலேக்ஸ்.

“ஒன்னும் இல்ல, ஒன்னும் இல்ல ஜோனா! கனவு தான்! எழுந்துக்கோ! ப்ளிஸ் வேக் அப் ஜோனா!” எனும் பதற்றமான குரலில் மெல்ல கண் விழித்தான் அலேக்ஸ்.

காட்சிகள் எதுவும் ஃபோக்கசாகாமல் மங்கலாக தெரிந்தன. தன்னருகே குனிந்து தேற்றிய உருவத்தை

வயிற்றோடு இறுக்கிக் கட்டிக் கொண்டான் அவன்.

“ஐம் ஸ்கேர்ட்!” என நடுங்கியவன் அணைத்த உருவத்தின் உள்ளேயே புதைந்து போய் விடுபவனைப் போல இன்னும் இறுக்கினான். அவன் அணைப்பில் உடல் விறைத்த அவ்வுருவம், மெல்ல மெல்ல இளகியது. அவன் அணைப்புக்குள் இருந்தாலும் அவனை திருப்பி அணைக்கவோ, விலக்கவோ முயலவில்லை அவ்வுருவம்.

“உனக்கு ஒன்னும் இல்ல! யூ ஆர் ஆல்ரைட்! முழிச்சுக்கோ ஜோனா!” மிக மெல்லிய குரலில் கெஞ்சியது அக்குரல்.

“தீரன்?”

குரலை வைத்து அடையாளம் கண்டுக் கொண்ட ஜோனாவுக்கு மங்கலாக பல நினைவுகள் ஞாபகத்துக்கு வந்தன. ப்ளைட் இறங்கியது, தீரனைப் பார்த்தது, காபி குடித்தது, ஹோட்டேல் போனது, தூங்கியது, பீச் போனது, எங்கே நிம்மதி பாட்டு, மயங்கியது, முழிப்பு வரும் போல இருந்த நேரத்தில் நாக்கில் அடிக்கப்பட்ட ஒரு வித கசப்பு ஸ்ப்ரே, மீண்டும் மயங்கியது, யாரோ அசால்ட்டாக தன்னை காரில் இருந்து இறக்கி படுக்கையில் படுக்க வைத்தது, தலை கோதியது என பல

நிழற்படங்கள் வரிசைக் கட்டி வந்து நினைவடுக்கில் முட்டி மோதின.

மெல்ல மெல்ல மூளை கூர்மைப் பெற, அணைத்திருந்த உருவத்தை படக்கென படுக்கையில் தள்ளி, அதன் வயிற்றில் ஏறி அமர்ந்தான் அலேக்ஸ். தீரனின் கை இரண்டையும் அவன் தலைக்கு மேல் உயர்த்தி ஒற்றைக் கைக் கொண்டு பிடித்து, இன்னொரு கரத்தால் தாடையை அழுத்திப் பிடித்தான்.

“யார்டா நீ? எதுக்கு என்னை மயங்க வச்ச? எங்க கொண்டு வந்துருக்க என்னை? ஹூ தெ ஹெல் ஆர் யூ?”

குரல் கரகரப்பாக வெளி வந்தது இவனுக்கு. இன்னும் மயக்கம் முற்றிலுமாக தெளிந்திருக்கவில்லை. ரூமில் உள்ள பொருட்கள் எல்லாம் சுழல்வது போல தோன்றியது அலேக்ஸுக்கு. தலையை உலுக்கிக் கொண்டவன், தனக்குக் கீழ் படுத்திருப்பவனின் முகத்தைக் கூர்ந்துப் பார்த்தான்.

கீழிருந்தவனோ மெல்லிய புன்னகையுடன்,

“நவ் ஹூ தெ ஹேல் ஆர் யூ!” என ராகமிழுத்து பாடினான்.

“மெடிசன் அவேனியூ!(அந்த பாடலை பாடிய பேண்ட்)” என்ற அலேக்ஸுக்கு

சிட்டுவேஷன் சாங் பாடியவனைப் பார்த்து புன்னகை வரும் போல இருந்தது. அடக்கிக் கொண்டு அவன் தாடையை இன்னும் அழுத்தினான்.

வலியில் முகம் சுழித்தாலும் திமிராக,

“வெல்கம் அலெக்சாண்டர் ஜோனா! இந்த சிறு முயல் விரிச்ச வலையில சிக்கிக் கொண்ட சிங்கமே! வருக வருக” என்றான் தீரன்.

“என்ன வேணும் உனக்கு? எதுக்கு இந்த கடத்தல்? டெல் மீ டேம்மிட்!” கத்தினான் அலேக்ஸ்.

“ரிலேக்ஸ் ஜோனா ரிலேக்ஸ்! நீ இன்னும் வீக்கா இருக்க! ப்ளிஸ் கால்ம் டவுன்”

பளாரென ஓர் அறை விழுந்தது தீரனுக்கு.

“ஆவ்ச், வலிக்குது ஜோனா!”

“நல்லா வலிக்கட்டும்! என்னடா ட்ரக் குடுத்த எனக்கு? நான் இன்னும் ட்ரக் அடிக்ஷனுக்காக மெடிகேஷன்ல இருக்கேன் தெரியுமா! ஹவ் டேர் யூ”

அலேக்ஸுக்கு பயமாய் இருந்தது. கடவுளின் காலைத் தொட்டுவிட்டு மீண்டும் பூலோகத்திற்கு வந்ததில் இருந்து உயிர் மேல் கொஞ்சமாய் ஆசை வந்திருந்தது. ட்ரக், ட்ரீங்க்ஸ்

பழக்கங்களுக்கு பாய் சொல்லி விட்டு மெடிகேஷனில் இருக்கிறான். தீரன் அடித்த ஸ்ப்ரே ஏதோ ஒரு வகையான ட்ரக்ஸ் என எண்ணிக் கொண்டவன், எங்கே மீண்டும் அதன் பின்னே போகும் ஆவல் வந்து விடுமோ என பயந்தான். அந்த எண்ணமே அவனை ஆக்ரோஷமாக மாற்றியது. அந்த பழக்கங்களில் இருந்து வெளி வர அவன் பட்ட பாடு அவனுக்குத்தான் தெரியும். உடற்பயிற்சி, தியானம், மருந்து மாத்திரைகள் என மனத்தை திசை திருப்ப அவனும் அவனது ஸ்ரின்க்கும்(சைக்கியாட்ரிஸ்ட்டை இப்படியும் அழைப்பார்கள்.

உள்ளுக்குள் இருந்து கொள்ளும் எதிரியை இவர்கள் ஸ்ரின்க்(சின்னதாக்குவது) செய்வதால் வந்த காரண பெயர்) படாத பாடு பட்டார்கள். ஓரளவு வெற்றி அடைந்தவனை மீண்டும் அந்த சூழலுக்குத் தள்ளினால், வெகுண்டெழ மாட்டானா?

“நீ உடம்ப ஆர்னால்ட் மாதிரி வச்சிருந்தாலும் நெஜத்துல எங்க ஊரு ஓமக்குச்சி சார் ரேஞ்ச்கு தான் உன் ஸ்ட்ரெங்த் இருக்கு!”

“வாட்? என்ன உளருற?” என்றவன் மீண்டும் கையை ஓங்கினான்.

“வலிக்குது ஜோனா!” என தன் பெரிய கண்களால் பாவமாய் பார்த்து கெஞ்ச, சட்டென கையை கீழே இறக்கினான் அலேக்ஸ்.

“உன் மேல சத்தியமா, நானே செஞ்ச மயக்க மருந்தும் ஸ்லீப்பிங் ஸ்ப்ரேவும் தான் யூஸ் பண்ணேன் ஜோனா! நீ ரொம்ப வீக்கா இருக்கவும் மருந்து சட்டுன்னு வேலை செஞ்சிருச்சு!”

தலை விண் விண்ணென வலிக்க ஆரம்பித்திருக்க நெற்றியை ஒரு கையால் தேய்த்துக் கொண்டான் அலேக்ஸ். அந்த சில விநாடிகளைப் பயன்படுத்திக் கொண்டு, பட்டென அவனை கீழே தள்ளி அவன் மேல்

**அமர்ந்திருந்தான் தீரன். அலேக்ஸின் கன்னத்தில் இரண்டு அறை வைத்தவன்,**

**“நீ குடுத்தத திருப்பி கொடுப்பேன்**

**எண்ணிக் கொள்ளடா என் வெள்ளை மன்னவா!” என பாட்டை மாற்றி வேறு பாட செய்தான்.**

**அலேக்ஸுக்கு கோபம் தலைக்கேற தீரனை தாக்க முயன்றான். இருவரும் அந்த கட்டிலிலேயே கட்டிப் புரண்டனர்.**

**ஒரு கட்டத்தில்,**

**“ஓ மை குட்னஸ்! ஓ மை குட்னஸ்!” என தீரனைத் தள்ளி விட்டு விலகி அமர்ந்தான் அலேக்ஸ்.**

“ப்ளடி ஹெல்! எ லேடி!!!!!!!”

அவன் குரலில் கோபம் இருந்ததா, ஆச்சரியம் இருந்ததா, சிரிப்பு இருந்ததா, கடுப்பு இருந்ததா, என பிரித்துப் பார்க்க முடியாத பாவம்!

தலையை நிமிர்த்திய அலேக்ஸ் கட்டிலில் முட்டிப் போட்டு நின்றிருந்த உருவத்தை மேலிருந்து கீழ் வரை அக்கு வேறு ஆணி வேறாக ஆராய்ந்தான். கண்கள் அவ்வுருவத்தின் நெஞ்சப் பகுதியில் நிலைக்குத்தி நின்றன. சிறியதாக இருந்தாலும், இருந்தது அது! கட்டிப் புரளும் போது கைப்பட்ட போதே அதன் மென்மை புரிந்துப் போனது

இவனுக்கு! அதனால் தான் சட்டென விலகினான்.

தீரனாக வந்தவன் தீரனில்லை. தீரி என வைத்துக் கொள்வோமா? அப்படி ஒரு வார்த்தை இல்லாததால் அவளை திரி என்போமா! திரி, அதிரிபுதிரி!!!!

மீண்டும் அவளை நன்றாக பார்த்தவன் தலையை இடம் வலமாக ஆட்டிக் கொண்டான்.

“எத்தனைப் பொண்ணுங்கள கடந்து வந்துருக்கேன்! ம்ப்ச்! என்னையே ஏமாத்திட்டியே! ஓ மை காட்” அவனால் இன்னும் நம்ப முடியவில்லை தன்னைக் கடத்திக்

கொண்டு வந்தது ஒரு பெண்ணொன்று.

தன்னை சந்திக்க வந்தப் போது குரல் கரகரவென ஆண் குரலை ஒத்தே இருந்தது. ஒல்லியான தேகம். ஆண்களைப் போலவே குட்டை முடி. முகத்தில் மீசை இல்லை. எத்தனையோ ஆண்கள் மீசை இல்லாமல் மொளு மொளுவென இருப்பதில்லையா! அலேக்ஸை பார்க்க வந்திருந்த பொழுது டீ ஷர்ட் அணிந்து அதன் மேலே லெதர் ஜேக்கேட் போட்டிருந்தாள். பேகி ஜீன்ஸ் தொள தொளவென எங்கே விழுந்து விடுமோ என்பது போல இருந்தது. ஆண்கள் அணியும் பாடி

ஸ்ப்ரே! அச்சு அசல் ஆண் போலவே வந்து தன்னை ஏமாற்றிய அந்தப் பெண்ணை மீண்டும் ஆச்சரியமாகப் பார்த்தான் இவன்.

அவளும் அவனைத்தான் பார்த்தவாறு இருந்தாள்.

“ஏன்?” என கேட்டான் இவன்.

“நிம்மதி வேணும்னு கேட்ட! அதான் குடுக்கலாம்னு கூட்டிட்டு வந்தேன்!”

அவள் பதிலில் கோபம் வர, தலையணையை அவள் மேல் வீசினான் அலேக்ஸ்.

“நான் எவ்வளவோ தப்பு பண்ணிருக்கேன்! ஆனா ஒரு பொண்ண கை நீட்டி அடிச்சது இல்ல!

நீ அடிக்க வச்சிட்ட! தெரியாம செஞ்சத மறுபடியும் தெரிஞ்சே செய்ய வச்சிடாதே! சொல்லு, முதல்ல உன் பேர சொல்லு!”

“ஜீவா!”

“நீ க்ரூப்பியா ஜீவா? இப்போலாம் நான் க்ரூப்பி கூட உறவு வச்சிக்கறது இல்ல! அதெல்லாம் விட்டு வந்து ரொம்ப வருஷம் ஆகுது! அதோட என் கூட இருக்க நான் செலெக்ட் பண்ணற பொண்ணுங்களுக்குக் கூட சில குவாலிட்டிஸ் இருக்கனும்னு நான் எதிர்பார்ப்பேன்! என் கையில சுருட்டிப் பிடிச்சிக்க நீள முடி இருக்கனும், என்னைத் தாங்கிக்க மெத்து மெத்துன்னு பஞ்சு போல

உடம்பு இருக்கனும், அப்புறம்.. ஓ யா! நான் வழுக்கி விழுந்துடாம இருக்க தேவையான இடங்கள்ல மேடு பள்ளங்கள் இருக்கனும்!” என்றவன்,

அவளை மேலிருந்து கீழ் வரை ஒரு பார்வைப் பார்த்து,

“சாரி பேப்! ஐம் நாட் இண்ட்டெரெஸ்டெட்!” என்றான்.

புகழ் பெற்ற பாடகனாய் ஆனதிலிருந்து நிறைய பெண்கள் மேலே வந்து விழுவார்கள். இவன் தங்கும் அறைகளில் பெல்பாயை கரேக்ட் செய்து வந்து ஒளிந்துக் கொள்வது, கேரவேனில் ஒளிந்துக் கொள்வது, ஷோ செய்யப் போகும்

இடங்களில் டாய்லெட்டுக்கு கூட செக்குரிட்டி இல்லாமல் போக முடியாது. அங்கும் ஒளிந்திருப்பார்கள் பெண்கள். (இதெல்லாம் நெஜமா நடப்பது. ஒரு துறையில்(ஸ்போர்ட்ஸ், நடிப்பு, இசை இப்படி) புகழ் பெற்றவர்களை படுக்கையில் சரிப்பது இந்தப் பெண்களுக்கு பெருமையான விஷயம்) ஆரம்பத்தில் எல்லாம் ஃபன்னாகத்தான் இருந்தது இவனுக்கு. போக போக இம்மாதிரி உறவுகள் கசந்துப் போனது. அதோடு வீடியோ லீக்கேஜ், பிள்ளை இவனுக்குத்தான் பிறந்தது என வழக்குத் தொடுப்பது, பெர்சனல் போட்டோக்களை மீடியாவுக்கு கொடுத்து காசு பார்ப்பது

என க்ரூப்பிகளால் பல விதமாய் பாதிக்கப் பட்டிருந்தான் அலேக்ஸ். போதுமடா சாமி என அந்த அத்தியாயத்துக்கு பெரிதாய் முழுக்கு போட்டிருந்தான்.

இந்த முறை இவள் தலையணையை அவன் மேல் தூக்கி எறிந்தாள்.

"நீ அதுக்கு மட்டும் தான் லாயக்குன்றது மாதிரி பேசாதே ஜோனா! ரொம்ப கோபமா வருது எனக்கு. எனக்கு கோபம் வந்தா நல்லது இல்ல! அடிச்சுப் புழிஞ்சு காயப் போட்டுருவேன்! ஆனாலும் யாருமே ஒத்துக்காத ஒரு விஷயத்த நீ ஒத்துக்கிட்டதால உன்னை இப்போதைக்கு சும்மா விடறேன்"

நன்றாக கட்டிலில் சாய்ந்து அமர்ந்துக் கொண்டவன், கேள்வியாக அவளைப் பார்த்தான்.

“என்னை பொண்ணுன்னே யாரும் ஒத்துக்கிட்டது இல்ல! நீ அதை நம்பனது மட்டும் இல்லாம, பேப்னு வேற கூப்டுட்டா! எனக்கு எவ்ளோ ஹேப்பியா இருக்குத் தெரியுமா ஜோனா! வார்த்தையால விவரிக்க முடியாது அத!” எனறவள் கட்டிலில் இருந்து கீழிறங்கி ஏதோ சாகசம் செய்பவளைப் போல நின்றாள்.

என்ன செய்யப் போகிறாள் என இவன் பார்க்க, மேலே எகிறி ப்ரண்ட் சமர்சால்ட் அடித்து அழகாய் குதித்து நின்றாள். ரூமை சுற்றி அதே போல

சமர்சால்ட் அடித்தவளை ஆவென வாய் பிளந்துப் பார்த்துக் கொண்டிருந்தான் அலேக்ஸ்.

“ஓ மை காட்! நீ பொண்ணா இல்ல புயலா? இப்படி சுழண்டு சுழண்டு அடிக்கற! நிறுத்து நிறுத்து” என சத்தமிட்டான். எங்காவது இவள் இடித்துக் கொண்டு மயங்கி விழுந்தால், இவன் எப்படி இந்த இடத்தை விட்டு வெளியேறுவது!

அவள் மீண்டும் கட்டிலின் அருகே வந்து கொஞ்சம் தள்ளி அமர்ந்ததும்,

“எனக்குப் புரியுது ஜீவா! ஐம் எ செலிபரிட்டி! யாருக்கும் என் கூட பழகிப் பார்க்கனும்னு தோணத்தான்

செய்யும். உனக்கு அப்படி தோணி, என்னை கிட்நப் பண்ணிட்ட! போகுது விடு, உன்னை மன்னிச்சிடறேன். நான் திரும்பி போகனும்! சோ ப்ளிஸ், நான் கெளம்பறதுக்கு அரேஞ்ச்மேண்ட் செய்யலாமா?" என கேட்டான்.

"ஓவர் மை டெட் பாடி" என அசால்ட்டாக சொன்னவள்,

"இனிமே நீ என் கூடத்தான் இருக்கனும் ஜோனா! உன்னை நான் ரொம்ப நல்லா பார்த்துப்பேன்! நீ கேட்டதெல்லாம் செய்வேன்! நல்லதா சமைச்சுப் போட்டு உன்னை ஸ்ட்ரோங்கா மாத்துவேன்! என் கூட இருந்தீனா ட்ரீங்க்ஸ், ட்ரக்ஸ் எதுவும் ஞாபகத்துக்கு வராது! வீ கென் பீ குட்

ப்ரேஷண்ட்ஸ்! நீ தேடி அலையற பீஸ் ஆப் மைண்ட் இங்க கிடைக்கும் ஜோனா! என் கூடவே இருந்திடேன்!" என அதிகாரமாக ஆரம்பித்தவள் கெஞ்சலில் முடித்தாள்.

"நோ" ஒற்றை சொல்லில் மறுத்தான் அலேக்ஸ்.

"டோண்ட் சே நோ! நோ சொல்லாதே, சொல்லாதே!" என கத்த ஆரம்பித்தாள் ஜீவா.

ஹிஸ்டீரியா வந்தது போல கத்த ஆரம்பித்தவளை வேகமாய் நகர்ந்து வந்து பிடித்துக் கொண்டான் அலேக்ஸ்.

“ஹேய் டோண்ட் ஷவுட்! ஜீவா, ஜீவா” என இவன் தோளைப் பிடித்து உலுக்க, அவன் தோளில் சாய்ந்தவள் அப்படியே மயங்கி சரிந்தாள்.

“ஹேய், ஹேய் மூலான்!(ஆண் வேடமிட்ட பெண் கார்ட்டூன் கேரக்டேர்)..வேக் அப்”

தன் மேல் மயங்கிக் கிடந்தவளை மிக மென்மையாய் கட்டிலில் கிடத்திய அலேக்ஸ், தண்ணீர் பாட்டில் எங்காவது கிடைக்குமா என ரூமை அலசினான்.

ஒற்றைக் கண்ணை கொஞ்சமாகத் திறந்து அவனின் தேடலை ரசித்தவள், அவன் திரும்புவது போல

**இருக்க படக்கென கண்ணை மூடிக் கொண்டாள்.**

**இவள் மூலானாய் இருப்பதும் பூலானாய்(பூலான் தேவி) மாறுவதும் நம் ஜோனாவின் கையில்! ஜீவாவுக்கு ஜீவன் கொடுப்பானா அவளின் ஜோனா?????**

**அத்தியாயம் 4**

**“ஒரு மாசம் இருப்பியா?”**

**“ஐ டோண்ட் நோ”**

**“அப்போ உனக்கும் வேணா எனக்கும் வேணா, மூனு வாரம்?”**

**“தெரியல”**

“ரெண்டு வாரம்?”

“ம்ப்ச்”

“போடாங்! ஒரு வாரம், ஏழு நாளு, 168 மணி நேரம், 10080 மினிட்ஸ், 604800 செகண்ட்ஸாச்சும் என்னோட இருப்பியா? அதுக்கு மேல ஒரு நானோசெகண்ட் கூட நீ இருக்க வேணா! ப்ளீஸ், ப்ளீஸ்! ப்ளிஸ் சொல்லேன் ஜோனா! நீ கௌம்பறதுக்கு என்னை நான் தயார்படுத்திக்கனும்ல!”

வீட்டின் வெளியே பெரிய மரம் ஒன்று இருக்க, அதில் கட்டி இருந்த ஊஞ்சலில் வேகமாய் ஆடிக்

கொண்டே இவனிடம் பேசிக் கொண்டிருந்தாள் ஜீவா.

இவனோ அந்த குட்டி வீட்டின் தாழ்வாரத்தில் சூரிய ஒளி ஊடுருவி வர, டீஷர்டைக் கழட்டி வைத்து விட்டு மல்லாக்கப் படுத்து சன்பாத் எடுத்துக் கொண்டிருந்தான். அவர்கள் நாட்டவர்களுக்கு சன்டேன்(suntan) ஆவது நம்மூர் மக்கள் அல்வாவை சுவைப்பது போல மிக விருப்பமான விஷயமாகும். வெளேரென இருக்கும் உடலை சூரிய ஒளியில் தீய வைத்து(காய வைத்து என சொல்ல வேண்டுமோ!) ப்ரௌன் நிறமாக மாற்றிக் கொள்வது அவர்கள் வழக்கம். அவர்கள் நம்

**வண்ணத்துக்கு வர விரும்ப, நாம் அவர்கள் வண்ணத்துக்குப் போக விரும்புகிறோம். இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை! அக்கரை கவ்வுக்கு(மாடு) இக்கரை கிரீனு(கிரீன்)!**

**ஜோனா இங்கே வந்து முழுதாக இரண்டு நாட்கள் ஆகியிருந்தன. ஜீவா அவனைக் கடத்தி வந்திருந்த இடம் பாண்டிச்சேரியில், ஒரு கடற்கரையை ஒட்டி இருந்தது. ஒற்றை அறை, குட்டி ஹால், சமயலறை, பாத்ரூம் என சின்ன காட்டேஜ் வகை வீடு அது. அக்கம் பக்கம் வேறு வீடுகள் எதுவும் இல்லாமல் தன்னந்தனியாக நின்றிருந்தது.**

ஆடிக் கொண்டிருந்த ஊஞ்சலில் இருந்து படக்கென குதித்தவள், அவன் அருகே வந்து குத்துக்காலிட்டு அமர்ந்தாள்.

கண் மூடி படுத்திருந்தவனைப் பார்த்து,

“ஜோனா!” என அழைத்தாள்.

“ஹ்ம்ம்”

“என் கேள்விக்கு பதில் சொல்லு!”

“ஹ்ம்ம்”

என்ன வெறும் ஹ்ம்ம் மட்டும் வருகிறது என உற்றுப் பார்க்க, சுவாசம் சீராய் வந்துக் கொண்டிருந்தது அவனுக்கு.

“தூங்கிட்டானா? கடத்திக் கொண்டு வந்து வச்சிருக்கேனேன்னு ஒரு பயம் இருக்கா! என்னமோ வேகேஷன் வந்த மாதிரி ரிலேக்ஷா இருக்கான்” என முனகியவாறே, எழுந்ததும் அவனுக்கு சாப்பிட கொடுக்க எதாவது செய்யலாம் என வீட்டின் உள்ளே நுழைந்தாள் ஜீவா.

அவள் உள்ளே நுழைந்ததும் புன்னகைத்துக் கொண்டவன், பின்னால் திரும்பி முதுகில் சூரிய ஒளி படுமாறு படுத்துக் கொண்டான். இன்சொம்னியாவால் பாதிக்கப்பட்டிருந்தவனுக்கு ஆழ்ந்த தூக்கம் என்பது கைக்குக் கிட்டாத வரமாய் இருந்தது. தன் வீட்டில்

தூக்கம் வருவதற்காகவென ஸ்பெஷலாக டிசைன் செய்த மெத்தையில் படுத்தால் கூட கிட்டே வராத தூக்கம், இங்கே கட்டாந்தரையில் அவனைக் கட்டித் தழுவியது.

அன்று மயங்கிக் கிடந்தவளை பாத்ரூமில் இருந்து தண்ணீர் கொண்டு வந்து எழுப்பி அமர்த்துவதற்குள் திண்டாடி விட்டான் ஜோனா. மயக்கத்தில் இருந்து விழித்தவள் டெம்ப்ரவரி அம்னீசியா வந்தது போல, வேறு பேச்சுக்குத் தாவி இருந்தாள்.

“நீ இன்னும் ஒன்னுமே சாப்பிடல ஜோனா! எப்போ எழுவன்னு நானும்

காத்துக்கிட்டே இருந்தேன். தோ உன்னோட திங்ஸ்லாம் அங்க வச்சிருக்கேன். போய் ப்ரேஷ் ஆகிட்டு வா! சாப்பாடு செஞ்சு வைக்கிறேன்" என பாத்ரூம் கதவைக் காட்டியவள், முகத்தில் அவன் தெளித்திருந்த தண்ணீரை டீஷேர்டைத் தூக்கித் துடைத்தப்படியே ரூமில் இருந்து விடுவிடுவென வெளியேறிவிட்டாள்.

எக்ஸர்சைஸ் செய்து முறுக்கேறி இருந்த வயிற்று தசைகளை, அவள் டீஷர்டைத் தூக்கிய சில விநாடி கேப்பில் தரிசித்த ஜோனாவுக்கு மெல்லிய விசில் வந்தது.

“நைஸ் ஏப்ஸ்(abs)” என முணுமுணுத்தப்படியே குளிக்க சென்றான்.

குளித்து விட்டு பசி காதடைக்க வந்தவனை வரவேற்றது கமகமவென்ற சாப்பாட்டு வாசனை. வட்டமான குட்டி டைனிங் டேபிளில் வீற்றிருந்தது உணவு வகைகள்.

“எனக்கு சிம்பிளாத்தான் சமைக்கத் தெரியும் ஜோனா! அது கூட இந்த பீச் ஹவுச வாங்கனதுக்கு அப்புறம் தான் கத்துக்கிட்டேன். தனிமையா இருக்கனும்னா லீவ் போட்டுட்டு ஒரு வாரம் இங்க வந்துடுவேன்! போனை அடைச்சுப் போட்டுட்டு சுதந்திரமா நான் நானா இருப்பேன்” என

பேசியபடியே அவனுக்கு தட்டை வைத்துப் பரிமாறினாள்.

முட்டையில் பட்டைத்தூள், உப்பு, பால் எல்லாவற்றையும் நன்றாக கலந்தடித்து, ரொட்டி துண்டுகளை அதில் நனைத்து வாட்டி ப்ரேஞ் டோஸ்ட் செய்திருந்தாள். வாட்டிய ரொட்டியின் மேல் தேனையும், பட்டரையும் தடவி இருந்தாள். அந்த இடமே கலவையான வாசனைகளில் நிறைந்திருந்தது. திராட்சை, பச்சை மற்றும் சிவப்பு ஆப்பிளையும் சின்னதாக நறுக்கி, மயோனிஸ் சேர்த்து சாலட் செய்திருந்தாள். குடிக்க ஏர்ள் கிரே டீ சுட சுட ஜக்கில் ஊற்றி வைத்திருந்தாள்.

“ஐம் ஸ்டார்விங்!” என்றபடியே வந்து அமர்ந்தான் ஜோனா.

தாம் எதற்கு கடத்தப்பட்டிருக்கிறோம் என அறிந்துக் கொள்ளக் கூட அவனுக்கு அவகாசம் வழங்கியிருக்கவில்லை ஜீவா. சண்டை, மயக்க நாடகம் என போயிருக்க, இப்பொழுது பசியில் காந்திய வயிற்றை முதலில் கவனிப்போம் என முடிவெடுத்திருந்தான் ஜோனா.

உணவை அவசர அவசரமாக வாயில் வைக்கப் போனவன், சற்று நிதானித்து பக்கத்தில் நின்றிருந்தவளை இழுத்து தன் மடியில் அமர்த்திக் கொண்டான். திகைத்துப் போய் ஆட்சேபிக்க வாய்

திறந்தவளுக்கு பேச வாய்ப்பளிக்காமல் ரொட்டியை ஊட்டி விட ஆரம்பித்தான்.

“விடு ஜோனா! என்ன செய்யற நீ!” என மறுக்க மறுக்க வாயில் ரொட்டித் துண்டுகளை திணித்தான்.

“எங்க ஊருல எல்லாம் ஹோஸ்ட் சாப்பிட்ட பிறகுதான் கெஸ்ட் சாப்பிடுவோம்! அது தான் மரியாதை” என்றவன் ஒரு கரண்டி சேலட்டையும் எடுத்து அவள் வாயில் திணித்தான்.

மடியில் இருத்தி, அவள் நகராமல் இருக்க வயிற்றை சுற்றி ஒரு கையால் அவன் வளைத்துப்

பிடித்திருக்க, இவள் நெளிய ஆரம்பித்தாள்.

அவன் கையைப் பிரித்தெடுத்துக் கொண்டு எழுந்தவள், ஜோனாவை முறைத்துப் பார்த்தாள்.

“இப்ப என்ன? இந்த சாப்பாட்டுல நான் எதாச்சும் கலந்துருக்கனானு டெஸ்ட் பண்ணறியா?” என கோபமாக கேட்டவள், மேசையில் அடுக்கி இருந்த எல்லா ரொட்டிகளைளைம் பாதி பாதி கடித்து விழுங்கி விட்டு மீதியை அவன் தட்டில் போட்டாள்.

“ஹேப்பியா? சாப்புடு!” என்றவள், டீயை ஒரு கப்பில் ஊற்றிக் கொண்டு

இன்னொரு நாற்காலியில் அமர்ந்தாள்.

அவள் கடித்து வைத்தது எனவெல்லாம் நாசுக்கு பார்க்க அவன் பசி அனுமதிக்கவில்லை. தட்டில் அவள் வைத்த எல்லாவற்றையும் முடித்து விட்டுத்தான் நிமிர்ந்துப் பார்த்தான். அவள் பாதி குடித்திருந்த டீயைப் பிடிங்கி குடித்தவனுக்கு அதன் பிறகு தான் பேசுவதற்கு கூட தெம்பு வந்தது.

“தேங்க்ஸ் ஏலான்” என்றவனை முறைத்தாள் ஜீவா.

“என்ன, என்ன முறைப்பு? நீ பார்த்து வச்ச வேலைக்கு, உன்னை அப்படியே

நம்பிடுவாங்களா? என்னை இங்கயே இருக்க வைக்க, நான் சுயநினைவ இழக்கற மாதிரி எதையாச்சும் சாப்பாட்டுல கலந்துருக்க மாட்டேன்னு எப்படி நம்பறது?” என கடுமையாக கேட்டான் ஜோனா!

பெருமூச்சொன்றை இழுத்து விட்டவள், எழுந்து ஹாலுக்குப் போனாள். அங்கே ஹால், கிச்சன், எல்லாம் திறந்தவெளி கான்சேப்ட் தான். பதில் சொல்லாமல் செல்லும் அவளையே கோபமாகப் பார்த்தப்படி அமர்ந்திருந்தான் ஜோனா. திரும்பி அவனிடம் வந்தவள், மொத்தமான ஆல்பம் ஒன்றை அவன் கையில் திணித்தாள்.

“என்ன?”

“பாரேன்!” என்றவளின் கண்களை ஆழ்ந்துப் பார்த்தான் ஜோனா. அந்த பெரிய கண்கள் அவனை என்னவோ செய்வது போல இருந்தன.

“என்னைப் பார்க்க சொல்லல! ஆல்பத்தப் பாரு”

பார்வையை விலக்கிக் கொண்டவன், ஆல்பத்தைத் திறந்துப் பார்த்தான். முன் பக்கத்தில் அலேக்சாண்டர் ஜோனா என எழுதி அவனின் பிறந்த தேதியையும் அழகான கெர்சிவ் ரைட்டிங்கில் எழுதி இருந்தாள். ஒவ்வொரு பக்கமாக திறந்துப் பார்த்தவனுக்கு உதட்டில் மெல்லிய

புன்னகை வந்தமர்ந்தது. அவன் எஸ்டிடியே அதாங்க வரலாறே அந்த ஆல்பத்தில் இருந்தது. சிறு வயது படங்கள் முதல் லேட்டஸ்ட் படங்கள் வரை, அவனைப் பற்றிய குறிப்புகள், அவன் பாடிய முதல் பாடலில் இருந்து போன வருடம் பாடிய பாடலின் லிரிக்ஸ் வரை, அவன் வண்டவாளங்களை தண்டவாளமேற்றிய மீடியாவின் கோசிப்ஸ் வரை நிறைய சேகரித்து வைத்திருந்தாள்.

“இது ஒன்னுதான் இங்க இருக்கு! மத்த ஆல்பம்லாம் வீட்டுல இருக்கு. உன்னோட ஃபுல் கலேக்ஷன் ஆப் சீடிஸ் வச்சிருக்கேன். எப்போ உன்

ஆல்பம் வந்தாலும் லீகலா காசு கட்டித்தான் பாட்டு டவுன்லோட் செய்வேன்! உன்னோட ப்ராண்ட்ல வெளிய வர டீஷர்ட்ஸ்ல இருந்து காபி மக் வரை வாங்கி வச்சிருக்கேன்! உன்னோட மிக பெரிய ரசிகை நான்”

ஆல்பத்தை முழுதாய் பார்த்து முடித்தவன், நிமிர்ந்து அவள் கண்களை ஊடுருவினான். விழியின் அமைப்பும் புருவமும் ஜெய்க்குமாரைப் போல இருந்தாலும், அவன் கண்ணின் மணிகள் இரண்டும் சூசனைப் போல லைட் கிரீன் கலரில் இருக்கும். பச்சை நிறம் காயங்களை ஆற்றிட உதவுமாம், உணர்ச்சி

வசப்படும்போது ஆறுதல் அளித்து அமைதி நிலவ செய்யுமாம். அவனின் ஊடுறுவும் பார்வையோ இவள் வாயில் இருந்து எல்லா உண்மைகளையும் கடகடவென வரவழைத்தது.

“நான் உன்னை கடத்திட்டு வரனும்னுலாம் ப்ளான் பண்ணல! என் வாழ்க்கையில மிக முக்கியமான முடிவு எடுக்க வேண்டிய காலகட்டத்துல நான் இருக்கேன்! அதுக்கு முன்ன, ஜஸ்ட் ஒன் டே, ஒரே ஒரு நாள் உன் கூட டைம் ஸ்பேண்ட் பண்ணனும்னு நெனைச்சேன். என்னை நம்பு ஜோனா!”

எந்த பதிலும் சொல்லாமல் அவளையே பார்த்திருந்தான். அவன் பார்வை வீச்சைத் தாங்க முடியாமல் தலை குனிந்தவள், மீண்டும் நிமிர்ந்து அவன் பார்வையை தயங்காமல் எதிர்கொண்டாள். பெண்ணாய் தடுமாறி தலை குனிந்தவள், ஆணாய் தலை நிமிர்த்தி எதிர் பார்வைப் பார்த்தாள். ஆண் பாதி பெண் பாதி என கலந்து செய்த கலவையல்லவா அவள்!

அவள் முகம் காட்டிய உணர்ச்சிகளின் மாயாஜாலத்தில் கட்டுண்டிருந்தவன், தலையை உலுக்கி தன்னை சரிப்படுத்திக் கொண்டான். ஜக்கில்

இருந்து டீயை கப்பில் ஊற்றி உறிஞ்சியவன்,

“ஐம் வெய்ட்டிங்!” என்றான்.

“அப்பா செக்குயூரிட்டி ஃபிர்ம் வச்சிருக்காரு. சினிமா நடிகர்கள், பெரிய தொழிலதிபர்களுக்கெல்லாம் நாங்கதான் பாடிகார்ட்ஸ் அரேஞ் செய்வோம். சாதாரண உடையில அசிஸ்டேண்ட் மாதிரி அவங்க நிழலா தொடர்வாங்க எங்க ஆளுங்க. உன் அப்பாவும் எங்க சர்விஸ்தான் யூஸ் பண்ணறாரு”

“வேய்ட் வேய்ட்! அவர் என் அப்பான்னு உனக்குத் தெரியுமா?” என அதிர்ச்சியாக கேட்டான் ஜோனா.

இவனது லாஸ்ட் நேம், அதாவது குடும்ப பெயர் சூசனின் குடும்பப் பெயரான லீ எனத்தான் இருந்தது. அதாவது ஜோனாவின் முழுப்பெயர் அலெக்சாண்டர் ஜோனா லீ. சூசன் ஒரு சிங்கிள் பேரண்ட் என்பது மட்டுமே அவனது ரசிகர்களுக்குத் தெரியப்படுத்தப் பட்டிருந்தது. அங்கேதான் சிங்கிள் பேரண்ட் கலாச்சாரம் சர்வசாதாரணமாயிற்றே! அப்படியும் சிலர் தோண்டி துருவி இருந்தார்கள். அதை அவனது பி.ஆர்.ஓ ரகசியமாக ஹேண்டில் செய்திருந்தார்.

தப்பு செய்தது போல உதட்டைக் கடித்துக் கொண்டவள், முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள்.

“டெல் மீ டேம்மிட்!” சுருசுருவென கோபம் ஏறியிருக்க, அவள் முகத்தைத் தன் புறம் பிடித்துத் திருப்பினான் ஜோனா.

“ஒருத்தரோட நிழலா தொடருற பாடிகார்ட்டுக்கு தெரியாத எந்த ரகசியமும் இருக்க முடியாது ஜோனா! உன் அப்பாவோட பாடிகார்ட் என்னோட மோஸ்ட் பேவரேட் பெர்சன். உன் சம்பந்தப்பட்ட எல்லா விஷயமும் உடனுக்குடன் எனக்கு வந்துடும்! அப்படித்தான் நீ இந்தியா வரதையும் தெரிஞ்சுக்கிட்டேன்!

உன்னை ரிசீவ் செய்ய உங்கப்பாவோட அசிஸ்டெண்ட் தீரன் வரதையும் தெரிஞ்சுக்கிட்டேன்.”

“தீரன் எங்க இப்போ?”

“உன்னைக் காணோம்னு ரோடு ரோடா தேடிட்டு இருப்பான்!”

தலையை இடம் வலமாக ஆட்டியவன்,

“அவனையும் தூங்க வச்சிட்டியா?” என கேட்டான். குரலில் கோபம் இருந்தாலும் லேசாய் சிரிப்பும் இருந்தது.

“ஃப்ரீயா குடுத்தா பினாயிலே குடிக்கறவன் கிட்ட, பிட்சா குடுத்தா என்னவாகும்! நைட்ல டெலிவரி

மேன் மாதிரி அவன் அபார்ட்மேன்ட்கு பிட்சா எடுத்துட்டுப் போய், சார் நீங்க ஆர்டர் செஞ்ச பிட்சான்னு நின்னேன். நான் ஆர்டர் பண்ணலியேன்னான். இந்த அட்ரஸ் தான் சார், காசு கூட குடுத்துட்டாங்க! உங்க பேர் சங்கர்தானேன்னு கேட்டேன். காசு குடுத்துட்டாங்கன்னு சொன்னதும், ஐயாக்கு அப்படி ஒரு இளிப்பு. ஆமா நான் தான் சங்கர்னு எலி தானாவே வலையில வந்து சிக்கிடுச்சு. இருந்தாலும் பிட்சாவ சாப்பிடுவானா இல்லையான்னு ஒரு சந்தேகம் தான். கரேக்டான பிட்சாவான்னு பாருங்க சார்னு சொல்ல, என் கண்ணு முன்னுக்கே தொறந்து, ஆமான்னு

சொல்லி, பெரிய பீஸா எடுத்து வாயில திணிச்சுக்கிட்டான். முடிஞ்சது ஜோலின்னு கெளம்பி வந்துட்டேன்.”

இவனுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. ஒருத்தனுக்கு பிட்சாவில் மருந்து போட்டு கட்டாயத் தூக்கம் கொடுத்ததை கதை போல சொன்னவளைப் பார்த்து கோபத்துக்கு பதில் ஆச்சரியம் தான் வந்தது.

“அப்புறம் உன்னை வந்து ரிசீவ் பண்ணேன். கண்டிப்பா ஜெட்லேக் இருக்கும், டயர்ட்டா வேற இருக்கும்னு நீ ரெஸ்ட் எடுக்க, முதல் நாளே ஃபேக் ஐடி கார்ட் வச்சு ரூம் புக் பண்ணி கீ கார்ட் எடுத்துக்கிட்டேன்.

அதுக்குப் பிறகு நடந்தது தான் உனக்கு எல்லாம் தெரியுமே! அந்த டைம்ல யாரும் உன்னைக் காண்டேக்ட் பண்ணிட்டா என் குட்டு உடஞ்சிடும்னுதான் உன் போனையும் அடைச்சுப் போட்டேன். பீச் போய்ட்டு, உனக்கு டின்னர் வாங்கி குடுத்துட்டு ரூம்ல விட்டுட்டுப் போறதுதான் என்னோட ப்ளான். ஆனா முடியல ஜோனா!”

குரலை செறுமிக் கொண்டவள்,

“நீ ரொம்ப சோகமா பேசனியா, நிம்மதி வேணும்னு சொன்னியா, என்னால தாங்கிக்கவே முடியல! இத்தனை விஷயங்களயும் பல முறை யோசிச்சு சாதக பாதகங்கள அலசி

செஞ்சவ, உன்னைக் கடத்தனத மட்டும் ஆன் தெ ஸ்பர் ஆப் தெ மேமெண்ட்னு சொல்வாங்களே, ஒன்னும் யோசிக்காம சட்டுன்னு செஞ்சிடறது, அப்படி செஞ்சிட்டேன். இது க்ரைம்னு எனக்கும் புரியுது ஜோனா! என்னை மன்னிச்சிடு! உன்னை சந்திச்சுட்டேன், பேசிட்டேன், பாடறத கேட்டுட்டேன், தூங்கறத பார்த்துட்டேன்! போதும், போதும்!

“இது போதும் எனக்கு

இது போதுமே!

வேறென்ன வேணும் நீ போதுமே!” என சட்டென எழுந்து நின்று பாடியவள்,

**“இன்னிக்கு நைட் மட்டும் இங்க தங்கிக்க! நாளைக்கு உன்னை சென்னையிலேயே மறுபடி விட்டுடறேன்” என்றாள்.**

**“நீ கடத்தனா உன் கூட வரதுக்கும், கொண்டு போய் விட்டா போயிடறதுக்கும் நான் என்ன உன் வீட்டு நாயா?”**

**“ஆமா!”**

**“வாட்!!!”**

**“அது..என் டாக் பேர் கூட ஜோனாதான்! அததான் சொன்னேன்!”**

**“ஓ காட்! எத்தனையோ பைத்தியக்கார ஃபேன்ஸ் பார்த்துருக்கேன் நான். ஸ்டேஜ்ல**

பாடிட்டு இருக்கறப்போ போட்டுருக்கற ப்ரா, பேண்டிஸ்லாம் என் மேல தூக்கி வீசறவங்க (இதெல்லாம் நெஜமா நடக்கும் அங்க), பப்ளிக்ல பார்த்துட்டா பாஞ்சி வந்து கட்டிப்புடிச்சு கிஸ் அடிக்க ட்ரை பண்ணறவங்க, எசகு பிசகான எடத்துல தடவி வைக்கிறவங்க இப்படி நெறைய பேர பார்த்துருக்கேன். என்னைக் கடத்திட்டு வந்து அவங்க எல்லார விட நீதான் பைத்தியத்துக்கு எல்லாம் பைத்தியம்னு நிரூபிச்சுட்ட!" என கத்தினான் ஜோனா!

"ஆமா பைத்தியம்தான். ஏன் இப்படி பைத்தியம் ஆனேன்? எல்லாம்

உன்னால தான்! நீ ஏன் அன்ப காட்டுன, நீ ஏன் பாசமா பேசன, நீ ஏன் தலையைத் தடவிக் குடுத்த? எல்லாம் உன் தப்புத்தான் ஜோனா!”

“இப்படிலாம் என்னை நினைச்சு கனவு கண்டு வச்சிருக்கியா? நல்ல வேளை நீ ஏன் என்னை கிஸ் பண்ண, நீ ஏன் என்னை கட்டிப் புடிச்ச, நீ ஏன் என்னை படுக்கையில தள்ளினன்னு கேக்காம போயிட்ட! கற்பனையில கூட இன்னசென்டா இருக்கியே மூலான்!” என நக்கலடித்தான் ஜோனா.

கண்ணை சிமிட்டி அழுகையை அடக்கியவளைப் பார்த்தவன்,

“உன் போனைக் குடு” என கேட்டான்.

லாக் திறந்து அவனிடம் நீட்டினாள். அதில் வால்பேப்பராய் கூட அவன் தான் இருந்தான். அவள் சொல்லிய செக்கியூரிட்டி ஃபிர்ம், அப்பாவின் பெயர் எல்லாவற்றையும் கூகளில் செக் செய்து உண்மை என தெரிந்துக் கொண்டவன் போனை திருப்பிக் கொடுத்தான். அமைதியாக அவளையேப் பார்த்தப்படி மனதில் சில பல திட்டங்களை வகுத்தான்.

தூசனின் வற்புறுத்தலால் வந்திருந்தாலும் அவனுக்கு படம் நடிப்பதில் இஸ்டம் இருக்கவில்லை. இத்தனை வருடம் கண்டுக் கொள்ளாமல், தான் பாசத்துக்கு

ஏங்கிய போது அவமானப்படுத்தியவரை நேரில் பார்த்து நறுக்கென நாலு வார்த்தை கேட்க வேண்டும் என தான் வந்தான். தன்னை வைத்துப் புகழ் சம்பாதிக்க பார்க்கும் நேரத்தில் கூட தன் வாரிசு என வெளியே சொல்லிக் கொள்ளாத மனிதருக்கு தன்னால் ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியாது என நேராக சொல்லி அவரை நிலைகுலைய வைக்க வேண்டும் என தான் வந்தான். தன் வாழ்க்கையில் அவரின் அத்தியாயத்தை முடித்து வைக்க வேண்டும் என எண்ணி தான் தமிழ்நாட்டுக்கு வந்தான் ஜோனா.

ஆனால் அதற்குள் ஒருத்தி உள்ளே நுழைந்து குட்டையைக் குழப்பி இருந்தாள்.

‘தேடட்டும்! ப்ளைட்டில் இருந்து இறங்கியவன் எங்கே காணாமல் போனான் என தேடட்டும்! அப்பொழுதாவது பெற்ற மகன் என துடிக்கிறதா என பார்ப்போம்’ என திருப்தியாக எண்ணிக் கொண்டான் ஜோனா. அதோடு அசால்ட்டாக தன்னைக் கடத்தி வந்தவளையும் வம்பிழுத்து ஒரு வழியாக்க வேண்டும் என திட்டம் போட்டவன் அவள் ஆரம்பித்த கேமை இவன் விளையாட முடிவு செய்தான்.

**அதன் பிறகே இங்கேயே சில நாட்கள் இருப்பதாக அவளிடம் சொன்னான் ஜோனா. அவன் முடிவில் மகிழ்ந்துப் போனவள், எத்தனை நாட்கள் என ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை கேட்டு டார்ச்சர் செய்ய ஆரம்பித்தாள் அவனை!**

**சுகமாய் குப்புறப்படுத்து தூங்கிக் கொண்டிருந்தவன்,**

**“ஜோனா, ஹேல்ப்!” எனும் கூக்குரலில் அடித்துப் பிடித்து எழுந்தான்.**

**கதவைத் திறந்து உள்ளே ஓடியவன், கண்ட காட்சி…………**

## அத்தியாயம் 5

“அவன் காணாம போகிற வரைக்கும் நீ என்ன ம… புடிங்கிட்டு இருந்தியா? ரொம்ப முக்கியமான வேலையை நம்பி குடுத்ததுக்கு உன்னால என்ன முடியுமோ அதை செஞ்சிட்டே! உன்னைலாம் இன்னும் என் யூனிட்ல வச்சி தெண்ட சம்பளம் அழுவறேன் பாரு, என்னை தேஞ்சிப் போன செருப்பால அடிக்கனும்! கண்ணு முன்னுக்கு மரம் மாதிரி நிக்காம போய் தொலை!” என எரிந்து விழுந்த ஜெய் கையில் வைத்திருந்த போனை கோபமாக தீரன் மேல் விட்டடித்தார்.

அவர் தூக்கிப் போட்ட போனை கேட்ச் பிடிக்க முயல, அந்தோ

பரிதாபம் கையில் அகப்பட்ட போன் அவனை மீறி நழுவி கீழே விழுந்திருந்தது. க்ரேக் என ஸ்கிரின் உடைந்த சத்தம் கேட்க, பரிதாபமாய் விழித்தான் தீரன்.

“மலை மாடு, தண்ட வேஸ்ட்டு! மூஞ்சியும் முகரையும் பாரு! ஈன்னு ஹீரோயின் கிட்ட இளிச்சிக்கிட்டே டைலாக் சொல்லிக் குடுக்கற திறமை மட்டும் இல்லைன்னா இன்னேரம் தலை முழுகிருப்பேன். உன்னை மாதிரி அரை வேக்காட்ட எல்லாம் அசிஸ்டண்டா வச்சிகிட்டு நான் படற பாடு இருக்கே! ப்ளடி இடியட்” என ஆரம்பித்து பச்சை பச்சையாய் செந்தமிழில் திட்டித் தீர்த்தார் ஜெய்.

ஜெய்யின் தூரத்து உறவினன் இந்த தீரன். குடும்பத் தொழில் நொடித்துப் போக, மகனை இவரிடம் கொண்டு வந்து சேர்த்து விட்டார் தீரனின் தகப்பனார். பத்தோடு பதினொன்றாய் இருந்து விட்டுப் போகட்டும் என சம்பளம் இல்லாத அசிஸ்டெண்டாய் வைத்திருந்தார் இவனை.

பெண்களுடன் பேசியே அழகாய் வேலை வாங்கி விடும் அவன் திறமையும் அவர் குழுவில் தீரன் இன்னும் நீடிப்பதின் ரகசியம்.

படத்தின் நாயகியோ துணை நடிகைகளோ பிரச்சனை செய்தால், அழகாய் சிரித்துப் பேசி அவர்களை சரி செய்து நடிக்கவும் வைத்து

விடுவான். மற்றபடி கொடுத்த வேலைகளையும் சொதப்பாமல் செய்து விடுவான். அதை நம்பித்தான் இவனிடம் ஜோனாவை அழைத்து வரும் பொறுப்பைக் கொடுத்திருந்தார்.

‘எவன்டா சொன்னான் டைரக்டரோட மோதிர விரலால் குட்டு வாங்கனா அதிர்ஷ்டம் பிச்சிக்கிட்டு கொட்டும்னு! இந்தாளு கிட்ட வண்ணம் வண்ணமாக வாங்கிப் பாருங்கடா தெரியும்! இவருக்கு ஜெய்க்குமாருன்னு பேரு வச்சதுக்கு பதிலா, வெளக்குமாறுன்னு பேரு வச்சிருக்கலாம். வாயாலே இந்த வெளு வெளுக்கறான்!’

முகத்தைப் பாவமாக வைத்துக் கொண்டே,

“நான் போய் ரிசீவ் பண்ணறதுக்குள்ள ஆள் அட்ரஸ் இல்லாம மறைஞ்சிப் போய்ட்டாரு சார்! அவர் வர விஷயம் வேற யாருக்கும் தெரியக் கூடாதுன்னு சொன்னீங்களே, அதான் ரகசியமா தேடிட்டு இருக்கேன் சார்” என்றான் தீரன்.

ஜோனாவை ரகசியமாக அழைத்து வந்து, படம் நடிக்க ஒத்துக் கொள்ள வைத்த பிறகே மீடியாவிடம் தெரியப்படுத்தி பேட்டி கொடுக்கலாம் என நினைத்திருந்தார் ஜெய். அதற்கு முன்னே தெரிந்தால் ரசிகர்கள் படையெடுப்பு, மீடியாவின் தொல்லை

என பலதையும் சமாளிக்க நேரிடும் என்பதால் தான் இந்த ரகசிய வருகை. அதோடு ஜோனாவும் கூட்டம் ஆர்ப்பாட்டம் எதுவும் கூடாது என ஸ்ட்ரிக்டாக சொல்லி இருந்தான்.

“அவன் வர நேரம், ப்ளைட் டீட்டேயில் எல்லாம் குடுத்தும் கூட எப்படிடா மிஸ் பண்ண! வந்து இறங்கன லிஸ்ட்ல அவன் பேரு இருக்கு ஆனா ஆள காணோம்! எப்படி, எப்படி இப்படியாச்சு?”

‘நல்லவேளை நாம தூங்கி எழுந்து லேட்டா போனத மறைச்சிட்டோம். கரெக்ட் டைமுக்கு போயும் ஆளை கண்டுப்புடிக்க முடியலைன்னு ஒரு பிட்ட போடவும் தான் இன்னும்

பொழச்சிக் கிடக்கறேன். அவன கண்டுப்புடிக்கற வரைக்கும் இப்படியே மேய்ண்டேய்ன் பண்ணுவோம்' என தன் புத்திசாலித்தனத்தை மனதிலே மெச்சிக் கொண்டான் தீரன்.

அன்று அலாரம் வைத்துப் படுத்தும் எப்படி அசந்து தூங்கினான் என அவனுக்கே புரியவில்லை. அலாரமாக அவன் செட் செய்திருந்த மன்னார்குடி கலகலக்க பாடல், அடித்த அடி மன்னார்குடிக்கே கேட்டிருக்கும்! ஆனால் இவனை அசைத்திருக்கவில்லை. பட்டப்பகலில் தூங்கி எழுந்து, அடித்துப் பிடித்து ஏர்போர்டுக்கு ஓடியவனுக்கு கிடைத்தது ஏமாற்றமே!

தலையைப் பிடித்துக் கொண்டு சோபாவில் அமர்ந்து விட்டார் ஜெய்க்குமார். சூசன் வேறு இவருக்கு போன் போட்டு குடைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தார். தரை இறங்கிய மகன் இன்னும் அவருக்கு போன் செய்திருக்கவில்லை. மகன் வந்துவிட்டானா, என்ன நடக்கிறது, போன் போட்டாலும் ரிச் ஆகவில்லையே என பல கேள்விகளால் இவரை திணறடித்துக் கொண்டிருந்தார்.

வேறு வழி இல்லாமல் ஜோனாவை காணோம் என சொல்ல, சாமியாடிவிட்டார் சூசன். மகனை வரவைத்து ஏதோ செய்து விட்டார்

ஜெய் என அவரையே குற்றவாளிக் கூண்டில் நிற்க வைத்தவர் அப்பொழுதே கிளம்பி வருவதாக ஒற்றைக் காலில் நின்றார். சூசனிடம் ஒரு வாரம் டைம் கொடுக்க சொல்லி கெஞ்சியிருந்தார் ஜெய்க்குமார். ஒரு வாரத்துக்குள் ஜோனா கிடைக்காவிட்டால், இவர் மேல் கேஸ் போட போவதாக மிரட்டி விட்டே போனை வைத்திருந்தார் சூசன். இண்டெர்நேஷனல் சென்சேஷனல் சிங்கரை காணோம் என்றால், அவனை வரவழைத்த தன் நிலைமை என்னவாகும் என பயந்து வந்தது ஜெய்க்கு.

**சிங்கரை காணோம் என துடித்ததே தவிர, தன் மகனை காணோமே என துடிக்கவில்லை அவருக்கு. ஒரு தாய் பிள்ளையை சுமந்து வலித்தும் பெற்றெடுப்பதால், குழந்தை மீது பாசம் சுரப்பது பால் சுரப்பது போல இயற்கையாகவே வந்து விடுகிறது. ஆனால் அப்பா என்பது, ஓர் ஆண் சுகம் பெற்றதுக்கு பரிசாய் கிடைக்கும் பதவியல்லவா! எந்த ஆணாலும் தகப்பனாக முடியும், ஒரு தாய் கருவில் சுமக்கும் குழந்தையை தன் மனதால் சுமப்பவன் மட்டுமே தகப்பன்சாமி ஆகமுடியும்! ஜெய், ஜோனாவைப் பொறுத்தவரை சுகம்**

அனுபவித்த ஒரு ஸ்பேர்ம் டோனெர் மட்டுமே!

“டி.ஐ.ஜிக்கு போன் போட்டு இந்த விசயத்தை காதும் காதும் வச்ச மாதிரி இன்வெஸ்டிகேட் செய்ய சொல்லறேன்! நீயும் அவங்க இன்வெஸ்டிகேஷன்ல ஜாய்ன் பண்ணிக்க. எனக்கு ஜோனா கிடைக்கனும் தீரா, அதுவும் சீக்கிரமா!”

‘படத்துல நடிக்க இந்த நாட்டுல ஆளுங்களுக்கா பஞ்சம்? துரத்தி துரத்தி ரேப் பண்ணற வில்லன் ரோலுனா நான்லாம் காசு வாங்காமலே நடிப்பேன். ஹ்ம்ம்! நம்ம தெறமைலாம் இவங்க கண்ணுக்குத் தெரியாதே!

**இங்கிலிஸ்காரன இந்திய படத்துல நடிக்க வச்சே ஆகனும்னு வெறியோட அலையறாங்க! கெரகம், மொழி தெரியாம இருந்தாதான் தமிழ் படத்துல ஜெயிக்க முடியும் போல!' மனதிலேயே புலம்பிக் கொண்டவன்,**

**"கண்டிப்பா ஓன் வீக்ல அந்த ஜோனாவ உங்க முன்ன கொண்டு வந்து நிறுத்தறேன் சார்! அப்படி இல்லைனா, ஜோனாவ காணடிச்ச என்னை கானாவுக்கு நாடு கடத்துங்க சார்!" என சூழுரைத்தான்.**

**"பேச்செல்லாம் பேருக்கேத்த மாதிரி தீரமாத்தான் இருக்கு! ஆனா செய்யற காரியத்துல வீரியத்த காணோம்! போ, போ! நேரத்த கடத்தாம இந்த**

அட்ரஸ்ல டி.ஐ.ஜிய போய் பாரு.” என தீரனை விரட்டி விட்டார் ஜெய்.

அவன் போனதும், ஜோனாவுக்காகப் பார்த்து பார்த்து அலங்கரித்திருந்த அந்த விருந்தினர் மாளிகையை ஒரு பெருமூச்சுடன் பார்த்தார் ஜெய்.

“எங்கடா போய் தொலைஞ்ச என் வெள்ளை மவனே!”

“இந்தாங்க பிரின்சஸ் சீஸ் பர்கர்!” என்ற ஜோனா தட்டை அவள் புறம் நீட்டியபடி குனிந்து வணங்கினான்.

“தேங்க் யூ மை டியர் செர்வண்ட்” என்ற ஜீவா தட்டை வாங்கிக் கொண்டாள்.

ஹாலில் தொலைக்காட்சி முன்னே இருந்த சோபாவில் அவள் அமர்ந்திருக்க, தானே செய்திருந்த பர்கரை அவளிடம் கொடுத்து விட்டு அவள் அருகே தன்னுடைய தட்டுடன் அமர்ந்தான் ஜோனா.

“ஐ லவ் ஜங்க் ஃபூட்! ஆனாலும் அடிக்கடி சாப்பிட மாட்டேன்! என்னமோ தப்பு பண்ணற மாதிரி ஃபீல் ஆகும் சாப்பிடறப்பலாம்! சாப்பிட்டு முடிச்சதும் ட்ரேட்மில்லுல ரெண்டு ஹவர் ஓடுனாத்தான் அந்த குற்ற உணர்ச்சி போகும் எனக்கு.

சின்ன வயசுல கத்துக் குடுத்த சில பழக்க வழக்கங்கள எவ்வளவு முயற்சி செய்தாலும் நம்மால மாத்திக்க முடியறது இல்லல ஜோனா" என சொல்லியபடியே பர்கரை ரசித்து ருசித்து உண்டாள் ஜீவா.

"பசின்னு வந்துட்டா பழக்கமாவது வழக்கமாவது, எல்லாம் தன்னால மாறிடும்! மாம் கூட இருந்த வரைக்கும் எனக்குப் பசின்னா என்னன்னு தெரிஞ்சது இல்ல! வயிறு நெறைஞ்சு இருந்தாத்தான் பாசம் எங்க, காதல் எங்க, அன்பு எங்கன்னு பைத்தியக்காரத்தனமா தேடத் தோணும்! மாம் என்னை விட என்

ஸ்டெப் சிப்ளிங்ஸ் கிட்ட பாசமா இருக்காங்கன்னு தோணவும், வீம்புக்கு வீட்ட விட்டு வெளிய வந்தேன். பசியில மயங்கி விழுந்தப்பத்தான், இந்த வயித்துக்கு முன்ன பாசம், அன்பு எல்லாம் சும்மான்னு புரிஞ்சுக்கிட்டேன். எனக்கு கேரியர்ல ஒரு ப்ரேக் கிடைக்கற வரைக்கும் ஜங்க் ஃபூட்ல தான் உயிர் வாழ்ந்தேன்! எங்க ஊர்ல ஹெல்த்தி சாலட்டோட பர்கர் அண்ட் பிட்சாதான் விலை குறைவு! ஏழைங்களோட உணவு அது!”

“உங்க ஊர் ஏழைங்க சாப்பாடு தான் இப்ப எங்க ஊரோட ப்ரீஸ்டிஜியஸ் சாப்பாடா ஆகிப்போச்சு! இப்போலாம்

பிட்சா பர்கர் சாப்படாதவன எல்லாம் ஆதிவாசிய பார்க்கற மாதிரி பார்க்கறாங்க" என்றவள் வாயின் ஓரத்தில் சீஸை ஒழுக விட்டு மொக்கிக் கொண்டிருந்தாள்.

"இயூ!!" என அவள் செய்கையைப் பார்த்து முகம் சுழித்த ஜோனா, காபி டேபிளின் மேல் இருந்த டிஷ்ஷூ பேப்பரை எடுத்து அவள் முகத்துக்கு நேரே வீசினான்.

பர்கரை ஒரு கையால் பிடித்தப்படி இன்னொரு கையால் டிஷ்ஷூ பேப்பரை கேட்ச் பிடித்தவள், அதை மறுபடியும் மேசை மேல் வைத்து விட்டு புறங்கையால் வாயைத் துடைத்தாள்.

“கை இருக்கறப்போ எதுக்கு பேப்பர வேஸ்ட் பண்ணனும்! சேவ் ட்ரீ, கோ பேப்பர்லஸ்னு போன விளம்பரத்துல பெரிய இவன் மாதிரி அட்வைஸ் பண்ண நீ! இப்போ டிஷீ பேப்பர இப்படி வீணடிக்கற! ஒரு வருஷத்துக்கு நாலு பில்லியன் மரத்த நம்மளோட பேப்பர் நீட்ஸ்க்காக வெட்டறாங்களாம்! செத்துப் போன மரமெல்லாம் உனக்கு சாபம் குடுக்கப் போகுது பாரேன்!”

துடைக்க, சுத்தம் செய்ய என க்ளீனிங் க்ளோத் இருந்தும், ஒரு பண்டல் பேப்பர் டவலை சமயல் செய்கிறேன் பேர்வழி என முடித்து வைத்திருந்தான் ஜோனா!

“மிஸ் என்சைக்ளோபேடியா, அப்படிலாம் விளம்பரத்துல நல்லவனா நடிச்சாத்தான் ஆல்பம் விக்கும்! பேங்குல பணமும் நிக்கும்! பணத்துக்காக, புகழுக்காக நாங்க என்ன வேணும்னாலும் சொல்லுவோம்! சொந்த அறிவு இருக்குத்தானே? நாங்க சொல்லறத எல்லாம் நீங்க நம்பி ஏன் அதன்படி நடக்கறீங்க? மத்தவங்களுக்கு அறிவு இருக்கோ இல்லையோ, உனக்கு சுத்தமா மேல்மாடி காலி. இல்லைனா பணத்துக்காக பாடறவன கடத்திட்டு வந்திருப்பியா?” என நக்கலாக கேட்டவன், பர்கரை ரசித்து உண்ண ஆரம்பித்தான்.

அவள் அமைதியாக சாப்பிட,

“என்ன சவுண்ட காணோம்! என்னமோ சொன்னியே மரம் சாபம் கொடுக்கும்னு, அப்படி பயந்தா மனுஷனா வாழவே முடியாது மூலான்! நாம சாப்பிடற சாப்பாட்டுல இருந்து, போட்டுக்கற துணி வரைக்கும் எதாவது ஒரு உயிர கொன்னுதான் கிடைக்குது. உன் பர்கர்ல ஒரு கோழி, ஒரு தக்காளி, ரெண்டு வெங்காயம் செத்துக் கிடக்கு! உன் சட்டையிலயும் ஜீன்ஸ்லயும் காட்டன் மரத்தோட விதை செத்துக் கிடக்கு. சாபத்துக்கு பயந்தவளா இருந்தா பர்கரா சாப்பிடாம அப்படியே வச்சிட்டு, துணி எல்லாத்தையும்

ஒன்னொன்னா கழட்டிப் போட்டு பார்க்கலாம்! கமான் மூலான்!" என்றான்.

'இதுக்குப் பேருதான் வாய குடுத்து வாங்கிக் கட்டிக்கறது! இந்த அவமானம் தேவையா உனக்கு!' என தன்னைத்தானே நொந்துக் கொண்டாள் ஜீவா.

"எங்க கழட்டல? ஓ கையில தட்டு இருக்குல்ல! சரி விடு, நானே ஹெல்ப் பண்ணறேன்!" என்றவன் தனது தட்டை மேசையில் வைத்து விட்டு அவளை நெருங்கி டீ ஷெர்ட்டில் கையை வைத்தான்.

"ஏய் என்ன பண்ணற?"

“நீ அணிஞ்சிருக்கற பாவங்களை களையறேன் பேபி! ப்ளீஸ், கொஞ்சம் கோ ஆபரேட் செய்! இன்னும் சற்று நேரத்தில் பாவங்கள் களையப்பட்ட புண்ணிய ஆத்மாவா ஆகிடுவ!” என்றவன் அவள் அணிந்திருந்த டீ ஷேர்டை இன்னும் கொஞ்சம் மேலே தூக்க,

“ஹே விடு, விடு ஜோனா!” என அவன் கையைப் பிடித்துக் கொண்டவளுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

“என்ன மூலான் நீ! நான் யாரு, எப்படிப்பட்ட ஆளுன்னு தெரிஞ்சும் கடத்திட்டு வந்துட்டு டீ ஷேர்ட்ட கழட்ட கூட இப்படி பிகு பண்ணா எப்படி? டாப் டேன் ப்ளேபாய் ஆப்

அமெரிக்கா லிஸ்ட்ல ஃபர்ஸ்ட்ல இருக்கறவன கொண்டு வந்து வச்சிக்கிட்டு என்னை விடு விடுன்னா எப்படி விடுவான்! நான் பாவம்ல, உன் ஜோனா பாவம்ல! செத்துப் பொழைச்சதுல இருந்து மருந்து, மாத்திரைன்னு செலபசில(celibacy—உடல் உறவு இல்லாமல் இருப்பது) இருக்கேன்! புரிஞ்சுக்கோ மூலான்" என சொல்லியபடியே முன்னேறியவனின் கன்னத்தில் பட்டென அறைந்திருந்தாள் ஜீவா!

"வை டிட் யூ ஸ்லேப் மீ? எதுக்கு அறைஞ்ச? சொல்லு மூலான்! ஒரு ஆம்பளய கடத்திட்டு வரப்போ அதோட பின் விளைவுகள் என்னன்னு

தெரியாமலா இருந்திருக்கும் உனக்கு? அந்த மாதிரி, இந்த ஜோனா வேணும்னு தானே கடத்திட்டு வந்த! அப்புறம் ஏன் இந்த தயக்கம்? ஓ! நான் சொன்ன மேடு பள்ளம், லாங் ஹேர்லாம் இல்லைன்னு தயங்கறியா? இட்ஸ் ஓக்கே! கிடைச்சத வச்சு, ஐம் வில்லிங் டூ அட்ஜஸ்ட்!”

சட்டென நாற்காலியில் இருந்து எழுந்தவள்,

“ஆ!!” எனும் சத்தத்தோடு மடங்கி தரையில் அமர்ந்தாள்.

“ஏய் பார்த்து மூலான்!” என சொல்லியவன், கீழே அமர்ந்து அவள்

காலை இழுத்து செக் செய்தான். போட்டிருந்த கட்டையும் மீறி ரத்தம் வந்தது.

“எழுந்து நடக்காதன்னு சொன்னேன் தானே! இடியட்” என காய்ந்தவன், கிச்சனில் இருந்த ஃபர்ஸ்ட் எய்ட் பாக்சை எடுத்து வந்தான். மீண்டும் கட்டைப் பிரித்து, அண்டிசெப்டிக் க்ரிமினால் காயத்தை துடைத்து மருந்திட்டு புதிய கட்டுப் போட்டு விட்டான் ஜோனா!

அன்று சமைக்கிறேன் என வீட்டின் உள்ளே சென்ற ஜீவா, கத்தி மற்றும் கரண்டிகள் இருக்கும் ட்ராவரை திறக்க அது கையோடு வந்திருந்தது. அதில் இருந்த பொருட்கள் எல்லாம்

கீழே சிதற, கத்தி இவள் காலை பதம் பார்த்திருந்தது. ரத்தக்காயம் ஒன்றும் இவளுக்கு புதிதில்லையே!

துடைத்துப் போட்டு விட்டு அடுத்த வேலையைப் பார்க்க போய் விடுபவளுக்கு, அன்று அவளை அறியாமலே வாய் ஜோனா ஹேல்ப் என கத்தி இருந்தது.

அடித்துப் பிடித்து உள்ளே வந்த ஜோனாவின் கரங்களைப் பற்றிக் கொண்டவள்,

“வலிக்குது ஜோனா!” என வாய் திறந்து தனது வலியை சொல்லி இருந்தாள். அவன் அறைந்தப் பொழுது கூட இதே போலத்தான்

வலி கொடுத்தவனிடமே வலிக்கிறது என சொல்லி இருந்தாள் ஜீவா.

மனதிற்கு பிடித்தவர்களிடம் பரிதாபத்தை சம்பாதிக்க விரும்பும் போது மட்டுமே வலிக்கிறது எனும் வார்த்தை பெண்களின் வாயில் இருந்து வரும். ஏதோ ஒரு தடவை உபயோகிக்கும் போது பாசத்தையும் அக்கறையையும் சம்பாதித்துத் தரும் இந்த வார்த்தை, அடிக்கடி வரும் போது உனக்கு வேறு வேலை இல்லை எனும் சலிப்பையே ஈன்று தரும்.

“ஓ காட்! அறிவில்ல உனக்கு! எவ்ளோ ரத்தம் போகுது பார்! கவனமா ஒரு வேலைய செய்ய

மாட்டியா?” என கடிந்துக் கொண்டவன், அவளை அலேக்காக கையில் அள்ளி இருந்தான்.

டைனிங் நாற்காலியில் அவளை அமர்த்தி, அவள் காட்டிய இடத்தில் இருந்து முதலுதவி பெட்டியை எடுத்தவன், மிக மென்மையாக காயத்துக்கு மருந்திட்டிருந்தான். இவளை வைத்து செய்ய வேண்டும் என மனதில் நினைத்திருந்தவன், அன்று முழுவதும் அவளை அமர வைத்து தானே சமைத்து கவனித்துக் கொண்டான்.

காயம் பட்ட பொழுது, அந்த பெரிய கண்களால் பாவமாய் பார்த்த பாவம், ஜோனாவுக்கு அவள் பால்

பரிதாபத்தையும் பரிவையும் ஒருங்கே தோற்றுவித்திருந்தது. அதெப்படி தன்னைக் கடத்தியவளின் மேல் பரிவு வரலாம் எனும் கோபம் தான் அவள் சட்டையைக் கழட்டுவது போல வம்பிழுக்க வைத்தது ஜோனாவை. தன் செயலால் மீண்டும் அந்தப் பெரிய கண்களில் வலியின் சாயலைப் பார்த்தவனுக்கு இப்பொழுது அவன் மேலேயே கோபம் வந்தது.

"திஸ் இஸ் ரிடிக்கிலஸ்!" என முனகிக் கொண்டவன், எழுந்து நின்றான். பின் கீழே குனிந்து அவளைத் தூக்கிக் கொண்டவன் ரூமுக்கு நடந்தான்.

“ஹேய் என்ன செய்யப் போற, விடு என்னை! ஒரு காலுல தான் அடி! கையெல்லாம் நல்லாத்தான் இருக்கு எனக்கு! ஒரு குத்து விட்டேன்னா உன்னோட அழகான மூக்கு அலங்கோலமா ஆகிடும்” என கத்தினாள் ஜீவா.

“சும்மா கத்தாதே மூலான்! ஆம்பளைங்க என்ன எந்நேரமும் அதே மூட்டுல தான் சுத்திட்டு இருப்பாங்களா! ரத்தத்தப் பார்த்ததும் எனக்கு மூட் ஆப் ஆகிருச்சு! நீயே வந்து கிஸ் மீன்னாலும் என்னால முடியாது இப்போ! என்னமோ பொண்ணுங்கள பெட்ல தூக்கிப் போடற வேலை மட்டும்தான் நாங்க

பார்க்கறோம்ங்கற மாதிரி உங்க மைண்ட்லாம் யாரோ கொராப்ட் பண்ணி வச்சிருக்காங்க! இத தவிர எங்க மைண்ட்ல வேற பல விஷயமும் ஓடிட்டுத்தான் இருக்கு. ஸ்போர்ட்ஸ், அரசியல், அடுத்த வேளை சாப்பாடு, வேலை இடத்துப் பிரச்சனை, காருக்கு ஆயில் ஊத்தியாச்சா, ஏலியனுக்கும் மனுஷனுக்கும் கல்யாணம் ஆனா குழந்தைக்கு ஏலிசன்னு(ஏலியன்+மனுஷன்) பேர் வைப்பாங்களா இப்படி ஆயிரம் பிரச்சனை எங்க மண்டைக்குள்ள!” என்றவன் படுக்கையில் அவளை பொத்தென போட்டான்.

“படுத்து தூங்கு! தூங்கனாத்தான் எந்த காயமும் ஹீல் ஆகும். உடல் காயமா இருந்தாலும் சரி, மனக்காயமா இருந்தாலும் சரி! குட் நைட்! ஸ்வீட் ட்ரீம் மூலான்!” என்றவன் ரூமில் இருந்து வெளியேறிவிட்டான்.

“என் ஜோனாவாப் பத்தி எனக்குத் தெரியாதா! ஹீ இஸ் எ ஜெண்டில்மேன்! எ ஸ்வீட் பெர்சனாலிட்டி!” என மெல்ல முணுமுணுத்தவள் சுகமாய் தூங்கிப் போனாள்.

மறுநாள் அவன் பார்த்து வைத்த வேலைகளில்,

‘நீ ஸ்வீட் பெர்சனாலிட்டி இல்லடா, ஸ்பிலிட் பெர்சனாலிட்டி’ என நொந்துப் போனாள் ஜீவா.

## அத்தியாயம் 6

“ஏன் உங்க பாட்டுல எல்லாம் அவ்ளோ கெட்ட வார்த்தை வருது?

பாட்டு லிரிக் எழுத ஐடியா வரலனா முக்கா வாசி பாட்ட எஃப்(f வோர்ட்னா fuckநு அர்த்தம். முக்கால்வாசி ஆங்கில பாடல்களில் இந்த வார்த்தை இல்லாமல் இருக்காது) வோர்ட் போட்டே நிரப்பிடுவீங்களா?”

கண்களை சுருக்கி, வாயில் பென்சிலை வைத்துக் கடித்துக் கொண்டே கையிலிருந்த பேப்பரை முறைத்துக் கொண்டிருந்தவன் இவளை திரும்பிப் பார்த்தான்.

“என்ன கேட்ட?”

“எதுக்கு பாட்டுல எஃப் வோர்ட் ரொம்ப யூஸ் செய்யறீங்கன்னு கேட்டேன்! ….க்கிங் பியூட்டிபுள், ….க்கிங் க்ரேசி, ….க்கிங் ஹேட் யூ, ….க்கிங் லவ் யூன்னு! இரிட்டேட்டிங்கா இருக்கு ஜோனா!”

**யோசனையாக நெற்றியை சுருக்கியவன்,**

**“அது இல்லைனா நீ பொறந்துருக்க மாட்ட, நான் பொறந்துருக்க மாட்டேன், இந்த உலகத்துல எந்த உயிரினமும் பொறந்துருக்காது! அதனாலதான் எங்காளுங்க அந்த வோர்டுக்கு அதிக முக்கியத்துவம் குடுக்கறமோ என்னவோ!” என்றவன்,**

**“அதுக்கு இன்னொரு சைக்கலோஜிக்கல் காரணம் கூட இருக்கு மூலான்! இப்போ வீட்டுக்குப்**

**போய் இந்த வெயிலுக்கு இதமா ஐஸ் லெமன் டீ போட்டு எடுத்து வருவியாம்! அப்புறம் இந்த டாபிக் பத்தி இன்னும் விலாவாரியா டிஸ்கஸ் பண்ணலாமாம்!” என முடித்தான்.**

**“காலையில இருந்து இதோட பத்து தடவை வீட்டுக்கும் பீச்சுக்கும் அலைய விட்டுட்டான்! எனக்கு பாட்டு எழுத தோணுதுன்னு சொன்னானேன்னு பீச்ல பெரிய குடைய நட்டு வச்சு, பாய் விரிச்சு, நோட் பேட், பென்சில்னு எடுத்துக் குடுத்து, ராஜா மாதிரி இவன இங்க கொண்டு வந்து உட்கார வச்ச**

என்னை தேஞ்சு போன செருப்ப சாணியில முக்கி அடிக்கனும். ஆப்பிள் தின்னாத்தான் கற்பனை வரும்னு ஆப்பிள் எடுக்க ஒரு தடவை, ஆரஞ்சு ஜீஸ் குடிச்சாத்தான் மூளை ப்ரேஷ் ஆகும்னு அத எடுக்க ஒரு தடவை, சாண்ட்விச் சாப்டாத்தான் சரளமா எழுத வரும்னு அதுக்கு ஒரு தடவை, லாலிபாப் சப்புனாத்தான் லைன்ஸ் ரைம்மாகும்னு அதுக்கு ஒரு தடவைன்னு இந்த புண்ணு கால வச்சிக்கிட்டு நாய் மாதிரி அலைய விடறான்!" என முனகிக் கொண்டே எழுந்தவள் அவன் கையில் இருந்த நோட் பேட்டை எட்டிப் பார்க்க முயல,

அவனோ நெஞ்சில் இறுக்க அணைத்துக் கொண்டான் அதை.

“எழுதும் போது பார்க்காதே மூலான்! யூ வில் ஜின்க்ஸ்(jinx-பேட் லக்) இட்!” என கத்தினான்.

“ஹ்றக்கும்!” என நொடித்துக் கொண்டவள் மணலில் கால் புதைய புதைய வீட்டுக்கு நடந்தாள்.

நடந்துப் போகும் ஜீவாவையே முகத்தில் புன்னகையுடன் பார்த்திருந்தான் ஜோனா.

“உன்னை வம்பிழுக்கறப்ப கிடைக்கற இன்பம் இருக்கே, ப்பா!!! அத அனுபவிச்சுப் பார்த்தா தான் புரியும் மூலான்! நான் இங்கிருந்து கிளம்பறதுக்குள்ள இவன ஏன்டா கடத்திட்டு வந்தோம்னு நொந்துப் போயிடனும்! நான் குடுக்கற டார்ச்சர்ல இனிமே என் பக்கமே தலை வச்சுப் படுக்க கூடாது நீ!” என எண்ணிக் கொண்டவன், பாயில் அப்படியே சரிந்துப் படுத்துக் கொண்டான்.

வீட்டுக்குள் வந்த ஜீவா கேட்டிலில் சுடுநீரை நன்றாக கொதிக்க வைத்தாள். கண்ணாடி ஜக்கில் டீ

பேகை போட்டு கொதித்த நீரை ஊற்றி பின் இனிப்பு சேர்த்து, பிழிந்து வைத்த லெமன் ஜீஸையும், ஐஸ் கட்டிகளையும் சேர்த்து கலக்கினாள். லெமனை ஸ்லைசாக வெட்டி ஜக்கில் சேர்த்தவள், புதினா இலைகளையும் மேலே தூவி விட்டாள். அந்த ஜக்கையும், இரண்டு கண்ணாடி கிளாஸ்களையும், சாக்லேட் ச்சிப் குக்கியையும் கையில் எடுத்துக் கொண்டு மீண்டும் பீச்சை நோக்கி நடந்தாள் அவள்.

ஜோனாவுடன் ஒரு நாளை கழித்து விட்டு, தான் மட்டும் இந்த காட்டேஜிக்கு வருவதாய் இருந்தாள்

ஜீவா. சீனி, மைதா, பால் மாவு இப்படி கெட்டுப் போகாத உணவு வகைகளை எப்பொழுதும் ஸ்டோர் செய்து வைத்திருப்பாள். சீக்கிரம் அழுகாத காய்கறிகள், பழங்கள், ப்ரேட், டின்னில் இருக்கும் உணவு வகைகளை தீரனுக்கு பிட்சா வாங்கப் போன சமயத்தில் வாங்கி கார் டிக்கியில் நிறைத்திருந்தாள். அவள் மட்டுமே சாப்பிடும் பட்சத்தில் ஒரு வாரம் வரை வரும் உணவு சப்ளை, ஜோனாவின் அதீத பசியின் காரணமாக மூன்று நாட்களாவது தாக்குப் பிடிக்குமா என சந்தேகமாக இருந்தது இவளுக்கு.

“எந்நேரமும் சிப்ஸ், பழம், ஜூஸ்னு வாயிக்கும் வயித்துக்கும் வேலை வச்சிக்கிட்டே இருக்கானே இவன்! இவ்ளோ சாப்பிட்டும் எப்படி கிண்ணுன்னு இருக்கான்!” என யோசித்தப்படியே நடந்தாள் ஜீவா.

ஜோனாவின் நியர் டெத் சம்பவம் அவனின் உள்ளுறுப்புகளையும் பாதித்திருந்தது. அதை சரியாக்க எடுத்துக் கொண்ட மாத்திரைகள் பசி உணர்வையே மந்திக்க வைத்திருந்தன. கஸ்டப்பட்டு உணவு உண்டாலும் வாந்தி, வயிற்று வலி என அல்லல் படுவான். இப்பொழுது ஓரளவு உடல் தேறி பசி உணர்வு

அதிகரித்திருந்தது. அதனால்தான் எதையாவது வயிற்றுக்குள் போட்டுக் கொண்டே இருக்கிறான். பசி அதிகரிப்பதுதானே உடம்பு தேறி வருவதின் அறிகுறி.

வெயிலாய் இருந்ததால் கடல் காற்றும் சூடாகவே வீசியது. தூரத்தே தெரிந்த ஜோனாவின் உருவத்தைப் பார்த்ததும் தானாகவே புன்னகை வந்தது அவளுக்கு. சுமார் ஓராண்டுக்கும் மேலாய் அவனது பாடல் ஆல்பம் எதுவும் வந்திருக்கவில்லை. அவன் பாடும் பாடல்களை அவனேதான் எழுதி உயிர் கொடுப்பான். ரைட்டர் ப்ளாக்

வந்ததில் இருந்து அவனது கேரியர் பின்னடைந்திருந்தது. ஜோனாவுக்குப் பின்னால் வந்த பொடுசுகள் எல்லாம் ஹிட் ஆல்பம் கொடுத்திருக்க, எங்கே இவன் மறக்கப்பட்டு விடுவானோ என அஞ்சினாள் அவனின் டை ஹார்ட் ஃபேன். அதனால் தான் எழுதப் போகிறேன் என அவன் சொன்னதில், ஜீவா அகமகிழ்ந்துப் போயிருந்தாள். சற்று நேரம் உட்கார விடாமல், ஜோனா அவளை வேலை வாங்கியது கூட பெரிதாக தெரியவில்லை அவளுக்கு.

ஜோனாவின் அருகே வந்து அமர்ந்தவள், பாயின் மேல் ஜக்கையும்

கிளாஸ்களையும் வைத்தாள். ஒரு கிளாஸில் பானத்தை ஊற்றி அவனிடம் நீட்டியவள்,

“எஞ்சாய் ஜோனா” என்றாள்.

அதை வாங்கிக் கொண்டவன், அவள் முகத்தை நிமிர்ந்து நோக்கினான். வெயிலில் நடந்து வந்ததில் நெற்றியில் முத்து முத்தாக வியர்த்திருந்தது அவளுக்கு. பக்கத்தில் கழட்டிப் போட்டிருந்த தனது டீ ஷர்டை எடுத்தவன், அவள் நெற்றியை மென்மையாக துடைத்து விட்டான்.

“கழுத்து கிட்டயும் துடைச்சி விடு! அங்கயும் வேர்த்து ஊத்துது” என்றாள் ஜீவா.

“உனக்கு நான் என்ன வேலைக்காரனா?” என கேட்டவன் அந்த டீ ஷர்டாலேயே அவள் முகத்தை அழுத்தி அப்படியே பின்னால் தள்ளினான். அவன் தள்ளலில் மணலில் மல்லாக்க விழுந்தவள், டீ ஷர்டை அவன் முகத்தில் விட்டடித்தாள்.

“வேர்வை நாத்தம் அடிக்குது! அத என் மூஞ்சுல வச்சுத் தேய்க்கற! ச்சை!” என்றாள் ஜீவா.

“ஏய் மூலான், என்ன நாத்தம்னு சொல்லற! வாட்ச் யுவர் வோர்ட்! என் வியர்வை துளி தன் மேல சிந்தாதான்னு எத்தனை லட்சம் பொண்ணுங்க ஏங்கி தவிக்கிறாங்க தெரியுமா!” என கேட்டப்படியே குளிர்ந்த பானத்தை ரசித்துப் பருகினான் ஜோனா.

இல்லை என மறுக்க முடியவில்லை அவளால். அவன் இன்ஸ்டாகிராமில் தானே காலையில் கண் விழித்து,

இரவில் கண் மூடுகிறாள். இவன் ஒரு போட்டோவை பதிவேற்றினால், ஆயிரக்கணக்கில் ஹார்ட்களும் காமேண்ட்களும் வரிசைக்கட்டி வருமே. அனைத்தையும் ஒன்று விடாமல் படிப்பதை தானே பொழுது போக்காய் வைத்திருந்தாள் ஜீவா. ஹக் மீ ஜோனா, கிஸ் மீ ஜோனா என ஆரம்பித்து பலான ரேஞ்சுக்குப் போகும்.

மணலில் மல்லாக்கப் படுத்து, கைகள் இரண்டையும் தலைக்கு கீழ் வைத்தப்படி அவனை நோக்கியவள்,

“சரி சொல்லு!” என கேட்டாள்.

ஓர் ஆணின் பக்கத்தில் இருக்கிறோம் என்ற ப்ரக்ஞையே இல்லாமல் ரிலேக்ஷாக படுத்திருந்தவளை, ஆழ்ந்து நோக்கினான் ஜோனா. இது வரை அவன் அருகில் அவள் வெட்கத்தையோ, கூச்சத்தையோ, தயக்கத்தையோ காட்டியதில்லை. சரிக்கு சமமாக வாயாடி இருக்கிறாள், சண்டைப் போட்டிருக்கிறாள், கண்களை நேராகப் பார்த்து பேசியிருக்கிறாள். இவன் தொட்ட சில பல சமயங்களில் கூட ஓர் ஆணின் தொடு உணர்ச்சியால் நெளிந்திருக்கிறாளே தவிர, கூசி சிலிர்த்ததில்லை. தன்னிடம் மயங்கி

கிறங்கி நின்றிருந்த பெண்களையே சந்தித்திருந்தவனுக்கு, இந்த ஜீவா வித்தியாசமாகத் தெரிந்தாள். தனது அருகாமை அவளை பாதிக்கவில்லை என்பது அவனுக்கு ஆச்சரியத்தை மட்டும் அல்ல கோபத்தையும் வரவழைத்தது.

“என்ன சொல்லனும்?” என கேட்டான் ஜோனா.

“என்னமோ சைக்கலோஜிக்கல் காரணம் இருக்குன்னு சொன்னியே, அத பத்தி சொல்லு”

**“ஆக்சுவலி அந்த வார்த்தைய ஸ்வெரிங் வோர்ட்னு(திட்ட, ஏச பயன்படும் கெட்ட வார்த்தை) சொல்வோம். கோபம் வரப்பபோ அதை உள்ளயே அடக்கி வைக்காம, இப்படி கெட்ட வார்த்தை சொல்லி திட்டிட்டா நமக்கு ஸ்ட்ரேஸ் குறைஞ்சிடும். அதனாலத்தான் பாட்டுங்கள்ல இந்த மாதிரி ஸ்வெரிங் வோர்ட்ஸ் யூஸ் பண்ணறாங்க. அதை கத்திப் பாடும் போது மக்கள் மனசுல உள்ள ஸ்ட்ரெஸ் குறையுது, பாடற எங்க ஸ்ட்ரெஸும் குறையுது. அதோட இந்த மாதிரி கெட்ட வார்த்தைல திட்டறப்போ உடம்புல உள்ள வலி குறையுதுன்னும்**

கண்டுப்புடிச்சிருக்காங்க! சமைக்கறப்ப கைய சுட்டுக்கிட்டாலோ, ஆணி அடிக்கறப்போ விரலை அடிச்சிக்கிட்டாளோ வாயில இருந்து கெட்ட வார்த்தை வரும் போது, கொஞ்ச நேரம் வலி தெரியாதாம்!"

"நல்லா கண்டுப்புடிக்கறாங்க உங்க ஊருல! எங்க ஊர்லலாம் கெட்ட வார்த்தை சொன்னா அவ்ளோதான், நாக்குல மிளகாய வச்சித் தேய்ச்சிடுவாங்க!" என்றவள் மெல்ல எழுந்து அமர்ந்தாள்.

அவன் கண்களை நேராகப் பார்த்தவள்,

“நெஜமா கெட்ட வார்த்தையில திட்டனா நம்ம கோபம் எல்லாம் காணாம போயிடுமா ஜோனா?” என குரலை செறுமிக் கொண்டே கேட்டாள்.

ஆமென தலையை ஆட்டினான் இவன்.

“சத்தியமா?”

“யெஸ்!”

**“அப்போ நான் திட்டவா?”**

**“யார திட்டனும்?” என கேட்டான் ஜோனா.**

**“என்னோட அம்மாவ”**

**“கோ ஆன்!”**

**“ஆனா கெட்ட வார்த்தைலாம் யூஸ் பண்ண மாட்டேன். மாதா, பிதா, குரு, தெய்வம்! இவங்க நாலு பேரையும் கெட்ட வார்த்தைல திட்டனா மோட்சமே கிடைக்காது”**

“சரி மூலான் சரி! கெட்ட வார்த்தை யூஸ் பண்ணாமலே திட்டு”

எழுந்து நின்றவள் கடல் நீரை நோக்கி நடந்தாள். இவனும் எழுந்து அவள் பின்னே நடக்க ஆரம்பித்தான். கடல் அலை கால் தொடும் தூரம் வந்தவள், இரு கையையும் குவித்து வாயருகே வைத்து கத்த ஆரம்பித்தாள்.

“அம்மா!!!!!!!!!!!”

அவள் அருகே கைக்கட்டியபடி அவளையேப் பார்த்திருந்தான் ஜோனா.

“அம்மா!!! நான் உன்னைத் திட்டப் போறேன்! ஆத்திரம் தீர திட்டப் போறேன்! ஐ ஹேட் யூ சோ சோ மச் அம்மா! இந்த பூமியில நான் வெறுக்கற ஒரே ஆள் நீ தான்! ஐ ஹேட் யூ! ரொம்ப சுயநலம் உனக்கு! நீ மட்டும் கடவுள் கிட்ட போய் சேர்ந்து ரொம்ப சந்தோஷமா இருக்க! நான் மட்டும் இந்தப் பூமியில கிடந்து அல்லல் படறேன். ஐ ஹேட் யூ! ஏன் என்னை விட்டுப் போன நீ? உன் உசுர குடுத்து என்னைப் பெத்து

போடலன்னு யார் அழுதா? என்னையும் கூட்டிட்டுப் போக வேண்டியது தானே? உன்னோட அரவணைப்பு இல்லாம நான் எவ்ளோ கஸ்டப்பட்டேன் தெரியுமா? உன்னோட ஆதரவும் அன்பும் இல்லாம நான் எவ்ளோ தவிச்சேன் தெரியுமா? ஆசையா செல்லம் கொஞ்ச, உன் கையால சாப்பாடு வாங்கிக்க, உன் மடியில படுத்து தூங்க, ராங்கி செஞ்சு உன் கையால வாங்கி கட்டிக்க, பீரியட் வந்துருச்சு வயிறு வலிக்குதும்மான்னு ஒவ்வொரு மாசமும் முனகித் தள்ள நீ இல்லாம வாழ்ற இந்த வாழ்க்கை நரகம்மா! இந்த நரகத்துக்குள்ள

என்னை தள்ளி விட்டுட்டுப் போன உன்னை நான் அறவே வெறுக்கறேன்! ஐ ஹேட் யூ அம்மா!!!!!!!!!!!!” என கத்தியவள் அப்படியே மடிந்து மணலில் அமர்ந்தாள்.

அவள் அருகே அமர்ந்த ஜோனா, ஜீவாவின் தோளை சுற்றி தன் கரத்தைப் போட்டுக் கொண்டான். பட்டென தள்ளி விட்டவள், நகர்ந்துப் போய் அமர்ந்தாள்.

“ம்ப்ச்” என சலித்துக் கொண்டவன், தானும் நகர்ந்து மீண்டும் அவள் தோளில் தன் இடது கரத்தைப் போட்டு இறுக்கிக் கொண்டான்.

“அழுதுடு மூலான்”

“முடியாது!”

“அழுன்னு சொல்றேன்ல”

“மத்தவங்க முன்னுக்கு அழுதா அறை கிடைக்கும்”

“நான் அறைய மாட்டேன்! ஹக் தான் பண்ணுவேன்”

“தேவையில்ல போ!”

இடது கையால் அவளை வளைத்திருந்தவன், அப்படியே இழுத்து தன் நெஞ்சில் சாய்த்துக் கொண்டான். அவன் பிடியில் இருந்து வெளி வர போராடியவளை, விடவேயில்லை இவன். போராட்டம் மெல்ல மெல்ல குறைய அப்படியே அவனை இரு கரம் கொண்டு இறுக்கிக் கொண்டவள், தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள்.

“ஐ..லவ்..மை..அம்மா!” ஒவ்வொரு வார்த்தையின் நடுவிலும் தேம்பினாள் ஜீவா.

“நான்..திட்டனத..எல்லாம்..வாபஸ்..வாங்கிக்கறேன்..ஐ லவ் யூ அம்மா!” விக்கலும் விம்மலுமாய் வெடித்து அழுதாள் அவள்.

அத்தனை நாட்களாய் உள்ளே அடைத்து வைத்திருந்த துக்கம் எல்லாம் அவன் அணைப்பில் கண்ணீராய் வெளி வந்தது. ஒன்றுமே பேசாமல் முதுகை மட்டும் தடவிக் கொடுத்தப்படியே இருந்தான் ஜோனா.

அழுபவளை கடல் அலை வந்து கால் தொட்டு சமாதானம் செய்தது. கடல் காற்று தலை கோதி சமாதானம் செய்தது. தாயாய் அரவணைப்பதால்

தான் கடலையும் நாம் கடலம்மா, கடலன்னை என விளிக்கிறோமோ! கடல் காற்றை சுவாசிக்கும் போது அமைதியடையாத மனித மனமும் தான் உண்டோ!!!!

மெல்ல அமைதியடைந்தவள் அவனிடம் இருந்து விலக முனைந்தாள். அவன் பிடி இன்னும் இறுக்கமாகத்தான் இருந்தது.

“அழுது முடிச்சுட்டேன்! என்னை விடு ஜோனா”

அவள் முகத்தை ஒற்றைக் கரத்தால் நிமிர்த்திப் பார்த்தான் ஜோனா. கண்கள் நீரில் பளபளக்க, கண் இமைகள் நனைந்திருக்க, முகம் சிவந்து, மூக்கும் சிவந்து பார்க்கவே பாவமாய் தெரிந்தாள் ஜீவா. நனைந்திருந்த கன்னத்தைத் துடைத்து விட்டான். அவன் கரத்தை இழுத்துப் பிடித்துக் கொண்டாள் ஜீவா. அவளின் சிவந்திருந்த மூக்கில் குட்டி முத்தம் வைத்தான் ஜோனா.

பட்டென அவன் வாயில் அடித்தாள் ஜீவா.

“இப்ப எதுக்கு என்னை அடிச்ச மூலான்?”

“நீ எதுக்கு என் மூக்குல முத்தம் வச்ச?”

“ட்ரீம் ஆன்! நான் உன் மூக்குல முத்தம் ஒன்னும் வைக்கல. என் ரெண்டு கையையும் நீ பிடிச்சு வச்சிருக்க! சடன்னா என் உதடு அரிக்கவும், கூரான உன் மூக்க வச்சு என் உதட்ட சொறிஞ்சுக்கிட்டேன். அவ்ளோதான். இந்த ஜோனா கிஸ் பண்ணற அளவுக்கெல்லாம் நீயும் வொர்த் இல்ல உன் மூக்கும் வோர்த் இல்ல”

“நான் வொர்த் இல்லைன்னு தெரிதுல, அப்புறம் எதுக்கு என்னைப் பிடிச்சு வச்சிருக்க? விடு, விடு!” என்றவள் அவனை தள்ளி விட்டாள். கீழே விழுந்தவன், அவளையும் இழுத்துக் கொண்டுதான் விழுந்தான். இருவரையும் கடலலை தழுவி முழுதாய் நனைத்து விட்டுப் போனது.

“யூ இடியட்”

“யூ ஃபூல்”

இருவரும் ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்டதெல்லாம் காற்றோடு கலந்து காணாமல் போனது.

அன்றிரவு எப்பொழுதும் போல ஜீவா கட்டிலில் தூங்கி இருந்தாள். சோபாவில் தூக்கம் வராமல் புரண்ட ஜோனா, தனது ஐபேட்டை எடுத்து ப்ரோக்கன் ஏஞ்சல் பாடலை தேடி ஓட விட்டான். என்னவோ அந்தப் பாடல் அப்படியே ஜீவாவைப் பிரதிபலிப்பது போல இருந்தது அவனுக்கு.

**“I’m so lonely, broken angel**

**I’m so lonely, listen to my heart**

**One and only, broken angel**

**Come and save me before I fall apart"**

**பாடலைக் கேட்டப்படியே நோட்பேட்டை எடுத்தவன், விறு விறுவென கிறுக்க ஆரம்பித்தான். அவன் கிறுக்கலில் உதித்தது ஓர் அழகான பாடல். பியூட்டிபுள் ஏஞ்சல் என பெயரிட்டான் அந்தப் பாடலுக்கு.**

**சென்னையில் தனது அபார்ட்மெண்டில் அமர்ந்து போலீஸ் டிபார்ட்மெண்ட் ஆட்கள் ரிட்ரீவ் செய்து கொடுத்திருந்த ஒரு காப்பி சீசீடீவி புட்டேஜை மிக்சர் சாப்பிட்டப்படியே பார்த்திருந்தான்**

**தீரன். ஒரு கட்டத்தில் அவன் கண்கள் லாப்டோப் திரையோடு அப்படியே ஒட்டிக் கொண்டது.**

**“அடேய் பீட்சாக்காரரா!!!”**

**இவன் கத்திய கத்தலில் மிக்சர் தொண்டையில் அடைத்துக் கொள்ள, அவன் இரும்பிய இரும்பல் அந்த அபார்ட்மேண்டையே தூக்கியது!**

## அத்தியாயம் 7

**“ஏய் பிட்சாக்காரா (பிச்சக்காரன்னு படிச்சிராதீங்க)**

**கண்டுப்புடிச்சனா**

**உன்னை கைம்மா பண்ணிப்புடுவன்டா!!” என ஏய் சண்டைக்காரா பாட்டை மாற்றி பாடியபடியே போலிஸ் ஸ்டேஷன் வாசலில் நின்றிருந்தான் தீரன்.**

**ஜோனாவின் கடத்தல் திட்டமிட்டு நடந்திருக்கிறது என புரிந்துப் போனது அவனுக்கு. தனக்கு பிட்சாவில் எதையோ கலந்துக் கொடுத்து ஏர்போர்ட் போக முடியாத அளவுக்கு தூங்க**

வைத்திருக்கிறார்கள் என புரிந்துக் கொண்டவன் வாயைப் பசைப் போட்டது போல இறுக மூடி வைத்திருந்தான். ஆன் டைம்முக்கு போயும் ஜோனாவை மிஸ் செய்து விட்டேன் என அவன் சொல்லி இருந்தது பொய் என தெரிந்தால், நெருப்பில்லாமலே தன்னை வாட்டி வறுத்து மசாலா தடவி விடுவார் ஜெய் என பயந்து வந்தது அவனுக்கு. அவரின் கோபம் இவனை திரை உலகத்தை விட்டே துரத்திவிடும் அபாயம் இருந்தது. ஒரு படமாவது எஸ்.ஜே. சூர்யா லெவலுக்கு எடுத்து தானே கதாநாயகனாக நடிக்க வேண்டும் என அவன் கண்டுக்

**கொண்டிருக்கும் கனவு, கனவாகவே போய்விடுமோ என அஞ்சினான் தீரன்.**

**சீசீடீவி புட்டேஜில் ஜோனா யாரோ ஒரு பையனுடன் செல்வது போலத்தான் இருந்தது. போலிசார், ஜோனாவே தெரிந்த யாருடனோ இஸ்டப்பட்டுத்தான் சென்றிருக்கிறான் எனும் கோணத்தில் தான் தேட தொடங்கி இருந்தார்கள். இந்த கேசை ரகசியமாக துப்புத் துலக்கி வரும் போலிஸ் குழுவில் இருந்த ஒரு பெண் ஆபிசரை, தனது ஒட்டு மொத்த ஸ்கில்லையும் உபயோகித்து கைக்குள் போட்டு வைத்திருந்தான்**

தீரன். அந்தப் பெண்ணை சந்திக்கவே போலிஸ் ஸ்டேஷன் வந்திருந்தான்.

“தீரா! சீசீடிவி புட்டேஜ்ல இருந்து அந்தப் பையனோட படம் எடுத்து எல்லா போலிஸ் ஸ்டேஷனுக்கும் அனுப்பிருக்காங்க. அதோட வெளிய வந்து கார் ஏறுன வரைக்கும் புட்டேஜ் சிக்கியிருக்கு. ஆனா கார் நம்பர் அவ்ளோ விசிபளா இல்ல. க்ரைம் ப்ரான்ச் ஐ.டி டிபார்ட்மேண்ட் கிட்ட ஹெல்ப் கேட்டிருக்கோம். அவங்க சாப்ட்வேர் வச்சு என்லார்ஜ் செஞ்சு நம்பர ட்ரேஸ் பண்ண முயற்சி செய்வாங்க. எப்படியும் இதெல்லாம் சில நாள் எடுத்துடும்”

“அதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம் விடுங்க! இன்னிக்கு டின்னருக்கு போகலாம்னு கேட்டிருந்தேனே, அடியேனுக்கு டைம் ஒதுக்க ஆபிசர் மனசு வைக்கனும்” என புன்னகைத்தான் தீரன்.

சின்ன மீனை போட்டுத்தானே பெரிய மீனை பிடிக்க வேண்டும். தடங்கல் இல்லாமல் இன்பார்மேஷன் கைக்கு வர வேண்டும் என்றால் செலவு செய்து தானே ஆக வேண்டும். அதுவும் அந்த ஆபிசர் கொடுக்கும் விவரங்கள் எல்லாம் தனக்கு ஒன்றுமே இல்லை, அவரோடு உணவு

உண்பது ஒன்றே தனக்கு ஜென்ம சாபல்யத்தைக் கொடுக்கும் என்பது போல அவன் கொடுத்த பில்ட் அப்பில் மனமுருகித்தான் போனார் அந்த ஆபிசர்.

‘ஒத்த ஓசி பிட்சா சாப்பிட்டதுக்கு என்னை ஓட்டாண்டி ஆக்காம விட மாட்டாரு போல இந்தக் கடவுள். இனி வாழ்க்கையில் பிட்சாவே தொட்டுப் பார்க்க மாட்டேன்டா சாமி’ என மனதில் புலம்பியவன், வெளியே புன்னகையுடன் நின்றிருந்தான்.

ஜோனா எங்கிருக்கிறான் என்பதை மட்டும் அந்த ஆபிசர் சொல்லி விட்டால், போலிசுக்கு முன்னே ஓடிப்

போய் அவனை பிடித்து விடுவான் தீரன். அதன் பிறகு கதை திரைக்கதை அமைத்து ஜெய்யை கவர் பண்ணி விடலாம் எனும் நம்பிக்கையில் நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தான்.

“ஆண்டவா, நாங்க கண்டுப்புடிக்கற வரைக்கும் அந்த வெள்ளைக்காரப் பையனை உசுரோட வச்சிருப்பா!”

அங்கே காட்டேஜில்,

“Make me your Aphrodite

Make me your one and only”

என மெல்லிய குரலில் பாடியவாறே துவைத்த துணிகளை வெளியே

இருந்த கொடி கம்பத்தில் உலர்த்திக் கொண்டிருந்தாள் ஜீவா.

“ஏப்ரடைட்டீன்னா யாருன்னு தெரியுமா உனக்கு?”

அவ்வளவு நேரம் அவள் துணி காயப் போடுவதை அவளறியாமலே, வீட்டின் பின் சுவற்றில் ஒற்றைக் காலை முட்டுக் கொடுத்து சாய்ந்தப்படி பார்த்திருந்தவன் கேள்வி கேட்டான்.

குரல் வந்த திசையைப் பார்த்துப் புன்னகைத்தாள் ஜீவா.

“தெரியுமே! அவங்க கிரீக் பெண் கடவுள். ரொம்ப ரொம்ப அழகானவங்களாம். காதல், அழகு, குழந்தை பாக்கியம் இதுக்கெல்லாம் அவங்கதான் இன்சார்ஜ். அவங்க ஒரு பெல்ட் மாதிரி போட்டுருப்பாங்களாம். அந்த பெல்ட் போட்டுருக்கறவங்க மேல, யாரா இருந்தாலும் படக்குன்னு லவ்ல விழுந்துடுவாங்களாம்”

அவள் அருகே வந்தவன், பக்கேட்டில் இருந்த துணியை எடுத்துப் பிழிந்து அவளிடம் கொடுத்தான். இவளும் அதை வாங்கி காய வைத்தாள். சற்று நேரம் ஒன்றும் பேசாமல் இருவரும்

ஒரு ரிதமாக துணியைக் காய வைக்கும் வேலையைப் பார்த்தார்கள்.

“எனக்கு அந்த பெல்ட் வேணும் மூலான்”

“உனக்கு எதுக்கு அது? அந்த மேஜிக் பெல்ட் இல்லாமலே எல்லோரும் உன் மேல லவ்வுல விழுந்துக் கிடக்காங்களே! அப்புறம் என்ன?”

“மத்தவங்கள விடு! ஆர் யூ இன் லவ் வித் மீ மூலான்?”

அமைதியாய் அவன் முகத்தை ஏறிட்டவள்,

“ஒருத்தர் எப்பொழுதும் நலமா ஆரோக்கியமா இருக்கனும்னு நெனைக்கிறது லவ்னா, யெஸ் ஐ லவ் யூ ஜோனா! ஒருத்தர் வாழ்க்கையில சக்சஸ்புல்லா இருக்கனும்னு வேண்டிக்கறது லவ்னா, யெஸ் நான் உன்னை காதலிக்கிறேன் ஜோனா. ஒருத்தர் எப்பொழுதும் சந்தோஷமா இருக்கனும்னு மனசு விரும்பறது லவ்னா, யெஸ் வோ ஐ நி(மேண்டரின்) ஜோனா. ஒருத்தர் குழந்தை குட்டின்னு மனசு நிறைஞ்ச வாழ்க்கை வாழனும்னு நாம ஆசைப்படறது லவ்னா, யெஸ்

சாராங்ஹியோ(கொரியன்) ஜோனா” என சொன்னாள்.

“இதெல்லாம் லவ்னா, பார்க்கறப்பலாம் கட்டிப்புடிச்சிக்கறது கிஸ் அடிச்சிக்கறதுலாம் லவ் இல்லையா மூலான்?” என சின்ன சிரிப்புடன் கேட்டான் ஜோனா.

“அதுவும் லவ்வா இருக்கலாம். எல்லா விரலும் ஒரே மாதிரியா இருக்கு? அதுப்போல ஒவ்வொருத்தரும் அவங்க அவங்க இஸ்டத்துக்கு தக்க மாதிரி காதல அர்த்தம் பண்ணிப்பாங்க போல”

“உன்னோட காதல் டெபினெஷன் ரொம்ப போரிங்கா இருக்கு மூலான்! அத காதல்னு சொல்றத விட வொர்ஷிப்னு(ஆராதனை) சொல்லலாம். உன்னோட வொர்ஷிப்ப அப்படியே கடல்ல தூக்கிப் போட்டுட்டு, நாம வேணும்னா நான் சொன்ன ஸ்டைல்ல லவ் பண்ணலாமா?”

“தேவையில்ல!”

“அப்படிலாம் சொல்ல உனக்கு எந்த உரிமையும் இல்ல மூலான். என்னை

நீ கடத்தாம இருந்திருந்தா இன்னேரம் பார்ட்டி, நைட் லைப், பொண்ணுங்கன்னு என் டைம் பஞ்சா பறந்துருக்கும். இந்த இடத்துல வினாடிகள கூட நெட்டித் தள்ள வேண்டிய நிலையா இருக்கு. சோ, ஸ்டார்ட்டிங் டுடே டைம் பாஸுக்கு என் ஸ்டைல்ல நாம ரெண்டு பேரும் லவ் பண்ண போறோம்!"

போடா நீயும் உன் லவ்வும் என்பது போல பார்த்தவள், அந்த இடத்தை விட்டு நகர முயன்றாள். அவளது இடது கரத்தைப் பற்றி நிறுத்திய ஜோனா,

“பேட் மேனர்ஸ் மூலான்! பேசிட்டு இருக்கறப்பவே விட்டுட்டுப் போற நீ! சரி விடு! இந்த லவ்வுக்கு நீ புதுசுன்றதுனால உனக்கு கொஞ்சமா விட்டுத் தரேன். நாம ஒரு டீல் போட்டுக்குவோம்! பார்க்கறப்பலாம் கட்டிப் புடிச்சிக்க வேணா, கிஸ் பண்ணிக்க வேணா! அதுக்கு பதிலா நான் மூச்சு விடறப்பலாம் நீ என்னைக் கட்டிக்கோ, நீ மூச்சு விடறப்பலாம் நான் உன்னை கிஸ் அடிச்சுக்கறேன்! எஸ் சிம்பிள் எஸ் தட்! ஓகேவா?” என்றான்.

என்ன கேடித்தனமா டீலிங்டா இது என்பது போல அவள் அதிர்ச்சியாய் பார்த்தாள்.

இன்னும் கொஞ்சம் அவளருகே நெருங்கியவன், இரு கரங்களாலும் அவள் கன்னத்தைப் பற்றிக் கொண்டான். பட்டென மூச்சை அடக்கிக் கொண்டாள் ஜீவா. இவனுக்கு சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது. கஸ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். சில நிமிடங்கள் வரை மூச்சு விடாமல் தம் கட்டி நின்றவள், கடைசியில் தோற்று வேகவேகமாக ஆழ மூச்சு எடுத்து விட்டாள். முகத்தில்

முறுவலுடனே அவளைப் பார்த்திருந்தான் ஜோனா.

“தோ, மூச்சு விட்டுட்ட! இப்போ உன்னை கிஸ் பண்ணப் போறேன் மூலான்”

பெரிதாய் விரிந்திருந்த அவள் கண்களை ஆழ்ந்து நோக்கியவன், மெல்ல அவள் உதடுகளை நோக்கிக் குனிந்தான்.

அவன் பச்சை நிற கண்களில் குறும்பைப் பார்த்தவள், பட்டென அவன் கையைத் தட்டி விட்டாள்.

“கிஸ் பண்ணறவன் சொல்லிட்டு செய்ய மாட்டான் ஜோனா. இத்தனை நாளு மிஸ்பிஹேவ் செய்யாதவன், இனிமேத்தான் செய்யப் போறியான்னு கூட யோசிக்காம மூச்சப் புடிச்சுட்டு நின்ன நான் ஒரு முட்டாள்! என்னை எப்போ பாரு டென்ஷன் படுத்தி சந்தோஷப்பட்டுக்கற நீ ஒரு இடியட்! நகரு நான் ஜாகிங் போகனும்” என சொல்லியவள் இவளே அவனை விட்டு நகர்ந்து ஸ்ட்ரேச்சிங் செய்ய ஆரம்பித்தாள்.

காலையும் கையையும் நீட்டி, கழுத்தை அசைத்து, இடுப்பை

வளைத்து என அவள் ஸ்ட்ரெச்சிங் செய்வதை கைக்கட்டிப் பார்த்திருந்தான் ஜோனா.

இப்பொழுதெல்லாம் நன்றாக தூங்குபவன் எழுந்து வரவே காலை மணி பத்தாகி விடும். அதற்குள் சத்தமில்லாமல் இவனுக்கு காலை உணவை செய்து வைத்து விட்டு, கடற்கரை மணலில் கால் புதைய ஓடி விட்டு வருவாள் ஜீவா. இன்று என்னவோ அதிசயமாக சீக்கிரம் எழுந்து வந்திருந்தான் ஜோனா.

“நானும் ஜாகிங் வரேன் மூலான். லேடிஸ் மத்தியில என் புகழ்

குறையனும்னு நீ செஞ்சு குடுக்கற ஹை கலோரி சாப்பாட்டுனால கிலோ எறிட்ட மாதிரி இருக்கு” என அவளை சீண்டியவன், சட்டையைக் கலட்டிப் போட்டுவிட்டு ஒட்டி இறுகி இருந்த வயிற்று சதையை பிதுக்கிக் காட்டினான்.

“தோ பாரு, தொந்தி வச்சிருச்சு! யூ டெவில்! நீ எவ்வளவு முயற்சி பண்ணாலும் என்னை தொந்தியும் தொப்பையுமா ஆக்கற உன்னோட திட்டம் பலிக்கவே பலிக்காது! இனி நானும் ஜாகிங் வருவேன், ட்ரீம்மா இருப்பேன். ஒழுங்கா காலையில என்னையும் எழுப்பி எக்சர்சைஸ்க்கு

**கூட்டிட்டுப் போற!" என மிரட்டியவன், அவளை இடித்துக் கொண்டே ஸ்ட்ரெச்சிங் செய்ய ஆரம்பித்தான்.**

**இவள் இருக்கும் கொஞ்சம் க்ரோசரியை மேனேஜ் செய்து பார்த்து, பார்த்து ஹெல்த்தியாக சமைத்துக் கொடுத்தால்,**

**"சாலட் வேணா மூலான், ஹாட் டாக் போட்டு ஆம்லேட் செஞ்சு குடு. இந்த வெஜிடெபிள் சூப் வேணா மூலான். ப்ரோஷன் பிட்சாவ ஹீட் பண்ணி குடு" என வித விதமாக செய்ய சொல்லிக் கேட்பான்.**

அவள் செய்து கொடுப்பதையும் நன்றாக மொக்கி விட்டு, டிப்பிக்கல் புருஷனைப் போல உப்பு உறைக்கவில்லை, ஹாட் டாக்(hotdog) குரைக்கவில்லை என்பான் ஜோனா.

அவ்வளவு இடம் இருந்தும் தன்னை இடித்துக் கொண்டு நின்றவனை முறைத்துக் கொண்டே தள்ளிப் போனாள் ஜீவா. இருவரும் ஸ்ட்ரெச்சிங்கை முடித்துக் கொண்டு காலை வெயில் இதமாய் மேனியை சுட, கடற்கரையில் ஓட ஆரம்பித்தார்கள். பாதி ஓட்டத்திலேயே மூச்சு வாங்க,

குனிந்து தொடையைப் பிடித்தவாறு நின்று விட்டான் ஜோனா. இவள் நின்ற இடத்திலே ஓடிக் கொண்டே,

“என்னாச்சு ஜோனா?” என கேட்டாள்.

“ரொம்ப நாள் ஆச்சுல்ல ஓடி! அதான் உடம்புல ஸ்டமீனா இல்ல மூலான்” என மூச்சு வாங்கியவாறே பேசினான் ஜோனா.

“உடற்பயிற்சி செய்யறத விட்டுட்டா, மறுபடி தொடங்கறப்போ மெது மெதுவாத்தான் ஆரம்பிக்கனும்

ஜோனா! ஒரேடியா ஸ்ட்ரேய்ன் பண்ணிக்கக் கூடாது!”

“தெரியும், தெரியும்! என் ட்ரைனர் ஏற்கனவே காசு வாங்கிட்டு சொல்லிக் குடுத்துருக்காரு. நீ ஃப்ரீயா ஜிம் லெஸ்ஸன்ஸ் ஆரம்பிக்க வேணா! தொடை பின்னால தசைலாம் இழுக்குது. என்னால நடக்க முடியாது மூலான். என்னை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போ” என்றவன் அவள் தோளில் தன் இரு கரங்களையும் போட்டு வளைத்துக் கொண்டு தன் பாரத்தை அவள் மேல் அழுத்தி, தலையை அவள் தோளில் சரித்துக் கொண்டான்.

முதலில் தடுமாறினாலும் தம் கட்டி அவன் பாரத்தை தாங்கி மெல்ல நடந்தாள் ஜீவா.

“ரொம்ப வலிக்குதா ஜோனா? வீட்டுல தைலம் இருக்கு, போட்டு விடறேன்! வலிக்கு இதமா இருக்கும்.”

அவளின் ஸ்டமீனாவை(உடல் ஆற்றல்), ஒரு பெண்ணுக்குள்ளே இவ்வளவு சக்தியா என ஆச்சரியமாக பார்த்திருந்தான் ஜோனா. கடத்தி வந்த அன்றும் எப்படி அவனை உள்ளே கொண்டு வந்திருப்பாள் என

புரிந்தது அவனுக்கு. ஆண்களை தாங்கிக் கொள்வதே பெண்கள்தானே, உடலாலும் உணர்வாலும்! மெல்லினத்தில் கொஞ்சம் வல்லினத்தையும் ஒளித்து வைத்திருக்கிறானோ நம்மை படைத்தவன்! எல்லா பெண்ணுக்குள்ளும் ஓர் ஆண் உண்டு, எல்லா ஆண்களுக்குள்ளும் ஒரு பெண் உண்டு என்பதை தான் அர்த்தநாரிஸ்வரராய் இருந்து உணர்த்துகிறானோ!

சற்று நேரத்திலேயே தன் பாரத்தை விலக்கிக் கொண்ட ஜோனா, ஒற்றைக் கரத்தை மட்டும் அவள்

தோளில் போட்டவாறு நடக்க ஆரம்பித்தான். வீட்டை அடைந்ததும், முதல் வேலையாக தைலத்தை எடுத்து வந்தாள் ஜீவா.

“உட்காரு ஜோனா” என அவனை டைனிங் நாற்காலியில் அமர்த்தி கீழே அமர்ந்துக் கொண்டாள் இவள்.

“இங்க வலிக்குதா? இல்ல இங்கயா?” என அவன் தொடையில் அங்கங்கே அழுத்திக் கொண்டே கேட்டாள் ஜீவா.

அவள் கைப்பட்ட இடமெல்லாம் ஷாக் அடித்தது போல இருந்தது இவனுக்கு.

அவனிடம் பதில் இல்லாமல் போகவும்,

“சரி விடு! எல்லா இடத்துலயும் தடவி விடறேன்! கொஞ்ச நேரத்துல வலி ஓடியே போய்டும். தசை பிடிப்பு எதாச்சும் இருந்தாலும் சரியாகிடும்.” என சொல்லியவாறே தைலத்தை சூடு பறக்கத் தேய்த்து விட்டாள் ஜீவா.

ஒரு டாக்டர் நோயாளியை கவனிப்பது போல எந்த அட்டாச்மெண்டும் இல்லாமல், அவள் பாட்டுக்கு பேசிக் கொண்டே தைலத்தைப் பூசிக் கொண்டிருந்தாள்.

‘இத தி கிரேட் ஜோனாவோட காலுன்னு நெனைச்சாளா இல்ல மரக்கட்டைன்னு நெனைச்சாளா! எந்த உணர்ச்சியுமே இல்லாம இவ பாட்டுக்கு வேலையைப் பார்க்கறா! எனக்கு மட்டும் ஏன் கீழ குனிஞ்சு தைலம் தடவறவளோடா தலையைத் தடவிக் கொடுக்கனும்னு தோணுது? அந்த முகத்த அப்படியே இழுத்து என் வயித்துல அழுத்திக் கட்டிக்கனும்னு ஏன் தோணுது?’ என நினைத்தவனின் கை சொன்ன பேச்சு கேட்காமல் மெல்ல அவள் தலை முடியை அளைவதற்கு நெருங்கியது. பட்டென

கையை இழுத்துக் கொண்டவன், எழுந்து நின்றுக் கொண்டான்.

கீழே அமர்ந்தப்படியே அவனை நிமிர்ந்துப் பார்த்தவள்,

“வலி போயிடுச்சா ஜோனா?” என கேட்டாள்.

“யா, யா!” என முணுமுணுத்தவன் எழுந்து குளியலறைக்கு சென்று விட்டான்.

அவன் குளித்து முடித்து வந்ததும், இருவரும் காலை உணவு உண்ண

அமர்ந்தார்கள். எப்பொழுதும் ஒன்றாக சாப்பிடும் பொழுது, அவளை வம்பிழுத்துக் கொண்டே சாப்பிடுபவன், அன்று அமைதியாக இருந்தான்.

அவனுக்கு ப்ரேட் டோஸ்டும், ஆம்லேட்டும் செய்திருந்தவள், இவளது காலை உணவாக டீயில் பிஸ்கட்டை நனைத்து சாப்பிட்டாள். அதை கவனித்தவன், தனது அமைதியைக் கை விட்டு,

“ஜாகிங் செஞ்சிட்டு வந்து, நல்லா சாப்பிடாம என்னதிது பிஸ்கட் சாப்பிட்டுட்டு இருக்க?” என கேட்டான்.

“இன்னிக்கு பிஸ்கட் சாப்பிடனும் போல இருக்கு ஜோனா” என்றவள் டீயை ரசித்துக் குடித்தாள்.

நேற்றும் அவள் காலை உணவுக்கு பிஸ்கட் சாப்பிட்டது போலத்தான் இருந்தது ஜோனாவுக்கு. மதியத்துக்குக் கூட அவனுக்கு நன்றாக சமைத்துக் கொடுத்தவள், வயிறு சரியில்லை என சொல்லி வெறும் சூப் மட்டும் அருந்தி இருந்தாள். சட்டென எழுந்தவன், கிச்சனில் இருந்த காபினேட் எல்லாவற்றையும் ஒன்றொன்றாக திறந்துப் பார்க்க ஆரம்பித்தான்.

உணவு பொருட்கள் கிட்டத்தட்ட காலியாகும் நிலையில் இருந்தன. இருப்பதை எல்லாம் அவனுக்குக் கொடுத்து விட்டு, இவள் அரை வயிறும் கால் வயிறும் உண்டிருக்கிறாள் என புரிந்துப் போனது ஜோனாவுக்கு.

அவள் அருகே வந்து இடுப்பில் கை வைத்தப்படி நின்றவன்,

“ஏன் மூலான்?” என கேட்டான்.

“க்ரோஷரி வாங்கனும்னா வெளிய போகனும்! அப்படி வெளிய போக

**வேண்டிய நிலமை வந்தா, ‘சரி வெளியத்தானே போற, அப்படியே என்னை சிட்டில விட்டுரு! நான் கௌம்பறேன்’னு நீ சொல்லிடுவியோன்னு பயமா இருந்தது ஜோனா! என் வாழ்க்கையில இந்த சில நாட்கள் தான் நான் ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கேன்! அந்த சந்தோஷம் இன்னும் கொஞ்ச நாள் நீடிக்கும்னா நான் முழுப்பட்டினியா இருக்கவும் தயார்” என்றவளை பார்த்தப்படியே நின்றிருந்தான் ஜோனா.**

அவளை கிண்டல் செய்து, கேலி செய்து, உட்கார விடாமல் வேலை வாங்கி, கோபம் வரும் போது திட்டி தலையணையை விட்டடித்து என அவள் நாட்களை இவன் ரணகளமாக்கி இருந்தாலும், அதையும் நீட்டிக்க விரும்பும் ஜீவாவை நினைத்து இவனுக்கு நெஞ்சுக்குள் பிசைந்தது. இவள் காட்டும் அன்புக்கும், அக்கறைக்கும், பாசத்துக்கும், நேசத்துக்கும் தான் தகுதியானவனா என இவன் மனசாட்சி கேள்விக் கேட்டது!

தனக்கு ஒன்றும் இல்லை என்றாலும், பிள்ளை சாப்பிடட்டும் என

நினைப்பாள் தாய். அதே போலத்தான், உணவு பத்தவில்லை என்றால் கணவனுக்கு மொத்தத்தையும் வைத்து விட்டு பழையதை உண்பாள் மனைவி. (எல்லாரும் இந்த கேட்டகரில வரமாட்டோம்! ஏன் நானுமே வர மாட்டேன். கொஞ்சமா இருந்தாலும் எனக்கும் பாதி வேணும்னு நிக்கற ஆள் நான். மக கிட்ட மட்டும்தான் இந்த விட்டுக் கொடுத்தல் எல்லாம்! மத்தப்படி எனக்கும் வயிறு இருக்கு மேன்! பசிக்கும்ல!) இவள் எனக்கு தாயா தாரமா என்பது போல பார்த்திருந்தான் ஜோனா.

“கிளம்பிடுவியா ஜோனா?” என அமர்ந்த வாக்கிலேயே அவனை நிமிர்ந்துப் பார்த்து கேட்டவளின் கண்கள் வெளியே சிந்தாத கண்ணீரால் பளபளத்தது.

சட்டென அவளை வயிற்றோடு இறுக்கிக் கட்டிக் கொண்டான் ஜோனா! கை ஆதரவாய் அவள் தலையை வருடிக் கொடுத்தது.

“இப்போதைக்கு போகல மூலான்! உன் கூடவே இருக்கேன்! ஆனா நீ பட்டினி கிடக்கறது எனக்குப் பிடிக்கல! நீ தெம்பா இருந்தாத்தானே எனக்கு வேலை செஞ்சுக் குடுக்க

முடியும்! நாளைக்கு நியரெஸ்ட் சிட்டிக்குப் போய் ஒரு ரவுண்ட் அடிச்சிட்டு, தேவையானத வாங்கிட்டு வரலாம். சரியா?”

அவன் பிடிக்குள் இருந்தவள், தலையை சரி என ஆட்டினாள்.

நாளைக்கு வெளியே போகலாம் என இவர்கள் திட்டம் போட, அன்றைய இரவே வெளியே போக வேண்டிய கட்டாயத்தைக் கொடுத்தது விதி.

## அத்தியாயம் 8

அதே ஆளரவமற்ற ஸ்டேஜ். அதே இருட்டு, அவன் மேல் மட்டும் ஸ்போட் லைட்! குரல் வெளி வரவில்லையே எனும் பயம் மனதைக் கவ்வ, முகம் வெளிறிப் போய் கிடக்க, நெற்றியில் முத்து முத்தாய் வேர்த்திருக்க, பேனிக் அட்டாக்கில் இருதயம் பட படவென அடிக்க, மயங்கி விழும் நிலையில் இருந்தான் ஜோனா. கண்களை சிமிட்டி, கைக்கால்களை மெல்ல ஆட்டி தன்னை தழுவ வரும் மயக்கத்தில் இருந்து விடுபட போராடினான். அவன் முயற்சிகள் விழலுக்கு இறைத்த நீராய் வீணாகிக்

போக, கண்கள் மெல்ல சொறுகி உடல் துவண்டு விழும் நிலைக்கு செல்ல ஆரம்பித்தது.

அந்த நேரத்தில் தேவகானமாய் க்ரீச் எனும் சத்தம் காதில் விழ, கண்களை அகலமாக விரித்துப் பார்த்தான் ஜோனா. ஸ்டேஜின் மேய்ன் கதவைத் திறந்து வெள்ளை உடை அணிந்த உருவம் ஒன்று அவனை நோக்கி ஒயிலாய் நடந்து வந்தது. யாரென கண்களை சுருக்கிப் பார்த்தான் இவன். இருட்டில் அவ்வுருவத்தின் முகம் சரியாய் தெரியவில்லை. மெல்ல நடந்து வந்த அவ்வுருவம், முன் வரிசையில் இருந்த

நாற்காலியில் அமர்ந்துக் கொண்டது. அது அமர்ந்த நொடி, ஸ்போட் லைட் இவனிடம் இருந்து விலகி அவ்வுருவத்தின் மேல் பாய்ந்தது.

வெள்ளை உடை உருவத்தின் முகம் கண்ணுக்குப் புலப்பட்ட நொடி, இவன் உடல் அப்படியே சிலிர்த்து அடங்கியது. வார்த்தைகளை வெளி அனுப்பாமல் சத்தியாகிரகம் செய்த தொண்டையில் இருந்து,

“ஏஞ்சல்!” எனும் சொல் பூஞ்சிதறலாய் வெளிப்பட்டது.

தனக்கு குரல் வந்து விட்டதை பெரும் அதிசயத்துடன் உணர்ந்தவன் முகம் முழுக்க புன்னகையுடன்,

“ஏஞ்சல்!!!” என அந்த அரங்கமே அதிரும் அளவுக்கு கத்தி அழைத்தான்.

படக்கென கண்கள் திறந்துக் கொள்ள, இவ்வளவு நேரம் அதி வேகமாய் துடித்துக் கொண்டிருந்த நெஞ்சை வலது கரத்தால் மெல்ல நீவி விட்டான் ஜோனா. மெல்லிய இருட்டில் மூழ்கி இருந்த அறையை பார்வையால் அலசியவன், நெற்றியில் பூத்திருந்த வேர்வையைத் துடைக்க

இடது கையைத் தூக்க முயன்றான். ஆனால் முடியவில்லை. மெல்ல திரும்பி இடது பக்கம் பார்க்க, அவன் கை மேல் கன்னத்தை வைத்து அழகாய் உறங்கிக் கொண்டிருந்தாள் ஜீவா.

“ஏஞ்சல்!” என அவன் உதடுகள் மெல்ல முணுமுணுத்தன.

மல்லாக்கப் படுத்திருந்தவன் கொஞ்சமாய் அவள் புறம் திரும்பி, தன் வலக்கரம் கொண்டு அவள் தலையை மெல்ல தடவிக் கொடுத்தான்.

“மை ஏஞ்சல்!” சத்தமில்லாமல் வந்து விழுந்தன வார்த்தைகள்.

குழந்தைப் போல தூங்கிக் கொண்டிருந்தவளின் முகத்தைப் பல நிமிடங்கள் பார்த்தப்படியே படுத்திருந்தான் ஜோனா. கட்டிலின் அருகே நாற்காலியைப் போட்டு, சாய்ந்து தூங்கிக் கொண்டிருந்தவளின் மெல்லிய மூச்சு விடும் சத்தம் கூட சங்கீதமாய் இசைத்தது அவன் செவிகளில். கண் மூடி, அவள் மூச்சின் ரிதத்துக்கு ஏற்ப, ஆர்கேஸ்ட்ராவின் மியூசிக் கண்டெக்டர் போல வலது கையை

மெல்ல அசைத்தான் ஜோனா. 'பியூட்டிபுள் ஏஞ்சலுக்கு' அழகான டியூன் வந்து அவன் மனதில் அமர்ந்துக் கொண்டது. முகம் மலர்ந்து விகசிக்க, கண்களைத் திறந்து தூங்குபவளையே மீண்டும் புன்னகையுடன் பார்த்திருந்தான் இந்தப் பாடகன்.

அவள் கன்னத்துக்கு கீழிருந்த கையை மெல்ல உருவிக் கொண்டவன், சத்தமில்லாமல் எழுந்து அமர்ந்தான். பின் கட்டிலில் இருந்து இறங்கியவன், முதுகை வளைத்துப் படுத்திருந்தவளை கைகளில் அள்ளிக் கொண்டான்.

உடல் அலுத்துக் களைத்திருந்தும், கஸ்டப்பட்டு கண்ணிமைகளைப் பிரித்தாள் ஜீவா.

“ஜோனா!” என கரகரத்த குரலில், அவன் தூக்கியதை ஆட்சேபித்தாள் மங்கை.

“ஷ்!!! மூலான்! கோ பேக் டு ஸ்லீப்!” என்றவன் அவளை கட்டிலில் வசதியாகப் படுக்க வைத்தான்.

தலை தலையணையைத் தொட்டதும், இரு கைகளையும் நெஞ்சுக்கடியில் வைத்து, ஒற்றைக் காலை சற்று

மேலுயர்த்தி குப்புறப் படுத்துக் கொண்டவள், மீண்டும் உறங்கிப் போனாள். அவள் ஆழ்ந்த உறக்கத்துக்கு செல்லும் வரை காத்திருந்தவன், மறுபக்கம் வந்து அவளை மென்மையாக அணைத்துப் படுத்துக் கொண்டான்.

தூக்கத்தில் கூட மெல்லிய குரலில்,

“ஹ்ம்ம், விடு!” என அவள் சொன்னதை புன்னகையுடன் கேட்டுக் கொண்டவன்,

“இனி விடவே மாட்டேன் மூலான்!” என அவள் காதின் அருகே முணுமுணுத்தான்.

அதற்கு மேல் தூக்கம் வராமல், உறங்கிக் கொண்டிருந்தவளின் முதுகை மெல்ல வருடியவாறே அப்படியே படுத்துக் கிடந்தான் ஜோனா.

அன்று பகலில், இருந்த கொஞ்ச க்ரோஷரியை வைத்து ஜோனாவுக்காக ஸ்பெகெட்டி செய்திருந்தாள் ஜீவா. அவளுக்காக கொஞ்சமாக ப்ரெட்டைப் பிய்த்துக் போட்டு, உறைப்பு நிறையவே சேர்த்து,

முட்டை கலந்து ப்ரேட் மசாலா செய்திருந்தாள். உணவு மேசையில் அமர்ந்தவன், தனது தட்டை அவளுக்கு நகர்த்தி வைத்து விட்டு, அவளது தட்டை இவன் எடுத்துக் கொண்டான்.

“ஏன் ஜோனா?”

“சாப்பிடு! ரெண்டு நாளா நீ சரியாகவே சாப்பிடல! பெரிய செய்ண்ட்னு(saint) நினைப்பா உனக்கு! எப்பவுமே முதல்ல நம்ம வயித்தத்தான் பார்க்கனும்! அப்புறம்தான் மத்தவங்கள நெனைக்கனும்! நாம தெம்பா

இல்லைனா நம்ம சார்ந்தவங்கள எப்படி பார்த்துக்க முடியும்? டைம் பாஸீக்கு உன்னை வேற லவ் பண்ணலாம்னு முடிவு செஞ்சிருக்கேன். நீ மயங்கி வச்சா, அப்புறம் நான் யார கிஸ் பண்ண? யார கட்டிப்புடிக்க?”

அப்பொழுதும் அடமாக இவள் சாப்பிடாமல் இருக்க,

“இப்போ நீ சாப்பிடலனா, எனக்கும் சாப்பாடு வேணா!” என நாற்காலியில் இருந்து எழுந்துக் கொண்டான் ஜோனா.

சட்டென அவன் கையைப் பற்றிக் கொண்டவள்,

“சாப்பிடறேன் ஜோனா! நீ உட்காரு ப்ளிஸ்” என சொல்லி அந்த ஸ்பேகட்டியை சாப்பிட ஆரம்பித்தாள்.

மீண்டும் நாற்காலியில் அமர்ந்தவன் அவள் சாப்பிடுவதையே கைக்கட்டிப் பார்த்திருந்தான். பாதியில் நிறுத்தியவள்,

“இது போதும் ஜோனா எனக்கு! நீ சாப்பிடு” என தட்டை அவனருகே நகர்த்தினாள்.

“என்னது? நீ எச்சிப் பண்ணத இந்த கிரேட் ஜோனா சாப்பிடனுமா? நோ வே லெடி, நோ வே! இந்த ஜோனா கூட எச்சில் பண்டமாற்று செஞ்சுக்கனும்னா அது உதட்டு முத்தமா மட்டும்தான் இருக்கனும்! மத்தப்படி ஃபூட் ஷேரிங்லாம் எனக்கு ரொம்பவே அலர்ஜி! சோ, இத நீயே சாப்பிட்டு முடி”

முத்தமிடுவதை பண்டமாற்று முறை என ஒப்பீடு செய்தவனை புன்னகையுடன் நோக்கியவள்,

“ஒரே பொருள(எச்சில்) ஒருத்தொருக்கொருத்தர் கொடுத்து மாத்திக்கிறது பண்டமாற்று முறையில வராது ஜோனா. நான் உப்பு வித்தா, நீ சீனி விக்கனும்! அது தான் பண்டமாற்று சிஸ்டம்!” என ஆர்கியூ செய்தாள்.

“மிஸ் என்சைக்கிளோப்பீடியா! கிஸ் செய்யறப்ப ஆண்களின் எச்சில்ல டெஸ்டொஸ்டெரென்ற (testosterone) ஹோர்மோன் வெளியாகுமாம். அது

பெண்களோட எச்சில்ல மிஸ்ஸிங். சோ ஒரே பொருளா இருந்தாலும், அதுல உள்ள எலெமென்ட்ஸ் வேறங்கறதுனால, கிஸ்ஸிங் இஸ் எ பார்ட்டர் சிஸ்டம் தான் (பண்டமாற்று முறை)! நீ நம்பலைனா, இப்போவே நாம ரெண்டு பேரும் டெஸ்ட் செஞ்சுப் பார்த்திடலாமா?" என முத்தமிடுவது போல நெருங்கியவன் கையை சிரித்தப்படியே விளையாட்டாக அடித்தாள் ஜீவா.

"யூ ஆர் க்ரேசி!"

"யா, ஐ க்நோ! இன்னொரு விஷயம் தெரியுமா மூலான்? ஒரு அவரேஜ்

கிஸ்ல நம்ம பார்ட்னரோட எச்சில்ல இருந்து 9 மில்லிகிராம் தண்ணீரும், 0.7 மில்லிகிராம் கொழுப்பு சத்தும், ப்ரோட்டினும் நமக்குக் கிடைக்குதாம்! அதனால என்ன சொல்ல வரேன்னா, கிஸ்ஸிங் இஸ் எ ப்ளெஸ்ஸிங்!" என மிதப்பாக சொன்னவன், அவள் உண்டு முடித்ததும் தான் ப்ரேட் மசாலாவை இவன் சாப்பிட ஆரம்பித்தான்.

"இது உறைக்கும் ஜோனா! நான் வேற எதாவது செஞ்சு குடுக்கவா?" என எழுந்தாள் ஜீவா.

"எங்க ஊர்ல நண்டோஸ் சிக்கனை, எக்ஸ்ட்ரா ஹாட்னு ஆர்டர் செஞ்சு

சாப்பிடுவேன் நான். இந்த உறைப்பெல்லாம் என்னை ஒன்னும் செய்யாது” என பந்தாவாக சொன்னவன், சாப்பிட ஆரம்பித்தான்.

முதல் வாய் வைத்ததுமே, அதன் காரம் நெஞ்சுக் குழி வரை எரிய ஆரம்பித்தது. ஆனாலும் அவளிடம் ஒன்றும் காட்டிக் கொள்ளாமல், முழுதும் உண்டு முடித்தவன்,

“என்னோட போனை சார்ஜர்ல போடு மூலான்” என அவளிடம் நீட்டினான்.

தொன்னூறு சதவீதம் சார்ஜ் இருந்தது அதில். ஒன்றும் பேசாமல், வாங்கிக் கொண்டு ரூமுக்குள் போனாள் அவள். ஜீவா அகன்றதும், ஜக்கில் இருந்த தண்ணீரை அப்படியே வாய்க்குள் சரித்துக் கொண்டான் இவன்.

“ப்ளேடி ஹேல்! சோ ஸ்பைசி! எப்படித்தான் இப்படி சாப்பிடறாங்களோ. இந்த வெட்டி பந்தாலாம் நமக்குத் தேவையா! மூலான் வேற ஃபூட் வேணுமான்னு கேட்டப்பவே சரின்னு சொல்லிருக்கனும். ஆ!!!!!!” என முனகியவன், சிங்க் அருகே போய்

இன்னும் தண்ணீர் எடுத்துக் குடித்தான். கண்கள் கலங்கி சிவந்துப் போனது.

அவ்வளவு நீரை பருகியும் வயிற்றின் எரிச்சல் மட்டுப் படவேயில்லை. எரிச்சல் கொஞ்சம் கொஞ்சமாக வலியாக மாறியது. மாலை தேநீரையும் இரவு உணவையும் அவள் வற்புறுத்தியும் வேண்டாம் என மறுத்தவன், ஹாலில் குறுக்கும் நெடுக்கும் நடந்துக் கொண்டிருந்தான்.

“என்ன செய்யுது ஜோனா? ஏன் ஒரு மாதிரியா இருக்க?” என பலமுறை கேட்டு விட்டாள் ஜீவா.

“நத்திங்!” என்பதே அவன் பதிலாய் இருந்தது.

வயிற்றைத் தடவி, ஏப்பம் விட முயன்று என இவன் செய்த எதுவும் பலனளிக்காமல் போக, சற்று நேரத்துக்கெல்லாம் விடுவிடுவென பாத்ரூம் நோக்கி ஓடினான் ஜோனா.

இவளும் அவன் பின்னாலேயே ஓடினாள். அவள் உள் நுழைவதற்குள் பாத்ரூம் கதவை சாத்திக் கொண்டவன், குடலே வெளி வந்து விடுவதைப் போல வாந்தி எடுத்தான்.

“ஜோனா, ஓப்பன் தெ டோர்! ஜோனா” என கத்திக் கொண்டே கதவைத் தட்டியபடி இருந்தாள் ஜீவா.

மீண்டும் மீண்டும் வாந்தி எடுக்கும் சத்தம் கேட்டது.

“டேய், கதவ திறடா! ஜோனா ப்ளிஸ்”

இவளது கெஞ்சல் எதுவும் அவன் காதில் விழவில்லை. ஏற்கனவே சென்சிட்டிப்பான டைஜெஷன் சிஸ்டத்தைக் கொண்டவன், உறைப்பு சாப்பிட்டது மட்டுமில்லாது, அதற்கு

மேல் ஒன்றும் சாப்பிடாமல் வயிற்றைக் காயப் போட்டதும் நன்றாக காற்று ஏறி வயிறு உப்புசமாகி இருந்தது. விடாமல் வாந்தி எடுத்து மயங்கும் நிலைக்குப் போனவனின் காதில், ஜீவாவின் அழுகை சத்தம் கேட்க. கஸ்டப்பட்டு நகர்ந்து கதவின் தாள்ப்பாளை நீக்கினான்.

சட்டென உள்ளே நுழைந்தவளின் மேல் இவன் சரிய, அவனோடு கீழே சரிந்தாள் ஜீவா. தன் மேல் விழுந்துக் கிடந்தவனை மெல்ல அணைத்துக் கொண்டாள் இவள். அவன் முதுகை வருடி,

“ஒன்னும் இல்ல! நல்லா போயிடும் ஜோனா! யூ வில் பீ ஆல்ரைட்!” என திரும்ப திரும்ப சொன்னளை மெல்ல கண் திறந்துப் பார்த்தான் ஜோனா!

அவளின் தவிப்பு, கண்களில் வழிந்த கண்ணீர், முகத்தில் இருந்த பதட்டம் எல்லாம் இவனை என்னவோ செய்தது. ஆனாலும் பேசவோ, அவள் மேல் இருந்து எழும்பவோ உடம்பில் தெம்பில்லாமல் அப்படியே கிடந்தான் ஜோனா.

அவன் சட்டையெல்லாம் வாந்தியாய் இருக்க, தன் மேலேயும் அதையெல்லாம் அப்பி இருந்தவனைப் பார்த்து கொஞ்சம் கூட அருவருப்பு வரவில்லை ஜீவாவுக்கு. மெல்ல அவனைத் திருப்பி பாத்ரூம் தரையிலேயே படுக்க வைத்தவள், எழுந்துக் கொண்டாள். அவன் மேலே வந்து விழுந்ததில், இடுப்பும் முதுகும் வலி பின்னி எடுத்தது. தனது வலியைக் கண்டுக் கொள்ளாமல்,

டவலை நனைத்து எடுத்து வந்தவள் அவன் முகத்தை மென்மையாக துடைத்து விட்டாள். சட்டையின் பட்டன்களை ஒவ்வொன்றாக

**கழட்டியவள், அவனை மெல்ல மேலே தூக்கி சட்டையை அகற்றினாள். தன் மேல் சாய வைத்து அவன் உடம்பின் முன் பாகத்தைத் துடைத்தவள், நெஞ்சை மெல்ல நீவி விட்டாள்.**

**“எத்தனை தடவ கேட்டேன், என்ன செய்யுது ஜோனான்னு? ஒரு வார்த்தை வயித்த வலிக்கிதுன்னு சொன்னியா? இடியட்” என கலங்கிய குரலில்  திட்டியப்படியே அவனை சுத்தப்படுத்தினாள்.**

**அவன் உடம்பில் மெல்ல சூடு ஏற ஆரம்பிப்பது போல இருந்தது.**

“காய்ச்சல் வரப் போகுது போல! நான் ஒரு முட்டாள்! இன்னும் ரிக்கவரி மோட்ல இருக்கறவன கடத்திட்டு வந்தது என் தப்பு! ஜீவா இஸ் எ செல்பிஷ் பிட்ச்!” என தன்னைத் தானே திட்டிக் கொண்டே அவனது ஷார்ட்சை மாற்ற முயன்றாள்.

அவள் கையைப் பற்றித் தடுத்தவன்,

“ஐ கென் மேனேஜ்!” என மெல்லிய குரலில் சொன்னான்.

“இப்படியே இரு ஜோனா! நான் மாத்துத் துணி எடுத்துட்டு வரேன்! நாம சீக்கிரம் கிளினிக் போகலாம்!” என்றவள் ரூமுக்கு ஓடினாள்.

திரும்பி வரும் போது அவளுமே வேறு டீஷர்ட்டுக்கு மாறி இருந்தாள். அவள் உதவியுடன் உடை மாற்றியவன், அவள் கைப்பிடித்து பாத்ரூமில் இருந்து மெல்ல வெளியே வந்தான். உடம்பில் சூடு கொஞ்சம் கொஞ்சமாக ஏற, உடல் நடுங்க ஆரம்பித்தது அவனுக்கு.

அவனை சோபாவில் அமர்த்தியவள், ஓடிப்போய் காரை ஸ்டார்ட்

செய்தாள். பின் உள்ளே வந்து அவனை எழுப்பி கைத்தாங்கலாக அழைத்துப் போய் காரில் அமர்த்தினாள். பின் மீண்டும் ஓடிப் போய் வீட்டுக் கதவைப் பூட்டியவள், டேஸ்போர்டில் இருந்து ப்ளாஸ்டிக் பையை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

“வாந்தி வந்தா இதுல எடு ஜோனா! கீழ சிந்திட்டாக் கூட பரவாயில்ல. நான் கழுவிக்கறேன்” என்றவள் காரை பறக்க விட்டாள்.

கார் சீட்டில் சாய்ந்தப்படி, அவளையேப் பார்த்தவாறு வந்தான்

ஜோனா. ஒரு கை ஆதரவாய் அவன் தொடையை வருடிக் கொடுக்க, ஒற்றைக் கையால் காரை செலுத்திக் கொண்டிருந்தாள் அவள்.

கண்களை மூடிக் கொண்டவன், தனக்காக இப்படி வேறு யாரெல்லாம் துடித்திருக்கிறார்கள் என ஞாபக இடுக்கில் தேடிப்பார்த்தான். ஒரு ஆறு ஏழு வயது வரை உடம்பு சரி இல்லாமல் போனால் அவன் அம்மா அருகே அமர்ந்து மருந்துக் கொடுத்துப் பார்த்துக் கொண்டது லேசாய் நினைவில் வந்தது. அதன் பிறகு இவனுக்குக் கீழ் தம்பி தங்கைகள் என ஆகிவிட, உடம்பு

முடியாத போது செல்லம் கொஞ்ச அவருக்கும் நேரமில்லை, இவனுக்கும் தன்னிடம் அவரைப் பிடித்து வைக்க இஸ்டமிருந்ததில்லை. காய்ச்சல், வயிற்று வலி என்றால் அம்மாவிடம் மருந்து வாங்கிக் குடித்து விட்டு தானாய் போய் சுருண்டுப் படுத்துக் கொள்வான்.

பதினாறு வயதுக்குப் பிறகு, தந்தை தாய் பாசம் என்பது கானல் நீர் என புரிந்ததும் அவனுக்கு என இருந்தது அவன் மட்டுமே! நண்பர்களிடம் கூட சந்தோசத்தை மட்டுமே பகிர்ந்துக் கொள்பவன், உடல் உபாதைகளை பெரிதாகக் காட்டிக் கொள்ள

மாட்டான். இன்று இவள் தனக்காகத் துடித்து, அழுதது, தன்னைத் தானே திட்டிக் கொண்டது எல்லாம் இவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. பாறையாய் இறுகிக் கிடந்த இதயம், பனிக்கட்டியாய் உருகி கரைந்துப் போனது அவளன்பில். தன்னலமற்ற அந்த அன்பு இன்றும், இனி என்றும் தனக்கே தனக்காய் வேண்டும் என அவன் மனது அடம் பிடிக்க ஆரம்பித்தது. மெல்லிய புன்னகை முகத்தில் பரவ, அவள் தோளில் சாய்ந்துக் கொண்டான் ஜோனா.

“இதோ! கிட்ட வந்துட்டோம் ஜோனா! யூ வில் பீ ஆல்ரைட்!” என அவனை

சாமாதானப்படுத்திக் கொண்டே இடது கையை மடக்கி அவன் கன்னத்தைத் தடவிக் கொடுத்தாள் ஜீவா.

பாண்டிச்சேரியில் அந்த நேரத்துக்கு திறந்திருந்த கிளினிக்குக்கு அவனை அழைத்துப் போனாள் இவள். அவசரத்தில் அவன் ஐடெண்டியை மறைக்கும் படி தொப்பியோ, கூலர்சோ எதுவும் எடுத்து வந்திருக்கவில்லை. அவர்களின் நல்ல நேரம், ஒன்றிரண்டு ஆட்களே இருந்தார்கள் அங்கே. அவர்களுக்கும் இவனைத் தெரிந்திருக்கவில்லை. பதிவு எல்லாம் முடித்து, டாக்டரின் அறைக்குள் நுழையும் வரை

உடலைக் குறுக்கி அவள் தோளில் சாய்ந்தப்படித்தான் அமர்ந்திருந்தான் இவன். இவளும் மெல்லியக் குரலில் தாய் குழந்தையை சமாதானப்படுத்துவது போல,

“நல்லாயிடும் ஜோனா! யூ ஆர் எ ஸ்ட்ரோங் மேன்! இன்னும் கொஞ்ச நேரம்தான்” என சொல்லிக் கொண்டே இருந்தாள்.

உள்ளே நுழைந்தவனைப் பார்த்த அந்த பெண் டாக்டரின் கண்கள் பெரிதாய் விரிந்தன.

“ஓ மை காட்! ஓ மை காட்! ஜோனா!!!!!” என அழைத்தப்படியே தனது இருக்கையில் இருந்து எழுந்துக் கொண்டாள் அவள்.

“என்னால நம்பவே முடியலை! தே பேமஸ் சிங்கர் ஜோனா இன் அவர் கிளினிக்” என ஆர்ப்பாட்டமாய் வரவேற்றாள்.

“டாக்டர், அவர பேஷண்டா முதல்லா பார்க்கறீங்களா? அப்புறமா சிங்கரா பார்க்கலாம்” என பொறுமையை கை விட்டு குரலை உயர்த்தினாள் ஜீவா.

அவளது இரிட்டேட்டிங்கான குரல் தொனியில் இவனுக்கு மெல்லிய புன்னகைப் பூத்தது.

ஜீவாவின் குரலில் தன் நிலை அடைந்த டாக்டருக்கு, முக மலர்ச்சியை அடக்கவே முடியவில்லை. அவனைப் பரிசோதித்து, வயிற்று உப்புசத்துக்கும், கேஸ்ட்ரிக் வலிக்கும், காய்ச்சலுக்கும் மருந்து எழுதிக் கொடுத்தவள், ஒரு ஊசியையும் போட்டு விட்டாள்.

“ஓ மை காட்! உங்களுக்கு ஊசி போடற பாக்கியத்தை கொடுத்தக் கடவுளுக்கு எனது மனமார்ந்த

நன்றிய சொல்லிக்கறேன்! ஐம் எ பிக் ஃபேன் ஆப் யூ ஜோனா!” என வளவளத்தப்படியே அடிக்கடி ஓ மை காட்டையும் சொல்லி சிகிச்சையை முடித்தாள் அந்த டாக்டர்.

இவர்கள் கிளம்பும் முன்,

“இந்த நிலையில கேக்கறது தப்புத்தான்! ஆனாலும் இப்படி ஒரு சான்ஸ் இனி எப்போ வருமோ! இப் யூ டோண்ட் மைண்ட், மே ஐ கெட் எ செல்பி ஜோனா?” என கேட்டாள் அந்த டாக்டர்.

“யெஸ்!” என இவனும்,

**“நோ!” என ஜீவாவும் ஒரே நேரத்தில் சொன்னார்கள்.**

**அவன் முகத்தோடு முகம் ஒட்டி செல்பி எடுத்துக் கொண்டே அனுப்பி வைத்தாள் அந்த பெண் டாக்டர்.**

**“உடம்பு முடியாத போது கூட செல்பிக்கு போஸ் குடுக்கனுமா?” என அவனைத் திட்டிக் கொண்டே காருக்கு அழைத்து வந்தாள் ஜீவா.**

**காரில் ஏறி அமர்ந்துக் கொண்டவன், சீட்டைப் பின்னால் சாய்த்து நன்றாக**

படுத்துக் கொண்டான். ட்ரைவர் இருக்கையில் ஏறி அமர்ந்த ஜீவா காரை ஸ்டார்ட் செய்தாள்.

“பொண்ணுங்க செல்பி கேட்டா, மறுக்கக் கூடாது மூலான்! பெண் பாவம் பொல்லாதது! சோ அவங்க எது கேட்டாலும் நோ சொல்லாம குடுத்துடனும்! இப்போ கிஸ் கேட்டுப் பாரேன், நீ போதும் போதும்ங்கற அளவுக்குக் குடுப்பேன்!” என மெல்லிய குரலில் அவளை வம்பிழுத்தான் ஜோனா.

“ஐயாவுக்கு வலி குறைஞ்சிருச்சு போல! ஜோக்லாம் வருது!” என

திட்டிக் கொண்டே காரை செலுத்தினாள் ஜீவா.

காட்டேஜை அடைவதற்குள் உறங்கி இருந்தவனை, கெஞ்சி மிஞ்சி எழுப்பி உள்ளே கொண்டு வந்துப் படுக்க வைத்தவள், களைப்பில் உட்கார்ந்தபடியே தூங்கி இருந்தாள்.

அங்கே சென்னையில், குளிரூட்டப்பட்ட ஒரு புகழ் பெற்ற பிரியாணி கடையில் அந்த பெண் போலிஸ் ஆபிசருடன் அமர்ந்திருந்தான் தீரன். இவனுக்கு வயிறு சரியில்லை என சொல்லி ஐஸ் மோரை மட்டும் குடித்தவன்,

ஆபிசருக்கு கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்தான். நன்றாக சாப்பிட்டு முடித்தவர்,

“தீரா, அந்த கார் நம்பரைக் கண்டுப் புடிச்சிட்டோம்” என நிறுத்தி,

“நாலு மட்டன் பிரியாணி பார்சல் சொல்லேன்” என முடித்தார்.

‘சிக்கிருச்சா நம்பரு! தோ வரேன்டா பிட்சாக்காரா! உன்னால நான் சேர்த்து வச்ச காசெல்லாம் இவளுக்கு தீனி வாங்கிக் குடுத்தே கரைஞ்சுப் போச்சுடா! உன்னை மட்டும்

**கண்டுப்புடிச்சேன், கனல் கண்ணன் ஸ்டைல்ல ஒரு குத்து, சூப்பர் சுப்பராயன் ஸ்டைல்ல ஒரு எத்து, ஜகுவர் தங்கம் ஸ்டைல்ல ஒரு மொத்துன்னு உன் உடம்ப பார்ட் பார்ட்டா கலட்டி பாடையில ஏத்துறேன்டா' என மனதிலேயே ஒரு ஆக்சன் படத்தை ஓட்டினான் தீரன்.**

**பார்சல் வாங்கிக் கொண்ட அந்த ஆபிசர்,**

**"ஆனா பாருங்க தீரன், அந்த நம்பர் ப்ளேட்டே ஒரு ஃபேக் நம்பர் ப்ளேட்! சோ நம்பர் கிடைச்சும் ஒரு புண்ணியமும் இல்ல! நாங்க இப்போ**

வேற கோணத்துல எங்க முயற்சிய தொடரனும்!” என பெரிய குண்டாக அவன் தலையில் போட்டு விட்டு கிளம்பிப் போய் விட்டார்.

“பிரியாணி(வடை) போச்சே!” என தலையில் கை வைத்தப்படி அமர்ந்து விட்டான் தீரன்.

அடுத்த நாளே அதிர்ஸ்டக் காற்று தீரனின் பக்கம் வீசியது!!!!

## அத்தியாயம் 9

காலையில் எப்பொழுதும் போல விழித்துக் கொண்ட ஜீவா, நேராய் படுத்து இரு கரங்களையும் தலைக்குக் பின்னால் கொண்டு சென்று கால்களை மடக்கிக் கொண்டாள். கண்களை மூடிக் கொண்டே ஒன், டூ, த்ரீ என ஐம்பது தடவை சிட் அப் செய்து முடித்தவள் அதன் பிறகே கண்களைத் திறந்தாள்.

“இதுதான் உன்னோட அழகான ஏப்ஸின்(வயிறு) ரகசியமா?” எனும் குரலில் திடுக்கிட்டவள் ரூமை சுற்றிக் கண்களை ஓட்ட, கட்டிலுக்கு சற்றுத் தள்ளி நாற்காலியில்

அலட்சியமாய் சரிந்து
அமர்ந்திருந்தான் ஜோனா.

சட்டென கட்டிலில் இருந்து இறங்கி
அவனை நெருங்கினாள் ஜீவா. அவன்
நெற்றியிலும் கன்னத்திலும்
கழுத்திலும் தன் புறங்கையால்
தொட்டுப் பார்த்தவள்,

“காய்ச்சல் நல்லாவே விட்டுருச்சே!
வயிறு இன்னும் வலிக்குதா ஜோனா?”
என கேட்டாள்.

கழுத்தில் பதிந்திருந்த அவள் கரத்தைப் பிடித்து தன் கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டவன்,

“வலி ஒன்னும் இல்ல! ஐ எம் பெர்பெக்ட்லி ஆல்ரைட் மூலான்!” என்றான்.

தன் கரத்தை மெல்ல உறுவ முயன்றாள் ஜீவா. அவன் பிடி உடும்புப் பிடியாய் இருந்தது.

“விடு ஜோனா! நான் ரெஸ்ட்ரூம் போகனும்”

“ஓகே, ஓகே!” என கையை விட்டவன்,

“சீக்கிரம் வா! சாப்பிடலாம்” என்றவாறே ரூமை விட்டு வெளியேறினான்.

ரிப்ரேஷ் ஆகி டைனிங் ஹால் வந்தவளுக்கு நாற்காலியை இழுத்து,

“உட்காரு பிரின்சஸ்” என புன்னகைத்தான் ஜோனா.

அவன் புன்னகை இவளையும் தொற்றிக் கொண்டது. சிரித்த முகத்துடன் அமர்ந்துக் கொண்டாள்

ஜீவா. ஆவி பறக்கும் ஓட்ஸ் கஞ்சியை அவள் முன்னே நகர்த்தி வைத்தான் ஜோனா.

“நான் இன்னும் எக்சர்சைஸ் முடிக்கலையே! அப்புறம் சாப்பிடவா?”

“நேத்து என்னை கவனிச்சுக்கிட்டதே பெரிய எக்சர்சைஸ்தான் உனக்கு! இன்னிக்கு ஒரு நாள் ஸ்கிப் பண்ணிக்கலாம் தப்பில்ல!”

“ஹ்ம்ம் சரி! நம்ம கிட்ட பால் முடிஞ்சிருச்சே! எப்படி செஞ்ச இத?” என கேட்டப்படியே ஒரு கரண்டி

அள்ளி, ஊதி சுவைத்துப் பார்த்தாள் இவள்.

அவள் முகத்தையேப் பார்த்திருந்தவனை நிமிர்ந்து நோக்கியவள்,

“எக்ஸலெண்ட்!” என பாராட்டினாள்.

கால் காயமான அன்று மட்டும் தான் அவனின் நளபாகத்தை ரசித்து ருசித்திருக்கிறாள் ஜீவா. அதன் பிறகு குடிக்க தண்ணீர் வேண்டும் என்றால் கூட உட்கார்ந்த இடத்தில் இருந்து

'மூலான்' என இவளைத்தான் கத்தி அழைப்பான்.

"பாலுக்கு பதில் பால் மாவு போட்டேன் மூலான். கொஞ்சமா சின்னமன் பொடி(பட்டைத்தூள்), வேனிலா எக்ஸ்ட்ராக்ட், உப்பு எல்லாம் ஓட்ஸோட கலந்து வேக வச்சேன்! வெந்ததும் கொஞ்சமா ட்ரை ஃப்ரூட்ஸ் சேர்த்தேன். வாழைப்பழத்த சின்னதா நறுக்கி மேல போட்டிருந்தா இன்னும் ருசியா இருக்கும்." என்றவன் டீயை கப்பில் ஊற்றி அவள் அருகே வைத்தான்.

இவள் அமர்ந்திருக்க, நின்றபடியே அவளுக்கு உணவிட்டவனை ஆராய்ச்சியாய் நோக்கினாள் ஜீவா.

“ஜோனா!”

“என்ன மூலான்?”

“எனக்கு உன்னோட கிராட்டிடியூட்(நன்றி உணர்ச்சி) தேவையில்ல ஜோனா! நேத்து நீ சீக்கா இருந்தப்போ கேர் பண்ணேன்றதுக்காக எல்லாம் நீ இப்படி திருப்பி எனக்கு செய்யனும்னு அவசியம் எதுவும் இல்ல! அதை நான்

எதிர்ப்பார்க்கவும் இல்ல! சோ ப்ளீஸ், இந்த குக்கிங் க்ளினிங் எல்லாம் என் வசமே இருக்கட்டும்!"

"கிராட்டிடியூட்டா! ஓஹோ!" என ஒரு மாதிரியான குரலில் சொன்னவன், அவள் அருகில் அமர்ந்துக் கொண்டான்.

உணவைத் தனக்கும் ஒரு பவுலில் எடுத்துக் கொண்டவன்,

"சாப்பிட ஹெல்ப் செய்யும் கையே உனக்கு நன்றி! சாப்பாட்டை மென்று தரும் பல்லே உனக்கு நன்றி! ருசியை

உணர வைக்கும் நாக்கே உனக்கு நன்றி! மென்றதை விழுங்கி வைக்கும் தொண்டையே உனக்கு நன்றி! உணவைத் தாங்கிக் கொள்ளும் வயிறே உனக்கு நன்றி! அதை ப்ராசெஸ் செய்யும் குடலே உனக்கு நன்றி! ப்ராசேஸ் ஆனதை வெளியேற்றும்....” என தொடர்ந்துக் கொண்டே போனவனை, அவசரமாக முன்னே நகர்ந்து அவன் வாயைப் பொத்தி,

“போதும் போதும் நிறுத்து!” என்றாள் ஜீவா.

“கையை எடு மூலான்! நான் இன்னும் நன்றி சொல்லி முடிக்கல” என்றான் ஜோனா.

“இப்போ எதுக்கு வரிசையா உன் பாடி பார்ட்டுக்கெல்லாம் நன்றி சொல்லிட்டு இருக்க நீ?”

“அம்மா, அப்பா, வைப், ஹஸ்பெண்ட், கடவுள் இப்படி நெருங்கியவங்க கிட்ட கூட நாம நன்றி உணர்ச்சிய பல சமயங்களில் காட்டிடறோம். ஆனா நமக்குன்னு பார்த்து பார்த்து எல்லாம் செய்யற நம்ம உடல் உறுப்புகளுக்கு மட்டும் நன்றி சொல்லறது இல்ல? அது ஏன் ஜீவா?”

“பைத்தியமா உனக்கு? நம்ம உடல் உறுப்பு வேற நாம வேறன்னு தனி தனியாப் பிரிச்சுப் பார்க்க முடியுமா! அது எல்லாம் சேர்ந்து தானே நாம்! ஒன் பேக்கேஜ்”

“எக்ஸேக்ட்லி! அது மாதிரிதான் நீ எனக்கு எது செஞ்சாலும் நன்றி சொல்லவோ என் நன்றி உணர்ச்சியக் காட்டனும்னோ எந்த அவசியமும் இல்ல!” என வெளியே சொன்னவன்,

‘பிகாஸ் இனி நான் வேற நீ வேற இல்ல மூலான். சாப்பாடு எடுத்துக்

கொடுக்கற கைக்கு நான் எப்படி நன்றி சொல்லத் தேவையில்லையோ, அதே மாதிரி இனி என் கைக்கு கையா இருக்கப்போற உனக்கும் நான் நன்றி சொல்லி பிரிச்சு வைக்கப் போறது இல்ல! என் உடலின் அங்கங்கள் போல என் வாழ்க்கையின் முக்கிய அங்கம் நீ! வீ ஆர் எ டீம் நவ்! எனக்கு எல்லாமுமா நீ இருக்கனும், உனக்கு உலகமா நான் இருப்பேன்!' என மனதில் சொல்லிக் கொண்டான்.

"யா ரைட்! நமக்குள்ள இந்த நன்றி, சாரி, எக்ஸ்கியூஸ் மீன்ற பார்மாலிட்டிஸ்லாம் வேணா

ஜோனா! நீ இங்க இருக்கற வரைக்கும் உனக்கு எல்லாமே நான் தான் செஞ்சுக் குடுப்பேன்! சரியா?” என்று சொல்லியவாறே அவன் முகத்தை நிமிர்ந்துப் பார்த்தவள் பேச்சிழந்துப் போனாள்.

பேச்சு வாக்கில் அவள் அருகே நகர்ந்து அமர்ந்திருந்தவனின் கை, இவளின் கால் முட்டியை மிக மென்மையாக தடவியபடி இருந்தது. இவள் பேசுவதைக் கேட்க, முன்னே சாய்ந்து அமர்ந்திருந்தவனின் பச்சைக் கண்கள், இவள் மட்டுமே பிரபஞ்சத்தின் பேரழகி என்பது போல அவள் முகத்தை இன்ச் இன்ச்சாக

ரசித்துக் கொண்டிருந்தது.
எப்பொழுதும் அவன் உடல்
மொழியில் ஒரு திமிர் இருக்கும்.
நானே ராஜா, மற்றவர்கள் எல்லாம்
எனக்கு கூஜா என்பது போல ஓர்
அலட்சியம் இருக்கும். ஆனால் இன்று
உடல் மொழி மென்மையாகியிருக்க,
முகம் மிருதுவாயிருந்தது. உதட்டில்
ஆளை மயக்கும் வசீகரமான
புன்னகை வீற்றிருந்தது.

சடாரென எழுந்துக் கொண்டவள்,

“நான் துணி துவைக்கனும்” என
சொல்லிக் கொண்டே வீட்டின் பின்

கதவைத் திறந்து வெளியேறி விட்டாள்.

“ஓடு, ஓடு! எவ்வளவு ஓட முடியுமோ ஓடு! ஓடி களைச்சு என் நெஞ்சுல சாஞ்சிக்கத்தான் வரனும்! வர வைப்பேன்” என மெலிதாய் முணுமுணுத்தவன்,

“இந்த நிகழ்காலம்

இப்படியே தான் தொடராதா

என் தனியான பயணங்கள்

இன்றுடன் முடியாதா!!!” என பாடியபடியே அவளைத் தேடிப் போனான்.

துணி துவைக்கப் போகிறேன் என்றவள், முன்னே சுற்றி வந்து மர ஊஞ்சலில் அமர்ந்திருந்தாள்.

“ஜீவ்!!!” என அழைத்தப்படியே அவளை நெருங்கியன், ஊஞ்சலை ஆட்டி விட ஆரம்பித்தான்.

கயிற்றை இறுக்கமாகப் பற்றிக் கொண்டவள்,

“என்ன?” என கேட்டாள்.

“நீ டேட்டிங் போயிருக்கியா?” என கேட்டான் ஜோனா.

அவளிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை.

ஊஞ்சலை இழுத்துப் பிடித்து நிறுத்தியவன், அதன் கயிற்றை பல சுற்று சுற்றி பின் கையை எடுத்துக் கொண்டான். இவள் காலை மேலே தூக்கிக் கொள்ள, கயிறு நேராகும் வரை ஊஞ்சலோடு இவளும் பல சுற்று சுற்றி வந்தாள். ஜீவா கலகலவென நகைக்க, ஆச்சரியத்துடன் அவள் சிரிப்பைப் பார்த்திருந்தான் ஜோனா. இது நாள்

வரை அவள் புன்னகைத்துப் பார்த்திருக்கிறான், மெல்லிய சிரிப்பொலி கூட கேட்டிருக்கிறான். மலர்ந்து வாய் விட்டு சிரித்ததை இப்பொழுதுதான் பார்க்கிறான் ஜோனா. வரிசைப் பற்கள் பளீரிட, கண்கள் மின்னலடிக்க, கன்னக் கதுப்புகள் லேசாய் சிவந்திருக்க இவன் கண்களுக்கு அழகாய் தெரிந்தாள் ஜீவா.

சட்டென கரம் நீட்டி சிவந்திருந்த கன்னக் கதுப்பைத் தொட்டுப் பார்த்தான் இவன்.

“யூ ஆர் கார்ஜியஸ் மூலான்!”

**தொட்டக் கையைத் தட்டி விட்டவள், ஊஞ்சலில் இருந்து எழுந்துக் கொண்டாள். கீழே கிடந்த குச்சியைப் பொறுக்கி மண்ணில் எதையோ நோண்ட ஆரம்பித்தாள் அவள். ஜீவாவின் செய்கையையே புன்னகையுடன் பார்த்திருந்தான் ஜோனா.**

**“யாரும் என்னை கூப்பிட்டதில்லை”**

**“என்ன?”**

“யாரும் என்னை டேட்டிங் கூப்பிட்டதில்லை ஜோனா!”

“சரி நான் கூப்பிடறேன்! ரெண்டு பேரும் இன்னிக்கு டேட் போகலாமா ஜீவா?”

ஆச்சரியமாக அவனை நிமிர்ந்துப் பார்த்தாள் இவள். வெடித்து வரப் பார்க்கும் புன்னகையைக் கட்டுப் படுத்த முயன்றவளின் செய்கையை ஒரு பக்க உதட்டின் துடிப்பும், கண்களின் வெளிச்சமும் படம் போட்டுக் காட்டியது.

“ஹ்ம்ம், டேட்டிங் வேணா ஜோனா! வேணும்னா ஒரு ப்ரேண்ட்லி அவுட்டிங்னு வச்சிக்கலாமா?” என கேட்டாள் காரிகை.

“சரி! என்னோட டேட்டிங்கும் வேணா உன்னோட அவுட்டிங்கும் வேணா! ரெண்டையும் சேர்த்து டேவுட்டிங்னு வச்சிக்கலாமா?” என சிரியாமல் இவன் கேட்க, இவளுக்குத்தான் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது.

“சரி டேவுட்டிங்கே போகலாம்!”

கையில் இருந்த கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்தவன்,

“பதினொரு மணிக்கு கிளம்பலாம் மூலான். வெளிய லஞ்ச் சாப்பிட்டுட்டு, சுத்திட்டு, க்ரோஷரி வாங்கிட்டு, டின்னரும் முடிச்சுட்டே வரலாம்” என திட்டமிட ஆரம்பித்தான்,

“ஓகே டன்!” என ஒத்துக் கொண்டாள் இவள்.

“சரி, நான் போய் குளிச்சிட்டு வரேன்! நேத்துக் கூட குளிக்கல”

“வாட்?” என முகத்தை சுளித்தாள் ஜீவா.

“என்ன வாட்? எங்க ஊருல எல்லாம் விண்ட்டர்ல வாரத்துக்கு ரெண்டு தடவைக் குளிக்கறதே பெரிய விஷயம். அதோட அடிக்கடி குளிச்சா ஸ்கீன் ரொம்ப ட்ரையாகிடும் மூலான். கண்ட கண்ட ஸ்கீன் டிசீஸ்லாம் வரும்! ஒரு வாரம் குளிக்கலனாலும் நான் வாசமாத்தான் இருப்பேன்! நீ நம்பலைனாலும் அதுதான் நிஜம்” என்றவன் அவளை பேர் ஹக்(bear hug) செய்துக் கொண்டான்.

“வாசமாத்தானே இருக்கேன்! ஆமாத்தானே, ஆமாத்தானே?” என கேட்டப்படியே அவளை இன்னும் தனக்குள் இறுக்க, அவனின் வாசம் இவளுக்குள் என்னென்னவோ செய்தது.

“ஆமாமா! நீ ரொம்ப வாசம்தான்! இப்ப என்னை விடு” என நெளிந்து வளைந்து அவன் அணைப்பில் இருந்து வெளியானவள்,

“யூ ஸ்டிங்க் லைக் எ ரோட்டேன் டோமேட்டோ!(அழுகிப் போன தக்காளி போல நாற்றமடிக்கிறான்)”

என சொல்லி நாக்கைத் துருத்திக் காட்டி விட்டு ஓட்டமெடுத்தாள்.

“ஏய்! வேய்ட் ஆப் யூ லையர்!” என சிரிப்புடன் அவளைத் துரத்தியபடியே ஓடினான் ஜோனா.

சரியாக பதினொரு மணிக்கு ரூமின் கதவைத் தட்டினான் ஜோனா. அவன் ஏற்கனவே குளித்து ஜீன்ஸ், டீஷர்ட்டில் வாசமாய் கிளம்பி இருந்தான். கதவைத் திறந்து மெல்ல வெளியே வந்தாள் ஜீவா. அவனை ஏறிட்டுப் பார்க்காமல்,

“போகலாமா?” என கேட்டவளை மேலிருந்து கீழ் வரை ரசித்துப் பார்த்தவன்,

“பீவீட்” என மெலிதாக விசிலடித்தான்.

முகம் லேசாய் சிவந்துப் போக,

“மாத்திடவா ஜோனா?” என கேட்டவள் கைகளைப் பிசைந்தப்படி நின்றிருந்தாள்.

கருப்பு நிறத்தில் முட்டி வரை இருக்கும் ட்ரேஸ் ஒன்றை அணிந்திருந்தாள் அவள். இடுப்பை

சுற்றி வெள்ளைக் கற்கள் ஒட்டியாணம் போல அலங்கரிந்திருந்தது. அவளின் வாழைத்தண்டு கால்களையும், ஒட்டி இருந்த வயிற்றையும், உடலின் வளைவு சுளிவுகளையும் அந்த உடை அழகாய் எடுத்துக் காட்டியது.

எப்பொழுதும் ஷார்ட்ஸ், ஜீன்ஸ், டீஷர்ட் என வலம் வருபவள் திடீரென இப்படி வந்து நிற்க, இவனுக்குமே இன்ப அதிர்ச்சியாய் தான் இருந்தது. அவள் பதட்டமாக இருப்பதை உணர்ந்துக் கொண்டவன், அவள் கரத்தைப் பற்றி அழுத்திக் கொடுத்தான்.

“ மூலான்! இந்த ட்ரஸ்ல நீ அழகா இருக்கன்னு சொன்னா, அது பொய்!” என அவன் சொல்ல, அவள் முகம் கசங்கியது. திரும்ப ரூமின் உள்ளே போக முயன்றவளை, கைப்பிடித்துத் தடுத்தான் ஜோனா.

“நீ போட்டிருக்கவும் தான் இந்த ட்ரஸ்க்கே அழகு வந்துருக்குன்றது தான் நெஜம்” என அவள் கண் பார்த்து இவன் சொல்ல, கசங்கிய முகம் மெல்ல மெல்ல தெளிய, லேசாய் புன்னகை நெளிந்தது அவள் உதட்டில்.

அவள் கைப்பிடித்து அழைத்து வந்தவன், ஹாலில் நிறுத்தி வைத்து விட்டு கிச்சனுக்குப் போனான். திரும்பி வரும் போது, எதையோ முதுகுக்குப் பின்னால் மறைத்து எடுத்து வந்தான் ஜோனா. அவள் முன்னே வந்து நின்று,

“தடா! கொக்கே(விளக்கம் கீழ வருது) ஃபோர் மை பியூட்டி” என கையில் இருந்த பூங்கொத்தை நீட்டினான்.

“வாவ்!” வார்த்தை வரவில்லை அவளுக்கு.

அது தென்னையோலையைக் கொண்டு அவனே செய்திருந்த பூங்கொத்து.

“எங்க ஊருல டேட்டிங் போகறப்போ பூ குடுத்துத் தான் கூட்டிப் போவாங்க! இங்க பூ எதுவும் கிடைக்கல! அதானால கிடைச்சத வச்சு நானே இத செஞ்சேன். பூ வச்சு செஞ்சா பொக்கே, கொகனெட் இலை வச்சு செஞ்சதால இது கொக்கே!” என அழகாய் முறுவலித்தான் அவன்.

சந்தோஷமான மனநிலையிலேயே இருவரும் வெளியே கிளம்பினார்கள். எப்பொழுதும் போல இவன் தொப்பி,

கண்ணாடி மூலம் ஓரளவு தனது அடையாளத்தை மறைத்திருந்தான். முதலில் பாண்டியில் இருந்த ஒரு வெஸ்டர்ன் உணவகத்தில் மதிய உணவை முடித்துக் கொண்டவர்கள், சுற்றோ சுற்று என சுற்றினார்கள். ப்ரோவிடென்ஸ் மாலுக்கு சென்றவர்கள், கடை கடையாக நுழைந்து அலசினார்கள். ஜோனாவுக்கு கலர் கலராக போலோ டீஷர்டுகள் வாங்கிக் கொடுத்தாள் ஜீவா. பணம் செலுத்த தனது கிரேடிட் கார்டை அவன் கொடுக்க, இவள் விடவேயில்லை.

அவனுக்கு இவள் வாங்கிக் கொடுக்க, இவனோ தனது மூலானுக்கு அழகான க்ளட்ச்(பர்சை விட சற்று பெரியதாக இருக்கும் கைப்பை), டாப்ஸ், கல் வைத்த காலணி என வாங்கிக் கொடுத்தான். அதன் பிறகு நேரு ஸ்ட்ரீட்டில் இருந்த கடை வீதியை அலசினார்கள்.

அங்கிருந்த கலைப் பொருட்கள் விற்கும் கடையில் வெள்ளியில் ஆன பெண்டெண்ட் ஒன்றை திருப்பி திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜீவா.

ஆங்கில ஜே வடிவத்தில் இருந்த அந்த பெண்டனை சங்கிலியோடு எடுத்து அவள் கழுத்தில் வைத்துப் பார்த்தான் ஜோனா. பின் அங்கிருந்த கண்ணாடியை எடுத்துக் காட்டியவன்,

“பிடிச்சிருக்கா மூலான்?” என கேட்டான்.

ஆமென அவள் தலையாட்ட, கையைப் பின்னால் கொண்டு போய் கொக்கியை அவனே மாட்டி விட்டான். அந்நேரம் லேசாய் மழைத் தூரல் போட, பக்கத்துக் கடையில் விற்கப்படும் விண்ட் ச்மைம்ஸ் டிங், டிங்கென அழகாய் இசைக் கூட்டியது.

இந்திய கரண்சி இவன் இன்னும் மாற்றியிருக்காததால், ஜீவாவே பணம் செலுத்த முயன்றாள். அவள் கைப் பிடித்துத் தடுத்தவன், நூறு டாலரை அப்படியே கடைக்காரரின் கையில் திணித்து விட்டு வந்தான்.

தனது புது சங்கிலியையும் பெண்டனையும் புன்னகையுடன் தொட்டுத் தடவிப் பார்த்துக் கொண்டே வந்தாள் ஜீவா. அதன் பிறகு பீச் ரோட்டுக்குப் போனார்கள் இருவரும். காந்தி சிலையைப் பார்த்து,

“க்ரேண்ட்பா, எங்களை எல்லாம் போ போன்னு சொன்னீங்க! உங்க பேத்தி என்னடான்னா என்னை மயக்கி இங்கயே இருக்க வச்சிருவா போலிருக்கே!” என புன்னகையுடன் முணுமுணுத்தான் ஜோனா.

கடல் காற்று முகத்தை மோத, இருவரும் எதேதோ பேசிக் கொண்டே நடந்தனர். மெல்ல அவள் தோள் உரசும் அளவுக்கு நெருங்கி நடந்தவன், அவள் கையைத் தன் கைக்குள் பிணைத்துக் கொண்டான். அவள் கையை இழுக்க முனைய,

“இது எனக்கு புது நாடு, புது இடம் மூலான். கூட்டத்துல நான் காணாம போய்ட்டா என்ன செய்யறது? அதான் உன் கையைப் பிடிச்சிருக்கேன்!” என சொல்லி இன்னும் இறுக்கிக் கொண்டான் பிடியை.

இரவு உணவையும் அங்கேயே நல்ல ஒரு ரெஸ்டாரண்டில் முடித்துக் கொண்டார்கள். அதன் பிறகு ஒரு சூப்பர் மார்க்கேட்டில் தேவையான பொருட்களை வாங்கி காரில் அடுக்கினார்கள் இருவரும். பக்கத்தில் இருந்த செல்போன் கடையில் இவனுக்கு புதிதாய் இந்திய சிம்கார்ட் ஒன்று வாங்கிக் கொடுத்தாள் ஜீவா.

“கூடிய விரைவில உனக்கு தேவைப்படும் ஜோனா” என சொல்லியவள் அவனது போனில் அதை பொறுத்திக் கொடுத்தாள்.

களைத்துப் போய் காரில் ஏறி அமர்ந்தவர்கள், அமைதியாகவே வீடு நோக்கிப் பயணித்தார்கள். ப்ளேயரில் யுவனின் இசையில் பாடல்கள் ஒலித்தன. பாடல்களை கேட்டுக் கொண்டே வந்தவன்,

“இந்த பாட்ட மறுபடி போடு மூலான்” என கேட்டான்.

மறுபடி மறுபடி கேட்டவன்,

“வதைத்திடும்னா என்ன மூலான்?” என கேட்டான்.

“ஹ்றம்ம்!! டார்ச்சர்னு சொல்லலாம்”

மெல்லிய புன்னகை உதட்டில் நெளிய,

“ஹ்றம்ம் சொல்லலாம், சொல்லலாம்” என்றவன், பாடலோடு சேர்ந்து பாட ஆரம்பித்தான்.

“என் உயிரை வதைத்திடும் அழகி நீ

என் இதயத்தில் அமர்ந்திடும் அரசி நீ

என் உடலினில் நதியாய் ஓடும்
உதிரம் நீயடி”

அனுபவித்து அவன் பாட, அந்த குரல் தந்த மயக்கத்தில் மதி மயங்கித்தான் போனாள் ஜீவா!

வீட்டை அடைந்து கதவைத் திறந்தவள், உள்ளே நுழையும் முன்னே கைப்பிடித்து நிறுத்தினான் ஜோனா.

**“என்ன ஜோனா?” என கேட்டாள் ஜீவா.**

**“எங்க ஊருல டேட்டிங்க இப்படி முடிச்சு வைக்க மாட்டாங்க. அதுக்குன்னு சில ரூல்ஸ் இருக்கு மூலான்”**

**“ஓஹோ! இப்போ நாம போனதுக்குப் பேரு டேட்டிங்கும் இல்ல, அவுட்டிங்கும் இல்லன்னு என்னமோ சொன்ன! இப்போ என்னன்னா ரூல்ஸ்லாம் பேசற!’ என கேட்டாள் ஜீவா.**

“ஓ காட் மூலான்! என்ன பேரு வச்சுக் கூப்பிட்டாலும் நாம போனது டேட்டிங் தான்! சோ, நான், இப்போ இந்த டேட்டிங்க எங்க ஊர் ஸ்டைல்ல முடிச்சு வைக்கப் போறேன்” என்றவன், பேச இடம் கொடுக்காமல் தன் கரங்களால் அவள் கன்னங்களைத் தாங்கிக் கொண்டான்.

என்ன என்பது போல பயப்படாமல் அவனை நிமிர்ந்துப் பார்த்தாள் ஜீவா. அவளின் நேர்க்கொண்டப் பார்வை இவனுக்கு சவாலாய் இருந்தது.

‘உன் கண்ணுல எப்படி மயக்கம் தெரியும்?’ என மனதிற்குள்ளே மறுகினான் அவன்.

ஆழ மூச்செடுத்து தன்னை நிதானப்படுத்தியவன்,

“லெட்ஸ் டூ பார்ட்டர்(பண்டமாற்று) பிஸ்னஸ் பேபி!” என சொல்லி, தன் உதட்டை அவள் உதட்டில் பொறுத்தி மெலிதாய் முத்தமிட்டான்.

அவள் கை சட்டென உயர்ந்து அவன் தோளை இறுக்கிப் பிடித்துப் பின்னே தள்ள முயன்றது. அவளின்

பிடித்தமின்மையை உணர்ந்துக் கொண்டவன், அவள் உதட்டை விடுவித்தான்.

“மூலான்! இட்ஸ் எ பெக்(உதட்டை லேசாக ஒத்தி எடுப்பது) ஒன்லி! பிடிக்கலனா விட்டுடலாம். சாரி ஜீவா!” என விலக முயன்றான்.

தோளில் வைத்திருந்த அவள் கை அவனை விலக விடாமல் இறுக்கமாகப் பிடித்திருந்தது. அவன் குனிந்து அவள் கண்களைப் பார்க்க, அதில் ஆயிரம் பாவங்கள். பயம், தயக்கம், பதட்டம், சோகம், ஆசை என மாறி மாறி வந்துப் போனது. பின்

கண்களை இறுக்கி மூடிக் கொண்டவள், காலை மெல்ல உயர்த்தி இவளே அவன் உதட்டில் முத்தமிட முயன்றாள். கண்களை மூடி இருந்ததால் உதட்டுக்கு பதில் ஜோனாவின் தாடையில் பதிந்தது ஜீவாவின் முதல் முத்தம்.

ஒற்றைக் கண்ணை மட்டும் இவள் மெல்ல திறந்துப் பார்க்க, முகம் முழுக்க புன்னகையுடன் நின்றிருந்தான் ஜோனா.

“ஓ மை ஏஞ்சல்!” என்றவன் புதைக்குழியாய் இழுத்த அவள்

உதட்டில் விழுந்து, புதைந்து, சிதைந்து காணாமலே போனான்.

அவன் தந்த இதழ் முத்தம் இவள் உடல் மொத்தத்தையும் சுனாமியாய் சுருட்டிப் போட்டது! இது வரை உணர்ந்திராத உணர்வுகள் உயிர்த்தெழ, கற்சிலை ஒன்று உயிர் பெற்று எழுந்தது. உடல் உருக, மேனி மெய்சிலிர்க்க, கண்களில் கண்ணீர் அருவியாய் பொங்கியது அவளுக்கு. தேனாய் தித்தித்த இதழ் அமுதத்தில் உவர்ப்பு நீர் கலக்க, பட்டென கண்ணைத் திறந்தான் ஜோனா.

“ஓ மை மூலான்!” என்றவன் தன் ஜீவாவை தனது ஜீவனுக்குள் பதுக்கிக் கொண்டான்.

## அத்தியாயம் 10

“மாதம் மும்மாரி பொழியுதோ இல்லையோ, இந்தாளுக்கிட்ட தெனம் நான் வசைமாரி வாங்கறது மட்டும் கரேக்டா நடந்துருது! எல்லாருக்கும் மிஸ்டர் சட்டர்டே வாடகை சைக்கிளில மெதுவா வந்தா எனக்கு மட்டும் ப்ளைட் எடுத்து பறந்து வந்துருக்கு. என்ன வந்துருக்கு!!!

**வந்துருக்கான். ஜோனா டேய், எங்கடா இருக்க?"**

**ஜெய்யிடம் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டு வீடு வந்து சேர்ந்திருந்தான் தீரன். எதிர்த்துப் பேசி, நீயும் வேண்டாம் உன் வேலையும் வேண்டாம் என நடையைக் கட்ட சொல்லி தன்மானம் தகித்தது. டைரக்டராகும் ஆசையும், இரண்டு நாயகிகளோடு போடப் போகும் பூசையும் தன்மானத்தை தரையில் மிதித்து தரைமட்டமாக்கி இருந்தது.**

**ஜெய்யும் என்னதான் செய்வார், சூசன் ப்ளைட் எடுத்து சென்னைக்குப்**

பயணப்பட்டுக் கொண்டிருந்தாரே! அவர் இங்கே வந்திறங்கியதும் கண்டிப்பாக பூகம்பம் வெடிக்கப் போகிறது என புரிந்துப் போனது இவருக்கு. இவ்வளவு நாட்களாய் லீலைகளின் மன்னனாக இருந்தாலும், எல்லாமே நான்கு சுவற்றுக்குள் இருந்ததால் சூர்யாவும் பெரிதாக கண்டுக் கொள்ளவில்லை. இப்பொழுது சூசனின் மூலமாக ஜோனா தனது மகன் என்று வெளி உலகுக்கு தெரிய வந்தால், சூர்யா முன்னும் பெற்று வைத்திருக்கும் இன்னும் இரண்டு வாரிசுகளின் முன்னும் எப்படி தலை நிமிர்ந்து நிற்பார்! என்ன நடக்கப் போகிறதோ

என எண்ணி தலை சுற்றியது ஜெய்க்கு. போலிஸ்காரர்களோ பல வகையில் முயற்சித்துக் கொண்டுதான் இருந்தார்கள். பலன் தான் பூஜ்யமாக இருந்தது. இவரது ஆத்திரம் முழுவதும் மகனை ஒழுங்காகக் கொண்டு வந்து சேர்க்காத தீரனின் மேல் தான் விடிந்தது.

வீட்டுக்கு வந்த தீரன், தனது கோபத்தை எல்லாம் பாத்ரூமுக்குப் போய் ஓவென கத்திக் கதறித் தீர்த்துக் கொண்டான். பின் முகத்தைக் கழுவி விட்டு வெளியே வந்தவன், ப்ரிட்ஜைத் திறந்துப்

பார்த்தான். முந்தைய நாள் குடித்து விட்டு மீதம் வைத்திருந்த பீர் பாட்டில் இருந்தது.

“ஊருக்கே பிரியாணி வாங்கிக் குடுத்துட்டு ஒரு பாட்டில் பீரைக் கூட மூனு நாள் வச்சிக் குடிக்கற நிலையில நிக்கறியே தீரா!” என சத்தமாய் முனகியவன், கொஞ்சமாய் பீரை வாய்க்குள் சரித்துக் கொண்டான். சைட் டிஷ்க்காக ஊறுகாய் பாட்டிலைத் திறக்க, அதில் இண்டு இடுக்கெல்லாம் ஏற்கனவே வழித்து நக்கி முடித்திருந்ததால் ஒன்றும் தேறவில்லை.

ஒரு பெருமூச்சுடன்,

“தன் கையே தனக்குதவி!” என சொல்லிக் கொண்டே ஒரு மொடக்கு பீரையும் ஊறுகாய்க்கு பதில் தன் விரலையும் கடித்துக் கொண்டான்.

“ஊத்திக்கினு கடிச்சிக்கவா

கடிச்சிக்கினு ஊத்திக்கவா!!!!!!” என பாடியவன்,

“என்னம்மா எனக்கு ஏத்த மாதிரியே சிட்டுவேஷன் சாங் எழுதிருக்கானுங்க! சூப்பரப்பு” என கட்டிலில் சரிந்தான்.

போனை எடுத்து முகபுத்தகத்தை வலம் வந்தவன், தனது லேடி ப்ரேண்டுகளின் போட்டோக்களுக்கு மட்டும் ஹார்ட்டுகளை தட்டிவிட்டான். சில அழகான செல்பிகளுக்கு, அங்கங்கே சுட்டு ஒரு போல்டரில் சேகரித்து வைத்திருந்த கவிதைகளை கமேண்ட்டாக போட்டான். ஒரு மணி நேரத்தை அதில் செலவிட்டவன், பின் இன்ஸ்டாகிரமில் நுழைந்தான். அங்கேயும் ஹார்ட்களை பறக்கவிட்டவன், ஒரு படத்தில் ஆணி அடித்ததுப் போல நின்றான் .

“அடங்கொப்புறானே!!!!!!”

தன் கண்கள்தான் எதாவது ட்ரீக் செய்கிறதா என பயந்தவன், நன்றாக கண்களைத் தேய்த்து விட்டு மீண்டும் படத்தைப் பார்த்தான்.
ஜோனாவேதான், அவன் பக்கத்தில் இரண்டு வருடங்களுக்கு முன் இவன் கலட்டி விட்ட சுருதி. டாக்டர் சுருதி!!

“என் வாழ்க்கையில உன்னை மட்டும் நான் மறுபடியும் பார்க்கவே கூடாதுன்னு வேண்டிக்க தீரா! பார்த்தேன்னு வை, அன்னிக்கு என் கையாலத்தான்டா உனக்கு விஷ

ஊசி!” அசரீரியாய் ஒலித்தது அவள் குரல்.

“கிழிஞ்சது கிருஷ்ணகிரி!” முனகிக் கொண்டான் தீரன்.

அங்கே காட்டேஜில், உலர வைத்திருந்த துணிகளை அவசரமாக சேகரித்துக் கொண்டிருந்தாள் ஜீவா. மேகம் கருத்திருந்தது, காற்றும் பலமாய் வீசியது. கண்டிப்பாக இன்னும் சில மணி நேரங்களில் மழை அடித்து ஊற்றும் என தோன்றியது அவளுக்கு. துணிகளைத் தோளில் போட்டுக் கொண்டு பின்

**வாசல் வழியே உள்ளே நுழைந்தாள் இவள்.**

**அங்கே கிச்சனில் கரண்டியை மைக்காய் பாவித்துப் பாடிக் கொண்டிருந்தான் ஜோனா.**

**“her lips, her lips**

**I could kiss them all day if she’d let me**

**Her laugh, her laugh**

**She hates but I think it’s so sexy**

**She’s so beautiful, and I tell her everyday”**

**புன்னகையுடன் ஜோனாவையே ரசித்தப்படி நின்றிருந்தாள் ஜீவா.**

என்னவோ தெரியவில்லை, அவனைப் பார்த்தாலே உதட்டில் புன்னகை அமர்ந்துக் கொள்கிறது இவளுக்கு.

அவள் வருகையை உணர்ந்தவன், திரும்பிப் பார்த்து முறுவலித்தான்.

“பேப், வீ ஷூட் கோ பிக்னிக் டுடே!”

“இல்ல, மழை வர மா…”திரி இருக்கிறது என சொல்ல வந்தவள், அவன் பார்வை தன் உதட்டில் நிலைப்பதைப் பார்த்து,

“போலாம்!” என பதிலளித்து விட்டு ரூமினுள் சென்று விட்டாள்.

அன்று முழுக்க முடிந்த அளவு அவனை தவிர்க்க முயன்றாள் ஜீவா. அந்த சின்ன வீட்டில் எவ்வளவு நேரம் தான் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடுவது. ஒரு முத்தத்திற்கே தன்னை காண சங்கோஜப்படும் ஜீவாவை பார்க்க பார்க்கத் தெவிட்டவில்லை இவனுக்கு. இன்னும் நெருங்கி அவளை சங்கடப்படத்த விரும்பாதவன், அவள் போக்கிலேயே விட்டு விட்டான். ஆனாலும் மாலை ஆகியும் தன்னைத் தவிர்ப்பவளை

சகஜமாக்கவே பிக்னிக் செல்லலாம் என அழைத்திருந்தான் ஜோனா.

ரெடி செய்திருந்த ச்சீஸ் சாண்ட்வீச், ஆப்பிள், ஆரஞ்சு ஜீஸ், இரண்டு கண்ணாடி கிளாஸ்கள், சிப்ஸ் எல்லாவற்றையும் எடுத்து பிக்னிக் பாஸ்கேட்டில் அடுக்கினான். கீழே விரித்து உட்கார பெரிய துண்டையும் எடுத்து மடித்து கூடையில் வைத்தான்.

“மூலான், என்னோட கிட்டார் எடுத்துக்கோ ப்ளிஸ்” என கிச்சனில் இருந்து குரல் கொடுத்தான் இவன்.

கிட்டாரை எடுத்தவள், ஜோனா என எங்க்ரேவ் செய்திருந்த எழுத்தை ஆசையாய்  தடவிக் கொடுத்தாள். ஆரம்பகாலத்தில் பாடி சம்பாதித்த பணத்தை கொஞ்சம் கொஞ்சமாக சேகரித்து, தனக்காய் அவன் செய்து வாங்கிய கிட்டார் அது என பல ஆர்ட்டிக்களில் படித்திருக்கிறாள் ஜீவா. அந்த கிட்டார் அவன் போற்றி பாதுகாக்கும் பொக்கிஷம் எனவும் அறிந்து வைத்திருந்தாள்.

அவள் கிட்டாரை எடுத்துக் கொண்டு வாசலுக்கு வர, இவன் பிக்னிக் கூடையோடு வந்தான். தனது

கிட்டாரை அணைத்துப் பிடித்திருப்பவளை புன்னகையுடன் பார்த்தவன், கூடையைக் கீழே வைத்து விட்டு போனை கையில் எடுத்தான். அவள் அருகே வந்து, கிட்டாரை அவள் வாசிப்பது போல பிடிக்க செய்தவன்,

“ஸ்மைல் மூலான்” என சொல்லி ஒரு போட்டோ எடுத்துக் கொண்டான்.

எடுத்தப் போட்டோவை முத்தமிட்டு,

“மை ப்ரிஷியஸ் கிப்ட் ப்ரம் காட்” என சொன்னான் ஜோனா.

இவள் வேறு புறம் திரும்பிக் கொள்ள, புன்னகையுடன் கூடையை ஒரு கையிலும் இவளை ஒரு கையிலும் பிடித்துக் கொண்டு கடற்கரை நோக்கி நடையிட்டான் பாடகன்.

மணலில் துண்டை விரித்தவர்கள், பொருட்களை அதன் மேல் அடுக்கி வைத்து விட்டு அமர்ந்தார்கள். வேகமாய் வீசிய கடல் காற்று வீசியாய் இவள் உடலைக் குத்த மெல்ல நடுங்கினாள் ஜீவா. இரு கரங்களையும் கொண்டு கையையும் காலையும் தேய்த்து சூடேற்ற முயன்றாள். அவள் முயற்சிகளை

சற்று தள்ளி அமர்ந்துப் பார்த்திருந்தவன், பட்டென தன்னருகே இழுத்தான் அவளை. அவள் எதிப்பார்க்காத வேளையில் இழுத்ததால் படக்கென அவன் மேல் மோதி விழுந்தாள் ஜீவா. அப்படியே அவளையும் இழுத்துக் கொண்டு மணலில் சரிந்தான் ஜோனா. எழ முயன்றவளை,

“இப்படியே என் கை வளைவில கொஞ்ச நேரம் படுத்திருந்தா, உனக்கே உனக்காக கிட்டார் வாசிச்சிட்டே ஒரு பாட்டு பாடுவேன்! எழுந்துட்டனா இங்கிருந்து நான் கிளம்பி போகற வரைக்கும் இனி ஒரு

வரி கூட பாட மாட்டேன் மூலான். நவ் தெ சாய்ஸ் இஸ் யுவர்ஸ்” என உறுதியான குரலில் சொன்னான் ஜோனா.

ஆழ்ந்த மூச்சொன்றை எடுத்து விட்டவள், அவன் வலது கைவளைவில் வாகாகப் படுத்துக் கொண்டாள்.

வெற்றிப் புன்னகை முகத்தில் தவழ, ஆகாயத்தையே பார்த்திருந்தான் ஜோனா. உடலை சுகமாய் தழுவும் கடல் காற்று, ஓவென அலைகளின் இரைச்சல், கார்மேகக் கூட்டம், பக்கத்தில் படுத்திருக்கும்

பெண்ணவளின் சுகந்தமான மணம் எல்லாம் சேர்ந்து இதுதான் சொர்க்கலோகமோ என எண்ண வைத்தது அவனை.

“ஏன் இந்த அமைதி மூலான்? எதாச்சும் பேசேன்” என குழைந்து வந்த குரலில் ஆசையாக கேட்டான் ஜோனா.

“நம்ம பூமியில 70 பர்செண்ட் இடம் கடல்தானாம்! அதோட பூமியில வாழற மொத்த உயிரினங்களில 94 பர்செண்ட் கடல் சார்ந்த உயிரனங்களாம். உலக மியூசியத்துல சேர்த்து வச்சிருக்கற பொக்கிஷங்கள

**விட இன்னும் அதிகமா கடலுக்கடியில புதைஞ்சு கிடக்க வாய்ப்பிருக்குன்னு சொல்லறாங்க! செம்ம இண்ட்டேரெஸ்டிங்கா இருக்குல்ல ஜோனா!" என கேட்டாள் ஜீவா.**

**ஜீவாவைப் பார்ப்பது போல திரும்பிப் படுத்து,**

**"மை கியூட் என்சைக்ளோபேடியா" என செல்லமாக அழைத்து அவள் கன்னம் கிள்ளியவனுக்கு சிரிப்பும் வந்தது.**

“சிரிக்கற மாதிரி நான் என்ன சொல்லிட்டேன்?” என கேட்டவளுக்கு லேசாய் கோபம் எட்டிப் பார்த்தது.

“இந்த ஜோனா மேல கோபம் கூட வருமா உனக்கு?”

“கொஞ்சமா வரும்! வந்த நிமிஷமே ஓடியும் போயிடும்” என்றவள்,

“ஏன் சிரிச்சே?” என கேட்டாள்.

“இவ்ளோ ரொமேண்டிக்கான சிச்சுவேஷன்ல கடலப் பத்தி

ஆராய்ச்சி செஞ்சிட்டு இருந்தியா, அதான் சிரிப்பு வந்துடுச்சு”

“நான் அப்படித்தான் ஜோனா! மண்டையில பேக்ட்ஸ் அண்ட் பிகர்ஸ்(facts and figures) தான் ஓடிட்டு இருக்கும். உன்னை மாதிரி கவித்துவமா ஒன்னும் ஓடாது!” என சொல்லி முறுவலித்தாள் ஜீவா.

“யின் அண்ட் யேங் தெரியும்ல! ஒருத்தர் இரவா இருந்தா, இன்னொருத்தர் பகலா இருக்கனும். ஒருத்தர் நிலவா இருந்தா மற்றொருத்தர் சூரியனா இருக்கனும். ஒருத்தர் பூமியா இருந்தா தி அதர்

பெர்சன் வானமா இருக்கனும்! நீ நெர்டி(படிப்ஸ்) நான் ஆர்ட்ஸி(பாடகர், ஓவியர் இப்படி கலை சம்பந்தப்பட்டவங்க இதுல வருவாங்க). நாம ரெண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் கச்சிதமா பொருந்திப் போவோம்! உன் கிட்ட இல்லாதத என் கிட்ட இருந்து நீ எடுத்துக்கலாம். என் கிட்ட இல்லாதத உன் கிட்ட இருந்து நான் எடுத்துப்பேன்" என அவள் விழிகளை ஊடுருவிப் பார்த்து சொன்னான் ஜோனா.

அவன் விழி வீச்சில் கட்டுண்டு கிடந்தவள், சட்டென எழுந்து அமர்ந்துக் கொண்டாள்.

“பசிக்குது, எதாச்சும் சாப்பிடலாம் ஜோனா” என்றபடியே கூடையை ஆராய ஆரம்பித்தாள் ஜீவா.

இவனும் எழுந்து அமர்ந்துக் கொண்டான். சாண்ட்வீச்சை பேப்பர் நாப்கினில் வைத்து அவனுக்குக் கொடுத்தவள், தானும் எடுத்துக் கொண்டாள். இருவரும் ஒன்றும் பேசிக் கொள்ளாமல் அமைதியாக சாப்பிட்டனர். அவன் உண்டு முடித்ததும் ஆப்பிள் ஒன்றை எடுத்து

அவனிடம் கொடுத்தவள், தனதை கடித்து உண்ண ஆரம்பித்தாள்.

அவளைப் பார்த்தப்படியே தனது ஆப்பிளை மணலில் போட்டவன்,

“ம்ப்ச்! விழுந்துடுச்சு மூலான்” என சொல்லி அவள் கடித்த பழத்தைப் பிடுங்கிக் கொண்டான்.

“ஏய், என்னது அது!” என இவள் ஆட்சேபிக்க,

“எனக்கு ஆப்பிள் சாப்பிட்டாத்தான் பாட வரும்! உனக்கு பாட்டு வேணுமா

**வேணாமா?” என கேட்டு அவள் எச்சில் செய்ததை முழுதாக சாப்பிட்டு முடித்தான்.**

**அவன் சாப்பிட்டு முடிக்கும் வரை காத்திருந்தவள், கிட்டாரை எடுத்து நீட்டினாள். வாங்கிக் கொண்டவன்,**

**“சேர்ந்து பாடலாமா?” என கேட்டான்.**

**“சரி!” என சட்டென ஒத்துக் கொண்டாள் ஜீவா.**

**இருவரும் போனில் இருந்த ஸ்போட்டிபை(spotify) ஆப்பில் ஒரு**

பாடலைத் தேடி பாடல் வரிகளோடு ரெடியாகினர்.

“நான் ஒன் டைம் கேட்டுடறேன் மூலான்.” என்றவன், பாடலைக் கேட்டு கிட்டாரை டியூன் செய்ய ஆரம்பித்தான்.

அதன் பிறகே அங்கு பாடல் கச்சேரி ஆரம்பித்தது.

“லோலிட்டா ஹே லோலிட்டா

உன் கரை இல்லாத கண்கள்

வெட்டித் தள்ளுதே

உண்மையை நான் சொல்லட்டா
உன் முலாம் பூசாத பேச்சில் எல்லாம் உள்ளதே”

ஆங்கில ஸ்லாங்கில் முகம் முழுக்க புன்னகையோடு, கிட்டாரை வாசித்துக் கொண்டே போனில் இருந்த லிரிக்ஸ் பார்த்து அவன் பாட, இவள் மெய் மறந்து அவனையேப் பார்த்திருந்தாள். அவன் வாயில் இருந்து உதிரும் ஒவ்வொரு லோலிட்டாவிலும் இவள் உள்ளம் உருகிக் கரைந்தது.

“ஹே மூலான், யுவர் டர்ன்!” எனும் குரலில் பூலோகம் அடைந்தவள்,

திக்கித் திணறிப் பாட ஆரம்பித்து பின் அழகாய் இணைந்துக் கொண்டாள்.

சிரிப்புடனே பாடி முடித்தனர் இருவரும்.

“ஒன்ஸ் மோர்” என இவள் கேட்க, கிட்டாரை வைத்து விட்டு போனில் சத்தமாக பாடலை ஒலிக்க விட்டு, அவளை எழுப்பி நிறுத்தினான்.

போனோடு சேர்ந்துப் பாடிக் கொண்டே, அவள் கரம் கோர்த்து ஆட ஆரம்பித்தான் ஜோனா. முதலில் தயங்கியவள், பின் அவனோடு

இணைந்து அசைய ஆரம்பித்தாள். உதட்டில் புன்னகை வழிய கண்கள் மின்னலைப் பாய்ச்ச அழகாய் ஆடியவளை பார்வையால் பருகியபடியே ஆடினான் ஜோனா.

பாடல் முடியும் நேரம் லேசாய் தூரல் போட ஆரம்பித்து, சடசடவென கொட்ட ஆரம்பித்தது மழை. கொண்டு வந்தப் பொருட்களையும், கிட்டாரையும் அள்ளிக் கொண்டு இருவரும் எடுத்தனர் ஓட்டம். வீட்டை நெருங்கி மழை படாத இடத்தில் ஜோனாவின் கிட்டாரை வைத்த பிறகே, நிம்மதியாய் உணர்ந்தாள்

ஜீவா. அதன் பிறகே ஜோனாவை நிமிர்ந்துப் பார்த்தவள்,

“மழையில வெளாடலாமா ஜோனா?” என கேட்டாள்.

அந்த வார்த்தைகளும் பார்வையும் இவனை ஏதோ செய்தது. என்ன என யோசிக்கும் முன்னே, இவள் கீழே இறங்கி இருந்தாள். மழை அடித்து ஊற்ற, அதில் சுகமாய் கை கால்களை நடனமாடுவது போல அசைத்து நனைய ஆரம்பித்தாள் ஜீவா. அவள் ஆட்டத்தையே கண் எடுக்காமல் பார்த்திருந்தவன், மெல்ல கீழே இறங்கி அவளோடு சேர்ந்துக்

கொண்டான். மழையில் தொப்பலாய் நனைந்திருந்தவளின் உடல் நடுங்க ஆரம்பிக்க, அவளை இறுக்க அணைத்துக் கொண்டான் ஜீவா.

“போதும் மூலான்! உள்ள போகலாம்” என இவன் சொல்ல, அவனை நிமிர்ந்துப் பார்த்தாள் ஜீவா.

மழை நீர் முகத்தில் வழிய, ஒவ்வொரு துளியும் அவள் நடுங்கும் உதட்டை தொட்டுத் தடவி கீழிறங்கியது.

“டெம்ப்ட்ரேஸ்!” (மயக்கும் பெண்/மோகினி) என முனகியவன், அவள் உதடுகளைத் தன் உதடுகளால் பற்றிக் கொண்டான்.

இந்த முறை அவள் மறுக்கவும் இல்லை தடுக்கவும் இல்லை. உதட்டில் ஆரம்பித்த முத்தம், கன்னம், காது, கழுத்து என பயணப்பட்டப் போதும் சரி, முத்தத்தைக் கொடுத்தவன் மொத்தத்தையும் களவாடிய போதும் சரி, அவளிடம் இருந்து எந்த வித மறுப்பும் வரவில்லை. முதன் முறை பள்ளி அறை வந்திருக்கும் பாவைக்கு சுயநலமற்ற ஆசானாய், கலவிப்

பாடத்தை அழகாய் கற்றுத் தந்தான் ஜோனா. கடமையுணர்ச்சி மிக்க குருவாய் கற்றுக் கொடுத்தப் பாடத்தைக் கிரகித்துக் கொண்டாளா என அறிந்துக் கொள்ள விடிய விடிய தேர்வு நடத்திக் கொண்டே இருந்தவன், அதிகாலை வேளையில் தான் கண் அயர்ந்தான்.

மழை ஓய்ந்து சூரியன் மெல்ல எட்டிப் பார்க்க முயல, தன்னை இறுக்க அணைத்தப்படி தூங்கிக் கொண்டிருக்கும் ஜோனாவையேப் பார்த்தப்படி விழித்திருந்தாள் ஜீவா. கழுத்தில் கிடந்த ஜே பெண்டனை வருடியபடியே, விழிகள் இரண்டிலும்

அவன் பிம்பத்தை நிரப்பி இதயத்தின் மூலையில் அவனை சேமித்து வைத்துக் கொண்டாள்.

மெல்ல உறக்கம் களைய, எழுந்து அமர்ந்தான் ஜோனா. சுகவலியில் உடல் களைத்திருக்க, முகம் பிரகாசமாய் ஒளிர்ந்தது. பக்கத்தில் ஜீவாவைக் காணாமல்,

“இன்னைக்கும் ஜாகிங் போயிட்டாளா? ம்ப்ச்! ஐ நீட் டு ஹக் ஹேர் பேட்லி” என முனகிக் கொண்டே எழுந்தான் அவன்.

“ஜீவ்!!! ஜீவா!! மூலான்” என கூப்பிட்டப்படியே ரூமில் இருந்து வெளியே வந்தான் ஜோனா.

உணவு வாசனை வர, கிச்சனுக்குள் நுழைந்தான். அங்கே உணவு பதார்த்தங்கள் மூடி வைக்கப் பட்டிருந்தன. வாசனையில் பசி வயிற்றைக் கிள்ளியது. அவளோடுத்தான் சாப்பிட வேண்டும் எனும் எண்ணத்தில், முகம் கழுவி வர போனான் ஜோனா.

மேலும் அரை மணி நேரம் கடந்தும் அவளைக் காணவில்லை. சரி, பீச்சில் சென்று தேடலாம் என வெளியே

வந்தவன், ஒரு கணம் திகைத்து நின்றான். வீட்டு முன்னே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் காரை காணவில்லை. நெஞ்சுக்குள் திக் திக்கென அடிக்க,

“மூலான்” என கத்தியபடியே ரூமுக்குள் ஓடினான். அவள் துணி அடுக்கி வைக்கும் கபோர்ட்டைத் திறந்துப் பார்தால், காலியாக இருந்தது.

“ஓ மை காட்!”

வாசலுக்கு ஓடி வந்து செருப்பை விடும் இடத்தில் பார்த்தால், அவளது காலணிகளைக் காணவில்லை.

“ஷிட்”

பைத்தியக்காரனைப் போல வீடு முழுவதும் தேடினான். அவளது பொருட்கள் ஒன்றையும் காணோம்.

“வாட் தெ ஹெல்! வேர் ஆர் யூ ஜீவா? எங்கடி போன மூலான்? என்னை விட்டுட்டுப் போயிடுவியான்னு ஆயிரம் தடவை கேட்டியே! இப்போ நீ என்னை விட்டுட்டுப் போயிட்டல! எனக்கு மட்டும் உறவுன்னு ஒன்னு

நிலைக்கக் கூடாதுன்னு தலையில எழுதி வச்சிட்டானா கடவுள்? வேர் ஆர் யூ மூலான்? கம் பேக் டூ மீ! ஐ நீட் யூ இன் மை மிசரபெல் லைப் ஜீவா! ப்ளிஸ் கம் பேக் டூ மீ!" என குரல் எடுத்துக் கத்தினான் ஜோனா.

## அத்தியாயம் 11

"ஹலோ! இஸ் திஸ் தீரன்?"

"ஆமா, தீரன் தான்! அங்க யாரு? தொரைக்கு இங்கீலீசு மட்டும்தான் வாயில வருமா?" என கேட்டப்படியே

அந்த காட்டேஜின் கதவைத் தட்ட ஆரம்பித்தான் தீரன்.

“ஓன் செக்!” என போனில் பேசிய தீரனிடம் சொல்லியபடியே கதவைத் திறந்தான் ஜோனா.

“யோ பரதேசி! யாரா இருந்தாலும் அப்புறம் போன் அடிய்யா! இப்போ நான் முக்கியமான வேலையா இருக்கேன்” என்றவன் தன் முன்னே நின்றிருந்த ஜோனாவைப் பார்த்து,

“ஜோனா! ஜோனாத்தானே நீங்க?” என கேட்க,

“இல்ல, நான் யோ பரதேசி!” என நக்கலாக சொன்ன ஜோனா போனை நிறுத்தி இருந்தான்.

நேரில் ஜோனா சொன்னதே போனின் வழியாக காதுக்கும் போக,

“தெய்வமே!” எனும் கோஷத்துடன் படாரென அவன் காலில் விழுந்தான் தீரன்.

சட்டென நகர்ந்து நின்ற ஜோனா,

“தரையை துடைச்சு முடிச்சதும், உள்ள வா! ஐ நீட் டூ டால்க் டூ யூ” என சொல்லியபடியே கிச்சனுக்குள் நுழைந்தான்.

“என்னாது!!! தரையைத் துடைக்கறனா? இது வரைக்கும் பொண்ணுங்க காலுல மட்டுமே விழுந்த நான், மொதோ தடவையா உன் காலுல விழுந்தேனடா!!! அதுக்கு மரியாதை இம்புட்டுத்தானா?” என முனகிக் கொண்டே எழுந்து ஜோனாவை தொடர்ந்து கிச்சனுக்குப் போனான்.

ஜீவா அவனுக்காக கடைசியாக சமைத்திருந்த உணவை வெறித்துப் பார்த்தப்படி அமர்ந்திருந்தான் ஜோனா. உள்ளே நுழைந்த தீரனை,

“நான் போன் செய்யறதுக்குள்ள எப்படி என்னைத் தேடி வந்த?” என கேட்டான் ஜோனா.

“நீங்க செல்பி எடுத்த டாக்டர் என்னோட எக்ஸ் லவர்! நைட்டோட நைட்டா அவளத் தேடி பாண்டிக்கு வந்துட்டேன்! காலையில அவ ஜாகிங் போக கதவ திறக்கும் போது, அப்படியே அவள தள்ளிக்கிட்டு வீட்டு உள்ள புகுந்துட்டேன். என் கையில

ஒத்தையில சிக்கனவள…” என பில்டப்போடு தீரன் நிறுத்த,

என்ன செய்தாய் என்பது போல பார்த்தான் ஜோனா.

“வேற என்ன செய்வேன்! படாருன்னு காலுல விழுந்துட்டேன். இறுக்கமா கால புடிச்சுக்கிட்டதால அவளால நகரவே முடியல. நல்லா வண்ணம் வண்ணமா கேட்டா! அப்போ கூட நான் கால விடல! வேற வழி இல்லாம கிளினிக்குக்கு போன் பண்ணி அட்ரெஸ் வாங்கி குடுத்தா! அட்ரஸ் கிடைச்ச உடனே இங்க ஓடி வந்துட்டேன்”

கிளினிக்கில் நிஜமான அட்ரஸ் தான் கொடுத்திருந்தாள் ஜீவா. மருந்தகங்களில் மட்டும் என்றுமே பொய் கூடாது. ஒரு வேளை மருந்தை மாற்றிக் கொடுத்திருந்தாலோ, தவறான சிகிச்சை அளித்திருந்தாளோ நம்மை தொடர்பு கொள்ள சரியான முகவரியும், தொலைபேசி எண்ணும் அவர்களுக்கு தேவைப்படும் என்பதை புரிந்து வைத்திருந்தவள், அங்கே எந்த கோல்மாலும் செய்திருக்கவில்லை. (இது என் மலாய் ப்ரேண்ட் லைப்ல நெஜமா நடந்தது. அவ குழந்தைக்கு தப்பான மருந்த குடுத்துட்டு, நைட்

வீட்டு வாசல்ல வந்து நின்னாங்க கிளினிக்ல உள்ளவங்க! இவ நல்ல வேளை, குழந்தை தூங்குதே மருந்த காலையில குடுக்கலாம்னு இருந்திருக்கா.)

தீரனை கேவலமாக ஒரு லுக் விட்டவன், சாப்பிட ஆயத்தமானான். மஸ்ரூம் சூப், பேன்கேக், ஹாட்டோக் ஆமலேட் என செய்து சூடு ஆறாமல் இருக்க ஹாட் காண்டேய்னரில் மூடி வைத்திருந்தாள் ஜீவா. டீயும் ப்ளாஸ்க்கில் சுட சுட இருந்தது.

“ராத்திரில இருந்து செம்ம அலைச்சல். பசி வேற!” என்றபடியே

பேன்கேக்கில் கை வைக்கப் போன தீரனை ஒற்றை விரல் நீட்டி நோவென சொன்னான் ஜோனா.

“இது எனக்கே எனக்கானது! உனக்கு வேற செஞ்சி தரேன்” என்றவன் ப்ரேட் டோஸ்ட்டும் ஆம்லேட்டும் செய்து, வேறு டீயும் கலந்து கொடுத்தான் தீரனுக்கு.

முதலில் உணவை தர மறுத்தவன், தானே இவனுக்கு சமைத்துக் கொடுக்கவும் ஆச்சரியமானான் தீரன். இது வரை அவன் அன்னையைத் தவிர யாரும் இப்படி அவனுக்கு உணவிட்டதில்லை. என்னவோ

ஜோனாவை அப்படிப் பிடித்தது தீரனுக்கு.

“லெட்ஸ் ஈட் பிஃபோர் டால்க்” என்ற ஜோனா மெல்ல ரசித்து, ருசித்து தனது உணவை உண்டான்.

தேவைக்கு அதிகமாக அவள் செய்து வைத்து சென்றிருக்க, வயிறு போதும் போதும் என சொன்னாலும் முழுதும் முடித்து விட்டுத் தான் நிமிர்ந்தான் ஜோனா. வயிறு நிறைய, நெஞ்சாங்கூடு மட்டும் காலியானதைப் போல ஒரு ஃபீல். கண்கள் கரித்துக் கொண்டு வர, பாக்கேட்டில் வைத்திருந்த அவள்

விட்டுப் போன கடிதத்தை ஆறுதலுக்காக தடவிக் கொண்டான். அவள் மனதில் உள்ளதை எல்லாம் கொட்டி அவனுக்குப் புரியும்படி ஆங்கிலத்தில் செதுக்கி இருந்தாள் அந்த மடலை. பெட் சைட் டேபிளில் வைத்திருந்த கடிதம் பறந்துவிடாமல் இருக்க, தவளை கிட்டார் வாசிப்பது போல இருந்த குட்டியான சிலையை அதற்கு மேல் வைத்திருந்தாள் ஜீவா. அவ்வளவு நேரம் பைத்தியக்காரன் போல கத்திக் கதறியவனின் முகத்தில் அந்த சிலையைப் பார்த்ததும் மெல்லியப் புன்னகை வந்தது.

ஆழப் பெருமூச்சொன்றை இழுத்து விட்டவன், அமைதியாக அமர்ந்து அந்தக் கடிதத்தைப் படித்து முடித்தான். மனதில் பாரம் ஏறிக் கொள்ள, முகம் பலவகையான உணர்வுகளைக் காட்டியது. கடிதத்தை மடித்து அதற்கு மென்மையாய் முத்தமிட்டவன்,

"ஐ வில் மேக் யூ கம் டு மீ மூலான்" என சொல்லிக் கொண்டான்.

அதன் பிறகே தெளிந்த மனத்துடன் தனது போனை கையில் எடுத்தான். காண்டேக்டில் தீரனின் நம்பரை மட்டும் சேவ் செய்திருந்தாள் ஜீவா. சந்தேகத்துடன் கேலரியைத் திறந்துப்

பார்க்க, ரகசியமாகவும், அவள் அறியவும் எடுத்து வைத்திருந்த எல்லா படங்களையும் அழித்து வைத்திருந்தாள் ஜீவா.

மெல்லிய புன்னகையுடன்,

“கேடி!” என திட்டிக் கொண்டான் தன்னவளை.

போனுக்கு சிம் போட்டவுடனே தனது ஆப்பிள் ஐ க்ளாவுட்டை ஆன் செய்து வைத்த தனது புத்திசாலித்தனத்தை மெச்சிக் கொண்டவன், அதனுள்ளே போய் மீண்டும் அவளது படங்கள்

எல்லாவற்றையும் தரவிறக்கம் செய்துக் கொண்டான்.

“மிஸ் ஸ்மார்ட்டி பேண்ட்ஸ்க்கு(smarty pants) அவங்க மட்டும் தான் புத்திசாலின்னு நினைப்பு.” என சொல்லிப் புன்னகைத்துக் கொண்டவன், அதற்கு பிறகே தீரனுக்கு போன் செய்ய முனைந்தான்.

சாப்பிட்டு முடிக்க, தீரனே எல்லாவற்றையும் கழுவி கவிழ்த்து விட்டு வந்தான். ஹாலில் அந்தக் குட்டி தவளை சிலையை தடவியபடி, முகத்தில் புன்னகை தவழ

அமர்ந்திருந்தான் ஜோனா. அவன் எதிரே போய் அமர்ந்தான் தீரன்.

“சொல்லுங்க ஜோனா! நீங்க காணாம போயிட்டீங்கன்னு மட்டும்தான் மத்தவங்களுக்குத் தெரியும்! ஆனா கடத்திட்டுப் போயிட்டாங்கன்னு எனக்கு மட்டும்தான் தெரியும்! என்னாச்சு? எங்க உங்கள கடத்தன அந்த பரதேசி? இங்க வந்த கையோட, வீட்டுல கடத்தல்காரன் இருக்கானான்னு சுத்தி வந்து, ஜன்னல் வழியா நோட்டம்லாம் விட்டுட்டுத்தான் கதவ தட்டுனேன். அவன் மட்டும் உள்ளே இருந்திருந்தா கார்ல இருக்கற உருட்டுக் கட்டைய

எடுத்துட்டு வந்து பொளந்துருப்பேன். அந்த நேரத்துல உங்க போன் வரவும் தான் டென்ஷன்ல கடுப்பா பேசிட்டேன்” என்றான் தீரன்.

மெலிதாக நகைத்த ஜோனா,

“நீ உருட்டுக் கட்டையத் தூக்குறதுக்குள்ள உன்னை தரையில தள்ளி தாக்குத் தாக்குன்னு தாக்கிருப்பா! நீ நினைக்கற மாதிரி உங்க ஊர் நிவார் புயல் இல்ல அவ! எங்க ஊரு கத்ரீனா சூறாவளி” என்றான்.

“என்னாது!!!! அவளா???? பிட்சாக்காரன் இல்லையா அது? பிட்சாக்காரியா?” என வாயைப் பிளந்தவனுக்கு சற்று நேரம் பேச்சே வரவில்லை.

பின் முகம் மெல்ல மலர,

“எத்தனை பொண்ணுங்களுக்கு நான் அல்வா குடுத்துருப்பேன்! எனக்கே ஒருத்தி பிட்சா குடுத்துட்டாளே! ஐ லைக் இட் அண்ட் ஐ லைக் ஹெர்” என ரசித்து சொன்னவனை முறைத்தான் ஜோனா.

“லிசன் டு மீ ப்ரோ! அந்த பிட்சாக்காரி என்னோட பிலவட் வீட்டுக்காரி! இனிமே அவள ரிபர் பண்ணறப்ப மேடம்னு மட்டும்தான் உன் வாயில இருந்து வரனும்” என கடுகடுத்தான்.

ஜோனாவைப் பார்த்து மெலிதாய் விசிலடித்தான் தீரன்.

“கடத்தனவங்கள எதிர்த்து உடம்ப புண்ணாக்கிக்காம, டோட்டல் சரணாகதி அடைஞ்சிட்டீங்க! ஐ லைக் திஸ் அமெரிக்கன் அப்ரோச்!” என நமுட்டு சிரிப்பு சிரித்தான் இவன்.

‘என்னைப் பார்த்து நக்கலா சிரிக்கறியா? கூடாதே!’ என நினைத்த ஜோனா,

“என்னைப் பத்திரமா கூட்டி வர வேண்டிய நீ, ப்ரீ பிட்சா சாப்பிட்டு கவுந்து கிடந்தது மிஸ்டர் ஜெய்க்கு தெரியுமா?” என மிதப்பாகக் கேட்டான்.

“ஐயோ தெய்வமே! டைரக்டருக்கு இந்த விஷயமெல்லாம் தெரியாது! வேற என்னவெல்லாமோ சொல்லி அவர கரேக்ட் பண்ணி வச்சிருக்கேன்! தயவு செஞ்சு என் பொழப்புல மண்ணைப் போட்டுறாதீங்க ஜோனா சார்! இந்தக் கையை உங்க காலா

நெனைச்சுக் கேக்கறேன், காத்துல ஆடி அசைஞ்சு எரிஞ்சுட்டு இருக்கற என் வாழ்க்கை எனும் விளக்க, ப்பூன்னு ஊதி அமிச்சிடாதீங்க! என்னை மட்டும் காப்பாத்தி விட்டிங்கன்னா உங்களுக்கும் மேடத்துக்கும் ஒவ்வொரு குழந்தைப் பொறக்கறப்பவும் எனக்கு மொட்டைப் போட்டுக்கிட்டு மருத மலைக்கு நடந்தேப் போய், ‘மருதமலை மாமணியே முருகைய்யா’ன்னு தொண்டைத் தண்ணி வத்தப் பாடிட்டி வரேன்”

அவன் சொல்லிய விதத்தில் சிரிப்பு வந்தாலும், தங்கள் பிள்ளைகள் என

சொன்னது இதமாகவும் இருந்தது ஜோனாவுக்கு.

“அப்போ மூனு மொட்டைப் போட ரெடியாகிக்கோ” என புன் சிரிப்புடன் சொன்னான் ஜோனா.

“போட்டுடலாம் ஜோனா சார்!” என இவன் சொல்ல கதவு படபடவென தட்டப்பட்டது.

தீரன் எழுந்துப் போய் கதவைத் திறக்க, அங்கே ஜெய்யும் போலிஸ்காரர்களும் நின்றிருந்தார்கள்.

‘இவங்களுக்கு எப்படி தெரிஞ்சது இந்த இடம்?’ என இவன் முழிக்க, பளீரென ஓர் அறை விழுந்தது ஜெய்யிடம் இருந்து.

“ஜோனாவக் கண்டுப்புடிச்சிட்டத என் கிட்ட ஏன்டா சொல்லல?” என கேட்டப்படியே உள்ளே வந்தார் ஜெய்.

கன்னத்தை ஒரு கையால் தாங்கியபடியே போலிஸ்காரர்கள் பின் தொடர வந்தான் தீரன்.

**“ஜோனா! ஆர் யூ ஓகே? இங்க எப்படி நீ?” என கேட்டப்படியே வந்த ஜெய், எழுந்து நின்றிருந்த ஜோனாவைத் தழுவிக் கொண்டார்.**

**அவர் அணைப்பில் உடல் விறைத்தவன், சட்டென விலகிக் கொண்டான்.**

**ஜோனா கிரேடிட் கார்ட் பயன்படுத்தி இருக்க, அதை வைத்து இவனை ட்ரேஸ் செய்திருக்கிறார்கள் போலிஸ்காரர்கள். மாலுக்கு வந்து அவர்கள் ஷோப்பிங் செய்த பூட்டிக் சீசீடிவி புட்டேஜை கை வசப்படுத்தி, கடை சிப்பந்திகளிடம் விசாரிக்க,**

**“சார், அந்த வெள்ளைக்காரர் ரொம்ப அழகா இருந்தாரு. அவர் கூட வந்தது ஆம்பளையா பொம்பளையான்னே தெரியலை. அதான் ஒரு ஆர்வத்துல நான் நோட்டம் விட்டுட்டே இருந்தேன். அவங்க xxx பீச் காட்டேஜ் போகற முன்ன க்ரோசரி வாங்கனும்னு பேசிட்டு இருந்தாங்க” என ஒருத்தி ஞாபகப்படுத்தி சொன்னாள்.**

**பீச் காட்டேஜ் பெயர் தெரிந்ததும் உடனே இங்கே வந்திருந்தார்கள். அதற்குள் அவர்களை தீரன் முந்தி இருந்தான்.**

**போலிஸ்காரர்களை நோக்கி,**

**“ஹலோ ஆபிசர்ஸ்!” என கைக்குலுக்கிய ஜோனா,**

**“நான் இந்தியாவுக்கு வந்தது மிஸ்டர் ஜெய் கேட்டுக்கிட்டதுனாலத்தான். பட் ஸ்டில் இங்க வந்து நான் என்ன செய்யறேன், எங்க போறேன்னு யாருக்கு இன்பார்ம் பண்ண வேண்டிய அவசியம் எனக்கில்லைன்னு நெனைக்கிறேன்! நான் ஒரு சுதந்திர மனுஷன். எல்லாத்தையும் எல்லோர்கிட்டயும் சொல்லிட்டு செய்யற ஊருல இருந்து நான் வரல! ஒரு க்ரேட் சிங்கர**

கிரிமினல் மாதிரி வலை வீசி தேடி வந்தது என் தனி மனித சுதந்திரத்துல தலையிட்ட மாதிரி எனக்கு ஃபீல் ஆகுது! எங்க ஊர் போலிஸ் கிட்ட இதப்பத்தி ரிப்போர்ட் பண்ண போறேன் நான்" என அலுங்காமல் குண்டைத் தூக்கிப் போட்டான் ஜோனா.

வந்த போலீஸ்காரர்களில் பெரிய ரேங்க் உள்ளவர், தங்களது செயலுக்கு மன்னிப்புக் கேட்டு பெரிய விஷயமாக்க வேண்டாம் இதை என சொல்லி அவனை சமாதானப்படுத்த முயன்றார். ஜெய்யோ ஆவென வாயைப் பிளந்து நின்றார். ஜெய்

கொடுத்த அறையில் வாடிப் போய் நின்றிருந்த தீரனுக்கு அவரின் நிலை குதூகலமாய் இருந்தது.

போனால் போகிறது என்பது போல ஜோனா பேசி அவர்களை வழி அனுப்ப, ஜெய்யை வெளிய அழைத்துப் போய் நன்றாக மண்டகப்படி கொடுத்தனர் காவலாளிகள்.

“யோ! எங்க டி.ஐ.ஜி சொன்னாருன்னு உனக்காக இந்த விஷயத்துல இறங்குனா, எங்கள இண்டெர்நேஷனல் இஷ்ஊல சிக்க வைக்கப் பார்த்தல்ல! அவன்

என்னடான்னா ட்ரம்ப்ப தெரியும், பைடன்ன தெரியும், கமலா ஹாரிச தெரியுங்கற லெவலுக்கு பேசறான்! தமிழ் நாட்டு போலிஸ் என்ன தக்காளி தொக்கா போச்சா உனக்கு! இனிமே பாட்டுக்காரன காணோம், ஆட்டக்காரன காணோம்னு ஸ்டேஷனுக்கு வா, லாடம் கட்டறோம் உன்னை!” என மிரட்ட, ஜெய் அவர்களுக்குப் பிடித்த வகையில் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார்.

அவர்கள் போனதும் காட்டேஜின் உள்ளே வந்த ஜெய்,

"என்ன ஜோனா இது? என் படத்துல நடிக்க வரேன்னு சொல்லிட்டு, திடீர்னு காணாம போயிட்ட! உங்கம்மா போனை போட்டு என்னை தாளிச்சு எடுத்துட்டா. இப்போ கூட அவள சென்னையில ஹோட்டல்ல தங்க வச்சிட்டு ஓடி வரேன் உன்னைத் தேடி! ஐ நெவர் எக்ஸ்பெக்ட் திஸ் அட்டிடியூட் ப்ரம் யூ!" என ஜோனாவிடம் சத்தம் போட்டார்.

"ஷ்!!!! சத்தம் போடாதீங்க! ராத்திரி எல்லாம் சரியா தூங்காதது தலையை வலிக்குது!" என்றவன் நெற்றியைத் தேய்த்தவாறே,

“என் கிட்ட சத்தம் போட உங்களுக்கு என்ன உரிமை இருக்கு டைரக்டர் சார்? நாம இன்னும் அக்ரீமெண்ட் கூட சைன் பண்ணலியே?” என கேட்டான்.

“என் உரிமையைப் பத்தியா கேக்கற? ஹவ் டேர் யூ? நான் உன்..” என ஆரம்பித்தவர் தீரனைப் பார்த்து அப்படியே பேச்சை நிறுத்திக் கொண்டார்.

அவரை அலட்சியமாகப் பார்த்தவன்,

“என்னாச்சு? பேச்சு பாதியிலே சிக்கிக்கிச்சு! முடியலல்ல! சொல்ல

முடியல இல்ல!” என சத்தமாக சிரித்தான்.

“நான் இங்க வந்ததே நடிக்க எனக்கு இஸ்டம் இல்லைன்னு உங்க முகத்துக்கு நேரா சொல்லிட்டு வந்த வழியே போறதுக்குத்தான். ஆனா இப்போ சொல்றேன் மிஸ்டர் ஜெய்க்குமார், நான் நடிக்கப் போறேன்”

அவன் கூற்றில் ஆனந்தமானவர், வேகமாய் அவனை நெருங்கி அணைத்துக் கொண்டார். அவன் காதருகில் தீரனுக்கு கேட்காத மிக மெல்லிய குரலில்,

“என் ரத்தம்டா நீ! எனக்கு ஒன்னுன்னா கண்டிப்பா உனக்குத் துடிக்கும்னு தெரியும்! இதான்டா அப்பன் மவன் உறவு மை சன்” என குதூகலமாக சொன்னார்.

அவரை தள்ளி நிறுத்தியவன்,

“நடிக்கப் போறேன்னு சொன்னேனே தவிர, உங்க டைரக்ஷன்ல நடிக்கப் போறேன்னு சொல்லலியே மிஸ்டர் ஜெய்க்குமார்!” என நக்கலாக சிரித்தவன், தீரனை நெருங்கி அவன் தோள் மேல் கைப்போட்டு,

“மீட் மிஸ்டர் தீரன்! நான் ப்ரோடியுஸ் செஞ்சு நடிக்கப் போற படத்தோட டைரக்டர்” என அறிமுகப்படுத்தினான்.

கேட்ட இரண்டு பேரில் யார் அதிக அதிர்ச்சி அடைந்திருப்பார் என உங்கள் யூகத்துக்கே விட்டு விடுகிறேன்.

ஜோனாவைக் கட்டித் தழுவியவன்,

“பாஸ்! இந்த தீரன் இனி உங்க அடிமை பாஸ்! என்ன தூக்கி எறிஞ்சு பந்தாடனவங்க மத்தியில

**என்னையும் ஒரு மனுஷனா நிக்க வைக்கறீங்க பாருங்க, இந்த உயிர் உள்ள வரைக்கும் உங்க காலுக்கு செருப்பா இருப்பேன் பாஸ்! உங்கள நடிக்க வச்சு ஹிட் படம் குடுத்து, உங்க பணத்த பெருக்கிக் குடுப்பேன் பாஸ்! இது எங்காத்தா மேல சத்தியம்" என உணர்ச்சி வசப்பட்டான் தீரன்.**

**அவன் முதுகை மட்டும் தட்டிக் கொடுத்தவன்,**

**"அந்த ஆள கிளப்பி விடு! ஐ நீட் டு டேக் ரெஸ்ட்" என அபிசியலாக முதல் வேலையைக் கொடுத்தான் தீரனுக்கு.**

தீரனின் முகம் அதிர்ச்சியில் இருந்து மெல்ல தெளிந்து, பூரிப்படைந்து, திமிரைப் பூசிக் கொண்டது. ஜெய்யை நக்கலாகப் பார்த்தவன்,

“சாரே! நீங்க இங்க நிக்கறது எங்க பாஸுக்கு செம்ம இரிட்டேடிங்கா இருக்காம்! அவர் என்ன சொல்றாருன்னா ஜரகண்டி, ஜரகண்டி!!! அதாவது கெளம்பு கெளம்பு குவீக்கா கெளம்புன்னு! பாரேன், தெலுங்கு படத்த அப்படியே சுட்டு தமிழ்ல குடுக்கற உங்களுக்கே அர்த்தம் சொல்றேன்!” என்றவன் கதவைப் பெரிதாகத் திறந்து வைத்தான்.

தீரனை முறைத்த ஜெய் ஜோனாவைத் திரும்பிப் பார்த்து,

“ஜோனா, இது கொஞ்சம் கூட சரியில்ல! என் கிட்டயே உன் வேலையைக் காட்டறியா? விதை போட்டவன் கிட்டயே விளையாடிப் பார்க்கறயா? என்னை பகைச்சிக்கறது உனக்கு நல்லது இல்லடா! ஒழுங்கா என் கூட வந்துடு!” என மிரட்டினார்.

“தீர்!!! ஐம் கோயிங் டூ டேக் எ நேப்! நான் எழுந்து வரப்போ என் டார்லிங்கோட வீட்டுல பாசிட்டிவ்

வைப்ரேஷன் மட்டும்தான் இருக்கனும்!" என சொன்னவன், கொட்டாவி விட்டப்படியே படுக்கையறைக்குள் நுழைந்தான்.

"ஜோனா, ஜோனா! நில்லு ஜோனா" என ஜெய் கத்த,

"சொய்க்குமாரு!!!! சத்தம் போடாம கௌம்பிடு சாமி! திட்டித் திட்டிப் போட்டாலும் உன் கையால சோறு தின்னுருக்கேன்! அந்த நன்றிக்கடன் தான் பொறுமையா போக சொல்லுது! என்னோட பொறுமை எருமையா ஆகறதுக்குள்ள கௌம்பிடறது

நல்லது!” என கடுப்பான குரலில் தீரன் சொல்ல,

“இப்போ போறேன்டா! உங்க ரெண்டு பேரையும் என்ன செய்யறேன்னு மட்டும் பொருத்திருந்து பாருங்கடா! ஜெய்க்குமார் கவுண்ட்டிங் ஸ்டார்ட்ஸ் நவ்” என சொல்லியவர் விடுவிடுவென கிளம்பிப் போனார்.

கதவை சாற்றி விட்டு ஸ்டைலாக ஒற்றைக் கையைத் வளைத்து வளைத்து ஆட்டிக் கொண்டே பாடியபடி வந்தான் தீரன்.

**“ஷேற ரகிட ரகிட ரகிட …ஊ**

**ரகிட ரகிட ரகிட…ஊ**

**ஜோனாக்கு கூஜாவா நான் வாழுறேன்..**

**எதுவும் இல்லைனாலும் ஆளுறேன்!!!!!”**

**சென்னையில் புகழ் பெற்ற அந்த ஹாஸ்பிட்டல் வளாகத்துக்குள் நுழைந்தாள் ஜீவா. பெரிய மூச்சை எடுத்து தன்னை சமன் படுத்திக் கொண்டவள், அந்த அறையின் கதவை மெல்ல தட்டி விட்டு உள்ளே நுழைந்தாள். அசந்து தூங்கிக் கொண்டிருந்த அந்த மனிதர் மெல்ல**

கண் விழித்தார். இவளைப் பார்த்ததும், கண்கள் ஒளிர்ந்து புன்னகை வரப் பார்க்க, முயன்று அதை அடக்கினார்.

அவர் அருகில் போய் அமர்ந்த ஜீவா,

“டாடி! எப்படி இருக்கீங்க?” என கேட்டாள்.

“நான் நல்லா இருக்கேன்! ஒரு மேசிவ் அட்டாக்லாம் என்னை ஒன்னும் செஞ்சிடாது! நீ சொல்லு, என்ன முடிவு எடுத்திருக்க?” என கேட்டார் அவர்.

**“டாடி…”**

**“கமான் ஜீவா! ஸ்பீக் ஆப்! ஐ டேண்ட் லைக் டில்லி டேலியிங்((முடிவு எடுக்க முடியாமல் தடுமாறுவது)! நீ கேட்ட அளவுக்கு உனக்கு டைம் குடுத்தாச்சு! சொல்லு” என குரலை உயர்த்தினார்.**

**“எனக்கு மேரேஜ் வேணாம் டாடி! கம்பெனிய நான் பொறுப்பெடுத்துக்கறேன்” என பிசிறில்லாத குரலில் தெளிவாக சொன்னாள் ஜீவா!**

அவளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தவர்,

“வெல்கம் டு ஜீவானந்தம் செக்கியூரிட்டி செர்விஸ்!” என சொல்லி அவள் கையைப் பிடித்துக் குலுக்கினார்.

அவர் முன்னே சந்தோஷமாக இருப்பதைப் போலக் காட்டிக் கொண்டவள், சற்று நேரம் அங்கே இருந்து விட்டுக் கிளம்பினாள். தனது அபார்ட்மெண்டுக்கு வந்தவள், குளித்து விட்டு துண்டுடன் கண்ணாடி முன் வந்து நின்றாள்.

தோள் பகுதியில் சிவப்பாய் தெரிந்த தடத்தைத் தடவிப் பார்த்தவளுக்கு, கண்களில் கண்ணீர் மளுக்கென வழிந்தது.

“இனி நீ என் ஜீவா! எனக்கே எனக்கான மூலான்! மார்க் போட்டுட்டேன் உன் மேல!” என சொல்லி சிரித்தவன் முகம் கண் முன்னே வந்துப் போனது!

மழை மகள் ஆசீர்வதித்து, மங்கள மணி ஓசை முழங்க தன் கழுத்தில் அவன் போட்ட ஜே பெண்டன் வைத்த

**சங்கிலியைத் தடவிப் பார்த்தவள், அப்படியே தரையிலேயே குறுகிப் படுத்துக் கொண்டாள்.**

**“ஐ லவ் யூ ஜோனா! லவ் யூ சோ மச்!!!!”**

## அத்தியாயம் 12

**“வட் தெ ஹெல்!!!! உங்க கிட்ட இப்படி ஒரு கெர்லெஸ்னெஸ்ச நான் எதிர்ப்பார்க்கவேயில்ல சீனியர். நம்ம டீம்லயே நீங்கதான் தி பெஸ்ட்! அந்த ஒரே ஒரு காரணத்துக்காகத்தான்**

உங்கள அவருக்கு பாடிகார்ட்டா போட்டேன். ஆனா என் நம்பிக்கைய பொடி பொடியாக்கிட்டீங்க நீங்க! உங்க வயச மறந்து நான் இன்னும் கடுமையாத் திட்ட ஆரம்பிக்கறதுக்குள்ள, ப்ளீஸ் வெளிய போங்க!" என கோபமாக சொன்னாள் ஜீவா.

எவ்வளவு முயன்றும் உடல் நடுங்கத் தொடங்கியது அவளுக்கு. முன்னால் நிற்பவரின் மேல் எதையாவது தூக்கி அடித்து விடுவோமோ என அச்சம் சூழ்ந்துக் கொண்டது. கைகளை அழுத்தமாக மேசை மேல் வைத்துக்

கொண்டவள், கால்களை அழுத்தி தரையில் ஊன்றி நின்றாள்.

“ஜீவா!! நான் சொல்லறத கொஞ்சம்..”

அவரை முடிக்க விடாமல் கதவைச் சுட்டிக் காட்டியவள்,

“ப்ளீஸ்” என முயன்று சொன்னாள்.

அவரும் ஒரு பெருமூச்சுடன் வெளியேறிவிட்டார்.

வேகமாக சென்று கதவைப் பூட்டியவள், தனது இருக்கையில் வந்து பொத்தென அமர்ந்தாள். உடல் சூடாகி, முத்து முத்தாய் வியர்க்க ஆரம்பித்தது. ஆழ மூச்செடுத்து விட்டவள்,

“ஜோனாவுக்கு ஒன்னும் ஆகல! ஹீ இஸ் சேவ் ஜீவா! ஹீ இஸ் சேவ் நவ்! டோண்ட் ஓவர் ரியாக்ட் ஜீவா! கால்ம் டவுன்” என தன்னைத் தானே தேற்ற ஆரம்பித்தாள்.

பின் எழுந்துக் கொண்டவள், தனது காபினுக்குள்ளேயே குறுக்கும் நெடுக்கும் நடையிட்டாள். போனைக்

கையில் எடுத்து தற்பொழுது ஜோனா இருக்கும் ஹாஸ்பிட்டலில் பாடிகார்ட்டாக நியமித்திருப்பவருக்கு கால் செய்தாள் ஜீவா. ஜோனாவின் உடல்நிலையைப் பற்றி மீண்டும் இவள் விசாரிக்க, நலமாய் இருக்கிறான், சொற்ப காயம் மட்டுமே எனும் அதே பதிலில் காலை கட் செய்தாள்.

தனது மேசையை நெருங்கியவள், இழுப்பறையை நடுங்கும் கரத்தால் திறந்தாள். அதில் ப்ரேம் செய்து வைத்திருந்த அவர்கள் இருவரின் செல்பியை வெளியே எடுத்தவள், அதையே சிறிது நேரம் கண்

கொட்டாமல் பார்த்திருந்தாள். கிளம்பி வருவதற்கு முன், ஜோனாவின் போனில் இருந்து அந்தப் படத்தைத் தன் போனிற்கு அனுப்பி இருந்தாள் ஜீவா. அதில் அவன் ஈயென எல்லாப் பல்லையும் காட்டி இருக்க, இவள் மெலிதாய் புன்னகைத்திருந்தாள். அவனின் பிம்பத்தைத் தடவிக் கொடுத்தவள்,

“நீ கிளம்பி அமெரிக்காவுக்கே போய்டுவன்னு நெனைச்சேனே! இங்கயே இருந்து ஏன்டா என் உயிர எடுக்கற! ஓ காட்! உன்னை போடான்னு ஒதுக்கித் தள்ளவும் முடியல, இருடான்னு கிட்ட

சேர்த்துக்கவும் முடியல! இம்சைடா நீ! என் செல்ல இம்சை” என திட்டியவள், போட்டோவை எடுத்த இடத்திலேயே வைத்தாள்.

அறிவு போகாதே என எவ்வளவு தடுத்தும், மானங்கெட்ட மனம் அவனைப் பார்க்க போக சொல்லி விழுந்து புரண்டு கெஞ்சியது. மனமும் மதியும் போட்டியிட்டதில் மனம் ஜெயிக்க, ஜோனா அனுமதிக்கப்பட்டிருக்கும் ஹாஸ்பிட்டலுக்குக் கிளம்பிப் போனாள் ஜீவா.

ஜேஜே ப்ரோடக்ஷன் என புதிதாக ஒரு பட நிறுவனம் தங்களது

சேவையை நாடி இருக்கிறார்கள் என கேள்விப்பட்டப் போது அதை சாதாரணமாகத்தான் எடுத்துக் கொண்டாள் இவள். கஸ்டமரைப் பார்த்துப் பேசுவது, அவர்களுக்கு ஏற்ற பாடிகார்ட்டுகளை நியமிப்பது எல்லாவற்றையும் ஆபரேஷன் டிபார்ட்மேண்ட் பார்த்துக் கொள்வார்கள். ஜீவானந்தம் செக்கியூரிட்டி சர்விஸின் முழு பொறுப்பும் இவளது என்றாலும், மனிதவள துறை மட்டும் இவளது நேரடிப் பார்வையின் கீழ் வரும். புதிதாக வேலைக்கு வருபவர்களை பேட்டி எடுத்து வேலைக்கு சேர்ப்பது, அவர்களின் அனுபவத்தைப் பார்த்து

ஊதியத்தை நியமிப்பது எல்லாம் இவளது கண்காணிப்பில் தான் நடக்கும்.

ஜே.ஜே ப்ரோடக்ஷனின் பிரதிநிதி மட்டும் ஜீவாவையே நேரில் பார்த்து பேசித் திருப்தி அடைந்தால் மட்டுமே அவர்களின் சர்வீசை பயன்படுத்திக் கொள்வோம் என பிடிவாதம் பிடிக்க, விஷயம் இவள் காதுக்கு வந்தது. இதை கூட ஹேண்டில் செய்ய முடியாதா என ஆபரேஷன் டீமை காய்ச்சி எடுத்தவள், அந்நிறுவனத்தின் பைலை மேலோட்டமாகத்தான் பார்த்தாள். பார்த்தவளின் பார்வை அலேக்ஷாண்டர் ஜோனா எனும்

பெயரில் ஆணி அடித்து நின்றது. பிறகு நுணுக்கமாக படித்துப் பார்த்தவள், அவர்களின் பிரதிநிதியை நேரில் சந்தித்தாள். இருவரும் டேர்ம்ஸ் அண்ட் கண்டிஷன்களுக்கு ஒத்துக் கொண்டதும், தனது டீமில் இருந்த மிகவும் அனுபவமிக்க ஒருத்தரையும், அவருக்கு உதவியாய் இன்னும் இருவரையும் தானே நியமித்தாள் ஜீவா. ஜோனாவின் பாதுகாப்புக்காக இவள் பார்த்து பார்த்து எல்லாம் செய்தும், இந்த தரமான சம்பவம் நடந்திருந்தது.

காரை செலுத்திக் கொண்டிருந்தவளுக்கு மனம் ஒரு

நிலையில் இல்லை. தான் கடந்து வந்த வாழ்க்கையை அசைப் போட்டபடியே காரை ஓட்டினாள் ஜீவா.

இந்தியாவில் மேல்நிலைப் படிப்பை முடித்தக் கையோடு ஜீவானந்தம் இவளை வெளிநாட்டில் பாடிகார்ட் ட்ரைனிங் கோர்ஸில் சேர்த்து விட்டார். அதோடு ஃபயர் ஆர்ம்ஸ் உபயோகப்படுத்துவற்குறிய பயிற்சி, அதி வேக கார் ஓட்டப் பயிற்சி என இந்தத் தொழிலுக்கு சம்பந்தப்பட்டதை எல்லாம் படிக்க வைத்தார். இங்கிருக்கும் போதே கிக்பாக்ஸிங், க்ராவ்-மகா(ஒரு

வகையான செல்ப் டிபேன்ஸ்), களரி, சிலம்பம் எல்லாம் இவரே மகளுக்கு சொல்லிக் கொடுத்திருந்தார். படிப்பை முடித்து வந்தவளை அவரே நேரிடையாக பயிற்சி கொடுத்து தனது நிறுவனத்தில் வேலைக்கும் வைத்துக் கொண்டார்.

ஆசை மனைவி பெண் வாரிசை தன் உயிரைக் கொடுத்து விட்டுப் போயிருக்க, இன்னொருத்தியை மணந்து ஆண் பிள்ளை பெற்றுக் கொள்ள மனம் ஒப்பவில்லை இவருக்கு. தான் பாடுபட்டு வளர்த்த தொழிலை மகள் கட்டிக் கொள்ளும் ரத்த சம்பந்தம் இல்லாத

மருமகனுக்கு விட்டுப் போவதை விட, தன் வாரிசே அதை வழி நடத்தி சொந்தக் காலில் நிற்க வேண்டும் என விரும்பினார் ஜீவானந்தம். ஜீவாவை இந்தத் தொழிலுக்கு ஏற்றவளாய் வளர்த்து, வளைத்து தனது சாம்ராஜ்யத்தைக் கையில் கொடுத்திருந்தார் அவர். தந்தை சொல் வேதம் என வளர்க்கப்பட்டவள், ஒரு கட்டத்தில் மனம் வெம்பி வெதும்பிப் போய் தப்பான முடிவு எடுக்க முயன்ற போது, தொட்டபெட்டா சூசைட் பாயிண்டில் ஞானம் பெற்று மறுபடியும் தகப்பனே கதி என சரணடைந்திருந்தாள்.

ஹாஸ்பிட்டல் போகும் வழியில் ஒரு ப்ளோரிஸ்டைப் பார்த்தவள், காரை நிறுத்தி இறங்கினாள். நட்புக் கரம் நீட்ட என்ன பொக்கே கொடுப்பார்கள் என கூகுளைப் பார்த்து, மஞ்சள் வர்ண ரோஜாக்களை வாங்கினாள் ஜீவா. அதோடு கெட் வெல் சூன் என எழுதியிருந்த குட்டி கார்ட் ஒன்றை வாங்கியவள்,

“உன்னை வேகமாய் காற்று மோதினால் கூட மனமுடைந்துப் போவேன் நான். ஆதவன் உன்னை லேசாய் எரித்தால் கூட சித்தம் கலங்கிப் போவேன் நான். மழை

உன்னை நனைத்தால் கூட நடுநடுங்கிப் போவேன் நான். ப்ளீஸ் ஜோனா, ப்ளீஸ் ஸ்டே சேவ்! லவ் ஜீவா" என மனதில் மட்டும் எழுதி, கார்டில் வெறும் சைன் மட்டும் வைத்தாள்.

ஜோனா அனுமதிக்கப்பட்டிருக்கும் விஐபி அறையை நெருங்கியவள், தனது செக்கியூரிட்டி ஆட்களைப் பார்த்து தலை அசைத்தாள். பதிலுக்கு வணக்கம் வைத்தவர்கள் ரூமின் உள்ளே அவளை அனுமதித்தார்கள். ஆழ மூச்சை இழுத்து விட்டுத் தன்னை சமன்

செய்தவள், கதவை மெல்ல தட்டி விட்டு உள்ளே நுழைந்தாள்.

அங்கே கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தான் ஜோனா. சத்தம் செய்யாமல் அவசரமாய் அவனை நெருங்கியவள், தலை முதல் கால் வரை அவனை ஸ்கேன் செய்தாள். மேல் சட்டை இல்லாமல் இருந்தவனின் இடது பக்க தோளில் பேண்டேஜ் போடப் பட்டிருந்தது. வலது காலில் சிராய்ப்புக் காயங்கள். அதற்கு கட்டுப் போடாமல் மருந்து மட்டும் பூசி இருந்தார்கள்.

ஜோனா படம் நடிக்கப் போவதை இன்னும் ரகசியமாக வைத்திருந்தாலும், எப்படியோ விஷயம் வெளியே கசிந்திருந்தது. போட்டோ ஷூட்டுக்காக ஸ்டூடியோ வந்திருந்தவனை சில ரசிகைகள் சூழ்ந்துக் கொள்ள, எவ்வளவு தடுத்தும் ஒருத்தி மேலே பாய்ந்து விட இருவரும் தரையில் உருண்டதில் தான் இந்தக் காயங்கள். ஆண்கள் என்றால் அடித்து விளாசி தள்ளி இருப்பார்கள் ஜீவா வைத்த பாடிகார்ட்டுகள். பெண்களாய் போய் விட, அதிக கடுமை காட்ட முடியாமல் அவர்களைத் தடுத்து

நிறுத்துவதற்குள் போதும் போதுமென ஆகிவிட்டது.

ஜீவாவுக்கு தன்னிச்சையாக கைகள் உயர்ந்தன அவன் தோளைத் தடவிக் கொடுக்க.

“டோண்ட் யூ டேர் டச் மீ! அந்நிய ஆட்கள் தொட்டா எனக்கு அறவே பிடிக்காது!” எனும் ஜோனாவின் குரலில் கையைப் பட்டென இறக்கிக் கொண்டாள் ஜீவா.

அவன் முகத்தை நோக்க, இன்னும் கண்கள் மூடித்தான் இருந்தன.

“எப்படி இருக்கீங்க ஜோனா சார்? ஐ எம் எக்ஸ்ட்ரீம்லி சாரி..” என அவள் சொல்லி முடிப்பதற்குள், கண்ணைத் திறந்து அவளை அழுத்தமாகப் பார்த்தவன்,

“எதுக்கு சாரி மிஸ்? உங்கள நான் முன்னப் பின்னப் பார்த்தது கூட இல்லையே! என் கிட்ட எதுக்கு சாரி கேட்கறீங்க?” என ஆச்சரியமாகக் கேட்டான்.

சில நிமிடங்கள் அமைதி காத்தவள்,

**“எங்க பாதுகாப்புல இருக்கும் போது உங்களுக்கு அடிப்பட்டதுல நாங்க ரொம்ப வருத்தப்படறோம். இனிமே…” என சொல்லிக் கொண்டிருக்கும் போதே,**

**“கையில வச்சிருக்கற பொக்கே எனக்கா?” என கேட்டான் ஜோனா.**

**ஆமென தலையசைத்தவள், அவனிடம் அந்த மஞ்சள் மலர்களை நீட்டினாள்.**

கையில் வாங்கிக் கொண்டவன், நீர் கோர்த்திருந்த அதன் இதழ்களை மெல்லத் தடவிக் கொடுத்தான்.

“எனக்கு ரொம்ப புடிச்ச பெண்ணொருத்தியோட லிப்ஸூம் இந்த ரோஸ் பெட்டல் போலத்தான் ரொம்ப மென்மையா இருக்கும். என் உதடும் அவ உதடும் ஒட்டிக்கிட்டா பிரிச்சு எடுக்கவே மனசு வராது! அவ்வளவு மென்மையான அவ உதட்டுக்கு வலிமையான மெக்னேட்டோட பவர் இருக்கு. காந்தமா இழுத்துக்கும் என்னை. ம்ப்ச்! ஐ மிஸ் ஹேர் சோ மச் யூ க்நோ” என பேசிக் கொண்டே

போனவனின் கைகள் தன்னிச்சையாக ரோஜா இதழ்களை உதிர்த்து மூலான் என அடுக்கியது பெட்டின் ஓரத்தில்.

வெள்ளை விரிப்பில் மஞ்சள் எழுத்துகள் மிக அழகாய் தெரிந்தன. மென்னகையுடன் அதைப் பார்த்திருந்தவனின் முகம் மெல்ல கோபமாய் மாற,

“ஐம் கோன சூ யூ! நான் போடற கேஸ்ல, எனக்கு கம்பென்செட் பண்ணறதுக்குள்ள உண்டு இல்லைன்னு ஆகிடுவீங்க நீங்க! கம்பேனிய இழுத்து மூடிட்டு போகற வரைக்கும் சும்மா விட மாட்டேன்

நான்! இந்த ஜோனா அவ்ளோ ஈசியா போய்ட்டானா உங்களுக்கு? நீங்க அப்பாயிண்ட் செஞ்ச பாடிகார்ட்ஸோட அலட்சியப் போக்குனாலத்தான் நான் இங்க வந்துப் படுத்து கிடக்கேன். வாய்ஸ் என்னோட சைட் அசேட்னா இந்த முகம் தான் என்னோட மேய்ன் அசேட்! இந்த முகத்தப் பார்த்துத்தான், அதோட அழக பார்த்துத்தான் என் ஆல்பம் முக்கால் வாசி வித்துப் போகுது. தோளுல பட்ட காயம் முகத்துல பட்டிருந்தா என் கேரியரே ஸ்போயில் ஆகியிருக்கும் டாமிட்! பாடிகார்ட்னா என்னான்னு தெரியுமா? இதோ”

ஒரு விரல் நீட்டி தன் உச்சி முதல் உள்ளங்கால் வரை மெதுவாய் சுட்டிக் காட்டியவன்,

“இந்த பாடிக்கு கார்ட்டா இருக்கனும்! சிறு கீறல் கூட இல்லாம இந்த உடம்ப பாதுகாத்துக் குடுக்கனும்! உங்களுக்கும் உங்க ஆளுங்களுக்கும் அதுல பேஸிக் நாலேட்ஜ் கூட இல்லை போலிருக்கே!” என சத்தமாக சொன்னவன்,

“பாஸ் மனச கீறி வேடிக்கைப் பார்த்தா, அவளோட எப்ம்ளாயிஸ் என்

உடம்ப கீறி வேடிக்கைப் பார்க்கறானுங்க” என முணுமுணுத்தான்.

“ஜோனா சார்!” என இவள் பேச ஆரம்பிக்க,

“நீங்க வச்ச பாடிகார்ட் எல்லாரும் இர்ரேஸ்போன்சிபள் இடியட்ஸ்!” என இடைவெட்டினான் அவன்.

“ஜோனா சார்!” என இவள் மீண்டும் ஆரம்பிக்க,

“யூஸ்லெஸ் பஃபலோஸ்!”

**“ஜோனா சார்!!!!”**

**“பார்பரிக் பைசன்ஸ்!”**

**“ஜோனா!!!!”**

**சார் காணாமல் போயிருக்க, இவனுக்கு புன்னகை வந்தது. கஸ்டப்பட்டு அடக்கிக் கொண்டவன்,**

**“என்னா?” என கேட்டான்.**

**“இனிமேல் இப்படி ஒரு சம்பவம் நடக்காது! அதுக்கு நான் காரேண்டி”**

என இவள் சொல்ல, ரூமின் கதவு திறந்தது.

இவளைப் பார்த்ததும் காச்மூச்சேன கத்த ஆரம்பித்தான் உள்ளே வந்த தீரன்.

“யார கேட்டு இங்க வந்தீங்க நீங்க? மேனேஜ்மேண்ட் ஒரு லேடி கையில மாறி போச்சுன்னு தெரியாம உங்க கம்பேனி சர்வீசுக்கு சைன் பண்ணிட்டேன் நான்! என்னோட மிஸ்டேக் இப்ப எங்க பாஸ படுக்க வச்சிருச்சு! போதும்! நீங்க செஞ்சது எல்லாம் போதும். நாங்க ஆம்பள வச்சு நடத்தற வேற செக்குரிட்டி

கம்பேனி பார்த்துக்கறோம்! தயவு செஞ்சு வெளிய போங்க!" என அவள் முன்னே ஒற்றை விரல் நீட்டி படபடவென பொரிந்தான் அவன்.

பட்டென அவன் விரலைப் பிடித்து இழுத்து கையை மடக்கி அவன் முதுகுக்குப் பின்னால் கொண்டு வந்து அழுத்தியவள்,

"பொண்ணுன்னா உனக்கு அவ்ளோ இளக்காரமா போச்சா? ஏன் நாங்க ப்ளேன் ஓட்டலியா, நிலாவுக்குப் போகலியா இல்ல எவரேஸ்ட் ஏறலியா? அதென்னா ஆம்பள வச்சு நடத்தற கம்பேனிக்கு போறேன்னு

ஏத்தமா சொல்லற! போன தடவை பிட்சால தூக்க மருந்து தான் வச்சேன். ஒரேடியா தூங்கற மருந்து வைக்கற அளவுக்கு என்னை காண்டாக்கிடாதே! பீ கேர்பூல்” என்றவள் தீரனை உதறித் தள்ளினாள்.

வலியில் கையை உதறிக் கொண்டவன்,

“இதென்னா வர்மக் கலையா? இந்தியன் தாத்தாவுக்கு இதெல்லாம் கத்துக் குடுத்ததே நான் தான்! யூ பீ கேர்பூல்!“ என்றவன், அவள் நெருங்கி

வர, வேகமாய் ஓடி ஜோனாவின் அருகில் நின்றுக் கொண்டான்.

அவனுக்கு முறைப்பொன்றை பரிசாய் கொடுத்தவள், ஜோனாவின் புறம் திரும்பிய போது முகம் கனிந்திருந்தது. அவனிடம் பேச இவள் வாய் திறக்கும் முன்னே,

“இனிமே என் சேப்டிக்கு நீங்க கேரண்டின்னு சொன்னீங்க இல்ல மிஸ் ஜீவா?” என கேட்டான் ஜோனா.

“யெஸ்!” என ஆமோதித்தாள் ஜீவா.

முகத்தை சுருக்கி சற்று நேரம் யோசித்தவன்,

“கேரண்டின்னா என்னான்னு தெரியுமா உங்களுக்கு? ஒரு பொருள் பழுதா போச்சுன்னா மேனுபேக்சரர் ரிப்பேர் செஞ்சு குடுப்பாங்க! அதுவும் முடியலனா புதுசா அதே பொருள ரிப்லேஸ் செஞ்சு குடுப்பாங்க! சோ எனக்கு நீங்க கேரண்டின்னா, இந்த ஜோனாவுக்கு எதாச்சும் ஆச்சுன்னா என்னை முழுசா சரியாக்கிக் குடுக்கனும். முடியலைனா இன்னொரு ஜோனாவ உருவாக்கிக் குடுக்கனும்! ஐ மீன் குட்டி ஜோனாவ பெத்துக் குடுக்கனும் எனக்கு

ரிப்லேஸ்மென்டா! முடியுமா உங்களால?" என நக்கலாக கேட்டான் ஜோனா.

'அடப்பாவி பாஸ்! கேரண்டின்னு மேடம் சொன்ன ஒரு வார்த்தைல குழந்தைக் குட்டி வரைக்கும் போயிட்டீங்களே! நான்லாம் இந்த பூமியில ரோமியோன்னு சொல்லிக்கறதுக்கு வெக்கப்படறேன், வேதனைப்படறேன், துக்கப்படறேன், துயரப்படறேன்! நீங்க நடத்துங்க!' என மனதில் ஜோனாவுக்கு கோயிலே கட்டிக் கும்பிட்டான் தீரன்.

‘குட்டி ஜோனாவா? நானா?’ என திகைத்தவளின் முகத்தைப் பார்த்தவனுக்கு மனம் இளகிப் போனது! குரலை செறுமியவன்,

“இனிமே பேசும் போது பார்த்துப் பேசுங்க மிஸ் ஜீவா! வார்த்தைய விட்டுட்டுப் பிறகு முழிச்சிட்டு நிக்காதீங்க! எல்லாரும் என்னை மாதிரி ரொம்ப நல்லவனா இருக்க மாட்டாங்க! ஜோனாவ பார்க்க வந்ததுக்கு நன்றி! உங்க யெல்லோ ரோஸசுக்கும் நன்றி. நம்ம காண்ட்ரக்ட்ட கான்சல் பண்ணிட்டோம்னு சீக்கிரம் எங்க வக்கில் கிட்ட இருந்து லெட்டர்

வரும்! நீங்க எனக்கு குடுத்த சேவைக்கு ரொம்.........ப நன்றி” என கடைசி வாக்கியத்தை இரட்டை அர்த்தத்தில் சொன்னவன், கதவை நோக்கிக் கையைக் காட்டினான்.

அவன் முகத்தில் தெரிந்த அந்நியத்தன்மையிலும் குரலில் காட்டிய கடுமையிலும் திகைத்தவள், அவன் முகத்தைப் பார்க்க விழைய அவனோ எழுந்து அவளுக்கு முதுகை காட்டி அமர்ந்துக் கொண்டான். ஜோனா தன்னை ஒதுக்கி வைக்க வேண்டும் என விரும்பியவளுக்கு, அது நிறைவேறும் தருணம் மனதை கசக்கிப் பிழிந்தது போல வலித்தது.

அமைதியாக கதவை நோக்கிப் போனவள் காதில், அவர்களின் சம்பாஷணை விழுந்தது.

“கனல் கண்ணன் சார் ஒரு கம்பெனி சொன்னாரு! ஜீவானந்தத்தோட போட்டி கம்பெனியாம் அது! பாடிகார்ட் எடுக்க அங்க அக்ரீமேண்ட் போட்டுக்கலாம் பாஸ்!” என தீரன் சொல்ல,

“நீயே எதுனாலும் பார்த்து செய் தீர்! உடம்புலாம் அடிச்சுப் போட்ட மாதிரி வலிக்குது! மயக்கம் வர மாதிரி இருக்கு! மண்டை வேற ஹெம்மர் வச்சு அடிக்கற மாதிரி பேய்ன்னா

இருக்கு! ஹ்ம்ம்ம்!” என முனகிக் கொண்டே கட்டிலில் சாய்ந்தான் ஜோனா.

அவனின் வலி நிறைந்த குரல் இவளை அசையவிடாமல் கட்டிப் போட்டது! அவனுக்குத் தலையைத் தடவிக் கொடுத்து, உடம்பு வலி தீர பிடித்து விட சொல்லி மனம் கட்டளையிட, மூளையோ கிளம்பு கிளம்பு என எதிர் கட்டளையிட்டது.

“நாளைக்கே இவங்கள கட் பண்ணிட்டு அவங்கள செட் பண்ணிடறேன் பாஸ்” என பதில் சொல்லிக் கொண்டிருந்தான் தீரன்.

**அவர்கள் பேசிக் கொண்டிருந்த போட்டி கம்பேனியின் லட்சணத்தை அறிவாள் இவள். பணம் மட்டுமே அவர்களுக்குப் பிரதாணம். அவர்கள் வேலைக்கு வைத்திருக்கும் ஆட்களும் ப்ரோபெஷனலானவர்கள் இல்லை. விடுவிடுவென அவனருகே திரும்பி வந்த ஜீவா,**

**"உங்களுக்கு இந்த நிலமை வந்ததே பெண் ரசிகைகளாலத்தான்!" என படபடவென சொன்னாள்.**

கட்டிலில் சாய்ந்திருந்தவன் அவள் கண்களை ஊடுருவி,

“சோ?” என நக்கலாகக் கேட்டான்.

“அதே ஆம்பளைங்க நெருங்கி இருந்தா அடிச்சு துவம்சம் பண்ணிருப்பாங்க எங்க ஆளுங்க!”

“நான் ஒரு லேடிஸ் மேன்னு தெரிஞ்சும் அதுக்கான பாதுகாப்பு ஏற்பாடு செய்யாம போனது உங்க தப்பு! நவ், டோண்ட் வேஸ்ட் மை டைம்! ஐ நீட் டு ஸ்லீப்” என்றவன்,

“லேடிஸ்னாலத்தான் எனக்கு ஆபத்துன்னு தெரிஞ்சா மட்டும் இவங்களே எனக்கு பாடிகார்ட்டா வந்துட போறாங்களாக்கும்!” என சத்தமாகவே முனகினான்.

“வரேன்!”

“வாட்?”

“உங்களுக்கு நானே பாடிகார்ட்டா வரேன் ஜோனா சார்!!!!!”

## அத்தியாயம் 13

கார் கண்ணாடியைக் கீழே இறக்கி கேட்டில் நின்றிருந்த செக்கியூரிட்டிக்குத் தனது முகத்தைக் காட்டினாள் ஜீவா. அவளைப் பார்த்து சல்யூட் ஒன்றை வைத்த அவளது நிறுவனத்தை சேர்ந்தவருக்கு நெற்றியில் இரு விரல் வைத்து சல்யூட் செய்வது போல அசைத்துக் காட்டினாள் இவள். அவர் கேட்டை அகலத் திறந்து விட, ஜீவாவின் கார் வழுக்கிக் கொண்டு உள்ளே போனது.

கண்ணாடியை மீண்டும் ஏற்றாமல் இவள் காரை செலுத்த, கடல் காற்று இவள் முகத்தில் மோதி

**விளையாடியது. காரை பார்க் செய்து விட்டு இறங்கியவள், அந்த பிரமாண்டமான மாளிகையை அண்ணாந்துப் பார்த்தாள். அதன் பிரமாண்டத்திலும், அழகிலும் அசந்துப் போய் நின்றாள் ஜீவா. கீழ் தளத்தைக் கல் வைத்துக் கட்டி, மேல் தளத்தைக் கண்ணாடியால் இழைத்திருந்தார்கள். வீட்டை சுற்றி தென்னை மரங்களும் பூந்தோட்டமும் கண்ணைக் கவர, வீட்டின் பக்கவாட்டில் பெரிய சைஸ் நீச்சல் குளம் கருத்தைக் கவர்ந்தது.**

**‘1 யூ.எஸ் டாலர் கிட்டத்தட்ட 70 ரூபாயாச்சே! நீ ஏன்டா இந்த ஆட்டம்**

ஆடமாட்ட! ஒத்த ஆளுக்கு இவ்ளோ பெரிய மாளிகைய ரெண்ட் எடுக்கறது எல்லாம் ரொம்பவே ஓவர்டா ஜோனா! இவன் கிட்ட போய் வரவு செலவு கணக்கு பேச முடியுமா! ஆன்னா ஊன்னா தெ கிராட் ஜோனான்னு நெஞ்சை நிமித்துவான்!' என எண்ணிக் கொண்டே கிழக்கு கடற்கரை சாலையில் இருந்த அம்மாளிகையின் உள்ளே நுழைந்தாள் ஜீவா.

வெளியே இருந்ததை விட உள்ளே இன்னும் பிரமாண்டமாய் இருந்தது. அதையெல்லாம் வர்ணிக்க வேண்டும் என்றால், ஜீவா மூன்று மடங்கு

சாப்பிட்டிருக்க வேண்டும்! அவளுக்குத்தான் அன்று காலைப் பொழுதே சோதனை பொழுதாய் விடிந்திருந்ததே! பின் எங்கிருந்து அவள் வயிற்றை நிரப்ப!

தகப்பனின் போன் சத்தத்தில் தான் அன்று அவள் விழித்ததே!

“குட் மார்னிங் ஜீவா”

“குட் மார்னிங் டாடி!”

“நம்ம கம்பெனி ரூல் புக்ல, அஞ்சாவது ரூல்ஸ் என்ன?”

போர்வையை விலக்கி எழுந்து அமர்ந்தவள், நெற்றியைத் தடவி விட்டுக் கொண்டே

“மேனேஜ்மேண்ட் ஸ்டாப்ஸ் பீல்ட் வோர்க் போக கூடாது!” என பதிலளித்தாள்.

அந்தப் பக்கம் எந்த வித சத்தமும் இல்லாமல் அமைதியாக இருந்தது. இவளும் அமைதியாக இருந்தாள். அமைதி நீண்டுக் கொண்டே போக,

“ஐ எம் சாரி டாடி! இந்த கிளையண்டுக்கு லேடி பாடிகார்ட் தேவைப்படவும் நானே களத்துல இறங்க வேண்டியதாப் போச்சு! நம்ம கிட்ட இருக்கறது எல்லாம் மேல் பாடிகார்ட்ஸ் தானே! லேடிஸ் கிளையண்டுக்கு கூட ஆண்களைத்தானே பாடிகார்ட்டா போட்டிருக்கோம்! நான் லேடி கார்ட்ஸ் இண்டெர்வியூ செஞ்சிட்டு இருக்கேன்! பொருத்தமான ஆள் கிடைச்சதும், நான் விலகிடுவேன் டாடி” என்றவள் ஜோனாவுக்கு நடந்த அட்டாக்கை பற்றி விலாவாரியாக விளக்கி முடித்தாள்.

அந்தப் பக்கம் பேச்சில்லாமல் மூச்சு விடும் சத்தம் மட்டும் கேட்டது.

“டாடி!”

“பாய் ஜீவா!” என்றதோடு அழைப்புத் துண்டிக்கப்பட்டது.

இன்னும் கூட தகப்பனின் மூச்சு சத்தம் காதில் கேட்பது போல இருக்க, தலையை உலுக்கிக் கொண்டாள் ஜீவா.

ஹாலில் அமர்ந்திருந்த ஜீவாவின் கார்ர்ட்ஸ், அவளைப் பார்த்ததும்

வணக்கம் வைத்தனர். ஏற்கனவே சொதப்பி இருந்தவர்களை வேறு இடத்துக்கு மாற்றி விட்டு, வேறு திறமையான இருவரை நியமித்திருந்தாள் ஜீவா. அவர்களிடம் அமர்ந்து உரையாடியபடி இருந்தவளை பாட்டுச் சத்தம் கலைத்தது.

“யாருக்காக இது யாருக்காக?

இந்த மாளிகை வசந்த மாளிகை

காதல் ஓவியம் கலைந்த மாளிகை?”

என பாடிக் கொண்டே தலையைத் துவட்டியபடி படிகளில் இறங்கி வந்துக் கொண்டிருந்தான் ஜோனா.

அவன் ஸ்லாங்கில் அந்தப் பாடல்,

“யாருக்காக இடு யாருக்காக

இந்தே மாள்கை வசந்த் மாள்கை

காடல் ஓவ்யம் கலைந்த் மாள்கை”
என கேட்க இவளுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை.

ஓவியங்களைப் பார்ப்பது போல முகத்தைத் திருப்பிக் கொண்டாள்

ஜீவா. அவனுக்குப் பாடல் கற்பித்து கீழே அனுப்பிய தீரனோ,

“டி.எம்.எஸ் மட்டும் உசுரோட இருந்திருந்தா என்னை உரிச்சு உப்புக்கண்டம் போட்டுருப்பாரு. ஜஸ்ட்டு மிஸ்! ஆனாலும் இந்தப் பாட்டுக் கூட எங்க பாஸ் வாய்ஸ்ல அதிர்வேட்டாத்தான் இருக்கு” என சிலாகித்துக் கொண்டான்.

கேட்டில் நிற்பவரோடு சேர்த்து வீட்டில் ஜோனாவுடனே இருப்பது போல மூன்று கார்ட்களை அரேஞ் செய்திருந்தாள் ஜீவா. அவன் வெளியே செல்லும் போது மட்டுமே

இவள் அவனுக்கு பாடிகார்ட்டாக வருவாள். அவனுடைய காலேண்டர் இவளுக்கும் ஷேர் செய்யப் பட்டிருந்ததால், க்ரூமிங் என இன்றைய காலை அப்பாயிண்மேண்ட் குறிக்கப்பட்டிருந்ததைப் பார்த்து தான் வந்திருந்தாள். காலையிலேயே கிளம்பி ஆபிசுக்குப் போய், அவள் மட்டும் பார்க்கக் கூடிய வேலைகளை முடித்துக் கொண்டு அரக்கப் பறக்க இங்கே வந்து சேர்ந்திருந்தாள்.

கீழே இறங்கியவன் இவளைக் கண்டுக் கொள்ளாமல், நேராக மற்ற கார்ட்களிடம் போய்,

“லெட்ஸ் ஈட்!” என அழைத்தான்.

ஜோனாவுடனே இருபத்து நான்கு மணி நேரமும் இருப்பதால், அவர்களின் உணவு, உறைவிடம் தங்களின் பொறுப்பு என ஏற்கனவே சொல்லி இருந்தான் தீரன்.

அவர்களும் பிகு பண்ணிக் கொள்ளாமல் டைனிங் ரூமுக்குப் போக, இவள் போனைப் பார்ப்பது போல குனிந்து அமர்ந்திருந்தாள். அவள் பக்கத்தில் பொத்தென அமர்ந்தான் ஜோனா. அவன் ஈரத்தலையிலிருந்து சொட்டிக் கொண்டிருந்த நீர் அவள் கன்னத்தில் தெறித்து நலம் விசாரித்துப் போனது.

தன் கன்னத்தைத் துடைக்க கை உயர்த்தியவள், அதை செய்யாமல் அப்படியே கையை இறக்கிக் கொண்டாள்.

“என் தலையில இருந்து விழுந்த தண்ணியக் கூட துடைச்சுக்க மனசு வராதவங்களுக்கு, என்னையே வேணாம்னு துடைச்சு போட்டுட்டு போறதுக்கு எப்படி மனசு வந்துச்சு?”

யாரோ யாரையோ கேட்கிறார்கள் என்பது போல அமர்ந்திருந்தவளை கடுப்புடன் பார்த்திருந்தான் ஜோனா.

ஏற்கனவே அவள் கொஞ்சம் ஒல்லித்தான். முகத்தில் கண்கள் மட்டுமே பெரிதாக தெரியும். இப்பொழுது இன்னும் இளைத்து கன்னத்து எலும்புகள் துருத்தி நிற்பது போல தோன்றியது இவனுக்கு. என்னவோ பார்த்தது முதல் அவனை அலைக்கழித்த அந்தப் பெரிய கண்களின் கீழ் கருவளையத்தைக் காணவும் மனது வலித்தது இவனுக்கு.

“எஸ் ஸ்டபர்ன் எஸ் எ மியூல்(mule)”(அவர்கள் ஊர் பழமொழி. மிகுந்த பிடிவாதக்காரரர்கள் என பொருள்படும்) என முனகியவன்,

“சாப்பிடலாம் வாங்க, மிஸ் ஜீவா!” என அழைத்தான்.

“இட்ஸ் ஓகே சார்! நான் சாப்பிட்டுட்டுத்தான் வந்தேன்! யூ கேரி ஆன்” என்றாள் அவள்.

“ஓகே” என்றவன் எழுந்து மீண்டும் மாடியில் இருக்கும் தனது அறைக்குப் போய்விட்டான்.

வெளியே போவதற்கு கிளம்பி கீழே வந்தவனுடன், தீரனும் வந்தான்.

“சாப்பிடலாம் பாஸ்” என அவன் அழைக்க,

“நான் சாப்டுட்டேன்!” என்றவன் ஜீவாவின் எதிர்புறம் வந்து சோபாவில் அமர்ந்து தொலைக்காட்சியை இயக்கினான். ஏதேதோ தேடி ஒரு ஆங்கில மியூசிக் சேனலை வைத்தவன், அதிலேயே மூழ்கிப் போனான்.

தான் சாப்பிட வராததால் தான் இவனும் சாப்பிடாமல் அமர்ந்திருக்கிறான் என புரிந்தது இவளுக்கு. ஆனாலும் அவனது இமோஷனல் பிளாக்மேயிலுக்கு

அடிப்பணியக் கூடாது என அமைதியாகவே அமர்ந்திருந்தாள் ஜீவா. கொஞ்ச நேரம் அமைதியாக அமர்ந்தபடி ஓடிக் கொண்டிருந்த பாடல்களோடு மெல்லிய குரலில் பாடிக் கொண்டு இருந்தவன், பின் வயிற்றை தடவிக் கொடுத்தான். ம்ப்ச் எனும் சலிப்புடன் எழுந்தவன், அந்த ஹாலிலேயே குறுக்கும் நெடுக்கும் நடைப் பயின்றான். மறுபடியும் சோபாவில் விழுந்தவன், மீண்டும் வயிற்றைத் தடவிக் கொண்டான்.

பார்க்காதது போல அவனின் ஒவ்வொரு அசைவையும் கீழ்க்கண்ணால் கவனித்தவளுக்கு

ஒரு பக்கம் கோபம் வந்தாலும் இன்னொரு பக்கம் பாவமாய் இருந்து தொலைத்தது.

‘பிடிவாதத்துக்குப் பொறந்தவன்’ என மனதிலேயே அவனைத் திட்டித் தீர்த்தவள், படக்கென எழுந்து டைனிங் ஹால் பக்கம் நடக்க ஆரம்பித்தாள்.

எழுந்து செல்பவளையே புன் சிரிப்புடன் பார்த்திருந்தவன்,

**“Girl, you’re my angel**

You're my darling angel" என சத்தமாகப் பாடியபடியே பின் தொடர்ந்தான்.

இவன் போவதற்குள் மற்றவர்கள் சாப்பிட்டு முடித்திருக்க, ஜீவாவின் அருகே அமர்ந்துக் கொண்டான் ஜோனா.

"சாப்பிடுங்க, பயப்படாம சாப்பிடுங்க. நாங்கல்லாம் விருந்து சாப்பாடுத்தான் போடுவோம்! மருந்து சாப்பாடுலாம் போட மாட்டோம்!" என போகிற போக்கில் ஜீவாவை வம்பிழுத்து பறந்து வந்த கரண்டி அடியையும் வாங்கிக் கொண்டே போனான் தீரன்.

அவர்கள் இருவரின் அலப்பறையில், உதட்டில் புன்னகை உறைய ஜீவாவின் தட்டில் உணவைப் பரிமாறினான் ஜோனா. அவள் மெதுவாய் சாப்பிட, முடிய முடிய பரிமாறிக் கொண்டே இருந்தான். ஒரு கட்டத்தில் தட்டை தூரமாய் நகர்த்திக் கொண்டவள்,

“எனக்கு போதும் சார்! நீங்க சாப்பிடுங்க!” என்றாள்.

அவனுக்காக ஸ்பேஷலாக தயாரிக்கப் பட்டிருந்த சமச்சீரான உணவை சாப்பிட ஆரம்பித்தான் ஜோனா. அவன் தட்டில் இருந்த முட்டை,

சாலட், பழங்கள், நட்ஸ் போன்ற உணவினைப் பார்த்தவளுக்கு லேசாய் புன்னகை அரும்பியது. ஆரோக்கியமாய் உண்ணாமல் ஹாட்டாக், பர்கர் என சாப்பிடுகிறானே என கவலைப்பட்டிருந்தவளுக்கு அவனின் இந்த உணவுப் பழக்கம் நிம்மதியைக் கொடுத்தது.

“நியூட்ரிஷன் கம் டயட்டிஷன் கம் பெர்சனல் ட்ரைனர் ஹையர் பண்ணிருக்கேன். உடம்ப பார்த்துக்கனும் இனி! நான் ஹெல்த்தியா ஸ்ட்ராங்கா இருந்தாத்தானே, குடும்ப பாரத்த

சுமக்க முடியும்! இடையிலெ நான் கொஞ்சமே கொஞ்சம் வீக் ஆகவும் தானே, பட்டுன்னு கடத்தி என்னோட...ஹ்ம்ம்...” என சற்று நேரம் யோசித்தவன்,

“கடத்தி என் கற்ப களவாடிட்டாங்க” என முடித்து வைத்தான்.

அப்பொழுதுதான் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருந்தளுக்கு, அவனின் வசனத்தைக் கேட்டு புரை ஏறி விட்டது. ஒரு பக்கம் சிரிப்புப் பொத்துக் கொள்ள, இன்னொரு பக்கம் இருமல் ஆளை கொல்ல பாடாய் பட்டு விட்டாள் ஜீவா.

“ஹேறு!!! கால்ம் டவ்ன்!” என்றவன் உண்பதை நிறுத்தி விட்டு பதட்டமாக அவளுக்கு முதுகைத் தடவிக் கொடுக்க ஆரம்பித்தான். அவன் இன்னொரு கையைப் பிடித்துத் தன் தலையில் வைத்து தட்டிக் கொடுக்க வைத்தாள் ஜீவா. ஜோனா ஒரு ரிதமாய் தலையைத் தட்டி முதுகை நீவி விட, இருமல் மெல்ல மட்டுப்பட்டது அவளுக்கு.

“இந்த வார்த்தைலாம் யார் சொல்லிக் கொடுத்தா உனக்கு?” என இது வரை

பயன்படுத்திய மரியாதைப்பன்மையை விடுத்து கேட்டாள் ஜீவா.

“தீர் தான். எங்க படத்துல இப்படி ஒரு டயலோக் வருது! அப்புறம் இன்னொரு இண்ட்ரெஸ்டிங் டயலாக் கூட இருக்கு! ஹீரோவோட பஞ்ச் டயலாக்காம்!” என்றவன், ஒற்றைக் கையைத் தலைக்கு மேல் தூக்கி அதில் நடு மூன்று விரல்களை மடக்கி ஆட்டிக் காட்டிக் கொண்டே,

“நான் பார்க்கத்தான் வைட்டுடா

ஓங்கி அடிச்சா ஒன்றரை டன் வெயிட்டுடா! வெயிட்டுடா! வெயிட்டுடா!!!!” என சொன்னான்.

‘கதையத்தான் அங்க இங்க எடுத்துப் போட்டு படத்த எடுக்கறாங்கன்னு பார்த்தா, இந்தப் பக்கி தீரன் டயலாக்கையே திருடி போட்ருக்கானே! சிங்கம் அவன சின்னாபின்னமாக்காம இருந்தா சரி!’ என மனதில் நினைத்தவளுக்கு கோபம் கோபமாக வந்தது.

ஜோனாவுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை என மனம் துடிக்க அவனை ஆழமாக ஒரு பார்வைப் பார்த்தவள்,

“உனக்கு இந்த வெதர், ஹீட், சாப்பாடு, இந்த ஆக்டிங் காரியர் எதுவும் சரிப்படாது! ப்ளீஸ், கிளம்பி உங்க ஊருக்கே போயிடேன்” என்றாள்.

“நான் கிளம்பனா, நீயும் வருவியா என் கூட?”

முடியாது என்பது போல தலையை ஆட்டினாள் இவள்.

“தென் ஜஸ்ட் ஷட் அப்! உன் கிட்ட எதாவது அட்வைஸ் கேட்டேனா என் லைப்ப எப்படி லீட் பண்ணறதுன்னு?

இல்லல்ல! சோ இந்த பாடிக்கு கார்ட்டா இருக்கற வேலையை மட்டும் பாருங்க மிஸ் ஜீவா! என் வாழ்க்கைய கார்ட் பண்ணற வேலைலாம் வேணாம்!” என்றவன் பாதி சாப்பாட்டில் கிளம்பப் போனான்.

அவன் வலது கையை இறுக்கமாக இவள் பற்றிக் கொள்ள, திரும்பிப் பார்த்து முறைத்தான் ஜீவாவை.

“சாப்பிடு!”

“வேணா”

**“ப்ளிஸ்”**

**“நோ”**

**“ஜோனா”**

**லட்சக்கணக்கான பேர் அந்தப் பெயரை ஜபம் போல சொல்லிக் கேட்ட பொழுதெல்லாம் சாதாரணமாய் கடந்துப் போனவன், இவள் வாயில் இருந்து வரும் போது மட்டும் மனம் கனிந்துப் போகிறான். அவளிடம் இருந்து கையை உருவிக் கொண்டவன், மீண்டும் அமர்ந்து**

கடகடவென உணவை உண்டு முடித்தான்.

தீரன் ஜோனாவுக்கு ஏற்பாடு செய்திருந்த எம்.பீ.வீயில் ட்ரைவர் அருகே ஒரு பாடிகார்ட்டும், ஆக கடைசி சீட்டில் ஒரு பாடிகார்ட்டும், ஜோனாவின் அருகில் ஜீவாவும் அமர க்ரூமிங் செஷனுக்கு கிளம்பினார்கள். தீரன் பட சம்பந்தப்பட்ட வேலை இருப்பதாக சொல்லி வீட்டிலேயே இருந்துக் கொண்டான்.

காலர் வைத்திருந்த முரட்டு போலோ டீஷர்ட் போட்டு ஜீன்ஸ் அணிந்திருந்தாள் ஜீவா. ரிலேக்ஷாக

அமர்ந்திருப்பது போலிருந்தாலும் கண்கள் சுற்றுப்புறத்தை சுற்றி சுற்றி வந்தன. பாடிகார்ட்டாக இருப்பவர்களுக்கு உடம்பும் மூளையும் எந்நேரமும் அலர்ட்டாகவே இருக்க வேண்டுமே! அவள் அருகில் அமர்ந்திருந்தவனோ ஷார்ட்ஸும் மஞ்சள் வர்ணத்தில் ஆர்ம் கட் டீ ஷர்ட்டும் அணிந்திருந்தான். சென்னையின் புகழ் பெற்ற ஒரு ஸ்பாவின் முன் கார் நின்றது.

“எல்லாரும் உள்ள போனா நாமளே தேவையில்லாம க்ரவுட கூட்டறது போல இருக்கும். நான் மட்டும் உள்ள

போறேன். ஒருத்தர் ரிஷப்ஷன் கிட்டயும் இன்னொருத்தர் வெளியவும் வெய்ட் பண்ணுங்க!” என்றவள் கூலர்ஸ் தொப்பியோடு இறங்கிய ஜோனாவோடு உள்ளே நுழைந்தாள்.

ஏற்கனவே போன் செய்து அப்பாயிண்ட்மேண்ட் வாங்கி இருந்ததால் ஸ்ட்ரேய்ட்டாக ரூமுக்கு அழைத்துப் போய் விட்டார்கள் இருவரையும். ஹேர் க்ரூமிங் பகுதி அது. வெளிச்சமாகவும், வாசனை மெழுகுவர்த்திகள் கொளுத்தப்பட்டு வாசமாகவும் இருந்தது அந்த அறை. நாற்காலியில் ஜோனாவை அமர்த்தி, கொஞ்சம் தோளைத் தாண்டி

வளர்ந்திருந்த முடியை வெட்டி, தலைக்கு மசாஜ் செய்து, பின் ஷாம்பு போட்டுக் கழுவி செரும் எல்லாம் போட்டு பளபளக்க வைத்தனர் அவன் தலை முடியை. அமைதியாக எல்லாவற்றையும் பார்த்தப்படி நின்றிருந்தாள் ஜீவா.

அதன் பிறகு இன்னொரு அறைக்கு அழைத்து செல்லப்பட்டான் ஜோனா. அது நக பராமரிப்பு பகுதி. கைகளுக்கு ஒன்றும் வேண்டாம் என மறுத்தவன் கால்களுக்கு மட்டும் பெடிக்கியூர் செய்துக் கொண்டான். அருகில் நின்றிருந்தவளை கைப்பிடித்து

பக்கத்து நாற்காலியில் அமர்த்தியவன்,

“இவங்களுக்கும் செஞ்சு விடுங்க” என்றான்.

“நோ, நோ! எனக்கு இதெல்லாம் வேணா” என எழ முயன்றவளை கையைப் பிடித்து அழுத்தியவன்,

“சிட்!” என்றான்.

ஏற்கனவே வீட்டில் ஒரு சண்டை! இங்கேயும் இவர்களுக்கு காட்சிப் பொருளாய் இருக்க வேண்டாமென

அமர்ந்துக் கொண்டாள் ஜீவா. இதைப் போல் எல்லாம் அவள் வாழ் நாளில் செய்துக் கொண்டதேயில்லை.

கால்களை சுத்தப்படுத்தி, நக இடுக்குகளில் இருக்கும் அழுக்கை வெளியேற்றி, அழகாய் நகத்தை வெட்டி, பாதத்தில் இருக்கும் டெட் செல்களை தேய்த்து எடுத்து, இதமாக லோஷன் பூசி மசாஜும் செய்து விட்டார்கள்.

“நம்ம உடம்புல கால் தான் ரொம்ப முக்கியமான பாகம். உடல் பாரத்தை சுமக்கற கால்களை நாமும் டேக் கேர் பண்ணிக்கனும்!” என சொல்லியவன்

ரிலேக்ஷாக சாய்ந்து அமர்ந்துக் கொண்டான். ஆனாலும் அவள் கையைப் பிடித்தப் பிடியை மட்டும் விடவில்லை அவன்.

ஜீவாவின் கண்கள் அடிக்கடி அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் நகச் சாயங்களைத் தொட்டு தொட்டு மீள்வதைக் கண்டவனுக்கு மெல்லிய புன்னகை அரும்பியது.

“என்ன கலர் வேணும்?” என கேட்டான்.

ஒரு கணம் தயங்கியவள்,

“எல்லாமே நல்லாருக்கு” என சொன்னாள்.

“இவங்களுக்கு லாலிபாப் டிசைன் செஞ்சிடுங்க” என ஜீவாவுக்கு நியமிக்கப்பட்டப் பெண்ணிடம் கேட்டுக் கொண்டான் ஜோனா.

சுழலைப் போல நிறைய வர்ணக் கலவைக் கொண்டு லாலிபாப் டிசைனில் ஜீவாவின் கால் நகங்களுக்கு நெயில் பாலீஷ் பூசப்பட்டது. அவளையே கவனித்துக் கொண்டிருந்தவனுக்கு அவளது

கண்களின் பளபளப்பும், உதட்டோரம் அரும்பிய சின்ன சிரிப்பும் அவ்வளவு ஆனந்தத்தைக் கொடுத்தன.

“என்னால முடிஞ்ச அளவுக்கு நீ மிஸ் பண்ணத எல்லாம் திரும்பக் குடுப்பேன் மூலான்” என முணுமுணுத்துக் கொண்டான் ஜோனா.

“கைக்கும் போட்டுக்கறியா ஜீவா?” என கேட்க வேண்டாமென மறுத்து விட்டாள் அவள்.

வேலை பாட்டிற்கு நடக்க, இவர்களுக்கு இஞ்சி போட்ட மூலிகை

பாணமும் வழங்கப்பட்டது.
ஜீவாவுக்கு காலில் போட்ட பாலீஷ் காய்வதற்கு ஒரு மிசினைத் தட்டி விட்டவர்கள், அரை மணி நேரம் கழித்து வருகிறோம் என இவர்களை தனிமையில் விட்டு விட்டுப் போனார்கள்.

பிண்ணனியில் ஒலித்த மைனஸ் ஒன்(குரல் இல்லாத பாட்டுக்களின் இசை வடிவம் மட்டும்) இசை இனிமையாய் தாலாட்ட, ஏசி இதமாய் குளிரூட்ட, ஜோனாவின் அருகாமை இதமாய் மனம் வருட, இத்தனை நாள் உறங்கியும் உறங்காமலும் தவித்த ஜீவா, நிம்மதியாய் தூங்கிப் போனாள்.

அருகே நெருங்கி அவள் தலையை தன் தோள் மேல் சாய்த்துக் கொண்டான் ஜோனா.

“நோ” என முணுமுணுத்தவளை,

“ஷ்!!!! கோ பேக் டூ ஸ்லீப் மூலான்” என சமாதானப்படுத்தினான்.

அரை மணி நேரம் கழித்து வந்தப் பெண்களை, இனி தான் அழைக்கும் போது மட்டும் வந்தால் போதும் என மெல்லிய குரலில் சொல்லி அனுப்பியவன், அவள் தலை மேல்

தன் தலை வைத்து கண்களை மூடிக் கொண்டான்.

பிரிவு துயரில் உறக்கம் இன்றி தவித்த காதல் புறாக்கள் இரண்டும், இடம் பொருள் ஏவல் மறந்து, தன் ஜோடி கைக்கெட்டும் தூரம்தான் இருக்கிறது எனும் மன நிம்மதியோடு துயில் கொண்டன.

## அத்தியாயம் 14

தமிழ் ராக்கர்ஸில், டெலிகிராமில் டவுன்லோடி இரண்டரை மணி நேரம் அமர்ந்துப் பார்த்து விட்டு,

“படம் மொக்கை மச்சி! டைரக்டர் சொதப்பி வச்சிருக்கான். ஆரம்பிச்சதுல இருந்து படம் முடியற வரைக்கும் ஹீரோ கண்ணீரைப் புழிஞ்சி விடறான். அவன் விட்ட கண்ணீர வயலு பக்கம் திருப்பி விட்ருந்தா முப்போகம் விளைஞ்சிருக்கும். ஹீரோயின் நடிச்சிருக்காளா, இல்ல அவ இடுப்பு நடிச்சிருக்கான்னு நமக்கே சந்தேகமா இருக்கு. அவ மூஞ்ச விட்டுட்டு இடுப்ப மட்டும் தான் போக்கஸ் பண்ணிருக்காங்க. மியூசிக் காதுல ஈயத்தைக் காச்சி ஊத்துன மாதிரி டண்டணக்க, டொண்டனக்கான்னு

கன்றாவியா இருக்கு. சினிமாட்டாகிராப்பி படு கேவலம்! மொத்தத்துல இந்தப் படம் பார்த்ததுக்கு பதிலா சரக்கடிச்சுட்டு கவுந்துப் படுத்துருக்கலாம். டோட்டல் வேஸ்ட்!" என சொல்லி கடந்துப் போய் விடுவர் பலர்.

நெஞ்சுப் பொறுக்குதில்லையே இந்த நிலைக் கெட்ட டைரக்டரை நினைத்து விட்டால் என பொங்கி எழுந்து அக்கு வேறு ஆணி வேறாக பேஸ்புக், ட்வீட்டர், என பார்த்தப் படத்தை சும்மா கிழியென கிழித்து தொங்க விட்டு மனதை ஆற்றிக் கொள்வார்கள் சிலர்.

அந்த இரண்டரை மணி நேரத்துக்கு திரைத்துறையினர் எவ்வளவு உழைப்பைப் போடுகிறார்கள் என கூட இருந்து பார்த்துக் கொண்டிருக்கும் ஜீவாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. படத்தில் பணியாற்றப் போகும் கேமராமேனில் இருந்து க்ளாப் அடிக்கும் ஆள் வரை தேர்ந்தெடுப்பது, கதை டிஸ்கஷன், பாடல் தெரிவு, கதை வசனம், பப்ளிசிட்டி, மக்கள் தொடர்பு, பட்ஜேட், லோகேஷன் பார்ப்பது, காஸ்டியூம், மேக்கப், பிண்ணனி குரல், காஸ்டிங், கேட்டரிங் என அனுமார் வால் போல் நீண்டுக் கொண்டே போனது லிஸ்ட்.

இந்த வேலையெல்லாம் முடித்தப் பிறகே படத்துக்கு பூஜை போட்டு, நாயகன் நாயகியை அறிமுகப் படுத்தலாம் என முடிவெடுத்திருந்தான் தீரன். தனக்காக எழுதி இருந்த கதையை டோட்டலாக மாற்றி ஜோனாவுக்கு ஏற்றது போல எழுதி முடித்திருந்தான் அவன்.

தினமும் நிறைய தமிழ் படங்களைப் பார்த்து, ரெபரேன்ஸ் எடுத்துக் கொண்டிருந்த ஜோனா, அதில் வரும் வசனங்களை தங்கள் பட வசனம் என சொல்லி ஜீவாவை வம்பிழுத்து வைத்திருக்க, தனிமையில் தீரனைப்

பிடித்தவள் வாங்கு வாங்கென்று வாங்கி விட்டாள்.

“என்ன நினைச்சிருக்க உன் மனசுல? ஜோனாவுக்கு நம்ம ஊரப்பத்தி, மக்களப் பத்தி, கல்ச்சரப் பத்தி ஒரு மண்ணாங்கட்டியும் தெரியாது! அத அட்வாண்டேஜா எடுத்துக்கிட்டு அவர திரையில மொக்கை பீஸா காட்டுன, என் கையாலத்தான் உனக்கு கருமாதி! ஜோனாவ வச்சி ஒழுங்கு மரியாதையா டீசண்டா ஒரு படம் எடுக்கற! ஒரே படம்தான். அதுக்கு அப்புறம் அவருக்கே இங்க சலிச்சிடும். கிளம்பி போய்டுவாரு, இல்ல நாம போக வைக்கனும்! அத

விட்டுட்டு அவர அட்டையா ஒட்டிட்டு திரியலாம்னு நெனைச்ச, ‘டைரக்டர் தீரனுக்கு துப்பாக்கி சூடு, கலங்கிப் போனது தமிழ்நாடு’ன்னு தலைப்பு செய்தியா ஆகிடுவா பார்த்துக்கோ!”

“பார்டா! வசனம்லாம் நல்லா இருக்கே! பேசாம நம்ம படத்துக்கு வசனகர்த்தாவா வந்துடுறீங்களா மேடம்?” என நக்கலடித்தவனை இவள் கோபத்துடன் நெருங்க, ஓடிப்போய் சோபாவின் பின்னால் நின்று கொண்டான் தீரன்.

“பேச்சு பேச்சா இருக்கும் போது வன்முறை கூடாது சிஸ்டர்! உங்கள

தங்கச்சி போஸ்ட்டுக்கு ப்ரோமோட் பண்ணலாம்னு தீவிர சிந்தனையில இருக்கேன் நான். இப்படி சில்லியா நடந்து அந்த போஸ்டிங்க தவற விட்டுறாதீங்க! போனா வராது பொழுது போனா கிடைக்காது! இந்த தீரன் ஒரு பொண்ண தங்கச்சியா பார்க்கறான்னா, அந்த பொண்ணு அசாதாரணமானவளா மட்டும் இல்ல அவதாரமாவும் இருக்கனும்! இன்னைல இருந்து இந்த தீரா பாய்க்கு நீ தான் பெஹேன்! எல்லாருக்கும் சட்டுன்னு இந்தப் பதவி கிடைச்சிறாது! நீ ரொம்ப குடுத்து..” வச்சவ என முடிப்பதற்குள் சோபாவில் கிடக்கும் குட்டித்

தலையணை அவன் முகத்தில் மோதி கீழே விழுந்தது.

“சீரியசா பேசிட்டு இருக்கறப்போ காமெடி பண்ணாதே!” என எரிச்சலாக சொன்னாள் ஜீவா.

“என் வாழ்க்கையில இப்பத்தான் நான் சீரியசாவே இருக்கேன் சிஸ்டர். கேவலமா தூக்கிப் போட்டு பந்தாடனவங்க முன்னுக்கு, எனக்குன்னு ஒரு அங்கீகாரம் குடுத்துருக்காரு பாஸ். அப்படிப் பட்டவர உச்சம் தொட வைக்கற வரைக்கும் ஓய மாட்டான் இந்த தீரன். அவர் அறிமுகமாகுற இந்தப் படத்த எப்பாடு பட்டாச்சும் ஹிட்

அடிக்க வைக்கனும்னு வெறியில ராப்பகலா உழைக்கிறேன் நான்” என்றவனின் குரல் கரகரத்திருந்தது.

“நீ அழிக்கறதுக்காக வந்த அசுரன்னா, நான் காக்கறதுக்காக வந்துருக்கற ஈஸ்வரன்டா” என ஸ்லாங்காக கேட்ட சத்தத்தில் இவர்கள் இருவரும் திரும்பிப் பார்க்க, கையை ஸ்டைலாக ஆட்டியபப்படியே வந்துக் கொண்டிருந்தான் ஜோனா.

“அது வேற ஒன்னும் இல்ல, நம்ம ‘வைட்டு ஸ்டார்’ நேத்து முழுக்க ‘லிட்டில் சூப்பர் ஸ்டார்’ படம் பார்த்த

எபெக்டு” என ஜீவாவுக்கு மட்டும் கேட்கும் படி முணுமுணுத்தான் தீரன்.

அவர்களை நெருங்கியவன் முகம், ஜீவாவைப் பார்த்ததும் மலர்ந்துப் போனது. அன்று ஸ்பாவில் ஒட்டித் தூங்கிய சம்பவத்துக்குப் பிறகு, ஜோனாவின் அருகிலேயே இருந்தாலும், அவளது செயல்கள் எல்லாம் அவனை தூரமாக்கி நிறுத்தி வைத்தன.

“சார், ரெடியாகிட்டீங்கனா வெளிய வாங்க! நான் கார்ல வெய்ட் பண்ணறேன்!” என்றவள் விடுவிடுவென நடந்து விட்டாள்.

“இந்தப் பொண்ணுங்களே இப்படித்தான்டா! அவங்களுக்கு எதுனால பிடிக்கும் எதுனால பிடிக்காதுன்னு யாருக்குமே தெரியாது. ஆம்பளைங்களாம் பாவம்டா!” என வாசலுக்கு நடந்து விட்டவளைப் பார்த்துக் கொண்டே சொன்னான் ஜோனா.

“பாஸ், நான் எடுத்துக் குடுத்த சிம்பு படமெல்லாம் பார்த்து முடிச்சிட்டீங்க போல! வசனமெல்லாம் இந்த கலக்கு கலக்கறீங்க!”

தலையை ஆமோதிப்பாக ஆட்டியவன்,

“ஜீவாவுக்கும் முகத்துல மூக்கிருக்கு! எனக்கும் முகத்துல மூக்கிருக்கு! அப்போ இது லவ் தானே ஜெஸ்ஸி?” என நெஞ்சைக் வலது கையால் குத்தியபடியே கேட்டான்.

“உங்க ரெண்டு பேருக்கு மட்டும்தான் மூஞ்சில மூக்கிருக்கா! அப்போ மத்த பயலுங்களுக்கு எல்லாம் மூஞ்சில வெத்தலைப் பாக்கா இருக்கு? கடுப்ப கிளப்பாம வாங்க பாஸ்!” என ஜோனாவைக் கைப்பிடித்து வெளியே அழைத்துப் போனான் தீரன்.

இன்று மியூசிக் டைரக்டரைப் பார்க்க அவரது ஸ்டூடியோ செல்கிறார்கள். பட பூஜையின் போது, ஒரு பாடலை மட்டும் சிங்கிள் ட்ராக்காக வெளியிட முடிவு எடுத்திருந்தார்கள்.

இப்பொழுது திரை உலகை கலக்கிக் கொண்டிருக்கும் இளம் இசை அமைப்பாளரை இந்தப் படத்துக்காக புக் செய்திருந்தான் தீரன். ஹீரோ எண்ட்ரி சாங்கை ஜோனாவையும் அந்த இசை அமைப்பாளரையும் பாட வைத்து, அதை ரெக்கார்ட் செய்து பட பூசையின் போது உலகுக்கு காட்ட திட்டமிட்டிருந்தான். அதற்கான ஆயத்தப் பணிக்குத்தான் இப்பொழுது கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.

பாடிகார்ட்டுகள் அவர்கள் இருக்கையில் அமர்ந்திருக்க ஜோனாவின் வலப்புறம் ஜீவாவும், இடப்புறம் தீரனும் அமர்ந்திருந்தார்கள். சாலையின் குறுக்கே வந்து விட்ட ஒரு ஸ்கூட்டியால் திடீரென ப்ரேக் அடித்தார் ஓட்டுனர். தன் வலது கையை அவள் தோள் சுற்றிப் போட்டு பாதுகாப்பாய் பிடித்துக் கொண்டான் ஜோனா. ஜீவா ஒரு குலுங்கு குலுங்கி பட்டென ஜோனாவின் இடது கையைப் பற்றிக் கொண்டாள். மீண்டும் சுமூகமாக கார் நகர, தன் கையை இழுத்துக் கொண்டாள்

இவள். அவள் இவ்வளவு நேரம் பிடித்திருந்த கையை மேலே தூக்கி இப்படி அப்படி ஆட்டி,

“எனைத் தீண்டி விட்டாய்

திரி தூண்டி விட்டாய்

என்னை நானே தொலைத்து விட்டேன்” என கண்ணில் சிரிப்புடன் அவன் பாட, இவளுக்கும் சிரிப்பு வந்து தொலைத்தது. சிரிப்பை அவனுக்குக் காட்டாமல் மறு புறம் திரும்பிக் கொண்டாள் ஜீவா. பயணம் முழுக்க அவள் முகத்தையே பார்த்தப்படி வந்தான் ஜோனா.

மியூசிக் ஸ்டூடியோ வாசலில் முன்னும் பின்னும் பாடிகார்ட் வர அவன் பக்கத்திலேயே நடந்து வந்தாள் ஜீவா. ஸ்டூடியோ வெளியில் இருந்த சில இளசுகள் இவர்களைப் பார்த்து தங்களுக்குள்ளாக பேசிக் கொள்வதை கவனித்தப்படித்தான் உள்ளே நுழைந்தாள் ஜீவா. ரெக்கார்டிங் தியேட்டர் வெளியேவே மற்ற கார்ட்டுகளுடன் நின்று கொண்டவளை,

“உள்ள வாங்க ஜீவா” என அழைத்தான் ஜோனா.

“ஏற்கனவே உள்ள வந்துப் பார்த்துட்டேன் சார்! எந்தப் பிரச்சனையும் இல்ல! நாங்க வெளிய வேய்ட் செய்யறோம்” என மறுத்தாள் இவள்.

“பிரச்சனை எதுவும் வராதுன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்? அந்த மியூசிக் டைரக்டர் போடற மியூசிக் எனக்குப் பிடிக்காம போகலாம். இப்படி வேணா அப்படி போடுங்கன்னு நான் சொல்லலாம். அதுக்கு உங்க ஊர்ல நீ பெரிய இவன்னா, எங்க ஊர்ல நான் பெரிய இவன்னு அந்த ஆளு என் கூட சண்டைக்கு வரலாம். எனக்கு வேற கோபம் சட்டுன்னு

வந்துடும்! நான் மைக்க எடுத்து அவர் மேல வீசலாம். அவரும் கடுப்புல கீ போர்ட்ட என் மேல தூக்கி அடிக்கலாம். இதெல்லாம் நடக்காம என்னை பாதுகாக்கத் தானே நீங்க பாடிகார்ட்டா இருக்கீங்க. இப்ப உள்ள வர முடியாதுன்னா எப்படி?" என கேள்வி கேட்டவனை எல்லோர் முன்னும் முறைக்கக் கூட முடியவில்லை இவளால்.

"வாங்க" என பல்லைக் கடித்து சொன்னவள், ரெக்கார்டிங் ஸ்டூடியோ உள்ளே நுழைந்தாள்.

புத்தம் புதிய டெக்னோலோஜியால் நிறைந்திருந்தது அந்த இடம். கம்ப்யூட்டர்ஸ், பெரிய மீயூசிக்

சிஸ்டம்ஸ், எலெக்ட்ரிக் கீபோர்ட், உட்கார வசதியான சோபா என அழகாய் இருந்தது. தீரனோடு பேசிக் கொண்டிருந்த மியூசிக் டைரக்டர், உள்ளே நுழைந்த இருவரையும் பார்த்தார். சின்னப் பையனாக இருப்பதால் பார்த்தான் என சொல்ல வேண்டுமோ!

ஜோனாவை நெருங்கி கட்டிக் கொண்டவன்,

“டியூட்! உங்களோட பிக் ஃபேன் நானு. நீங்கத்தான் இந்தப் படத்துக்கு ஹீரோன்னு சொல்லவும் உடனே மியூசிக் போட ஒத்துக்கிட்டேன். ஐம்

சோ ஹெப்பி டூ வோர்க் வித் யூ" என சந்தோஷமாக சொன்னான்.

ஜோனாவும் சிரித்த முகமாக அவனைக் கட்டிக் கொண்டான். பக்கத்தில் நின்றிருந்தவளை கேள்வியாக பார்க்க,

"மை பாடிகார்ட், மிஸ் ஜீவா" என அறிமுகப்படுத்தினான் ஜோனா.

"ஓ, வாவ்! பொண்ணா!" என அவளை மேலிருந்து கீழ் வரைப் பார்த்தவனின் கண்கள் ஒளிர்ந்தன.

“நைஸ் டூ மீட் யூ!” என ஜீவாவை அணைக்கப் போனவனை, மீண்டும் ஜோனாவே அணைத்துக் கொண்டான்.

“படி(buddy), இவங்க என்னோட தீவிரவாத ஃபேன்! என் பாட்டத் தவிர மத்த யாரோட மியூசிக்கும் கேக்க மாட்டாங்க. அதோட யாரும் தொட்டுப் பேசனா பிடிக்காது அவங்களுக்கு! சோ கொஞ்சம் சோசியல் டிஸ்டன்ஸ் மேய்ண்டேய்ன் பண்ணுங்க! இடுப்பு பின்னாடி துப்பாக்கி வேற வச்சிருக்காங்க! எதுக்கு நமக்கு தேவையில்லாத

ரிஸ்க்!” என அவன் காதில் மட்டும் கேட்கும்படி சொன்னான் ஜோனா.

“ஓகே, ஓகே!” என கையைத் தூக்கி சரண்டர் என்பது போல காட்டியவன், தனது நாற்காலியில் போய் அமர்ந்துக் கொண்டான்.

ஜீவாவை அங்கிருந்த ஒரு சோபாவில் அமர வைத்த ஜோனா, அதன் பிறகு தீரனுடனும் மியூசிக் டைரக்டருடனும் ஐக்கியமாகி விட்டான்.

இந்தப் பாடலுக்கான வரிகளை ஏற்கனவே பிரபலமான பாடலாசிரியர்

ஒருவர் எழுதி தந்திருந்தார். அதற்கான மியூசிக் போட்டு, பாடி, ரெக்கார்ட் செய்வதுதான் அன்றைய நிகழ்ச்சி நிரல். இடை இடையே காபி, ஜீஸ், பலகாரம் என வரும் போது நிறுத்தி ஓய்வெடுத்து விட்டு மறுபடியும் வேலையைத் தொடர்ந்தார்கள்.

ஜீவாவின் பார்வை அவள் கட்டுப்பாட்டையும் மீறி ஜோனாவின் மேலேயே போய் நிலைத்தது. அவனது தமிழ் உச்சரிப்பைத் தீரன் திருத்தியபடி இருக்க, மெல்லிய சிரிப்புடன் அதை மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்தவனை கண்

கொட்டாமல் பார்த்திருந்தாள் இவள். கையில் இருந்த லிரிக்ஸ் பேப்பரை பேனாவால் தட்டியபடி, ஒற்றைப் புருவத்தை ஏற்றி இறக்கி, உதட்டை ஈரப்படுத்தி, காலை அசைத்தப்படி தனது வேலையில் மூழ்கி இருந்தவனை கீழ்கண்ணால் பார்த்து ரசித்திருந்தாள் மங்கை.

எல்லோருக்கும் திருப்தி ஆனதும், பாடலை ரெக்கார்ட் செய்ய ஆரம்பித்தார்கள். அந்த இளம் இசை அமைப்பாளரும், ஜோனாவும் மாற்றி மாற்றிப் பாட அதை வீடியோவும் எடுத்தார்கள். இதெல்லாம் முடிய கிட்டத்தட்ட நான்கு மணி நேரம்

ஆனது. அதன் பிறகும் அடுத்து எடுக்க வேண்டிய பாடல்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“சார், இன்னும் நாலு பாட்டு இருக்கு. ஏற்கனவே நாம பேசனப்படி அதுல ஒரு பாட்ட நம்ம ஜோனா சாரே லிரிக் எழுதி, டியூன் போட்டு, பாடவும் செய்வாரு! மத்ததெல்லாம் நாம பூஜை முடிஞ்சதும் பார்த்துக்கலாம். இப்போ நாங்க கிளம்பறோம்” என எழுந்தான் தீரன்.

“பாய் படி!” என ஜோனாவும் இளம் இசையைக் கட்டிப் பிடித்து விடைப் பெற்றான்.

“லெட்ஸ் கோ!” என ஜீவாவை அழைக்க அவளோ தயங்கி நின்றாள்.

“என்னாச்சு ஜீவா?”

“ஆட்டோகிராப் வேணும்!”

“வீட்டுக்குப் போய் போட்டுத் தரேன்” என ஜோனா சொல்ல,

“உங்களது இல்ல! சாரோட ஆட்டோகிராப்” என மியூசிக் டைரக்டரை காட்டினாள் ஜீவா.

“அசிங்கப்பட்டான் ஆட்டோக்காரன்!” என முணுமுணுத்தான் தீரன்.

“ஓ, சுயூர்!” என சந்தோஷமாக தனது சிடி ஒன்றில் சைன் செய்து, ஜோனாவின் கண் முன்னே, ஜீவாவை மெல்ல அணைத்து சிடியைக் கொடுத்தான் இளம் இசையமைப்பாளன்.

கடுகடுவென முகத்தை வைத்துக் கொண்டு வெளியேறினான் ஜோனா! அவன் அருகே நடந்த ஜீவாவைப் பார்த்து,

“என்னோட தீவிர ஃபேன்னு சொன்ன!” என பல்லைக் கடித்தப்படி கேட்டான் ஜோனா.

“உங்களோட தீவிர ஃபேன் தான். ஆனா உங்களுக்கு மட்டுமே தீவிர ஃபேன் இல்ல!” என்றாள் ஜீவா.

“அதாவது பாஸ், உங்களுக்கு ஹார்ட் போட்டா, மத்தவங்களுக்கு லைக், ஹாஹா, கேர், வாவ் இப்படிலாம் போட கூடாதுன்னு எந்த சட்டத்துல இருக்குன்னு கேக்கறாங்க நம்ம மேடம்!”

“ஷட் அப் தீர்!”

பேசியபடியே ஸ்டூடியோவை விட்டு வெளியேறும் இடத்துக்கு வந்திருந்தார்கள்.

“ஒரு ஆள் முன்னுக்கு வாங்க. இன்னொருத்தர் எங்க பின்னால வாங்க. தீரான் நீங்க ரைட்ல வாங்க! நான் லெப்ட்ல நிக்கறேன்! நாம் உள்ள போன போதே, சிலர் ஜோனா சாரை கவனிச்சிட்டாங்க. இந்நேரம் கூட்டம் கூடி இருக்கும். நான் ட்ரைவர கார எடுத்துட்டு கிட்ட வர சொல்லி மேசேஜ் போட்டுட்டேன். பேக் டோர் வேற இல்ல இந்த இடத்துல. இல்லைனா பின்னாடி

வழியா போயிருக்கலாம்" என்றவள் பாடிகார்ட் அவதாரம் எடுத்திருந்தாள்.

ஜோனாவை நடுவே விட்டு அவனுக்கு அரணைப் போல நால்வரும் சுற்றிக் கொண்டார்கள். கதவைத் திறக்க, பத்து பதினைந்து இளையர்கள் போனோடு ஆஜராகி இருந்தனர். அவர்கள் நெருங்கி வர, வேகமாக நடையை எட்டிப் போட்டார்கள் இவர்கள்.

"ஜோனா! ஜோனா! ஓன் செல்பி ப்ளீஸ்! ஓன் ஆட்டோகிராப்" என கூச்சல் போட்டனர் அவர்கள்.

சுற்றி மூன்று திடகாத்திரமான ஆண்கள் இருக்க, சின்னதாக இருந்த ஜீவாவைத் தள்ளி விட்டு விட்டு அவனை நெருங்கலாம் என சிலர் இவள் புறம் வந்தனர். பட்டென ஜீவாவை இழுத்து தனக்கு முன் நிறுத்திக் கொண்டான் ஜோனா.

“ஓகே, ஓகே ஒன்லி ஓன்!” என சொன்ன ஜோனா, தன் நடையை நிறுத்தினான்.

“ஆர் யூ க்ரேஷி? போலாம் ஜோனா! ரிஸ்க் வேணா” என்றாள் ஜீவா.

“ஸ்மால் கிட்ஸ் ஜீவா! ஒரு செல்பிதானே, நோ ஹார்ம்!” என்றவன் அங்கிருந்த ஒருவனின் போனை வாங்கி சற்று தள்ளி எல்லோரையும் நிற்க சொல்லி, தானே ஒரு செல்பியைக் கிளிக்கிக் கொடுத்தான்.

“பாய் படிஸ்” என்றவன் பறக்கும் முத்தம் ஒன்றையும் கொடுத்து விட்டு வேகமாய் நடந்தான்.

“ஏய் போட்டோவ எனக்கு வாட்ஸாப் பண்ணு! எனக்கும்! எனக்கும்!” என போனின் உரிமையாளனை அவர்கள்

**எல்லோரும் சூழ்ந்து கொள்ள இவர்கள் காரில் வேகமாக ஏறிக் கொண்டார்கள்.**

**அமர்ந்ததும் ஜீவாவின் இடது புற இடுப்பைத் தடவிக் கொடுக்க ஆரம்பித்தான் ஜோனா.**

**“என்ன செய்யற நீ? கைய எடு!” என சின்னக் குரலில் கண்டித்தாள் ஜீவா.**

**“பேசாம இரு!” என இவனும் சின்னக் குரலிலே கடிந்துக் கொண்டான்.**

“கைய எடு ஜோனா!” என கோபமான குரலில் இவள் சொல்ல, கையை விலக்கிக் கொண்டவன்,

“ஹாஸ்பிட்டல் போகலாம்!” என்றான்.

“நோ! வீட்டுக்குப் போகலாம்! உங்கள விட்டுட்டு ஆபிசுக்கு போகனும்! வேலை நிறைய பெண்டிங்ல இருக்கு”

“ஜீவா ப்ளிஸ்!”

“நோ” என சொன்னவள் ஜன்னல் புறம் திரும்பிக் கொண்டாள்.

அதன் பிறகு அமைதியாக வந்தாலும், அவன் முகம் இறுக்கமாகவே இருந்தது. வீட்டை அடைந்ததும் இவள் கிளம்பப் போக,

“உங்களோட செக்கியூரிட்டி சர்விஸோட இம்ப்ரூவ்மெண்ட் பத்தி கொஞ்சம் பேசனும் மிஸ் ஜீவா! என்னோட மியூசிக் ரூமுக்கு வாங்க!” என எல்லோர் முன்னும் சொல்லி விட்டு விடுவிடுவென படியேறினான் இவன்.

“இசை அழைக்கிறது! செல்லுங்கள் தமக்கையே!” என கிண்டல் செய்தான் தீரன்.

“செறுப்பு!” என தீரனைத் திட்டியபடியே மாடி ஏறினாள் ஜீவா.

ரூம் கதவைத் திறந்து இவள் உள்ளே வர, பட்டென இழுத்து அவள் ஷேர்டைத் தூக்கிப் பார்த்தான் ஜோனா. இடது புற இடுப்புப் பகுதியில் சிவந்துப் போய் இருந்தது.

இவர்களை நெருங்கிய குரூப்பில் இருந்த ஒருத்தியின் கை முட்டி ஜீவாவின் இடுப்பைப் பதம் பார்த்திருந்தது. அதைப் பார்த்தவன் சட்டென ஜீவாவைத் தன் முன் புறம்

**இழுத்துக் கொண்டிருந்தான். அவர்கள் கேட்டது கிடைக்காத வரை சின்னவர்கள் இன்னும் இன்னும் முயலுவார்கள் என்றுதான் செல்பி எடுத்துக் கொடுத்தான் ஜோனா. இளங்கன்று பயம் அறியாது அல்லவா!**

**“வலிக்குதா ஜீவா?” என கேட்டவன், சிவந்திருந்த இடத்தை மென்மையாக தடவிக் கொடுத்தான்.**

**பட்டென அவன் கையைத் தட்டி விட்டவள்,**

“லேசான அடி தான். ரெண்டு நாளுல சிவப்பு மறைஞ்சிடும். வேற எதுவும் இல்லைனா, நான் கெளம்பறேன் ஜோனா சார்” என்றாள்.

“என்னை விட்டு கிளம்பறதுலேயே குறியா இருக்க நீ ஜீவா! ஃபைன். போ! கிளம்பிப் போ! இனிமே என் பக்கமே வராத நீ!” என்றவன் அந்த அறையை விட்டு வெளியேறி இருந்தான்.

தன்னைக் கடந்துப் போனவனை இமைக்காது பார்த்திருந்தாள் ஜீவா. ரூமில் இருந்து வெளியே சென்றவன், மீண்டும் வேக நடையுடன் உள்ளே

வந்தான். அவள் அருகே வந்து, இடுப்பைத் தடவிக் கொடுத்தவன்,

“வலிக்குதா?” என மறுபடியும் கேட்டான்.

“என்னை யாரோ கிளம்பிப் போக சொன்னதா ஞாபகம்!”

“அது நான் இல்ல, அலெக்சாண்டர் தெ மடையன்” என சொன்னவனின் கை இன்னும் அவள் இடுப்பில் தான் இருந்தது.

“ஜோனா!”

“ஹ்ம்ம்!” என்றவன் அவள் தலையைத் தன் நெஞ்சில் வைத்து அழுத்தி இருந்தான்.

அசையாது அப்படியே இருந்தவள், “உனக்கு நெறைய கேர்ல்ப்ரேண்ட் இருக்காங்க தானே?”

“இருந்தாங்க!”

“சரி இருந்தாங்க! ஒவ்வொருத்தர் கூடவும் பழகி அவங்க சலிச்சதும் நெக்ஸ்ட் நெக்ஸ்ட்னு போய் கிட்டேத்தானே இருந்த?”

எங்கே வருகிறாள் என புரியாமல்,

“ஹ்ம்ம்!” என்றான் ஜோனா.

“நானும் சலிச்சிட்டா, நெக்ஸ்ட்னு போய்டுவத்தானே? நான் உன் கூடவே கொஞ்ச நாள் இருக்கேன்! என் மேல உள்ள ஆசைப் போனதும் கிளம்பி போய்டறியா?” என அவனை நிமிர்ந்துப் பார்த்துக் கேட்டாள் ஜீவா.

கண்களை மூடித் திறந்தவன், மெல்ல அவளைத் தன் பிடியில் இருந்து விலக்கினான்.

“ஒரு பொண்ணு குடுக்கற உடல் சுகம் சலிச்சுப் போயிடலாம் ஜீவா! அம்மா குடுக்கற உயிர் பாசம் என்னைக்கும் சலிச்சுப் போயிடாது! நீ எனக்கு அம்மா ஜீவா!” என்றவன் பாராங்கல்லாய் கணத்த கால்களை எட்டிப் போட்டு அந்த அறையை விட்டு வெளியேறி இருந்தான்.

“நீ எனக்கு அம்மா ஜீவா!!!!!!!!!!!!!” என அவன் உதிர்த்த வார்த்தைகள் ஜீவாவின் காதில் மீண்டும் மீண்டும் ஒலித்தன.

## அத்தியாயம் 15

**“இந்தா ஜீவா, டேக் இட்!” என தன் கையில் இருந்த ஓர் அழகான என்வலப்பை ஜீவாவிடம் நீட்டினான் ஜோனா.**

**“என்னதிது?”**

**“லவ் லெட்டர்”**

**“வாட்???”**

**“கடிதம்…காதல் கடிதம்!”**

கண்கள் ஒளிர முகம் மலர வாங்கிக் கொண்டவள்,

“சில்லியா பிஹேவ் பண்ணாதிங்க மிஸ்டர் ஜோனா!” என அதட்டவும் செய்தாள்.

“எக்ஸ்கியூஸ் மீ! என்ன சில்லியா பிஹேவ் பண்ணறாங்க? இது படத்துல என் ஹீரோயினுக்கு நான் குடுக்கப் போற காதல் கடிதம். அந்த லெட்டர ஹீரோயின் திறக்கும் போது..”

“வெய்ட்டோ ஜீ! இதெல்லாம் ஒத்துக்கவே முடியாது! இந்த

படத்துக்கு நான் தான் டைரக்டரு! எந்த சீனா இருந்தாலும் நான் தான் சொல்லுவேன்!” என வந்து நின்றான் தீரன்.

அப்பொழுதுதான் அவர்கள் படத்துக்கு ஹீரோவுக்காக பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டிருக்கும் பிரபலமான காஸ்டியூம் டிசைனரைப் பார்த்து ஃபிட்டிங் எல்லாம் முடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்திருந்தார்கள். பாடிகார்ட் கடமையை முடித்து, தனது ஆபிசுக்கு கிளம்பிக் கொண்டிருந்தவளை நிறுத்தி வைத்து இந்த அக்கப்போர் போய் கொண்டிருந்தது. இதற்கு மேல்

வீட்டில் தான் அவனது நேரம் என்பதால் மற்ற இரு கார்ட்களும் வீட்டை சுற்றி நடந்தபடி இருக்க, வாசலிலே விடை பெற முயன்ற ஜீவாவை உள்ளே அழைத்து வந்து லெட்டரை நீட்டி இருந்தான் ஜோனா.

தீரனைப் பார்த்து முறைத்தவள்,

“எனக்கு இந்தப் படத்தப் பத்தியோ அதுல வர மொக்க சீனைப் பத்தியோ எதுவும் தெரிஞ்சுக்க வேண்டிய அவசியம் இல்ல. நான் கிளம்பறேன்” என்றாள்.

“வேணாம்னாலும் நான் சொல்லித்தான் ஆவேன் தங்காய்! படத்துல உள்ள சீன்லயே இது தான்

க்ளாப்ஸ் அள்ளித் தர போற சீன். மத்தவங்க தியேட்டர்ல பார்க்கற முன்னமே லைவ்வா என் வாய் வழியா தெரிஞ்சுக்க நீ குடுத்து வச்சிருக்கனும்” என்றவன், பாரதிராஜாவை மாதிரி கையை கேமரா ப்ரேமில் பார்ப்பது போல வைத்து,

“என் இனிய தமிழ் மக்களே! நான் உங்கள் நேசத்திற்குரிய தீரன் பேசுகிறேன்!” என ஆரம்பித்தான் தீரன்.

“அடைச்சை, சகிக்கல! பாரதிராஜா டயலோக்கா ஒரு பரதேசி ராஜா சொல்லற மாதிரி படு கேவலமா

இருக்கு. ஒழுங்கா சொல்றதுனா சொல்லு! இல்லைனா நான் கௌம்பிப் போய்ட்டே இருப்பேன்” என குரலை உயர்த்தினாள் ஜீவா.

“ப்ளீஸ் தீரா! நார்மல் மோட்ல கதை சொல்லு! என் கிட்ட காட்டற குரங்கு வித்தைலாம் ஜீவா மேடம் கிட்ட கட்டாதே! கடுப்பாகி காட்டு காட்டுன்னு காட்டிட போறாங்க!” என தீரனை ஜீவாவோடு சேர்ந்து டேமேஜ் ஆக்கினான் ஜோனா.

“எதே குரங்கு வித்தையா? உசுர குடுத்து இமோஷனோட கதை சொல்றவனை குரளி வித்தை

**காட்டறவன் கணக்கா கலாய்க்கறது கடவுளுக்கே அடுக்காது பாஸ்! அதெப்படி என்னை கலாய்க்கறதுன்னா மட்டும் நீங்க ரெண்டு பேரும் ஒன்னா சேர்ந்திடுறீங்க! இதெல்லாம் நல்லா இல்ல சொல்லிட்டேன்!”**

**ஜீவாவும் ஜோனாவும் ஒருவரை ஒருவர் திரும்பிப் பார்த்து புன்னகைத்துக் கொண்டார்கள். தன்னை மீறி புன்னகைத்து விட்டவள், சட்டென முகத்தை தீரன் புறம் திருப்பினாள்.**

“சீக்கிரம் சொல்லுங்க” என்றவள் கையில் கட்டி இருந்த கடிகாரத்தைக் காட்டி,

“டென் மினிட்ஸ் தான் டைம் குடுப்பேன்!” என முடித்தாள்.

குரலை கணைத்து சரி செய்தவன்,

“அது ஒரு அழகான கிராமம்! பச்சை பசேல்னு வயல்வெளி இல்லைனாலும், காஞ்சு கருவாடா போன புல்வெளி இருந்துச்சு. சலசலன்னு ஓடற அருவி இல்லைனாலும், ஊருக்கு

வரப்பயலுங்க மேல கழிஞ்சு விடற குருவிங்க இருந்துச்சு. வாசத்த அள்ளித் தரும் சந்தனக் கட்டை இல்லைனாலும், பாசத்த அள்ளி தர நாலு நாட்டுக்கட்டைங்க இருந்துச்சு. இளசுங்க ஜோடியா ஒதுங்க பெரிய பெரிய கற்பாறை இல்லைனாலும்..”

“உன் மண்டைய பொளக்க கடப்பாரை இருந்துச்சு” என முடித்து வைத்தவள், வாசலை நோக்கி நடையை எட்டிப் போட்டாள்.

ஜோனாவுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. கண்கள் பளபளக்க,

கோபமாய் செல்லும் ஜீவாவையே பார்த்திருந்தான். என்ன கோபமாக இருந்தாலும் கையில் அவன் கொடுத்த என்வலப்பை பத்திரமாக வைத்திருந்தாள்.

குடுகுடுவென ஓடி அவள் கையைப் பற்றிக் கொண்ட தீரன்,

“இன்னும் அஞ்சு நிமிஷம் இருக்கு நீ குடுத்த டைம் முடிய” என அழைத்து வந்தான்.

அவளை தீரன் சோபாவில் அமர வைக்க, அதற்காகவே காத்திருந்தது

போல அவள் பக்கத்தில் நெருங்கி அமர்ந்துக் கொண்டான் ஜோனா.

மீண்டும் ஆரம்பித்தது கதை (சொ/கொ)ல்லும் படலம்.

“அந்த ஊருல ஆடி மாச திருவிழா. அதுக்கு வெளிநாட்டுல இருந்து வராரு நம்ம ஹீரோ சார். சின்ன வயசுல பாத்துப் பழகன மூக்கொழுகி, இப்ப மூக்குல ஒழுகுறது நின்னுட்டாலும் ஹீரோவுக்கு அதெல்லாம் இன்னும் தெரியாது! சொத்து விஷயத்துல குடும்பம் பகையாகிப் போச்சு. ஹீரோவும் அவள பார்த்து வருஷம் பல ஆச்சு.

அந்த அத்தை மகளுக்காக ஹீரோ நெஞ்சுகுள்ள காதல் கோட்டை கட்டி வச்சி, அதை அப்படியே லெட்டருல மடிச்சு வச்சு எடுத்துட்டு வராரு. ‘எங்கே அவள் என்றே மனம் தேடுதே ஆவலால் ஓடிவா’ன்னு மனசுல பாடிக்கிட்டே அந்த திருவிழா கூட்டத்த அலச, தூரமா அழகு மயில் ஒன்னு ஆடி அசைஞ்சி நடந்து வருது! மஞ்ச தாவணி காத்துல அசைய, ரெத்த சிகப்புல பாவாடை சட்டை போட்டு தேவதையா வரா அந்த அத்தை பொண்ணு! ஹீரோ அவ அழகுல ஸ்தம்பிச்சு நிக்க, சுத்தி நடக்கற ஆக்டிவிட்டிஸ் எல்லாம் அப்படியே ஸ்தம்பிச்சு நிக்கிது!

அதான்மா ராட்டினம் சுத்தாம நிக்கிது, வளையல் கடைக்காரன் பொண்ணு கையைப் புடிச்சுட்டு அசையாம நிக்கறான், நடந்து போற மக்கள் எல்லாம் தூக்குன காலோட அப்படியே நிக்கறாங்க. அத்த பொண்ணும் ஹீரோவும் மட்டும் தான் அசையறாங்க. ஹீரோ மெல்ல நடந்துப் போய் விழி விரிச்சுப் பார்க்கற அவ கையில லெட்டர குடுத்துட்டு,

“‘ஒரு கடிதம் எழுதினேன், என் உயிர அனுப்பினேன், காதலி என்னைக் காதலி’ன்னு சொல்லி நெத்தியில கபால்னு கிஸ் அடிச்சிடறான்.

அடிக்கற கத்திரி வெயிலுல ஹீரோ வச்ச எச்சி முத்தம் ஹீரோயின் மனச உருக்கிடுது! இந்த இடத்துல டி.ஆர் டைரக்டரா இருந்திருதா,

“எச்சி, எச்சி, எச்சி...

நெத்தியில

வச்சி, வச்சி, வச்சி

என் மனசுக்குள்ள

கிச்சி, கிச்சி, கிச்சி

போட்றா டண்டணக்கா

மச்சி, மச்சி, மச்சி!!!!!’ ன்னு ஒரு டயலாக் போட்டிருப்பாரு. இது தீரன் டைரக்‌ஷனால மக்கள் தப்பிச்சிட்டாங்க”

எவ்வளவு அடக்கியும் ஜீவாவுக்கு சிரிப்பு பீரிட்டுக் கொண்டு வந்தது. கலகலவென நகைக்க, அவள் சிரித்த முகத்தையே ஆசையாய் பார்த்திருந்தான் ஜோனா. நீ எனக்கு அம்மாவைப் போல என சொல்லிய தினத்தில் இருந்து, அவன் அருகில் வாயை இறுக மூடி, இறுக்கமான முகத்துடன் வளைய வந்தவள் இன்றுதான் கலகலத்து சிரிக்கிறாள்.

"ஹீரோயின் திகைச்சுப் போய் அவன் முகத்தையேப் பார்த்தப்படி நின்னுடறா! இங்க அப்படியே மூனு செக்கன் காட்சிய ப்ரீஷ் பண்ணறோம்! அப்புறம் அவ லெட்டர பிரிச்சுப் படிக்க, அங்க ஒரு சாங்

வருது. கட் பண்ணி அப்படியே ஸ்வீஸ்ல வைக்கறோம் ஷூட்டிங்க! தாவணி போட்ட கிராமத்துக் குயிலு மேல ஒரு துண்டு துணி கீழ ஒரு துண்டு துணின்னு பனிப்பிரதேசத்துல டான்ஸ் ஆட, ஹீரோ சாருக்கு மட்டும் கனமான விண்ட்டர் வேர் போட்டு கழுத்துக்கு காதல் தோல்வி சீனுக்கு மோகன் யூஸ் பண்ண சால்வையும் தரோம்! சத்தியமா சொல்லுறேன் சிஸ்டரு, தியேட்டர்ல இந்த காட்சிக்கு க்ளாப்ஸ் பிச்சிக்கும்!" என கதை சொல்லி முடித்தான்.

"கதாநாயகின்னு வந்தா மட்டும் தான் உங்களுக்கு எல்லாம் பட்ஜெட்ல

படம் எடுக்கறோம்னு ஞாபகம் வரும் போல!" என கருவினாள் ஜீவா.

"அந்த லெட்டர்ல வர பாட்டத்தான் நான் இங்கிலீஸ்ல எழுதி இருக்கேன்! அத நீ தமிழ்ல ட்ரான்ஸ்லேட் செஞ்சு குடுக்கனும்" என கேட்டுக் கொண்டான் ஜோனா.

"அத ஏன் நான் செய்யனும்? உங்க டீம்ல ஆள் இல்லையா?" என கேட்டாள் ஜீவா.

"ஏன் இல்ல! நம்ம டைரக்டர் சாரே ரொம்ப நல்லா............. ட்ரான்ஸ்லேட்

செய்வாரே! ‘லவ் மீ டெண்டர்’ங்கற வரிய ஒப்பந்தம் போட்டு காதலின்னு மாத்திக் குடுத்த பெரிய மேதாவி இவர்.”

“டெண்டர்னா எங்க பிரிட்டிஷ் இங்கீலீசுல ஒப்பந்தம்தான். உங்க அமெரிக்கன் இங்கீலீசுல மென்மைன்னு ஒரு அர்த்தம் இருக்குன்னு எனக்கு என்னா தெரியும்” என சமாளித்தான் தீரன்.

“இவங்க யாரயும் நம்பி குடுக்க முடியாது! வரிய கொன்னுப் போட்டுருவாங்க! ப்ளிஸ் ஜீவா,

ஹெல்ப் மீ!” என அவள் கையைப் பற்றியபடி கேட்டான் ஜோனா.

ஜோனாவின் ப்ளீசுக்குப் பின்னால் மறுக்கவும் தான் மனம் வருமோ! சரி என ஒத்துக் கொண்டவள், கையை உருவிக் கொண்டு எழுந்தாள். போய் வருகிறேன் என்பது போல ஜோனாவைப் பார்த்து தலை அசைத்தவள், தீரனை முறைத்தப்படி வெளியேறினாள்.

அவள் கார் கிளம்பும் வரை வாசலிலேயே நின்றிருந்தான் ஜோனா. அவன் தோள் மேல் கைப்போட்ட தீரன்,

“எல்லா சரியாகிடும் பாஸ்! சீக்கிரம் உங்க கிட்ட வந்துடுவாங்க” என தைரியமூட்டினான்.

“வந்துடுவாளா? இல்ல நேத்துப் பார்த்த படத்துல ஹீரோ சொன்ன மாதிரி லவ்வுன்னா என்னான்னு தெரியாம செத்துப் போறத விட என்னான்னு தெரிஞ்சு தோத்துப் போறது எவ்வளவோ மேல்னு என்னை வசனம் பேச வச்சிட மாட்டால்ல(லவ் டுடே)? பயமா இருக்கு தீரா! அவளுக்காகத்தான் இங்க இருக்கேன்! அம்மாவோட நேசம், அப்பாவோட பாசம்

எல்லாத்தையும் விட்டுக் குடுக்க முடிஞ்ச என்னால இவளோட காதல விட்டுக் குடுக்க முடியும்னு தோணல! ஷீ பேவிட்ச்ட்(bewitched) மீ! இத உங்க ஊர்ல எப்படி சொல்வாங்க தீர்?"

"ஹ்ம்ம்! பில்லி சூனியம் வச்சிட்டான்னு சொல்வாங்க! "என சொல்லி குபீர் என அவன் சிரிக்க, ஜோனாவுக்கும் சிரிப்பு எட்டிப் பார்த்தது.

"தேங்க்ஸ் தீர் அவள சிரிக்க வச்சதுக்கு!"

“பாஸ், மேடம் உங்களுக்கு லவ்வர்னா எனக்கு சிஸ்டர்! அவங்கள சிரிக்க வச்சதுல எனக்கும் சந்தோஷம்தான்”

தீரனை அணைத்து தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான் ஜோனா.

அதன் பிறகு வந்து படுக்கையில் விழுந்தவனுக்கு தூக்கம் கிட்டே வர மாட்டேன் என ஜீவாவைப் போலவே அடம் பிடித்தது. கைப்பேசியை எடுத்து வாட்ஸாப் போனவன், எப்பொழுதும் போல ஜீவாவுக்கு குட் நைட் என மேசேஜை தட்டினான். போட்ட உடனேயே ப்ளூ டிக் காட்டியது. ஆனால் அவள் எப்பொழுதும் போல

ரிப்ளை போடவில்லை. டீ.பீ இல்லாமல் ப்ளாங்காக இருந்த அவளது எண்ணையே பார்த்தப்படி படுத்திருந்தான் ஜோனா. தான் ஆசைப்பட்டது எதுவுமே தனக்கு கிட்டாதோ என மனம் சோர்ந்துப் போய் கிடந்தது.

பகலில் பல வேலைகளுக்கு மத்தியில் தன்னை பிசியாகவே வைத்திருப்பவனுக்கு, இரவின் தனிமை கொடுமையாய் இருந்தது. ஏகாந்த இரவில் ஜீவாவின் பேச்சும், சிரிப்பும், அக்கறையும், அன்பும் மட்டுமில்லாமல் அவள் கொடுத்த காதல் சுகமும் நினைவுகளில் முட்டி

மோதி அவனை நிலை இழக்க செய்யும். அன்று தன் கைகளில் அடங்கிக் போனவளின் கூசி சிலிர்த்த தேகமும், வாய் ஓயாத மெல்லிய பிதற்றல்களும், வெட்கப் புன்னகையும் நினைவில் வந்து இன்றும் அவள் தன் கையருகில் வேண்டுமென பித்தம் கொள்ள வைக்கும் அவனை.

எதையும் அடக்கி பழக்கப் பட்டிருக்காதவனுக்கு இம்சையாய் கழியும் இரவு. பாடாய் படுத்தும் அவள் நினைவுகளை மறக்க மறுபடி மதுவை நாடலாமா எனும் எண்ணம் வரவும் பயந்துப் போனான் பாடகன்.

அவள் நினைவுகளில் இருந்து தப்பிக்க, கிட்டாரை எடுத்துக்

கொண்டு அமர்ந்து விடுவான். பால்கனியில் போடப்பட்டிருந்த கூடை ஊஞ்சலில் எப்பொழுதும் போல அமர்ந்தவன், போனை வீடியோ ரெக்கார்டிங்கில் தட்டி மேசை மேல் வைத்து விட்டு வாசிக்க ஆரம்பித்தான்.

அவனுடைய பாடல்கள், மனதுக்குப் பிடித்த மற்றவர்களின் பாடல்கள் என கிட்டாரை வாசித்தப்படியே மெல்லிய குரலில் பாடினான். காலை எந்தி ஊஞ்சலை ஆட்டிக் கொண்டே, லயித்துப் போனான் பாடுவதில். உடலும் மனமும் களைத்துப் போக, தூக்கம் கண்களை சுழட்ட ஆரம்பிக்க

ஊஞ்சலில் இருந்து எழுந்துக் கொண்டான் ஜோனா. வீடியோவை நிறுத்தியவன், அதை அப்படியே ஜீவாவுக்கு அனுப்பி வைத்தான். உடனே ப்ளூ டிக் வந்தது. மணியைப் பார்த்தான். விடியற்காலை மூன்று என காட்டியது.

“நீயும் தூங்கலையா இன்னும்? ஏன்டி தள்ளி நின்னு உன்னையும் வாட்டி என்னையும் இப்படி வாட்டற?” என முனகிக் கொண்டே போய் கட்டிலில் விழுந்தான். அதன் பிறகே நித்திரா தேவி பாவப்பட்டு வந்து அவனை அணைத்துக் கொண்டாள்.

அங்கே தூக்கம் வராமல் புரண்டுக் கொண்டிருந்த ஜீவா, வீடியோவை உடனே ஓடவிட்டாள். பைஜாமா பேண்ட் மட்டும் அணிந்து வெற்று மார்புடன் கிட்டாரைப் பிடித்து அமர்ந்திருந்தவனைப் பார்த்து, மெல்லிய வெட்கம் வந்தது இவளுக்கு. வெட்கம், நாணம் போன்ற வஸ்துக்கள் தன்னிடமும் உண்டு என இவள் அறிந்துக் கொண்டதே ஜோனாவுடன் இரண்டற கலந்த பின்புதான். தனது ஜே பெண்டனை தடவிக் கொண்டவள், வீடியோவைப் பார்க்க ஆரம்பித்தாள்.

குரல் குழைந்து உருக, அனுபவித்து பாடினான் ஜோனா. கடல் காற்று அவன் முடியைக் கலைத்து விளையாட, பால்கனி விளக்கின் மெல்லிய வெளிச்சம் அந்த இடத்தை ரொமேண்டிக்காக காட்ட, ஊஞ்சல் முன்னுக்கு வரும் போது முகம் வெளிச்சமாகவும், பின்னுக்கு போகும் போது இருட்டாகவும் காட்ட, இவள் அவனின் ஒவ்வொரு அசைவையும் கண்ணெடுக்காமல் ரசித்தாள். தன்னை சுகமாய் மீட்டிய விரல்கள் கிட்டாரை மீட்டுவதையும், ஓயாமல் முத்தமிட்ட உதடுகள் பாடல் பாடுவதையும் ஒரு கிறக்கத்துடன் பார்த்திருந்தாள். கடைசியாக அவன்

பாடிய பாடல், இவளை அசைத்துப் பார்த்தது.

“And I….will always love you, oooh

Will always love you!!!” என பாடியவனின் கண்களில் கண்ணீரைப் பார்த்தவளுக்கும் கண்ணீர் தளும்பியது.

“எல்லாம் உன்னாலத்தான்! உன்னாலத்தான் உன்னை வேணாம்னு சொல்லறேன்! ஏன்டா என்னைப் புரிஞ்சுக்க மாட்டற! இங்கயே இருந்து நீயும் கலங்கி என்னையும் ஏன்டா ஜோனா

கலங்கடிக்கற? இப்படி நமக்குள்ள எல்லாம் மாறிப்போகும்னு தெரிஞ்சிருந்தா சத்தியமா உன்னைக் கடத்திருக்க மாட்டேன்! உன்னை கொஞ்ச நாள் சந்தோஷமா வச்சிக்கனும்னு கடத்திட்டுப் போய் இப்படி ஓரேடியா சந்தோஷத்த பறிச்சிட்டேனே! எல்லா பொண்ணுங்களையும் போல என்னை மட்டும் ஏன்டா கடந்துப் போக மாட்டற! அப்படி நான் என்ன செஞ்சிட்டேன் உனக்குன்னு இப்படி என்னை சுத்தி வர? நான் உனக்கு அம்மான்னு சொன்னியே! ஒரு அம்மாவால தன் புள்ள கலங்கி நிக்கறத பார்த்துட்டு கையக் கட்டிட்டு

சும்மா இருக்க முடியுமா? நான் இருக்கேனே! இந்தப் பாவி சும்மா இருக்கேனே! நான் உனக்கு வேணா ஜோனா! வேணவே வேணா! போய்டு ஜோனா! என்னை விட்டுப் போய்டு" என தேற்ற ஆளின்றி கதறி கண்ணீர் விட்டாள் ஜீவா.

இருவருக்குமே நெஞ்சு முட்ட காதல் இருந்தாலும், ஒருத்தியின் பிடிவாதத்தால் சேர முடியாமல் தவித்தவர்களை கதி கலங்க வைக்கவென வந்தது படத்திற்கு பூஜை போடும் விழா. படத்தின் ஆரம்ப விழா இவர்கள் காதலுக்குப்

போட்டது திறப்பு விழாவா? மூடு விழாவா?

## அத்தியாயம் 16

“ஜோனா,

ஐ லவ் யூ!!!! இதத்தான் நைட் முழுக்க ஜபம் மாதிரி சொல்லிட்டே இருந்த நீ! லவ்!!!! நீ சொன்னது எந்த ஊர் லவ்? எங்க ஊரு லவ்வா இல்ல உங்க ஊரு லவ்வா?

இதுல என்னடா டிப்ரண்ஸ்னு கேக்கறியா? உங்க ஊர்ல மோஸ்ட்லி உடம்பு வரைக்கும் தான் லவ்! ஆனா

எங்க ஊர்ல உடலும், உணர்வும், உசுரும் இணைஞ்சி ஒரே கோட்டுல பயணிக்கறது தான் லவ்! இங்க கூட சிலர் உங்க ஸ்டைல்ல லவ் பண்ணாலும், எங்க பாரம்பரியமான லவ் இன்னும் அழியாமத்தான் இருக்கு!

நீ அமெரிக்கன்றதுனால நீ சொன்னத நான் அமெரிக்கன் லவ்வாவே எடுத்துக்கறேன்! அதாவது தேவை இருக்கறப்போ சொல்லிட்டு தேவை தீர்ந்ததும் மறந்து மறைஞ்சி போகிற அமெரிக்கன் லவ்! ராத்திரி முழுக்க உனக்கு என் தேவை இருந்துச்சு! இப்போ விடிஞ்சதும் கண்டிப்பா அந்த லவ் தீர்ந்துருக்கும்! நீயே போடின்னு

சொல்லறதுக்கு முன்ன நானே போய்டறேன் ஜோனா!

பெரிய இவ மாதிரி பேசறியே, நான் அமெரிக்கன் லவ்ல அப்ரோச் பண்ணறப்போ நீ ஏன் இந்திய லவ் வேறன்னு சொல்லி என்னை மறுக்கலன்னு நினைப்ப! கண்டிப்பா நினைப்ப! எனக்கு இதெல்லாம் ரொம்ப புதுசா இருந்துச்சு ஜோனா! நீ எனக்கு கொடுத்த அட்டென்ஷன், எனக்காக நீ கண்ணுல காட்டன மயக்கம், இது பூலோகமான்னு என்னை சந்தேகப்பட வச்ச உன்னோட முத்தம், உடம்புல ஹார்மோன எக்குத்தப்பா எகிற வச்ச உன்னோட தொடுகை, நீ ஹஸ்க்கி வாய்ஸ்ல

சொன்ன அந்த ‘டெம்ப்ட்ரெஸ்’ எல்லாம் என்னை அடிச்சு வீழ்த்திடுச்சு! அந்த நேரம் மைண்ட் வேலை நிறுத்தம் செஞ்சிட்ட உணர்வு. பல சமயம் படம் பார்க்கறப்போ, ஹீரோயின கல்யாணம் பண்ணாமலே, நல்லவன் மாதிரி நடிக்கற வில்லன் எப்படி மயக்கி தன் இச்சைக்கு யூஸ் செஞ்சுக்கறான்னு காட்டுவாங்க. அவன் தொட்டதும், அவ அப்படியே மயங்கி கிறங்கி நிப்பா! படத்த பார்க்கற எனக்கு இதெல்லாம் ஓவர் சீனுன்னு தோணும்! ஆனா அத நானே அனுபவிச்சப்ப, என்னால அந்த மாய சுழல்ல இருந்து வெளி வர முடியல

ஜோனா! உன்னை மறுக்கவே முடியல.

எனக்கு உன் மேல லவ் இல்ல ஜோனா! லவ் இல்லாம நான் இப்படி நடந்துகிட்டது ரொம்ப கில்ட்டியா இருக்கு. இரவின் தனிமையில, நிலவின் குளுமையில காமத்தின் பிடியில நாம செய்யறது எதுவும் தப்பா தோணாது ஜோனா! அதுவே விடியல் வேளையிலே, ஆதவனின் ஒளிச் சிதறலுல ராத்திரி செஞ்சது எல்லாமே தப்புன்னு தோண ஆரம்பிக்கும். எனக்கு இது, இப்போ ரொம்பவே தப்பாத் தெரியுது! யாரும் குடுக்காத பாசத்த நீ எனக்கு கொடுத்த! யாரும் கொடுக்காத

நேசத்த நீ எனக்கு கொடுத்த! யாரும் காட்டாத அக்கறைய நீ எனக்கு காட்டுனா! யாரும் நீட்டாத நட்புக்கரத்த நீ நீட்டுன! இதெல்லாம் என் கண்ணை மறைச்சிடுச்சு ஜோனா! அதனாலத்தான் ஈசியா என்னையே உனக்குக் குடுத்துட்டேன்!

திரும்பவும் நீ, மூலான் ஐ நீட் யூன்னு சொன்னா என்னால மறுக்க முடியுமான்னு தெரியல ஜோனா! இங்க என்னைத் தவிர யாரும் இல்லாதனால, உனக்கு நானே பெட்டர்னு தோணிருக்கலாம். எங்க ஊர்ல சொல்லுவாங்க ஆலை இல்லாத ஊர்ல இலுப்பைப்பூ சர்க்கரையாம்னு! என் ஜோனாவா

இருந்தாலும் அவனுக்கு நான் இலுப்பைப்பூவா இருக்க விரும்பல!

சோ நான் போறேன்! என்னைத் தேட வேணாம்! இதுக்கு மேல நாம சந்திச்சுக்கிட்டா கூட எனக்கு நீ வெறும் சிங்கர் ஜோனா மட்டும் தான். இனிமே ஐ லவ் யூ, ஐ மிஸ் யூ லாம் நமக்குள்ள வரவே வேணாம்.

தயவு செஞ்சு அமெரிக்காவுக்கே போய்டு ஜோனா! உன் ஸ்கின்லாம் எங்க ஊர் வெயில் பட்டு பொசுங்கி போன மாதிரி இருக்கு. ரொம்ப ஸ்வேட் ஆகுது வேற! வியர்வைல தலை முடி எப்பவும் ஈரமா இருக்கறதுனால, தலைய சொறிஞ்சிட்டே இருக்க நீ! இங்க

சாப்பாடும் உனக்கு சரிப்படல. சோ போய்டு ஜோனா.

உடம்ப பார்த்துக்கோ ஜோனா. எக்சர்சைஸ் செய்! சத்தான உணவ சாப்பிடு! எப்பவும் ஹேப்பியா இரு.

நான் போறேன்!

பாய்!

இப்படிக்கு,

மூலான்

ஜீவா”

எண்ணிலடங்கா முறைகள் படித்திருந்த கடிதத்தை மீண்டும் ஒரு முறை படித்த ஜோனா நீண்ட பெருமூச்சொன்றை வெளியேற்றினான். ஆங்கிலத்தில் அழகாய் தனது மன உணர்வுகளை வடித்து அவள் தந்து போயிருந்த கடிதத்துக்கு ஒரு முத்தம் வைத்தவன் அமைதியாய் அமர்ந்திருந்தான்.

கடிதத்தை முதல் முறை காட்டேஜில் படித்தப் போது அப்படி ஒரு கோபம் வந்தது அவனுக்கு. அன்பைக் காட்டி, பாசத்தைக் காட்டி அவள் உடலை அடைந்து விட்டான் இவன் என்பது போல தான் தோன்றியது கடிதத்தின்

சாராம்சம். ஆத்திரத்தில் கடிதத்தைத் தூக்கி எறிந்தவன், அவர்கள் கூடி களித்த கட்டிலையே வெறித்தப் படி நின்றிருந்தான். பின் கட்டிலில் அமர்ந்து அவள் தலையணையை எடுத்து அணைத்துக் கொண்டான் ஜோனா.

‘அமெரிக்கன் லவ், ஆப்பிரிக்கன் லவ்னு, இதுல என்ன கம்பேரிஷன்! லவ் இஸ் யூனிவெர்சல் ஃபீல். அப்போ எங்க ஊர்ல காதலோட மரணம் வந்து பிரிக்கும் வரை ஒன்னா வாழ்ந்த ஜோடி இல்லவே இல்லைன்னு சொல்றாளா? ஏன் இவ ஊர்ல லிவிங் டுகேதர் கலாச்சாரம் இல்லைன்னு சொல்ல முடியுமா?

சில்லி!' என ஆத்திரத்தில் கொதித்தவன் தலையணையை தூக்கி எறிந்தான். யாருக்கும் காட்டாத காதலை அவளுக்கு மட்டுமே காட்டி இருக்க, அதை அலட்சியம் செய்துவிட்டாள் ஜீவா என மனம் கிடந்து மறுகியது அவனுக்கு. தலையை இரு கரங்களால் தாங்கிக் கொண்டவன்,

"இது உடம்ப பார்த்து வந்த அமெரிக்கன் லவ் இல்லடி இடியட்! திஸ் இஸ் பியூர் லவ்! மனச பார்த்து வந்த பியூர் லவ்" என கத்தியவன் படக்கென எழுந்து நின்றான்.

"ஓ மை காட்! ஐம் ட்ரூலி, டீப்லி ஃபோல்லன் இன் லவ்! ஓ காட்!"

இவ்வளவு நாள் ஜீவாவின் மேல் காதல் ஊற்றெடுத்தாலும், அது எத்தனை நாளுக்கு என மனதின் ஓர் ஓரத்தில் பயம் இருந்துக் கொண்டே இருந்தது இவனுக்கு. ஒன்றோடு ஒன்று கலந்த பின், அவள் மேல் இருக்கும் காதல் காணாமல் போய் விடுமோ எனும் கேள்விக்குறி அவன் மனதைக் குடைந்துக் கொண்டே இருந்தது.  அதற்கான விடையை தெள்ளத் தெளிவாக இப்பொழுது உணர்ந்துக் கொண்டவனுக்கு, மனம் பஞ்சாய் பறந்தது. பட்டென கட்டிலில் அமர்ந்தவன் மூச்சை இழுத்து இழுத்து விட்டான்.

“மூலான், ஐ லவ் யூ! லவ் யூ சோ மச்” என முணுமுணுத்தவன் எழுந்துப் போய் அந்த கடிதத்தை மீண்டும் ஒரு முறை அமைதியாக படித்தான்.

ஜோனா என ஆரம்பித்திருந்த இடத்தில் எழுத்து கொஞ்சம் கலங்கலாய் இருந்தது.

“புவர் பேபி! அழுதிருக்கா போல”

முதல் வரியே ஐ லவ் யூ என இருந்தது.

“என் பேபி லவ்வோடத்தான் லெட்டர ஆரம்பிச்சிருக்கா. நானே உன்னை போடின்னு சொல்லிடுவனா பேபி? இது ட்ரூ லவ்னு தெரியாம புரியாம இருந்தப்போ கூட உன்னை என் கூடவே காலம் முழுக்க வச்சிக்கனும்னு நெனைச்சேனே! உன்னை எப்போதும் என்னை விட்டு விலக்கனும்னு நான் நினைக்கவே இல்லை மூலான்.”

‘எனக்கு உன் மேல லவ் இல்ல ஜோனா’ என்ற வரியில் இருந்த எழுத்துக்கள் மட்டும் அவசரமாய் எழுதியது போல ஒட்டிக் கிடந்தன.

“லவ் இல்லைன்னு எழுத்துல கூட சொல்ல முடியல உன்னால! கசப்ப

விழுங்கற மாதிரி வேகமா எழுதி விட்ருக்க நீ! உன்னை வம்பிழுக்கறேன்ற பேர்ல நான் செபலசில இருக்கேன், ஐ நீட் யூ, கிஸ் பண்ண போறேன் இப்படிலாம் சொல்லி உன்னை ரொம்பத்தான் டார்ச்சர் செஞ்சிருக்கேன் மூலான். அதனாலத்தானே வேற பொண்ணு எதுவும் கிடைக்காம உன்னை யூஸ் பண்ணிக்கிட்டேன்னு நினைச்சிட்ட நீ! அப்போ இப்படிலாம் உன் மேல க்ரேஸ் ஆவேன்னு தெரியலையே மூலான். தெரிஞ்சிருந்தா வால சுருட்டிட்டு இருந்துருப்பேன்! விட்டுட்டுப் போறப்ப கூட ஸ்கின் இப்படியாச்சு, தலை அரிக்குது, உடம்ப

பார்த்துக்கன்னு ஆயிரம் கவனம் சொல்லிருக்க! இந்த அக்கறைய உன்னைத் தவிர வேற யார் எனக்கு காட்டுவாங்க? என்ன சொன்ன? வெளிய பார்த்தா இனிமே நான் வெறும் சிங்கர் ஜோனாதானா? மறுபடி என் ஊருக்கே போயிடனுமா? மாட்டேன்! மாட்டவே மாட்டேன்! நீ இல்லாம எங்கயும் போக மாட்டேன் மூலான்! இவ்ளோ லவ்வ என் மேல வச்சிக்கிட்டு விலகிப் போன உன்னை என் கிட்டவே வரவழைக்கிறேன்! நீ சொன்ன மாதிரி உடலால பண்ணற அமெரிக்கன் லவ்வ தூக்கிப் போட்டுட்டு மனசால நெருங்கற இந்திய லவ்வ காட்டி உன்னை

திணறடிக்கறேன்! வேய்ட் ஃபோர் மீ மூலான்” என சபதம் எடுத்தவன், தீரனின் உதவியால் பொய்யான அட்டாக்கை ஏற்படுத்தி ஜீவாவை தனது பாடிகார்ட்டாக வர வைத்திருந்தான்.

கதவு தட்டும் சத்தமும்,

“பாஸ், ரெடியாகிட்டீங்களா?” எனும் தீரனின் அழைப்பும் தான் ஜோனாவை தரையிறக்கியது. லெட்டரை மடித்து பெட் சைட் டேபிள் ட்ராவரில் வைத்தவன்,

“கிவ் மீ டென் மினிட்ஸ்” என பதில் அளித்தான்.

இன்று அவர்கள் ஆவலாய் எதிர்ப்பார்த்திருந்த பட பூஜை விழா இண்டோர் ஸ்டேடியம் ஒன்றில் ஏற்பாடாகியிருந்தது. முக்கிய திரைத் துறை பிரமுகர்களுக்கு எல்லாம் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. மாலை நான்கு மணிக்குத்தான் நல்ல நேரம் என குறித்துக் கொடுக்கப்பட்டிருக்க, இரண்டரை மணிக்கே தீரன் எல்லோரையும் கிளம்பும்படி அலப்பரை செய்துக் கொண்டிருந்தான்.

ஜீவாவும் வீட்டுக்கு வந்திருக்க,

“தங்காய்! இன்றைக்காவது அழகாய் அம்சமாய் ஆரவாரமாய் உடை அணியக் கூடாதா? இதே கருப்பு பேண்ட், வெள்ளை சட்டையில் விறைப்பாக வந்து நிற்க வேண்டுமா?” என கேட்டு அவளது முறைப்பையும் பரிசாய் வாங்கிக் கொண்டான்.

“சேலையையும், சுடிதாரையும் போட்டுக்கிட்டு, துப்பாக்கிய எங்க சொருக? உன் மூக்கிலயா?” என கடுப்பாக கேட்டவளின் குரல் மெல்ல நின்றுப் போக, அவள் பார்வைப் போன இடத்தைப் பார்த்தான் தீரன்.

அங்கே ஜோனா பச்சை ஷெர்வாணியில் ஆணழகனாய் படி இறங்கிக் கொண்டிருந்தான். முடியை ஜெல் போட்டு அழகாய் வாரி இருக்க, அது பளபளவென டாலடித்தது. அங்கே அவன் வரும் போதே அவனது பாடி ஸ்ப்ரேயின் வாசனை இங்கே வந்து இவர்களுக்கு ஹாய் சொன்னது. கண்ணை சிமிட்டாமல் இவள் பார்த்திருக்க,

“உன்னைப் பார்த்த பின்பு நான்

நானாக இல்லையே!!!” என மெல்லிய குரலில் ஜீவாவை நக்கல் செய்து பாடினான் தீரன்.

**சட்டென பார்வையைத் திருப்பிக் கொண்டவள்,**

**“அவர பார்த்ததுல இருந்து நீ நீயா இல்லைத்தான். ஓசி பிட்சாக்கு உசுர விட பார்த்த ஆளுங்கலாம் இப்ப ஓசிபீசி பேங்க்ல அக்கவுண்ட் வச்சிருக்காங்க! கால கொடுமைடா சரவணா!” என திருப்பிக் கொடுத்தாள்.**

**“தோ பாருமா தங்காச்சி! அக்கவுண்ட்ல காசு இருக்கறது மட்டும்தான் உங்க எல்லாருக்கும் கண்ணுல தெரியுது! உழைச்சி களைச்சி அக்கக்கா பிஞ்சி போய் கிடக்கற இந்த தீரன் நெலமை யார் கண்ணுக்கும் தெரியல! சிஸ்டரு, முட்டை போடற கோழிக்குத்தான்மா**

அதோட வலி தெரியும்! வலிக்குதுமா” என இவன் அலுத்துக் கொண்டான்.

“விடு தீர்! உன் கஸ்டம் எல்லாருக்கும் புரியாது” என இவர்களை நெருங்கி இருந்த ஜோனா சொல்ல,

“பாரு பாரு! என் தளபதிய பாரு!” என தீரன் சந்தோஷப்பட்டு முடிப்பதற்குள்,

“இனிமே இவ்ளோ வலிப்பட்டு முட்டைப் போட வேணா! பேசாம ஸ்ட்ரேய்ட்டா கோழியே போட்டுரு” என முடித்து வைத்தான் ஜோனா.

“எதே கோழி போடறதா?” என அவன் அதிர்ச்சியாக, ஜீவா சிரிப்பை அடக்கப் படாத பாடுபட்டாள்.

**“ஜீவா!” என அழைத்தான் ஜோனா.**

**என்ன என்பது போல இவள் பார்க்க, உடை எப்படி இருக்கிறது என கண்களாலேயே கேட்டான் ஜோனா.**

**நன்றாக இருக்கிறது என கண்களாலேயே பதிலளித்தவள், விறு விறுவென காருக்கு நடந்து விட்டாள்.**

**புன்னகையுடனே பாடிகார்ட்ஸ், தீரன் புடை சூழ விழா நடக்கும் ஸ்டேடியத்துக்கு கிளம்பினான் ஜோனா.**

பொது மக்களுக்கு முகநூல் வழி லைவ்வாக நிகழ்ச்சி காட்டப்படுவதால், சினிமா மக்களும் பத்திரிக்கை நண்பர்களும், கொஞ்சமாய் ரசிக பெருமக்களும் மட்டுமே அழைக்கப்படிருந்தனர். பிரபலமான டைரக்டர் ப்ளஸ் நடிகர் சங்கத் துணைத் தலைவருமாக இருந்த ஜெய்க்குமாரும் விழாவுக்கு வந்திருந்தார்.

பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தும் ஸ்டேடியத்தின் வெளியே ஜோனாவின் ரசிகர்கள் நூற்றுக் கணக்கானோர் குவிந்திருந்தனர்.

போலிஸ் மற்றும் ஜீவாவின் செக்யூரிட்டி ஆட்கள் என படையே குவிக்கப்பட்டிருந்தது அங்கே. காரில் இருந்து ஜோனா இறங்க,

“ஜோனா, ஜோனா, ஜோனா!!!” என கோஷம் வானைப் பிளந்தது.

மக்களைப் பார்த்து அழகாய் புன்னகைத்து இந்திய ஸ்டைலில் கரம் குவித்து வணக்கம் வைத்தான் ஜோனா. அவன் செய்கை கூட்டத்தை இன்னும் அசரடித்தது. அவன் ஸ்டேடியத்தின் உள்ளே நுழையும் வரை கோஷம் ஓயவில்லை.

ஜீவா பக்கத்தில் வர மற்ற கார்ட்ஸ் சூழ உள்ளே நுழைந்தான் ஜோனா. ஏற்கனவே மக்களும் விஐபிகளும் வந்திருந்தனர். அங்கே அமைக்கப்பட்டிருந்த மேடையில் ஜோனா அமர வைக்கப்பட, தீரனும் அவன் அருகே அமர்ந்தான். அவர்கள் இருவரின் பின்னால் நின்றுக் கொண்டாள் ஜீவா. அவளையும் ஜோனா அமர சொல்ல, நிற்பதுதான் கண்காணிக்க வசதி என மறுத்து விட்டாள் இவள்.

மந்திரி ஒருவர் வருவதற்காகத்தான் எல்லோரும் காத்திருந்தார்கள். அவர்

தான் விழாவை தொடக்கி வைப்பதாக இருந்தது. பெரிய ஸ்க்ரீனில் போட்டோ ஷூட் போது எடுத்தப் படங்கள் ஸ்லைடாக ஓடிக் கொண்டிருக்க, நிகழ்ச்சி தொகுப்பாளினி நேரத்தைக் கடத்துவதற்காக மக்களிடம் மொக்கைப் போட்டுக் கொண்டிருந்தார்.

ஜோனாவின் இன்னொரு பக்கம் அமர்ந்திருந்த ஜெய்க்குமார், மெல்ல குனிந்து அவன் காதில்,

“என்னப்பா, சொந்த காசுல சூனியம் வச்சிக்கப் போறியா? அந்த வெளங்கா

வெட்டிய நம்பி இவ்ளோ நாள் கத்திப் பாடி சேர்த்த பணத்த எல்லாம் வேஸ்ட் பண்ண போறியா நீ? உங்கம்மாவ அதையும் இதையும் சொல்லி சமாதானம் பண்ணி ஊருக்கே நீ அனுப்பிட்டாலும், உன்னைப் பார்த்துக்க சொல்லி என் கிட்ட சொல்லிட்டுப் போயிருக்காப்பா! அந்த அக்கறையிலத்தான் சொல்லறேன். இது வேணா! என் கிட்ட வந்துடு ஜோனா" என முணுமுணுத்தார்.

"இத்தனை நாளு நீங்க குடுத்த டார்ச்சரையும், முட்டுக்கட்டையையும் பூ பூன்னு ஊதி தள்ளி பட பூஜை

**வரைக்கும் வந்தவனையா வெட்டி மட்டின்னு சொல்றீங்க! நீங்க அவன ரொம்ப குறைவா எடைப் போட்டுட்டீங்க மிஸ்டர் ஜெய்க்குமார்! ஆளுங்கள ஒழுங்கா கணிக்கத் தெரியாத நீங்க எடுக்கற படம் மட்டும் எங்கிருந்து உருப்படியா வரும்? அப்படிப்பட்ட குப்பை படத்துக்கு என்னை வந்து நடி, நடின்னு டார்ச்சர் வேற பண்ணறீங்க. சாரி மிஸ்டர் டாடி! பதினாறு வயசுல என்னை சீப்போன்னு தூக்கி வீசினது வீசனதுதான். துப்புன எச்சில் துப்பனதுதான். என் டைம்ம வேஸ்ட் பண்ணாம, வேற யாருக்காச்சும் இன்னொரு மகன் பொறந்திருந்தா**

அவன நடிக்கக் கொண்டு வாங்க!”
என்றவன் அப்பொழுதுதான் மேடை
ஏறிய படத்தின் கதாநாயகியைப்
பார்த்து முகம் மலர புன்னகைத்து,
அவளை லேசாக அணைத்து தனது
இடத்தையும் உட்கார கொடுத்தான்.

தீரன் எழுந்து அவன் இடத்தை
ஜோனாவுக்கு கொடுத்து விட்டு,
ஜெய்க்குமாரின் இன்னொரு பக்கம்
போய் அமர்ந்துக் கொண்டான்.
மேடைக்கு வந்த இசை
எல்லோருக்கும் ஹாய்
சொல்லிவிட்டு, பின்னால் நின்றிருந்த
ஜீவாவை லேசாக அணைத்து

ஜொள்ளி விட்டு வந்து தனதிடத்தில் அமர்ந்தது.

“இந்த கொசுத்தொல்லைத் தாங்கலடா” என முணுமுணுத்தான் ஜோனா.

மந்திரி வர அவருக்கு மாலை மரியாதை எல்லாம் நடந்தது. தீரன் முதலில் பேசி படத்தைப் பற்றியும் நடிப்பவர்களைப் பற்றியும் க்ரூவைப் பற்றியும் அறிமுகம் செய்து வைத்தான். படத்தின் ப்ரோடியூசரான ஜோனாவுக்கும் மாலை மரியாதை நடந்தது. ஜோனாவின் பட நிறுவனமான ஜே.ஜே ப்ரோடக்ஷனை

**அவனையே திறந்து வைக்க சொல்லி அழைத்தான் தீரன். அதன் பிறகே படத்தின் அறிமுகப் பாடலையும், அதன் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரையும் வெளியிடுவார் மந்திரி.**

**ஜோனா எழுந்து போக, அவன் பின்னாலேயே ஜீவாவைப் பாதுக்காப்புக்கு போக சொன்னான் தீரன். ஜோனா போய் ஸ்டேஜ் நடுவே நிற்க, அவன் பின்னால் நின்றாள் ஜீவா. ரிமோட்டில் இருக்கும் பட்டனை தட்டினால் அவர்களின் ப்ரோடக்ஷன் லோகோ இருந்த ப்ரேம் அழகாய் திறப்பது போல செட் செய்திருந்தார்கள். மந்திரி**

ரிமோட்டை ஜோனாவின் கையில் கொடுக்க, அதை புன்னகையுடன் வாங்கினான் ஜோனா. பட்டனை தட்டும் முன் ரிமோட்டை இவன் தவற விட, கீழே விழுவதற்குள் பட்டென பிடித்துக் கொண்டாள் ஜீவா. ரிமோட்டை அவனிடம் நீட்ட, அவள் கையைப் பற்றி வாங்குவது போல பட்டனை தட்டி இருந்தான் ஜோனா. இவள் விழி விரித்து இவனைப் பார்க்க, அழகாய் ஜே.ஜே என மிளிர்ந்தது இரண்டு எழுத்தும். அவர்கள் இருவரின் ப்ராடக்ஷனை அவர்கள் இருவருமே தங்கள் கையால் திறந்து வைப்பது போல

கச்சிதமாக காய் நகர்த்தி முடித்திருந்தான் ஜோனா.

அதன் பிறகு எந்த தங்குத் தடையுமின்றி விழா சிறப்பாக நடைப்பெற்றது. வந்தவர்களுக்கு உணவும் ஏற்பாடாகி இருந்தது. போட்டோ செஷன் எல்லாம் முடித்து வந்தவர்கள் சாப்பிட செல்ல, மந்திரி கிளம்பி விட்டார். ஜோனாவும் கிளம்ப முனைய, தீரன் நாயகியை அனுப்பி விட்டு, இருந்து எல்லாவற்றையும் முடித்து விட்டு வருவதாக சொல்லி நின்றுக் கொண்டான். மந்திரி கிளம்பியதும், பாதுகாப்புக்கு வந்த போலிசில் பாதி கிளம்பி இருந்தது.

ஜோனா ஜீவா இருவரும் ஸ்டேஜுக்கு கீழே இறங்க, எங்கிருந்தோ பறந்து வந்த தோட்டா ஒன்று ஜோனாவின் காதோர முடியை உரசிப் போய் பின்னால் இருந்த மலர் அலங்காரத்தைத் துளைத்து வீழ்த்தியது. சட்டென அலர்டான ஜீவா ஜோனாவின் முன்னே வந்து அவனை மறைத்து நிற்க, மற்ற கார்ட்டுகளும் அவனை சூழ்ந்து கவசம் போல நிற்க, அந்த இடமே அல்லோல கல்லோல பட்டது. தோட்டா சத்தம் கேட்ட மக்கள் இங்கும் அங்கும் ஓட, போலிஸ் கூட்டத்தைப் பாதுகாக்க

ஓட என அந்த இடமே கூச்சலும் கத்தலுமாக இருந்தது.

ஜீவாவை அப்படியே இழுத்துத் தனக்குப் பின்னால் நிறுத்தி ஒரு கையை அவள் இடுப்புக்குக் கொடுத்து நகர முடியாத மாதிரி இறுக்கிக் கொண்டான் ஜோனா.

“ஹே ஜோனா, விடுடா என்னை! உன்னை சுட்டுட போறாங்க! விடு, விடு நான் உன்னைப் பாதுகாக்கனும்” என கத்தினாள் ஜீவா.

“உன் சேப்டித்தான் எனக்கு முக்கியம் மூலான்!” என அவளது தள்ளலையும்

துள்ளலையும் அடக்க முனைந்தவனுக்கு, முடியவில்லை. ஆணாய் இவன் பலம் பொருந்தி இருந்தாலும், பல வகை தற்காப்புக் கலை கற்றவளிடம் செல்லுபடியாகுமா அவன் பலம்! அவனை மீறிக் கொண்டு முன்னே வந்து நின்றவளின் கண்கள் கூட்டத்தை அலசுவதற்குள் அடுத்த குண்டு பாய்ந்து வந்தது. இந்த முறை குண்டு ஜீவாவின் தோளை பதம் பார்த்து செல்ல,

“ஜீவா” என கத்தி விட்டான் ஜோனா.

இவர்களின் பாடிகார்ர்ட்ஸ் தோட்டா வந்த திசையை நோக்கி சுட,

இன்னொரு பக்கம் இருந்து பாய்ந்து வந்த குண்டு ஜீவாவைத் தாக்குவதற்கு முன் அவளை அணைத்துக் கொண்ட ஜோனாவின் கையை துளைத்ததுப் போனது.

“ஜோனா! ஜோனா! ஐயோ ஜோனா ரத்தம்” என தன் வலியையும் மீறி கத்தியவள், கோபத்தோடு தோட்டா வந்த திக்கில் சரமாரியாக சுட ஆரம்பித்தாள். அதற்குள் போலிசும் இவர்களை சூழ்ந்து பாதுகாப்பு அரணை அமைத்திருந்தனர். ஜீவாவின் தாக்குதலில் ஒருத்தன் கீழே விழுந்திருக்க, ஓடப் பார்த்த இன்னொருவனை போலிஸ் வளைத்திருந்தது.

ஓடி வந்த தீரன், மற்றவர்களின் உதவியோடு இருவரையும் காரில் ஏற்றி ஹாஸ்பிட்டலுக்கு கொண்டு சென்றான். முதலில் எமெர்ஜென்சி அறையில் இருவரையும் அருகருகே படுக்க வைத்து பரிசோதித்தார்கள் டாக்டர்கள். இவள் அவன் எப்படி இருக்கிறான் என பார்க்க, அவனின் பார்வையோ இவள் மேலேயேத்தான் இருந்தது.

இருவர் காயங்களையும் ஆராய்ந்த டாக்டர், உடனடி அறுவை சிகிச்சை செய்து தோட்டாவை அகற்ற எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். அதற்கு

முன் ஜீவாவுக்கு அனேஸ்டேசியா போட முயல, இல்லை வேண்டாம் என மறுத்தாள் அவள்.

“ஜீவா டோண்ட் பீ சில்லி! ப்ளிஸ் கோ ஆபரேட் வித் தெம்!” என ஆத்திரத்தில் கத்தினான் ஜோனா.

“நோ ஜோனா!”

“ஏய், என்னடி! எதுக்கு ட்ரீட்மேண்ட் செய்ய விடாம பிடிவாதம் பிடிக்கற!” என்றவன் தனது கட்டிலில் இருந்து இறங்க முற்பட,

**“இரு இரு! இறங்காதே” என்றவள் கண்களில் கண்ணீர் வழிய வயிற்றில் கை வைத்து,**

**“ஐம் ப்ரேக்னேன்ட் ஜோனா” என்றாள்.**

**அத்தியாயம் 17**

**ஒரே ஒரு வாக்கியம் சந்தோஷம், துக்கம், ஆதங்கம், கோபம், நெகிழ்ச்சி எல்லாவற்றையும் ஒருங்கே கொடுக்கக் கூடுமா? ஐ எம் ப்ரேக்னண்ட் எனும் ஜீவாவின் வாய் மொழிந்த வார்த்தைகள் ஜோனாவை**

புரட்டிப் போட்டு வாயடைக்க வைத்திருந்தன. கண்கள் இரண்டும் பசைப் போட்டது போல அவள் வயிற்றைப் பார்த்து நிற்க, கண்களில் இரு சொட்டு நீர் வழிந்து அவன் மகிழ்ச்சியை உலகுக்கு பறைசாற்றியது. வாய் பாட்டுக்கு,

“மை பேபி இஸ் கேரியிங் மை பேபி” என முணுமுணுத்துக் கொண்டே இருந்தது.

தலையை ஒரு குலுக்கு குலுக்கி தன் சுயம் மீட்டவன், பட்டென எழுந்து நின்றான்.

ஜீவாவை நெருங்கியவன்,

“கிவ் அஸ் டென் மினிட்ஸ் ப்ளிஸ்” என்றான் மற்றவர்களைப் பார்த்து.

டாக்டர்களும் நர்ஸ்களும் வெளியேறி இருக்க, தனது ஜீவாவை வயிற்றோடு இறுக அணைத்துக் கொண்டான் ஜோனா.

“மூலான்! மை மூலான் இஸ் ப்ரேக்னண்ட்!!!!!! ஓ மை குட்னஸ்!!!! என்னால கண்டுப்பிடிக்கவே முடியலையே! என் பார்வை எப்பொழுதும் உன்னத்தானே தொடர்ந்துட்டே இருந்துச்சு! ஆனாலும் இத கண்டுப்பிடிக்க தெரியலையே எனக்கு! நானும் என்

டாடி மாதிரியே யூஸ்லெஸ் டாடியோ!” என சந்தோஷமாய் ஆரம்பித்தவன் முடிக்கும் போது கலங்கித் தவிக்க ஆரம்பித்தான். எப்பொழுதும் ரிலேக்ஷாக இருக்கும் அவன் உடல் மொழியில் ஓர் இறுக்கம். அவளை அணைத்திருந்தவனின் உடல் மெல்ல நடுங்கிக் கொண்டிருந்தது. கைகள் அதன் பாட்டுக்கு குண்டடி பட்டிருந்த அவள் தோளை சுற்றி மெல்ல வருடியபடி இருந்தது. அவனையும் அறியாமல் கண்களில் இருந்து சுரந்த கண்ணீர் அவள் தலையில் தீர்த்தமாய் தெறித்து விழுந்தது.

இவளுக்கும் அழுகை வந்தது. அவன் கலக்கத்தையும் தவிப்பையும் பார்த்து குற்ற உணர்ச்சியில் குறுகிப் போய் நின்றாள் ஜீவா. ஜோனாவின் அருகே மட்டும் வெளிப்படும் பலவீனம் தலைத் தூக்க தேம்பியபடியே அவன் இடுப்பைக் கட்டிக் கொண்டாள் இவள்.

“சாரி ஜோனா, சாரி ஜோனா! உன் மேல எந்தத் தப்பும் இல்ல! நான் ஒல்லியா இருக்கேனா, அதோட பேபி பம்ப்பும் இன்னும் வரலியா அதான் உன்னால கண்டுப் பிடிக்க முடியல. எனக்கே போன மாசம் தான் இப்படின்னு தெரியும். இன்னுமே நானும், எனக்குள்ள உன்னோட உயிர்

இருக்குன்ற விஷயத்தை தெரிஞ்சதுல இருந்து மனசுக்குள்ள தவிச்சுக்கிட்டேத்தான் இருக்கேன். பேபின்னு` தெரிஞ்சதும் எவ்ளோ சந்தோஷப்பட்டேனோ அந்த அளவுக்கு பயந்தும் கிடக்கறேன் நான். ஊரறிய கல்யாணம் ஆகாம வயித்துல பேபி இருக்குன்னு அப்பாக்கு தெரிஞ்சா என்ன செய்வாறோன்னு பயமா இருக்கு ஜோனா!” என தேம்பியபடி சொன்னவளின் தலையை வருடிக் கொடுத்தவனுக்கு குழந்தையை சுமப்பவளும் குழந்தையாகவே தான் தெரிந்தாள்.

“உன் மேல ரொம்ப கோவமா இருக்கேன் ஜீவா! ரொம்ப, ரொம்ப கோவமா இருக்கேன்! தெரிஞ்ச உடனே என் கிட்ட ஷேர் பண்ணாம மறைச்சதுக்கு அப்படியே உன்னை உதைக்கனும்னு வெறியே வருது! லேடிஸ அணைச்சுத்தான் பழக்கம் அடிச்சுப் பழக்கம் இல்லாததனால நீ தப்பிச்ச. உன் அப்பா, நம்ம பேபி, இதெல்லாத்தையும் விட இப்ப இந்த புல்லட்ட எடுத்து உன்னை சரியாக்கறதுதான் எனக்கு முக்கியம் மூலான்” என்றவனின் குரல் நம்ம பேபி எனும் போது கரகரத்து ஒலித்தது.

“எனக்கு இந்த பேபி வேணும் ஜோனா, நம்ப பேபி வேணும். அத ஹார்ம் பண்ணற மாதிரி எந்த ப்ராசிடரும் வேணாம்னு டாக்டர்ட்ட சொல்லு! மயக்க ஊசிப் போடாமலே குண்ட எடுக்க சொல்லு! நான் வலி தாங்கிப்பேன்!” என சொன்னவள் தன்னை பலவீனமாக்குபவனை தன்னிடம் இருந்து விலக்கி நிறுத்தி, கண்களை அழுந்த துடைத்துக் கொண்டாள்.

மூலான் போய் பாடிகார்ட் ஜோனா ஃபோர்ம் ஆகி இருந்தாள்.

“டாக்டர் எது சொன்னாலும் நீ ஒத்துக்கனும் மூலான்! எனக்கு உன் நலம்தான் முக்கியம். நமக்கு வயசு இருக்கு, காலமும் இருக்கு! இன்னொரு பேபி” என ஆரம்பித்தவனை,

“ஸ்டாப் இட் ஜோனா!” என்றவள்,

“டாக்டர்!” என சத்தமிட்டு அழைத்தாள்.

உள்ளே வந்த டாக்டர் அவளிடம் மாதக்கணக்கைக் கேட்டு, வேறு பல டெஸ்ட் மற்றும் ஸ்கேன் எல்லாம்

**செய்து, குழந்தைக்கு ஆபத்து வராமல் சர்ஜரி செய்யலாம் என நம்பிக்கைத் தந்தார். ஜீவாவுக்கு செகண்ட் ட்ரீமெஸ்டர் ஆரம்பித்து இருந்ததால், ஆபரேஷன் செய்வதால் கர்ப்பம் கலைய வாய்ப்பில்லை எனவும், அனேஸ்டேசி கொடுக்கலாம், அதோடு ஓரளவு வீரியம் குறைந்த மாத்திரைகளை உட் கொள்ளலாம் எனவும் விளக்கினார். ஏற்கனவே சர்ஜரிக்கு ஆயத்தம் செய்திருக்க, இருவரையும் ஆபரேஷன் தியேட்டருக்கு கொண்டு செல்லப் பணித்தார் அவர்.**

தாய்க்கும் சேய்க்கும் எந்த ஆபத்தும் வராது என தெரிந்த பின்புதான் நிம்மதியானான் ஜோனா. இவளுக்கு ஆபத்து என்றால் குழந்தை வேண்டாம் என சொல்லி விட்டாலும், மனம் கிடந்து துடித்துக் கொண்டிருந்தது அவனுக்கு. மூன்று குழந்தைகள் வேண்டும் என தீரனிடம் விளையாட்டாய் சொல்லவில்லை அவன். உணர்ந்து, உண்மையாய் தான் சொன்னான். தனக்குக் கிடைக்காத பாசத்தை தன் குழந்தைகளுக்கு அள்ளி அள்ளி கொடுக்க வேண்டும் எனும் ஒரு வெறியே இருந்தது அவனிடம்.

மயக்கம் அடைய அனேஸ்டேசியா செலுத்தப்பட, தான், ஜீவா, அவள் கையில் தங்கள் குழந்தை, இவன் காலடியில் ஒரு நாய் என கற்பனை உலகம் விரிய, புன்னகையோடு மயங்கிப் போனான் ஜோனா.

ஜீவாவோ நடுவில் அவள் இருக்க, ஒரு பக்கம் அப்பா மறு பக்கம் ஜோனா என இருவரும் இரு கையைப் பிடித்து இழுக்க, மடியில் கத்திக் கதறும் குழந்தையை செய்வதறியாமல் இவள் பார்த்திருக்கும்படி கற்பனை பிம்பம் தோன்ற கலக்கத்துடனே மயங்கிப் போனாள்.

வேறு வேறு ஆபரேஷன் தியேட்டர்களில் சர்ஜரி நடக்க, வெளியே கலங்கிய முகத்துடன் அமர்ந்திருந்தான் தீரன். போலிஸ் வந்து அவனது வாக்குமூலத்தை வாங்கிக் கொண்டு, இவர்கள் இருவரும் கண் விழித்ததும் மீண்டும் வருவதாய் சொல்லிப் போனார்கள்.

இருவருக்குமே சர்ஜரி முடித்துத் தனி தனி அறைக்கு மாற்றி இருந்தார்கள். ஜீவா இன்னும் மயக்கத்தில் இருக்க, இரண்டு மணி நேரத்திலேயே முழித்திருந்தான் ஜோனா. பக்கத்தில் நின்றிருந்த தீரனிடம்,

“தீர்! ஜீவா எப்படி இருக்கா? சர்ஜரி முடிஞ்சதா? நான் அவளப் பார்க்கனும்!” என எழ முயன்றான்.

துப்பாக்கித் தோட்டா, மேல் கையின் நரம்பையும், சதையையும் துளைத்திருக்க காயம் ஆறவே பல வாரம் ஆகுமேன சொல்லி இருந்தார் டாக்டர். கையை அறவே அசைக்கக் கூடாதென தொட்டில் கட்டி தொங்க விட்டிருந்தார்கள். இன்னொரு கையில் ட்ரிப்ஸ் ஏறிக் கொண்டிருந்தது. மயக்க மருந்தின் வீரியம் இன்னும் இருக்க, எழுந்த உடனே தள்ளாடியவனைப் பிடித்து

மீண்டும் கட்டிலில் அமர்த்தினான் தீரன்.

“பாஸ்! மேடம் இஸ் அவுட் ஆப் சர்ஜரி! இன்னும் கான்சியஸ் ஆகல. ஒரு பயமும் இல்ல! அவங்களும் பேபியும் நல்லா இருக்காங்கன்னு டாக்டர் சொன்னாங்க!” என்றவன்,

“என்ன பாஸ்! இந்தப் பூனையும் பால் குடிக்குமான்ற மாதிரி மூஞ்ச வச்சிக்கிட்டு, என் தங்காச்சிய பேபிக்கு பால் கொடுக்க ரெடி பண்ணி வச்சிருக்கீங்க! கில்லாடி பாஸ் நீங்க” என கலாய்த்தான் தீரன்.

அவன் கேலியில் முகத்தில் வெட்கப் பூக்கள் பூத்தது ஜோனாவுக்கு.

“நான் அவள பார்க்கனும் தீரா! ப்ளிஸ் ஹெல்ப் பண்ணு. எதாச்சும் செஞ்சு அவள என் கூடவே தங்க வை தீர்! இனிமேலும் ஜீவாவ தனியா விட முடியாது என்னால! புரிஞ்சுக்க ப்ளிஸ்” என மன்றாடியவனை ஒரு பெருமூச்சுடன் பார்த்த தீரன்,

“இங்கயே படுத்திருங்க பாஸ்! என்னால முடிஞ்சத செய்யறேன்” என அறையை விட்டு வெளியேறினான்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் அந்த விஐபி அறையிலேயே இன்னொரு கட்டில் குடி வந்தது. கட்டிலோடு சேர்த்து மயக்கத்தில் இருந்த ஜீவாவும். அவளை உள்ளே கொண்டு வந்ததும், வேகமாக கட்டிலில் இருந்து இறங்க முயன்றவனை எட்டிப் பிடித்துக் கொண்டான் தீரன்.

“இருங்க பாஸ்! நீங்க எதாச்சும் இழுந்து விட்டுக்காதீங்க” என்றவன், வீல் சேரில் அவனை அமர வைத்து, அதில் ட்ரிப்ஸை மாட்டி மெல்ல ஜீவாவின் அருகே தள்ளிக் கொண்டுப்

போனான். அவள் முகத்தின் அருகே வீல் சேரை நிறுத்தியவன்,

“மறுபடி நானே வந்து கட்டிலுக்கு நகர்த்திட்டுப் போறேன் உங்கள! அதுக்குள்ள எந்த ஸ்டண்டும் செய்யாம கவனமா இருக்கனும்” என மிரட்டி விட்டே ரூமில் இருந்து வெளியேறினான்.

கை வலி உயிர் போனது ஜோனாவுக்கு! ஆனாலும் மனதில் இருந்த ஆனந்தம் அவனை படுத்திருக்க விடவில்லை. மயக்கத்தில் இருக்கும் தன்னவளின் முகத்தையே கண்ணெடுக்காமல் பார்த்திருந்தான் ஜோனா. நன்றாக

இருந்த கையை நீட்டி, அவள் கன்னத்தையும் நெற்றியையும் வருடிக் கொடுத்தான்.

“ஐ லவ் யூ மூலான்!” மெல்லிய குரலில் சொன்னவன், தலையைத் திருப்பி அவள் மணிவயிற்றைப் பார்த்தான். பச்சை வர்ண ஹாஸ்பிட்டல் கவுன் அவளை முழுதாய் மூடி இருந்தது. அவளைத் தடவி அவள் நலம் அறிந்துக் கொண்டது போல, அவள் வயிற்றையும் தடவி தங்கள் வாரிசின் நலம் அறிய கை காலேல்லாம் பரபரத்தது அவனுக்கு. ஒரு கை தொட்டிலில் இருக்க, மறு கையில்

ட்ரிப்ஸின் ஊசி ஏற்றப் பட்டிருந்தது. அந்த ஊசிக் கையோடே தன்னவளை தொட்டுத் தடவியவனுக்கு இன்னும் கொஞ்சம் நகர்ந்து அவள் வயிற்றின் அருகே போக விருப்பம் வந்தது. வண்டியை ஒற்றைக் கையால் தள்ள முடியவில்லை அவனால்.

“ம்ப்ச்” என சலித்துக் கொண்டவன்,

“பேபி! தோ டாடி வரேன்மா” என மெல்லிய குரலில் முணுமுணுத்தவன் இரண்டு காலாலேயெ வீல் சேரை உந்தி தள்ள முயன்றான். சர்கஸ் முயற்சி செய்து கொஞ்சமாய் நகர்ந்து அவளின்

வயிற்றுப் பகுதிக்கு வந்திருந்தான் ஜோனா.

கைகள் மெல்ல நடுங்க, கவுனின் மேலேயே தனது ட்ரீப்ஸ் ஏறும் கரத்தை வைத்தவனுக்கு கண்கள் கலங்கிப் போனது. அவனால் எதையும் உணர முடியவில்லை என்றாலும், அழுத்தினால் எங்கே குழந்தைக்கு வலித்து விடுமோ எனும் பயத்தில் மென்மையாய் ஜீவாவின் வயிற்றைத் தடவிக் கொடுத்தான்.

அந்த நேரம் உள்ளே வந்த நர்ஸ்,

“சார் உங்க கட்டில்ல படுத்து ரெஸ்ட் எடுங்க” என அவனுக்கு உதவ வர,

“இல்ல, பரவாயில்ல! ஐம் ஓகே” என கட்டிலுக்கு போக மறுத்தான் இவன். அப்படியே அமர்ந்த வாக்கிலேயே அவனை செக் செய்தவர், ஜீவாவையும் செக் செய்தார்.

“இன்னும் கொஞ்ச நேரத்துல கண் முழிச்சிடுவாங்க” என சொல்லி வெளியேறினார் அவர்.

அவர் போனதும் மீண்டும் தனது சம்பாஷனையைத் தொடர்ந்தான் ஜோனா.

“பேபி, செகண்ட் ட்ரிமெஸ்டர்னு டாக்டர்ட்ட உன் அம்மா சொன்னாலே, அப்படின்னா மூனு மாசத்துக்கு மேல ஆகிருக்குமா உங்க வயசு? உங்களுக்கு கண், காது, மூக்கு எல்லாம் வந்துருக்குமா? ஸ்கூல்ல இந்தப் பாடத்தப்போ உன் டாடி கிளாஸ் கட் அடிச்சிட்டு ஊர் சுத்தப் போயிட்டேன்டா. இப்போ நினைச்சா ரொம்ப வருத்தமா இருக்கு! போன் கையில இருந்தாலாச்சும் கூகள் செஞ்சுப் பார்த்துருப்பேன்! நான் சொல்லறது எதாச்சும் கேக்குதாடா?”

என அவள் வயிற்றின் அருகே இன்னும் முன்னே குனிந்துப் பேசினான் ஜோனா.

கிட்டே நெருங்கிப் பேசினால் மட்டும் அவன் குழந்தை குரல் கொடுத்துவிடுமா? முதல் முறை அன்னை தந்தையாகும் எல்லோரும் செய்யும் அழகு அசட்டுத்தனங்களை இவனும் செய்தான்.

“அம்மாவுக்கு உடம்பு சரியானதும், உங்களையும், உங்கள வயித்துல வச்சிருக்கற அம்மாவையும் என் கூடவே வச்சிப்பேன்! தினம் நைட் உங்களுக்கு டாடி லல்லபாய் பாடி தூங்க வைப்பேன். இப்போ

**சாம்பிளுக்கு ஒன்னு கேக்கறீங்களா?" என கேட்டவன்,**

**"டிவிங்கிள் டிவிங்கிள்**

**லிட்டில் ஸ்டார்" என இவன் பாட**

**"ஜோனா இஸ் எ ஷைனிங் ஸ்டார்" என கரகரப்பான குரல் அதை முடித்து வைத்தது.**

**படக்கென தலையைத் திருப்பி ஜீவாவைப் பார்த்தான் ஜோனா.**

“ஃபைனலி யூ ஆர் அவேக்! வலிக்குதா மூலான்?” என கேட்டவன் அவள் அருகே மீண்டும் நகர முயன்றான்.

“ஹே, இரு! ட்ரிப்ஸ் கைல தள்ளாதே ஜோனா” என்றவள் மெல்ல எழுந்து அவனுக்கு உதவ வர முயன்றாள்.

“ஒழுங்கா மறுபடி நீ கட்டில்ல படுக்கல, நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது ஜீவா!” என்றவன்,

“தீரா!” என சத்தம் போட்டான்.

அவன் அடித்துப் பிடித்துக் கொண்டு உள்ளே ஓடி வந்தான். அவனோடு

ரவுண்ட்சுக்கு டாக்டரும் உள்ளே வந்தார்.

ஜீவாவின் உடல் நிலையைப் பற்றி எல்லாம் விசாரித்து அறிந்துக் கொண்டான் ஜோனா. தோட்டா அவள் ஒரு பக்க தோளின் மேல் சதையை மட்டுமே துளைத்திருந்தது. அதனால் அவளுக்கு பாதிப்புக் குறைவுதான் என சொன்னவர், தங்கள் ஹாஸ்பிட்டலின் சிறந்த கைனியிடம் அவளை ஒப்படைப்பதாக சொன்னார். கைனியிடம் கர்ப்பம் சம்பந்தப்பட்ட விவரங்களை கேட்டு தெளிவுப்படுத்தி அதன் படி நடக்க சொல்லி

அறிவுறுத்தி விட்டுப் போனார் டாக்டர்.

அவர் போனதும்,

“சும்மா பார்த்துட்டு நிக்காதே தீரா! ஜோனாவ படுக்க வை! ஹீ லுக்ஸ் டயர்ட்! கொஞ்ச நேரம் தூங்கட்டும்” என தீரனை கடிந்துக் கொண்டாள் ஜீவா.

“எல்லாம் என் நேரம்! ரெண்டும் என்னையே ஆட்டி வைக்குதுங்க” என புலம்பியவன், ஜோனா மறுக்க மறுக்க அவனை வற்புறுத்தி படுக்க வைத்தான்.

“என்ன சாப்பாடு குடுக்கலாம்னு கேட்டு, நர்ஸ வர வச்சு அவள சாப்பிட வைடா” என்றவனுக்கு அவனையும் மீறி கண்கள் மூடிக் கொண்டது.

“நான் பார்த்துக்கறேன் பாஸ்! நீங்க தூங்குங்க”

ஜோனா கண்ணசந்ததும்,

“என் போன் எங்க தீரா? யாரோட சதி இந்த ஷூட் அவுட்னு கண்டுப் பிடிக்கனும்! இன்பார்மேஷன்

கிடைக்க சில கால்ஸ் செய்யனும். போனைத் தேடி குடு” என கேட்டாள் ஜீவா.

“லேட்டர்...ரெஸ்ட் ஃபர்ஸ்ட்” என தூக்கத்திலும் இவர்கள் பேசுவதைக் கேட்டு குளறலாக கட்டளையிட்டான் ஜோனா.

கையில் கட்டுடன் பாவமாய் தூங்கிக் கொண்டிருப்பவனைப் பார்க்க பார்க்க இவளுள் கோபம் பொங்கியது.

“போனைக் குடு தீரா! என் ஜோனாவை இப்படி படுக்க

**வச்சவங்கள நான் சும்மா விட மாட்டேன்! கொஞ்சம் அசந்திருந்தா அவன் உயிர் போயிருக்கும்!”**
**என்றவளுக்கு உடல் ஒரு முறைத் தூக்கிப் போட்டது.**

**“கால்ம் டவுன் ஜீவா மேடம்! ஷூட் பண்ண ஒருத்தன் உங்க உபாயத்துனால ஸ்பாட் அவுட். இன்னொருத்தன கஸ்டடியில வச்சிருக்காங்க. டிபார்ட்மேண்ட் உள்ள என் ஆள் ஒருத்தி இருக்கா. அங்க என்ன நடந்தாலும் நமக்கு உடனுக்குடன் நியூஸ் வந்துடும். சோ நோ வோரிஸ்! நீங்க ரெஸ்ட் எடுங்க சிஸ்டரு. நான் சாப்பிட எதாச்சும்**

அரேஞ் பண்ணறேன்” என
வெளியேறினான் தீரன்.

அவன் வெளியேறியதும், மெல்ல
கட்டிலில் இருந்து இறங்கினாள்
ஜீவா. தள்ளாடிய உடலை ஒரு
நிலைப்படுத்தி, ஜோனாவின் கட்டில்
அருகே போனாள். அதில் ஏறி அவன்
அருகே அமர்ந்துக் கொண்டவள்,
தொட்டிலில் தொங்கிய கையை
மென்மையாக தடவிக் கொடுத்தாள்.

“உனக்கு யாருடா எதிரி? என் ஸ்வீட்
ஜோனாவுக்கு யாருடா எதிரியா
இருக்க முடியும்? அதுவும் உன்னைக்
கொல்லற வெறியோட சுத்தறவன்

**யாரு? யாரா இருந்தாலும் என்னைத் தாண்டித்தான் உன்னை நெருங்க முடியும் ஜோனா”**

**அவனிடம் இருந்து மெலிதாய் ஹ்ம்ம் எனும் பதில் மட்டும் வந்தது. மெல்ல நெருங்கி அவன் இதழில் பட்டும் படாமல் ஒரு முத்தம் வைத்தாள் ஜீவா!**

**“என் ஜோனா இன்னும் உயிரோடத்தான் இருக்கான்னு எனக்கு ஒரு கன்பர்மேஷன் வேணும்னு தான் கிஸ் பண்ணேன்! வேற ஒன்னும் இல்ல, ஓகேவா?”**

அவன் இதழ்களில் மெல்லிய புன்னகை நெளிந்தது.

நர்ஸ் உணவோடு வர, அவளே சாப்பிட்டுக் கொள்வதாக சொல்லியதால் உயரமான மேசையை அவள் அருகே செட் செய்து கஞ்சி பவுலையும் கரண்டியையும் கையில் கொடுத்து விட்டுப் போனார். எதாவது தேவை என்றால் பஸ்ஸரை அழுத்த சொல்லி விட்டுத் தான் போனார் அவர்.

“குட்டி ஜோனாவுக்கு பசிக்குதா?” என கேட்டவாறே மெல்ல சாப்பிட ஆரம்பித்தாள் ஜீவா.

ஒரு மணி நேரத்திற்குள்ளேயே ஜோனாவுக்கு உறக்கம் கலைவது போல இருக்க, இறங்கி அவள் கட்டிலில் வந்துப் படுத்துக் கொண்டாள் ஜீவா. அவன் கண்ணைத் திறந்துப் பார்க்க, இவள் கண்ணைத் தூங்குவது போல மூடிக் கொண்டாள்.

அந்த நேரம் தான் கதவு படாரென திறந்தது. இருவர் விழிகளும் உள்ளே வந்தவரை நோக்கியது. ஜீவா பதட்டமாக,

“டாடி” என உச்சரித்தாள்.

“ஹௌ டேர் யூ!” என கையைத் தூக்கிக் கொண்டு ஜீவாவை அறைவதற்கு நெருங்கியவரை, வேகமாய் எழுந்து வந்து தன் ஒற்றைக் கையால் தடுத்திருந்தான் ஜோனா.

“டோண்ட் யூ டேர் டு டச் ஹேர்!”

“அவ என் மகடா!” என ரௌத்திரமானவர் கண்களாலேயே அவளை எரித்தார்.

தந்தைக்குத் தான் கர்ப்பமான விஷயம் தெரிந்திருக்கிறது என புரிந்துப் போனது ஜீவாவுக்கு.

“டாடி!” என ஈன ஸ்வரத்தில் அழைத்தவள் கண்கள் பொங்கப் பார்த்தது. அழுதால் இன்னும் ஆத்திரமாவார் என முயன்று அழுகையை அடக்கினாள் ஜீவா.

ஜோனாவை ஒரே தள்ளில் தள்ளி விட்டவர், மகளை நெருங்கினார்.

“உனக்கு சுதந்திரம் கொடுத்து வளர்த்தது இப்படி வந்து நிக்கத்தானா ஜீவா? இவன் மேல க்ரேஷா இருக்கியே, அதெல்லாம் ஒரு ப்பேஸ்தான், சீக்கிரம் அதில இருந்து வெளி வந்திடுவன்னு நெனைச்சேன். இப்படி அவனோட குழந்தைய சுமந்துட்டு நிப்பன்னு நான் கனவுல கூட நெனைச்சுப் பார்க்கல! யூ இடியட்!” என அவளைப் பிடித்து உலுக்க வந்தவரை தன் பலம் கொண்ட மட்டும் பிடித்துத் தள்ளினான் ஜோனா.

தடுமாறி கீழே விழுந்துக் கிடந்த தன் தந்தையை அதிர்ச்சியாகப் பார்த்தாள்

ஜீவா. பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்தவளை கட்டிக் கொண்டான் ஜோனா.

“ஒன்னும் இல்ல பேபி! ஒன்னும் இல்ல! நான் இருக்கற வரைக்கும் யாரும் உன்னை ஹர்ட் பண்ண முடியாது! அதுக்கு நான் விட மாட்டேன்” என்றனின் பிடியில் இருந்து திமிறினாள் ஜீவா.

“விடு, விடு என்னை! இது எல்லாத்துக்குமே நீ தான் காரணம் ஜோனா! சாகப் போனவள அப்படியே விட்டிருந்தனா, இந்நேரம் நான் செத்த இடத்துல பெரிய மரமே

முளைச்சிருக்கும். ஏன் என்னைக் காப்பாத்துன? ஏன், ஏன்? ஐ ஹேட் யூ ஜோனா! ஹேட் யூ சோ மச்” என கதறியவளை அதிர்ச்சியாகப் பார்த்தான் ஜோனா.

“நான் காப்பாத்துனனா? எங்கே, எப்போ?”

அத்தியாயம் 18

2004, உதகமண்டலம்

கட்டிலில் தலையணைக் கொண்டு தலையை மறைத்துக் கொண்டு குப்புறப் படுத்திருக்கும் ஒன்பது வயது ஜீவாவைப் பாவமாகப் பார்த்தப்படி நின்றிருந்தார் மீனம்மா.

“ராசா! சாப்பிட வாங்க”

“எனக்கு ஒன்னும் வேணா! நீங்க உங்க வேலையப் பார்த்துட்டுப் போங்க!” என பெருங்குரலெடுத்து கத்தினாள் குட்டி ஜீவா.

“என்ன சத்தம் இங்க?” என ரூமின் கதவருகே வந்து நின்றார் அவள் அப்பா ஜீவானந்தம்.

அவர் குரலில் படக்கென கட்டிலில் இருந்து எழுந்து அமர்ந்துக் கொண்டாலும், கையைக் நெஞ்சின் முன் கட்டிக் கொண்டு அவரை நேராய் முறைக்காமல், ஓரக்கண்ணால் முறைத்தாள் சின்னவள். அவள் செயலில் பூக்கப் பார்த்த புன்னகையை அடக்கியவர்,

“எழுந்துப் போய் சாப்பிடு ஜீவா! சாப்பிட்டதும் நான் வாங்கிக் கொடுத்த 500 பீசஸ் ஜிக்சாவ் பஸில

உட்கார்ந்து செய்” என
கட்டளையிட்டார்.

கட்டளையிடாமல் சாந்தமாக
சொல்லி இருந்தால், வயதின்
துருதுருப்பில் அவளே ஓடிப் போய்
செய்திருப்பாள். ஆனால் அவருக்கு
எல்லாமே கட்டளையாகத்தான்
வரும். அவர் சொன்னதைக் கேட்கா
விட்டால் வாய் பேசும் முன் கைப்
பேசிவிடும். அப்படித்தான் காலையில்
எக்ஸர்சைஸ் செய்ய வரமாட்டேன்
என கட்டிலில் அமர்ந்துக் கொண்டு
அழிச்சாட்டியம் செய்தவளுக்கு
கையில் சுளீரென ஒன்று
வைத்திருந்தார் ஜீவானந்தம். அடியை

வாங்கிக் கொண்டு பிடிவாதமாய் நின்றவளின் செய்கையில் அவர் தன்னையேப் பார்த்தார்.

‘அவ அம்மா மாதிரி உருவத்துல குட்டியா இருந்தாலும், அடம், பிடிவாதமெல்லாம் அப்படியே என்னை மாதிரியே இருக்கு’ என மகளை மனதில் மெச்சிக் கொண்டார் அவர்.

ஆனாலும் அவளுக்கு விட்டுக் கொடுத்தால் இத்தனை நாள் போட்ட உழைப்புக்கு பலன் இல்லாமல் போய்விடுமே! மகளை அப்படியே கையில் அள்ளிக் கொண்டவர்,

வற்புறுத்தி உடற்பயிற்சி செய்ய வைத்தே விட்டார். அந்தக் கோபம் தான் உணவு வேண்டாம் என சொல்ல வைத்திருந்தது அவளை. இப்பொழுதெல்லாம் அட்டேன்ஷன் கிரேபிங் மோட்டில் இருந்தாள் சின்னவள்.

மற்ற தந்தைகள் போல தனது தந்தை இல்லை என்பதை உணர ஆரம்பித்திருந்த வயது அது. தன் அப்பாவும் தன்னோடு சேர்ந்து சிரித்து சாப்பிட வேண்டும், எக்சர்சைஸ் சொல்லிக் கொடுக்கும் போது கடுமையாக இல்லாமல் கனிவாக இருக்க வேண்டும், ஜீன்ஸ் டீசர்ட் தவிர்த்து மற்ற பெண் குழந்தைகள்

அணிவது போல பிரின்சஸ் ட்ரேஸ் வாங்கிக் கொடுக்க வேண்டும், தன் வகுப்பு மாணவிகளை அழைத்துச் செல்ல வரும் அவர்கள் தந்தைமாரைப் போல அணைத்துத் தூக்கிக் கொள்ள வேண்டும், முடியை குட்டையாக வெட்டாமல் ரபுன்ஷேல் போல வளர்க்க விட வேண்டும் என அந்த சின்ன இதயத்துக்குள் குட்டி குட்டி ஆசைகள் ஏராளமாய் முளைத்து நின்றன. அதெல்லாம் நடக்காதப் போது, கோபம் வந்தது குட்டி ஜீவாவுக்கு. தகப்பன் சொன்னதை எல்லாம் எதிர்க்க வேண்டும் எனும் மனோபாவமும் வந்தது.

“வர வர ரொம்ப பிடிவாதம் பிடிக்கற ஜீவா நீ! என் பொறுமைக்கும் ஒரு எல்லை இருக்கு! பிரம்ப எடுக்க வச்சிடாதே!” என்றவரின் பார்வை அவள் ரூமில் தொங்கிக் கொண்டிருக்கும் பிரம்பில் பதிந்து மீண்டது.

அதை அவர் பயன்படுத்தியதே இல்லை. பிரம்பைக் காட்டி மிரட்டும் போதே அவர் பேச்சுக்கு அடி பணிந்து விடுவாள் மகள். அவளுக்கு அதைப் பார்த்தால் அவ்வளவு பயம். அன்று அந்த பயத்தையும் மீறி கண்களில் எதிர்ப்பு தெரிய, கோபம் வந்து

விட்டது ஜீவானந்தத்திற்கு. பிரம்பை கையில் எடுத்தவர், அவள் காலில் இரண்டு அடி வைத்தார். வலியில் அழ ஆரம்பித்தவள், அவர் முறைப்பில் வாயைப் பொத்திக் கொண்டாள்.

பெரிய கண்களில் கண்ணீர் நிறைந்திருக்க, தேம்பலை அடக்கியவளைப் பார்த்தவர் பிரம்பை ஒரு மூலையில் விட்டெறிந்தார். அப்பாவையும் மகளையும் கண் கலங்க பார்த்திருந்தார் மீனம்மா. அவரால் முதலாளியை எதிர்த்து நடுவே வர முடியாதே!

**“போ, போய் சாப்பிடு” மீண்டும் கட்டளையாக சொன்னார் ஜீவானந்தம்.**

**காலை பொத் பொத்தென வைத்து நடந்துப் போனாள் சின்னவள்.**

**“அடங்குதா பாரேன்!” என முணுமுணுத்தப்படியே தனது ஸ்டடி ரூமுக்குப் போனார் அவர்.**

**கதவைப் பூட்டிக் கொண்டவர்,**

**“அடிச்சிட்டேன் நம்ம மகள! வேற என்ன செய்ய நான்? ஹார்ட்ல**

பிரச்சனைன்னு என் தாய் மாமனும் அத்தையும் உன்னைப் பொத்தி பொத்தி வளத்து என் கையில குடுத்தாங்க! நானும் உன்னை பூ மாதிரிதான் பார்த்துக்கிட்டேன். நான் தொட்டா கூட துவண்டு போயிடறியேன்னு என் ஆசையெல்லாம் அடக்கி வச்சு, பொன்னாட்டம் பார்த்துக்கிட்டேன் உன்னை. டாக்டர், புள்ள பெக்கறதுக்கு உன் உடம்புல சக்தி இல்லைன்னு சொல்லவும், எவ்ளோ கவனமா இருந்தேன் நம்ம உறவுல. ஆனாலும் என்னை ஏய்ச்சிட்டியேடி! ஊரைக் காக்க பார்டர்ல பாடுபட்டுட்டு இருந்தவன் கிட்ட கர்ப்பத்தை

மறைச்சு, எனக்கு வாரிசா ஒரு உசுர குடுக்கனும்னு உன் உசுர பணயம் வச்சிட்டியேம்மா! போனதுதான் போன, உன்னை மாதிரியே ஹார்ட்ல பிரச்சனை உள்ள புள்ளய என் கையில குடுத்துட்டுப் போயிட்டியே! சின்னதுலயே அவளுக்கு ஆபரேஷன் செஞ்சு ஹார்ட்ட சரியாக்கி, உன்னை வளத்த மாதிரி பொத்தி பொத்தி வளக்காம, என் மனச கல்லாக்கிட்டு நம்ம மகள ஆம்பளப் பையன் மாதிரி வளக்கறேன்டி. நீ இல்லாத இந்த உலகத்துல எனக்கு அவதான்டி எல்லாம். நம்ம ஜீவாவ வளக்கனும்னு நான் உசுரா நேசிச்ச பட்டாளத்து வேலையை

**விட்டுட்டேன். என் புள்ள வளர்ப்புல தலையிட்ட எல்லோரையும் ஒதுக்கிட்டு இவள இந்த ஊருக்கு கூட்டிட்டு வந்துட்டேன்! நம்ம ஜீவாவுக்காகத்தான் உன் கிட்ட வரத் துடிக்கிற இந்த ஜீவன இன்னும் புடிச்சு வச்சிருக்கேன்டி." என மனைவியின் படத்தின் முன்னே கண்ணீர் உகுத்தார் ஜீவானந்தம்.**

**"என்னால முடியலடி! உன்னை மாதிரியே அந்த பெரிய கண்ண வச்சுப் பாவமா பார்க்கிறப்போ அள்ளி அணைச்சுப் பக்கத்துல வச்சிக்கனும்னு தோணுது! பாசத்தக் காட்டி அவள வீக்கா ஆக்கிடக்**

கூடாதுடி! தைரியமா வளரனும் என் மக! வயசுக்கு வராத பச்சைக் குருத்துங்களை கூட ஆபாசமா பார்க்கற ஆம்பளைங்க இருக்கற உலகம்டி இது! என் பொண்ணு இவனுங்கள எல்லாம் எதிர்த்து நின்னு வாழ பழகனும். நான் எவ்ளோ நாள் அவளுக்கு துணை வருவேன் சொல்லு! அவள அவளே பார்த்துக்கற மாதிரி வளக்கறேன்டி. என் பாசம் அவள பலவீனப்படுத்தக் கூடாது! என் கண்டிப்பு அவள பலமாக்கட்டும்!" என புலம்பியவர், அலமாரியின் கீழ் ஒளித்து வைத்திருக்கும் ஸ்காட்ச் பாட்டிலை  எடுத்துத் திறந்து

கிளாசில் ஊற்றி அப்படியே ராவாக குடித்தார்.

தன் மனைவியின் படத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு அப்படியே அங்கிருந்த சோபாவில் படுத்துக் கொண்டார் ஜீவானந்தம். கண்களில் கண்ணீர் பாட்டுக்கு வழிந்தபடி இருந்தது.

குழந்தை வளர்ப்பு என்பது இப்படித்தான் இருக்க வேண்டும் என எந்த வரைமுறையோ ரூல்ஸ் புத்தகமோ இல்லாத ஒரு கலை. பிள்ளையை பாசமாக வளர்ப்பது, கண்டிப்பாக வளர்ப்பது, அடித்து

வளர்ப்பது, கேட்டதெல்லாம் கொடுத்து வளர்ப்பது, படி படியென வளர்ப்பது, பிள்ளைக்கு அடிமையாய் இருப்பது, பிள்ளையை அடிமையாய் வளர்ப்பது என அவரவர் வளர்ந்த சூழ்நிலைக்கேற்ப தங்கள் வாரிசையும் வளர்க்கிறார்கள். அவர்கள் குடும்ப சூழலுக்கு சில முறைகள் பொருந்தி வரும். நம் குடும்ப சூழலுக்கு சிலது பொருந்தி வராது. இதில் நான் தான் சரி, நீ பிழை எனும் வாதம் எங்கிருந்து வருகிறது? தன் பிள்ளையைத் தன் வழியில் நன்றாகத்தான் வளர்ப்பதாய் நினைக்கும் ஜீவானந்தத்தை கேள்வி கேட்க நான் யார்? (எப்பொழுதும்

போல நடுநிலையாய் இருந்து அவர் பக்க வாதத்தை எடுத்து சொல்லி இருக்கிறேன். அவ்வளவுதான் அதற்காக அவரை சப்போர்ட் செய்கிறேன் என தப்பாக நினைக்க வேண்டாம் டியர்ஸ்)

சாப்பாட்டு மேசைக்கு வந்த ஜீவா, மீனம்மா பரிமாறிய உணவை கஸ்டப்பட்டு முழுங்கினாள். சிவந்திருந்த அவள் முகத்தையும், கண்களையும் பார்த்த மீனம்மாவுக்கு மனதே கேட்கவில்லை.

“போன மகராசி நிம்மதியா பெத்துப் போட்டுட்டு போயிட்டா! இந்தப்

புள்ளப் படற பாட்ட பார்க்க முடியலையே” என புலம்பினார்.

“மீனம்மா!”

“என்னடா ராசா?”

“அம்மா மேலோகத்துல நிம்மதியா இருப்பாங்களா?”

“கண்டிப்பாடா குட்டி! செத்துப் போயிட்டா கஸ்டம், வலி, சோகம் எதுவும் தெரியாதும்மா! சாமி பக்கத்துல நிம்மதியா இருப்பாங்க”

“செத்துப் போயிட்டா நெஜமா ஒரு வலியும் தெரியாதா?” என தந்தை அடித்த இடத்தை நீவி விட்டப்படியே கேட்டாள் சின்னவள்.

“சத்தியமா வலிக்காது! அதான் உசுரு போயிடுமே அப்புறம் எங்கிருந்து வலிக்கும்?” என அவள் கேட்கும் கேள்விக்கு பதிலளித்தார் அவர்.

“ஓஹோ!” என சற்று நேரம் சிந்தித்தவள்,

**“மனுஷங்க எப்படி செத்துப் போவாங்க?” எனும் கேள்வியைக் கேட்டாள்.**

**“எமன் வந்து கூப்பிட்டா, செத்துப் போயிடுவாங்க ராசா” என தனக்குத் தெரிந்த விதத்தில் பதில் அளித்தார் மீனம்மா.**

**“எமன் எப்ப கூப்பிடுவாரு?”**

**“அது… உங்க அம்மா மாதிரி, அவங்க காலம் முடிஞ்சா வந்து கூட்டிட்டுப் போயிடுவாரு.”**

**“காலம் எப்போ முடியும்?”**

**“அது யாருக்குத் தெரியும்! அந்த எமன் ஒருத்தனுக்கு மட்டும்தான் தெரியும்” என சொல்லிக் கொண்டிருக்க, ரேடியோவில் உள்ளூர் சேதியாக தொட்டபெட்டா மலையில் காதலர்கள் குதித்துத் தற்கொலை என செய்தி வாசித்தார்கள்.**

**அதை கேட்ட சின்னவள்,**

**“தற்கொலைன்னா என்ன மீனம்மா?” என கேட்டாள்.**

**“அது எமன் தானா வரதுக்கு முன்ன, இவங்களே எமன பார்க்க டிக்கட் வாங்கறது! அந்தப் பேச்சு எதுக்கு நமக்கு! நீங்க சாப்பிடுங்க”**

**மெல்ல உணவை மென்றவள்,**

**“அந்த நீயூஸ்ல சொன்ன மாதிரி, தற்கொலை பண்ணாலும் செத்துப் போயிடுவாங்களா?” என இன்னும் நோண்டிக் கேட்டாள் இவள்.**

**கடுப்பாகிப் போனார் மீனம்மா!**

“ராசா, தற்கொலைப் பண்ணாலும் சாவுதான், தானா செத்தாலும் சாவுதான். இதுக்கு மேல இதப்பத்தி பேச வேணாம். போங்க போய் அப்பா சொன்ன வேலையை பாருங்க” என சொல்லி விட்டு பாத்திரம் தேய்க்க சென்று விட்டார்.

“மலையில இருந்து குதிக்கறது இஸ் ஈக்குவல் டூ தற்கொலை. தற்கொலை இஸ் ஈக்குவல் டூ செத்துப் போறது! செத்துப் போறது இஸ் ஈக்குவல் டூ நோ பேய்ன்! சோ நான் மலையில இருந்து குதிச்சு தற்கொலை செஞ்சிக்கப் போறேன். இனிமே டாடி அடிச்சா வலிக்காது! ஜாலி, ஜாலி” என

சொல்லிக் கொண்டவள், உடனே தனது ஜீன்சையும், ஸ்வெட்டரையும், தொப்பியையும் மாட்டிக் கொண்டு கிளம்பி விட்டாள்.

“தொட்டபெட்டா மலை, தோ ஜீவா உன்னைத் தேடி வரேன்”

இந்திய மண்ணில் முதன் முதலாய் கால் தடம் பதித்திருந்தான் பதினாறு வயது ஜோனா. அவன் அம்மா சூசன் எவ்வளவோ எடுத்து சொல்லியும் தன் தந்தையை நேரில் பார்த்தே ஆக வேண்டும் என பிடிவாதம் பிடித்து வந்திருந்தான் அவன்.

சூசன் இன்னொரு மணம் புரிந்திருக்க, இவனது ஸ்டேப் டாட் தனது குழந்தைகளை அப்படித்தான் பாசமாய் பார்த்துக் கொள்வார். சூசனும் சின்னக் குழந்தைகளான அவர்கள் மேல் அன்பைப் பொழிவார். கண்டும் காணாதது போல பார்த்திருக்கும் இவனுக்கும் இப்படி தந்தையும் தாயுமாய் தன்னை சீராட்ட மாட்டார்களா என ஏக்கமாக இருக்கும். தாயின் கவனம் சின்னவர்கள் மேல் இருக்க, இந்தியாவில் இருக்கும் தந்தையாவது தன்னை ஆசையாக ஏற்றுக் கொள்வாரா எனும் ஏக்கம் அரிக்க

ஆரம்பித்திருந்தது குழந்தையில் இருந்து விடலைப் பையனாக மாறி இருக்கும் அவன் நெஞ்சில். ஸ்டேப் டாட் இவன் வீட்டில் இருக்க அனுமதித்திருந்தாலும், ஒரு வகை ஒதுக்கம் எப்பொழுதுமே வெளிப்படும் அவரிடம்.

ஜெய்க்குமாரைப் இவன் நேரில் பார்த்து பல வருடங்கள் ஆகி இருந்தன. தூசனை படுத்தி எடுத்து அவரது நம்பரை வாங்கி வைத்திருந்தான் ஜோனா. வாரம் ஒரு முறை இவன் அழைத்தாலும் மாதம் ஒரு முறைதான் அவன் காலை அட்டேண்ட் செய்து பேசுவார். ஹாய்,

பாய் என தான் இருக்கும் அவரின் பேச்சுக்கள். அதுவே பேரானந்தமாக இருக்கும் ஜோனாவுக்கு. அவர் தன்னிடம் இம்ப்ரேஸ் ஆக வேண்டும் என தமிழ் மொழியை ஆசையாக கற்றுக் கொண்டான். மழலை போல அவரிடம் பேசிக் காட்ட, அதை கேட்க கூட பொறுமை இருந்தது இல்லை அவரிடம்.

என்னவோ மனது வெறுமையாய் இருந்தது அவனுக்கு. தாய்க்கு அவரின் குழந்தைகள் போதும், தான் வேண்டாமென இவனே முடிவு எடுத்துக் கொண்டான். தந்தையாவது தன்னை ஏற்றுக் கொள்வாரா என

அறிந்துக் கொள்ள வேண்டும் என மனம் கூக்குரலிட, சூசனிடம் பிடிவாதமாய் இந்தியா போவது என ஒற்றைக் காலில் நின்றான்.

“லிசன் அலேக்ஸ்! அங்க போனா உனக்கு தேவையில்லாத ஏமாற்றம் தான் கிடைக்கும். நீ எதிர்ப்பார்க்கற மாதிரி அவர் ஃபாதர் மெட்டீரியல் இல்ல அலேக்ஸ்! யூ ஆர் எ ஜஸ்ட் ஆக்சிடேண்ட் ஃபோர் ஹிம்” என வயது வந்த மகனிடம் மென்று விழுங்கினார்.

“நானே பார்த்துப் பேசி அவர் என்னைப் பத்தி என்ன

நினைக்கறார்னு தெரிஞ்சுக்கறேன் மாம்! ப்ளிஸ்" என கெஞ்சியவனுக்கு நோ சொல்ல முடியவில்லை அவரால்.

ஜெய்க்குமாருக்கு போன் செய்ய அவர் அட்டேண்ட் செய்யவேயில்லை. ஒரு பெருமூச்சுடன் எமெர்ஜென்சி என்றால் மட்டும் பயன்படுத்த சொல்லி இருந்த நம்பருக்கு போன் போட்டார் சூசன். எடுத்தது ஜெயின் எல்லா அந்தரங்கமும் தெரிந்த அவர் அசிஸ்டேண்ட். அவரிடம் ஜெய் ஷூட்டிங்கிற்காக ஊட்டி போயிருப்பதாக அறிந்துக் கொண்டு,

மகன் அங்கே செல்ல ஏற்பாடுகள் செய்துக் கொடுத்தார் சூசன்.

"அலேக்ஸ்! டு ரிமேம்பர், ஐ எம் ஆல்வேய்ஸ் தேர் ஃபோர் யூ" என சொல்லி மகனை அனுப்பி வைத்தார்.

ஜெயின் அசிஸ்டெண்டால் ஹோட்டலில் தங்க வைக்கப் பட்டான் ஜோனா. ஜெய் பிறகு வந்துப் பார்ப்பார் என சொன்னவரிடம், தானும் ஷீட்டிங் பார்க்க வருகிறேன் என ஒட்டிக் கொண்டான் இவன். நெடு நெடு வளர்த்தியில், ஒல்லியாய், வெள்ளையாய் இருந்தவனை

பார்த்தவருக்கு மனதே கேட்கவில்லை.

“இந்த மாதிரி ஆளுங்களுக்கெல்லாம் அந்தக் கடவுள் கேட்காம புள்ள வரம் குடுக்கறான் பாரு!” என முனகிக் கொண்டவர், அவனை தன்னோடு அழைத்துப் போனார்.

தற்கொலை காட்சி ஒன்று படமாகிக் கொண்டிருந்தது தொட்டபெட்டாவில். ஷீட்டிங் பார்க்கவென கூட்டம் வேறு கூடி இருந்தது. பட நாயகன் செய்த சொதப்பலில் பல டேக்குகள் போய் கொண்டிருந்தன. கடுப்பில் உள்ளே கொதித்துக் கொண்டிருந்தாலும்,

**வெளியே சிரித்த முகமாய் நின்றிருந்தார் ஜெய்க்குமார். அவர் அசிஸ்டேன்ட் அருகே போய், ஜோனாவைக் காட்டி குசுகுசுவென எதுவோ சொல்ல, அவரும் அவனைத் திரும்பிப் பார்த்தார். தந்தையின் பார்வையைத் தாங்கி நின்றவன், பளிச்சென புன்னகைத்தான்.**

**“இன்னிக்கு இவன முடிச்சு விட்ரனும்” என முனகியவர், அசிஸ்டெண்டிடம் ப்ரேக் விட சொன்னார்.**

**ஜோனாவை நோக்கிப் போனவர், மேலும் கீழும் அவனைப் பார்த்தார்.**

“நல்லா அழகாத்தான் இருக்கான். நான் லீகலா பெத்ததுங்க ரெண்டும் இவன் அழகுக்கு கிட்டக் கூட வர முடியாது” என முனகிக் கொண்டே,

“வா” என ஒற்றை வார்த்தையை உதிர்த்து விட்டு கேரவானை நோக்கிப் போனார்.

அந்த வெறும் வாவில் சோர்ந்துப் போனான் ஜோனா. அவ்வளவு தூரம் பயணித்து வந்தது ஜெட்லேக்காக இருந்தும் தந்தையைப் பார்க்க வேண்டுமெனும் ஆவலில் ஓடி

வந்திருந்தவனுக்கு ரொம்பவே ஏமாற்றமாக இருந்தது.

சூசன் இந்த சந்திப்பை ஏற்படுத்த கிட்டடத்தட்ட ஜெயை மிரட்டி இருந்தார். மகன் அவரைப் பார்க்கத் துடிக்கிறான், ஒரு முறையாவது பெற்ற கடனுக்கு அவனிடம் பேசி சூழ்நிலையை விளக்கிட சொல்லி இருந்தார். ஜெய் அதற்கெல்லாம் நேரம் இல்லையென மறுக்க, பிள்ளை விஷயத்தை பகிங்கிரப் படுத்தி விடுவேன் என மிரட்டித்தான் காரியம் சாதித்திருந்தார். இவரும் வரட்டும் அவன், உறவை அறுத்து எறிந்து இந்தத் தொல்லைக்கு ஒரு முற்றுப்

புள்ளி வைக்கலாம் என முடிவெடுத்திருந்தார்.

காரவேனில் அவனை அமர சொன்னவர், கதவை அடைத்து சாற்றினார்.

“டாடி!” என ஆசையாய் அழைத்தான் ஜோனா.

“உன் பேரு ஜோவா தானே?”

“இல்ல, இல்ல ஜோனா”

“ஓகே, ஓகே ஜோனா! இங்க பாரு ஜோனா” என ஆரம்பித்தவர், கைக்குட்டையால் தனது முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

தான் டாடி, டாடி என உருப்போட்டுக் கொண்டிருக்க தனது பெயர் கூட இவருக்கு சரியாக தெரியவில்லையே என வாடிப் போனான் ஜோனா.

“எனக்கு சுத்தி வளைச்சுப் பேச நேரமில்ல ஜோனா! இந்த வயசுக்கு உங்க ஊருல ஆண் பெண் உறவு பத்தி எல்லாம் படிச்சுப் குடுத்துருப்பாங்க. அதுல காண்டோம் உபயோகிக்கிற முறை எல்லாம்

சொல்லிக் கொடுத்துருப்பாங்கன்னு நம்பறேன். அந்த பாழா போனா காண்டோமை பாவிக்காம விட்ட என் தவறுனால வந்தவன்தான் நீ!”

அவரது பேச்சில் கண்கள் கலங்கிப் போனது ஜோனாவுக்கு. இரண்டு உள்ளங்கையையும் இறுக்கமாய் ஒன்றோடு ஒன்று கோர்த்துக் கொண்டான்.

“யூ ஆர் எ மிஸ்டேக்! மை இல்லீகல் மிஸ்டேக். இத்தனை வருஷம் இந்த தப்புக்குத் தண்டனையா உன்ன வளர்க்க உங்க அம்மாவுக்கு நான் பணம் கொடுத்துட்டு இருக்கேன். இனி

மேலும் குடுப்பேன்! அவ்ளோதான் நம்ம ரிலேஷன்சிப். அதுக்கும் மேல இந்த பாசம், டாடி செண்டிமென்ட்லாம் என் கிட்ட எதிர்ப்பார்க்காதே! டூ யூ அண்டேர்ஸ்டேண்ட்?”

பாசத்தை எதிர்ப்பார்த்து வந்தவனுக்கு தன்னை இல்லீகல் மிஸ்டேக் என்றதும், காண்டோம் போடாததால் வந்த பிழை என்றதையும் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை. அவமானத்தால் உடல் நடுங்கியது. அதற்கு மேல் அங்கே அமரவே முடியவில்லை அவனால். வேலைப் பளுவால் தன்னை வந்துப் பார்க்காமல் இருக்கும் தந்தை, தானே

தேடிப் போனால் கண்டிப்பாக இரு கரம் நீட்டி வரவேற்பார் என கட்டியிருந்த கற்பனைக் கோட்டை சடசடவென சரிந்து விழுந்ததை ஏற்றுக் கொள்ள முடியாமல் தவித்தான் அவன். பட்டென எழுந்துக் கொண்டவன்,

“இந்த இல்லீகல் மிஸ்டேக்குக்காக இனி மேலும் நீங்க தெண்டமா பணம் செலுத்தத் தேவையில்ல மிஸ்டர் ஜெய்க்குமார். வாழ்க்கை ஒரு வட்டம். அன்பு வேணும்னு வந்த என்னை அவமானப்படுத்தி தூக்கி எறிஞ்ச நீங்களே ஒரு நாள் என்னைத் தேடி வருவீங்க! அப்போ காட்டறேன் இந்த

ஜோனா யாருன்னு. குட் பாய்!” என சொன்னவன், கேரவானில் இருந்து இறங்கி விடுவிடுவென நடந்துப் போனான்.

ஓவென மனம் ஓலமிட்டது. கண்கள் கண்ணீரைத் தாரை தாரையாகப் பொழிந்தது. சற்று தூரமாய் நடந்துப் போய் ஒரு கல்லில் அமர்ந்துக் கொண்டான் ஜோனா. குழந்தைகள், கணவன் என சந்தோஷமாக இருக்கும் தாய், தான் வேண்டாமென சொன்ன தந்தை இருவரையும் எண்ணி மனம் வெறுத்துப் போனது. தோள் குலுங்க, சோகத்தைக் கண்ணீர் விட்டு ஆற்றினான் அவன்.

‘இவங்க ரெண்டு பேரையும் எதுக்கும் எதிர்ப்பார்க்காம நானே முன்னேறிக் காட்டுவேன்! ஊர் என்ன, உலகமே திரும்பிப் பார்க்கற ஒர் இடத்துல என்னை நிறுத்துவேன்! நீங்க யார்டா என்னை குப்பை மாதிரி தூக்கிப் போட! நான் தூக்கிப் போடறேன் உங்கள! எனக்கு அம்மாவும் வேணா அந்த ஸ்பேர்ம் டோனொரும் வேணா! இனி நான் ஒரு தனி மனுஷன்’ என அழுது ஓய்ந்து மனதில் பலவற்றையும் யோசித்துக் கொண்டே தூரத்தில் தெரிந்த வானத்தை வெறித்தப்படி அமர்ந்திருந்தான் ஜோனா.

**அவன் கண் பார்வையில் பதுங்கிப் பதுங்கி மலை ஓரத்தில் நடந்துக் கொண்டிருந்த குட்டி உருவம் ஒன்று பட்டது.**

**“யார் இந்த குட்டிப் பையன்? எதுக்கு டேஞ்சரஸான அந்தப் பக்கம் போறான் இவன்!” என எண்ணியவன் எழுந்து அவன் அருகே போனான்.**

**“டேய் பையா!”**

**அருகில் கேட்ட குரலில் திடுக்கிட்டுப் போனாள் ஜீவா. ஏற்கனவே அந்த மலையில் இருந்து கீழே எட்டிப்**

பார்த்து பயந்து நடுங்கி அழுதுக் கொண்டிருந்தாள் அவள். அந்த நேரத்தில் அருகில் கேட்ட குரலில் பயந்துப் போய் நெஞ்சில் கை வைத்தவள், திரும்பி நின்று அண்ணாந்துப் பார்த்தாள் அந்தப் புதியவனை.

“ஐ வெள்ளைக்காரன்!” என ஆச்சரியமாக அவள் சொல்ல, இவனுக்கு சிரிப்பு வந்தது.

அந்தப் பையனின் பெரிய கண்களில் அழுகையின் தடத்தைப் பார்த்த ஜோனாவுக்கு என்னவோ போல இருந்தது. அப்பொழுது தானே

அவனும் அழுது தீர்த்திருந்தான். அவனைப் போலவே இன்னொரு அழுமூஞ்சியைப் பார்த்ததும் என்னவோ பரிவு வந்தது இவனுக்கு. குட்டிப் பையனின் தோளில் தன் கையைப் போட்டவன்,

"வாடா பையா! அங்க உட்காரலாம்" என அவனை தன்னோடு இழுத்துப் போனான்.

ஜீவாவுக்கோ ஒரே சந்தோஷம். பள்ளியில் படிக்கும் சக மாணவர்களே இவளது தோற்றத்தையும், அடாவடித்தனத்தையும் பார்த்து

ஒதுக்கி வைத்துப் பேசாமல் இருக்க, இந்த வெள்ளைக்காரன் தன் தோள் மேல் நட்பாய் கைப் போட்டுக் கொண்டானே என மனதுக்குள் குதூகலித்தாள்.

எங்கே அவன் நினைத்து போல தான் பையன் இல்லை பெண் என சொன்னால் பேசாமல் போய் விடுவானோ என எண்ணியவள், டேய் பையா எனும் அழைப்பைக் கண்டுக் கொள்ளாமல் விட்டாள்.

இருவரும் அருகருகே அமர்ந்துக் கொண்டார்கள். அந்தக் குட்டிப் பையன் தலைக்கு கேப்

அணிந்திருக்க, முகத்தை அது பாதி மறைத்துக் கொண்டது. சற்று முன் அவன் நிமிர்ந்துப் பார்த்தப் போது அவனின் கண்களை மட்டும்தான் நன்றாகப் பார்த்திருந்தான் ஜோனா.

“உன் பேரு என்னடா பையா?” என கேட்டான் ஜோனா.

‘பேரு சொன்னா பையன் இல்லன்னு தெரிஞ்சிடுமோ! வெள்ளைக்காரன் பேசாம போயிடுவானோ!’ என நினைத்தவள், வாயைத் திறக்கவேயில்லை.

எட்டி அவன்(ஜோனா குட்டியை ஆண் பையன் என தானே நினைக்கிறான். ஆகையால் அவன்) கையைப் பற்றிக் கொண்ட ஜோனா, அவனைப் பேச வைப்பதற்காக முதலில் தன்னைப் பற்றி பேசினான். அவனுக்கும் மனதைப் போட்டு பிசைந்ததை எல்லாம் தெரியாத யாரிடமாவது இறக்கி வைத்தால் நன்றாக இருக்குமோ என தோன்றியது.

"என் பேரு அலெக்சாண்டர் ஜோனா! தோ, அங்க தூரமா படம் ஷூட்டிங் செஞ்சிட்டு இருக்காரே அவர் தான் என் டாடி! அவரப் பார்க்கத்தான் ப்ளைட் எடுத்து நான் வந்தேன்.

ப்ளைட்னா என்னன்னு தெரியுமா உனக்கு?”

ஆமாமென தலையாட்டினான் குட்டி.

“ஆனா அவருக்கு நான் வேணாமாம்! ஏன்னா அவருக்கு நான் இல்லீகல் சைல்ட்! அப்படினா என்னான்னு புரியுதா உனக்கு?” என கேட்டான்.

இல்லையென தலையாட்டினாள் குட்டி ஜீவா!

“புரியலைனா பரவாயில்ல விடு! அடுத்த அவைளபில் ப்ளைட் எப்போ

**கிடைச்சாலும் நான் எங்க ஊர் அமெரிக்காவுக்குத் திரும்பிப் போயிடுவேன்! இங்க இருக்கற ஒவ்வொரு நொடியும் எனக்கு மூச்ச அடைக்குது! " என சொல்லி ஆழ மூச்சேடுத்து விட்ட ஜோனா,**

**"நான் ரொம்ப நல்லா பாடுவேன் பையா. இவங்க காசுல இனி படிக்காம, நான் பாடி சம்பாதிக்கப் போறேன்! நீ வேணா பாரேன், நான் ஒரு பெரிய சிங்கர் ஆகப் போறேன்!" என்றான்.**

“நல்லா பாடுவியா நீ? எங்க எனக்கு ஒரு பாட்டுப் பாடு” என ஆர்வமாக இவள் கேட்க,

“உன் லெவலுக்கு ஒரு பாட்டுப் பாடறேன். கேட்டுட்டு எப்படி இருக்குன்னு சொல்லு” என பதிலளித்தான் ஜோனா.

ஒன்பது வயது ஆகியிருந்தாலும் ஜீவா ஆள் பார்க்க ஏழு வயது போல குட்டியாய் தான் இருப்பாள்.

“ட்விங்கிள் ட்விங்கிள் லிட்டில் ஸ்டார்

**ஜோனா இஸ் எ ஷைனிங் ஸ்டார்**

**ஆப் அபோவ் தெ வோர்ல்ட் சோ ஹை**

**பையா இஸ் எ கியூட்டி பை(pie)”**

**என கேப் அணிந்திருந்த குட்டி ஜோனாவின் தலையைத் தடவிக் கொடுத்தபடி இவன் படிக்க, அவளுக்கு அப்படி ஒரு சிரிப்பு.**

**“பையா சிரிச்சுட்டான்!” என இவனும் புன்னகைத்தான்.**

**“ஜோனாவ எனக்கு ரொம்ப ரொம்ப புடிச்சிருக்கு” என சொன்னாள் ஜீவா.**

“எனக்கும் இந்த குட்டிப் பையாவை ரொம்பப் புடிச்சிருக்கு” என்றவன்,

“உனக்கு அம்மா அப்பா இருக்காங்களா? இங்க தனியாவா வந்த?” என கேட்டான்.

“தனியாத்தான் வந்தேன். எனக்கு அம்மா இல்லை. அப்பா இருக்காரு! எனக்கு அவரப் புடிக்கவே புடிக்கல” என தனது கீச்சுக் குரலில் கோபமாய் சொன்னாள் ஜீவா.

“ஏன் பிடிக்கல?”

“படி படின்னு சொல்றாரு! படிக்கலைனா மெரட்டுவாரு! தெனம் எக்ஸர்சைஸ் செய்யனும்! செய்யலைனா அடி விழும்! அப்புறம் கரேக்டா சாப்பிடனும், கரேக்டான டைமுல தூங்கனும், அழக்கூடாது, நல்ல மார்க் வாங்கனும்! இதை செய் அதை செய்ன்னு எப்ப பாரு ஏசிட்டே இருக்காரு” என குரல் அடைக்க சொன்னாள் குட்டி.

“எதெல்லாம் உனக்குப் புடிக்கலன்னு சொல்லறியோ அதெல்லாம் எனக்கு என் அப்பா செய்யமாட்டாரான்னு ஏக்கமா இருக்குடா பையா” என

அழுகை வரப் பார்த்த குரலில் சொன்னான் ஜோனா.

இவ்வளவு நேரம் சிரித்துப் பேசிய தனது வெள்ளைக்கார ப்ரண்டின் குரல் மாற்றம் அவளையும் பாதித்தது. தனது புது நண்பனை சிரிக்க வைக்க அவளுக்குத் தெரிந்த முறையில் முயன்றாள் ஜீவா.

“ஜோனா!”

“ஹ்ம்ம்”

“கோழிக்கு ரெக்கை இருந்தாலும், அதால ஏன் பறக்க முடியல?”

சோகத்தில் மூழ்கி இருந்தவன்,

“என்ன பையா?” என மீண்டும் சொல்ல சொல்லிக் கேட்டான்.

“கோழிக்கு விங்ஸ் இருந்தாலும் ஏன் பறக்க முடியல அதால?”

“ஹ்றம்ம்.. அது உடம்பு பாரமா இருக்கறதுனால இருக்குமோ?”

“இல்லல்ல! அது பறந்தா நாம எப்படிப் புடிச்சு கோழி குழம்பு வைக்கறது? அதனாலத்தான் கடவுள் அத பறக்க வைக்கல” என சொல்லி கெக்கேபெக்கேவென சிரித்தாள் சின்னவள்.(இது என் சொந்த ஜோக். காபிரைட் வச்சிருக்கேன் )

இவனுக்கு ஜோக்கைக் கேட்டு சிரிப்பு வராவிட்டாலும் அவள் சிரிப்பதைக் கேட்டு சிரிப்பு வந்தது. அந்தக் குட்டித் தலையில் வலிக்காமல் கொட்டியவன்,

“சேட்டைப் பையன் நீ” என்றான்.

தூரத்தில் இருந்து ஜெய்யின் அசிஸ்டெண்ட் இவனை வாவென கைக்காட்டி அழைக்க, கிளம்பும் நேரம் வந்து விட்டதை உணர்ந்தான் ஜோனா.

“பையா! நான் ஹோட்டேலுக்குக் கிளம்பனும் இப்போ! உன் கூட பேசனதுல எனக்கு ரொம்ப ஹேப்பி. உனக்குக் கிடைச்ச மாதிரி எனக்கு ஒரு அப்பா கிடைக்கலையேன்னு ரொம்ப பொறாமையா இருக்கு. அப்பா எது சொன்னாலும் அது நம்ம நல்லதுக்குத்தான் சொல்வாங்க! நம்மள ரொம்ப லவ்

பண்ணறதுனாலத்தான் நாம எல்லாத்துலயும் பெஸ்டா இருக்கனும்னு கண்டிப்பா இருக்காங்க! தட் டஷண்ட் மீன் ஹீ ஹேட்ஸ் யூ! அவங்க சொல்லறபடி நடந்தீனா இன்னும் இன்னும் உன்னை லவ் பண்ணுவாங்க. புரியுதா பையா?"

ஆமென தலையாட்டினாள் குட்டி ஜீவா. எழுந்து இவன் நிற்க ஜீவாவும் எழுந்து நின்றாள். தன் இடுப்பளவு இருந்த சின்னவனை அணைத்துக் கொண்ட ஜோனா,

"இங்க நடந்த எல்லாத்தையும் நான் மறக்க நினைக்கறேன் பையா! ஐ

வாண்ட் டூ ஸ்டார்ட் எ நியூ லைப்! நீயும் எப்போதும் சந்தோஷமா இருக்கனும் சரியா! பைடா! பத்திரமா வீட்டுக்குப் போ! இங்கலாம் தனியா சுத்தக் கூடாது.” என்றவன் தன்னையேப் பார்த்தப்படி நின்றிருக்கும் ஜீவாவை விட்டு விலகிப் போனான்.

“ஜோனா சொல்றான் என் அப்பா நல்ல அப்பாவாம்! என் மேல லவ் இருக்கவும்தான் அத செய் இத செய்ன்னு சொல்றாங்களாம். நான் அவர் சொல்லறத எல்லாம் செஞ்சா என்னை இன்னும் இன்னும் லவ் பண்ணுவாங்களாம். இப்போ செத்துப்

போகலாமா வீட்டுக்குப் போகலாமா?” என முணுமுணுத்தப்படி நின்றிருந்தவளை, திரும்பிப் பார்த்த ஜோனா போ என்பது போல கையை ஆட்டிக் காட்டினான்.

“ஜோனா வீட்டுக்குப் போக சொல்றான்! நான் போறேன். அப்பா கிட்டயே போறேன். சொன்ன பேச்சு கேக்கலனாத்தானே அடிப்பாரு! இனிமே அவர் சொன்னது எல்லாத்தையும் கேப்பேன். மை ஓன் அண்ட் ஒன்லி ப்ரேண்ட் ஜோனா மேல சத்தியமா கேப்பேன்”

## அத்தியாயம் 19

தன் கண் முன்னாலேயே ஜீவாவை அடிக்கப் பாய்ந்ததில் ஜீவானந்தம் மேல் கடும் கோபமாக இருந்தான் ஜோனா. கை கால் ஒத்துழைத்திருந்தால், அவரை அப்படியே கொண்டு போய் வெளியே தள்ளியிருப்பான் அவன்.

இவனால் ஜீவானந்தம் கீழே விழுந்ததில் ஜீவாவுக்கு அதிர்ச்சியோடு கோபமும் வந்திருந்தது. அப்பாத்தான் எல்லாம் என சொல்லித் தந்தவன், அந்த அப்பாவையே கீழே சாய்த்திருந்ததை

அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அவனை பார்த்து,

“விடு, விடு என்னை! இது எல்லாத்துக்குமே நீ தான் காரணம் ஜோனா! சாகப் போனவள அப்படியே விட்டிருந்தனா, இந்நேரம் நான் செத்த இடத்துல பெரிய மரமே முளைச்சிருக்கும். ஏன் என்னைக் காப்பாத்துன? ஏன், ஏன்? ஐ ஹேட் யூ ஜோனா! ஹேட் யூ சோ மச்” என கத்தியவள், தனது தகப்பனைத் தூக்கி விட அவசரமாகக் கட்டிலில் இருந்து இறங்க முற்பட்டாள்.

“நான் காப்பாத்துனனா? எங்கே, எப்போ?”

என அதிர்ச்சியாக கேட்டப்படியே அவளைக் கட்டிலில் இருந்து இறங்க முடியாதபடி தடுத்தவன், ஜீவானந்தம் மேல் கொலை காண்டிருந்தாலும் அவளுக்காக அவரைத் தூக்கி விட நெருங்கினான். அவனைப் பார்த்து முறைத்தவர், மெல்ல தானாகவே எழுந்துக் கொண்டார்.
உள்ளுக்குள்ளேயே அவரை அரித்தெடுக்கும் மனைவி மேல் கொண்ட நேசம், தாக்கிப் போயிருந்த ஹார்ட் அட்டாக், மகள் கொண்டிருந்த ஜோனா பைத்தியம் எல்லாம் அவர்

உடம்பை ரொம்பவே பாதித்திருந்தது. இல்லையென்றால் ஜோனா தள்ளி கீழே விழுவாரா மிலிட்டரி!

மகளின் அருகே வந்து நின்றவர் அவள் முகம் தாங்கி,

“சாகப் போனியா?” என உயிர் உருக்கும் குரலில் கேட்டார்.

அவரது முகத்தை ஏறிட்டுப் பார்க்காமல் கண்களை இருக மூடிக் கொண்டாள் அவள். அவளையும் மீறி கன்னத்தில் கண்ணீர் உருண்டு ஓடியது.

“ஜீவா!” எனும் ஜோனாவின் அழைப்பில் கண்ணைத் திறந்தவளை, எதிர் நோக்கியது அவனது பச்சை நிறக் கண்கள்.

அந்தக் கண்கள் கேட்ட கேள்விக்கு, தானாகவே வந்து விழுந்தன அவள் வாயில் இருந்து வார்த்தைகள். கடகடவென அவள் ஒப்பித்த விஷயங்களை இவன் ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் உள் வாங்க, அவரோ நிலைக்குலைந்து நிம்மதி தொலைத்து நின்றார்.

கட்டிலின் நடுவே அமர்ந்திருந்த ஜீவாவின் அந்தப் பக்கக் கையை ஜோனா பிடித்திருக்க, இவர் இந்தப் பக்கக் கையைப் பிடித்திருந்தார். இருவரின் பார்வையும் முகம் சிவந்து, மூக்கு விடைக்க, கண்ணீரை அடக்கப் போராடும் பெண்ணவள் மேல் தான் நிலைக்குத்தி நின்றது.

ஜீவாவுக்கு இருவருமே தேவை. இருவர் மீதும் உயிரை வைத்திருந்தாள் அவள். சின்ன வயதில் அப்பாவின் மேல் கொண்டிருந்த கோபத்தை ஜோனாவின் அறிவுரையால் விட்டொழித்து அவர் சொல் பேச்சுக்

கேட்டு நடக்க ஆரம்பித்தாள். அதன் பிறகே புரிந்தது பலாப்பழத்தைப் போல வெளியே கரடு முரடாக இருந்தாலும், உள்ளே தனது அப்பாவும் பாசக்காரர்தான் என. அத்திப் பூத்தாற் போல அவர் கொடுக்கும் அணைப்பு, இவள் பார்க்கவில்லை என நினைத்து அவர் பார்க்கும் பாசப் பார்வை, இனிப்பு பிடிக்கும் அவளுக்கு என மாதம் ஒரு முறை சாக்லேட் வாங்கி ப்ரிட்ஜில் வைப்பது, தனிமையே துணையாக இருக்கிறாளே என தோழனாய் இருக்க நாய் வாங்கித் தந்தது என நிறைய செய்தார். ஆனால் என் உயிரான உனக்காகத்தான்

**செய்கிறேன் என சொல்லாமல் செய்தார்.**

**வயது ஏற ஏற, இது தான் இவர், இந்தக் குணம்தான் அவர் குணம் என புரிந்துக் கொண்டவளுக்கு தந்தையின் மேல் பாசம் சுரக்கத்தான் செய்தது. வயதுக்கு வந்து விட்டாள் மகள் என அறிந்தப் பிறகு அவள் மேல் கை நீட்டுவதை அறவே விட்டிருந்தவர், அவள் முன்னேற்றத்திற்காகத்தான் தொழிலை சென்னைக்கு மாற்றிக் கொண்டு இடம் பெயர்ந்தார். மகளைப் படிக்க வைத்துத் தொழிலில் புகுத்தினார். ஜீவா சொந்தமாய் தன்**

காலில் நிற்க ஆவன செய்தார். தன் கைப்பிடிக்குள் போட்டு அழுத்தாமல் சுதந்திரமாய் சிந்திக்கவும் பழக்கினார்.

தனியாய் இருக்கிறேன் என மகள் கேட்க, மனதிற்குள் ஆயிரம் பயம் இருந்தாலும் அப்படி அவள் தைரியமாய் வளர வேண்டும் என தானே பாடுப்பட்டார், ஆகவே சரியென ஒத்துக் கொண்டார். வருடத்தில் ஒரு மாதம் லீவ் எடுத்துக் கொண்டு பாண்டிக்கோ, ஊட்டிக்கோ, அமெரிக்காவுக்கோ இவள் சென்று வருவதையும் மறுத்ததில்லை அவர். ஒரு மகனாய் இருந்தால் எப்படி

நடத்துவாரோ அப்படித்தான் இவளையும் நடத்தினார். மொத்தத்தில் அவர் செய்த ஒவ்வொரு செயலுக்குப் பின்னாலும் ஜீவாவின் நலனே முதன்மையாக இருந்தது.

“என் மக கிட்ட பேசனும்” என்றார் ஜீவானந்தம் ஜோனாவின் முகம் பார்க்காமல்.

“பேசுங்க” என்றான் அவனும் அவர் முகம் பார்க்காமல்.

“தனியா”

“முடியாது! எதுனாலும் என் முன்னாலயே பேசுங்க” என்றவன் இன்னும் ஜீவாவை நெருங்கி நின்றான்.

ப்ளிஸ் ஜோனா என்பது போல அவனைப் பாவமாய் நிமிர்ந்துப் பார்த்தாள் ஜீவா. உறுதியாய் தலையை இடம் வலம் முடியாது என்பது போல ஆட்டினான் அவன்.

“ஜீவா என் மக! அவ மேல எனக்குத்தான் எல்லா உரிமையும் இருக்கு! உன் அத்தியாயம் அவ

வாழ்க்கையில ஒரு பாசிங் க்ளவுட் மாதிரிதான்! சோ ப்ளிஸ், கெட் அவுட்” என கடுமையாக சொன்னார் ஜீவானந்தம்.

“அப்பா!” என மறுப்பாய் என்னவோ சொல்ல வந்தவளை ஒற்றைக் கை நீட்டி நிறுத்து என்பது போல சைகை செய்தவர், ஜோனாவை உறுத்து விழித்தார்.

அவர் அப்படி பேசியதில் அவ்வளவு கோபம் வந்தது ஜோனாவுக்கு. தன் முழு உயரத்துக்கும் நிமிர்ந்தவன், தனது உரிமையை நிலைநாட்டுவது போல ஜீவாவின் முகத்தைத் தன்

ஒற்றைக் கையால் பிடித்து வயிற்றோடு அணைத்துக் கொண்டான்.

“என் ஜீவாவோட வாழ்க்கையில நான் பாசிங் க்ளவுட் இல்ல மிஸ்டர் ஜீவானந்தம். அவதான் என் உடம்புல ஓடிட்டு இருக்கற ப்ளட். அவ உடம்பு ரிக்கவர் ஆன அடுத்த நொடி எங்களுக்கு அவ இஸ்டப்பட்ட முறைப்படி வெடிங் நடக்கும். அது சர்ச் வெடிங்கா இருந்தாலும் சரி, டெம்பிள் வெடிங்கா இருந்தாலும் சரி, ஐம் இன். எங்க வெடிங்க லீகலா இங்கயும், எங்க நாட்டுலயும் கண்டிப்பா ரெஜிஸ்டர் செய்வேன்.

சோ எனக்கு அவ மேல எந்த உரிமையும் இல்லைன்னு இனி சொல்லாதீங்க” என்றவன் உடல் கோபத்தில் நடுங்கியது.

இந்த வார்த்தையைத்தானே அவரும் எதிர்ப்பார்த்தார். எந்த தந்தைதான் பெற்ற மகள் திருமண பந்தமில்லாமல் குழந்தை சுமப்பதை விரும்புவார்? உதட்டில் வெற்றிப் புன்னகை நெளியப் பார்க்க, சிரமப்பட்டு அதை அடக்கினார் ஜீவானந்தம்.

ஜோனாவின் அணைப்பில் நெளிந்த ஜீவா மெல்லியக் குரலில்,

“விடு ஜோனா!” என்றாள்.

மெல்லியப் பெருமூச்சுடன் அவளை தன் பிடியில் இருந்து விடுவித்தான் இவன்.

“கை வலிக்குதுதானே ஜோனா! போய் படு, ரெஸ்ட் எடு! ரொம்ப நேரமா நிக்கறே!” என அதையும் மெல்லிய குரலில் சொன்னவள் தகப்பனையும் திருப்பி திரும்பிப் பார்த்துக் கொண்டாள்.

“சின்ன வயசுல ஆரம்பிச்ச இவன் கிறுக்கு இன்னும் உன்னை விட்டுப் போகல இல்லை” என தன் மகளைப் பார்த்துக் கேட்டார் ஜீவானந்தம்.

அவருக்கு என்னவென பதில் சொல்வாள் அவள்! ஜோனாவின் மேல் கிறுக்கா அவளுக்கு?

அவன் மேல் கொண்டதை நட்பென சொல்வாளா? இல்லை பக்தியென சொல்வாளா? தன் மன உணர்வுகளைக் கொட்டும் ரகசியக் கிடங்கென சொல்வாளா? காலையில் எழுந்தது முதல் இரவு தூங்கும் வரை தான் செய்யும் ஒவ்வொன்றையும்

பகிர்ந்துக் கொள்ளும் தாய் மடி என சொல்வாளா? தன் தனிமையைப் போக்க வந்த வரமென சொல்வாளா? அருகில் இல்லாத போதே இவ்வளவுமாக இருந்தவன், நெருங்கி வந்ததும் தன் உயிரில் கலந்த மூச்சாய் ஆகிப்போனதை சொல்வாளா! என்னவென சொல்வாள் இவள்!

அவள் சொன்ன கதையைக் கேட்டதில் இருந்தே ஜோனாவுக்கு மனமெல்லாம் ரணமாய் வலித்தது. ஒன்பது வயதில் இருந்தே ஒருத்தி தன்னை வாழ்க்கையின் ஆதாரமாய் கொண்டு வாழ்ந்திருக்கிறாள் எனும்

எண்ணமே மனதை என்னவோ செய்தது. ஏற்கனவே அவள் மேல் பித்தாய் இருந்தவன், இது தெரிந்த நொடி அவளை தன் நெஞ்சுக்குள் புதைத்து வைத்துக் கொள்ள வேண்டும் என ஏங்கினான். தான் நினைத்ததை செய்துப் பழக்கப்பட்டிருந்தவன், ஜீவாவின் மனநிலையை கருதியே அமைதியாய் நின்றான். அவளிடம் கேட்க ஆயிரம் விஷயங்கள் இருந்தன அவனுக்கு! தனிமை எப்பொழுது கிடைக்கும் என பல்லைக் கடித்துக் கொண்டு நின்றிருந்தான் ஜோனா.

அமைதியாய் இருவரையும் பார்த்தப்படி நின்றார் ஜீவானந்தம். அவன் அவள் கையைப் பற்றிக் கொள்வதும், இவள் விலக்கி விடுவதும், சற்று நேரம் சென்று மீண்டும் அவன் அவள் கையைப் பிடிப்பதும், இவள் விலக்குவதுமாக ஒரு குட்டிப் போராட்டம் நடந்துக் கொண்டிருந்தது அவர் முன்னே. அவன் சோர்ந்துப் போவது இவருக்குமே நன்றாக தெரிந்தது. ஆனாலும் ஜீவாவை விட்டு நகர மாட்டேன் என பிடிவாதமாக அவள் அருகே நின்றிருந்தான்.

அங்கிருந்த நாற்காலியைக் கொண்டு வந்து அவன் அருகே போட்டவர்,

“உட்காரு” என்றார்.

வெளிநாட்டவன் என்றாலும் மாப்பிள்ளை முறுக்கு இல்லாமலா போய்விடும்! உட்கார மாட்டேன் என்பது போல நின்றாடியே இருந்தான் அவன். தன் ஜீவாவை சாவின் விளிம்புக்கு அனுப்பிய அவரை மனிதனாகவே மதிக்க விரும்பவில்லை ஜோனா.

“ப்ளிஸ் உட்காரு ஜோனா” என்ற ஜீவாவின் கெஞ்சலுக்குத்தான் செவி சாய்த்தான் அவன்.

மீண்டும் மகள் அருகே வந்தவர், அவள் முகத்தை ஏறிட்டு நோக்கினார்.

“நீ பொறந்து உன் முகத்த ஆசையாப் பார்த்துட்டு கண்ண மூடிட்டா உன் அம்மா! நர்ஸ் உன்னைத் தூக்கிட்டு வந்தப்ப, அம்மாவ முழுங்கனவ நீன்னு உன் அம்மாம்மா தூக்கக் கூட மாட்டேன்னு சொல்லிட்டாங்க! பொண்டாட்டி செத்த துக்கம் ஒருப் பக்கம், குட்டியாய் ரோஜாப்பூ மாதிரி இருந்த உன்னைப் பார்த்து இப்படி

ஒரு சொல் சொல்லிட்டாங்களேன்னு கோபம் ஒரு பக்கம்னு துடிச்சுப் போயிட்டேன். என் மகளுக்கு இவங்க யாரும் வேணா! நான் மட்டும் போதும்னு உன்னை என் கையில வாங்கனேன்! குழந்தை வளர்ப்பப் பத்தி ஒரு மண்ணும் தெரியாது எனக்கு! எல்லாம் கத்துக்கிட்டேன். இம்மாம் பெருசு இருக்கேனே, நான் தூக்குனா புள்ளைக்கு வலிக்குமோ, எலும்பு கிலும்பு உடைஞ்சிடுமோன்னு பயமா இருக்கும். அழுதா எதுக்கு அழுகறன்னு தெரியாது! பசியா, நேப்கினை நனைச்சிட்டியா, கொசு கடிக்குதா, வயித்த வலிக்குதான்னு ஒன்னும் தெரியாது. கைக்குழந்தய

ஒரு பொண்ணு நேச்சரலா வளர்த்துடுவா, அதே ஆம்பளைனா ஒன்னு ஒன்னா கத்துக்கனும். எங்களுக்கு மதர் இன்ஸ்டிங்க்ட் இல்லையே, பிள்ளைங்களோட சிணுங்கல வச்சி இது இதுக்குத்தான்னு கெஸ் பண்ண!” என்றவர் சற்று நேரம் அமைதியாக இருந்தார். அந்த நாட்களை மீண்டும் வாழ்ந்துப் பார்த்தார் போல.

“அப்புறம்தான் உனக்கும் உங்கம்மா மாதிரியே ஹேர்ட் ப்ராப்லம் இருக்குன்னு கண்டுப்புடிச்சாங்க. ராத்திரி நீ தூங்கறப்ப அரை மணி நேரத்துக்கு ஒருக்க முழிச்சி, மூச்சு

விடறியா இல்லையான்னு உத்து உத்துப் பார்ப்பேன். ராத்திரி தூங்கற என் குட்டிப் பொண்ணு காலையில உயிரோட எழுவாளான்னு பயமா இருக்கும். அந்த நாட்கள் எல்லாம் கொடுமையான நாட்கள் ஜீவா”

கேட்டிருந்த ஜீவாவுக்கு கண்ணில் பொல பொலவென கண்ணீர் கொட்டியது. அவர் மேல் வைத்திருந்த கோபம் கொஞ்சமாய் வடிய, ஜீவானந்தத்தை அப்பொழுதுதான் நேராகப் பார்த்தான் ஜோனா.

“அப்பா!” என குரல் நடுங்க அழைத்தவளின் கையைப் பற்றித்

தட்டிக் கொடுத்தார் அவர். அந்த செய்கை கூட தடுமாற்றமாகத்தான் வந்தது அந்த முரட்டு மனிதருக்கு.

“ஆபரேஷன், மருந்து, மாத்திரைன்னு உன்னைத் தேத்தி எடுக்கறதுக்குள்ள படாத பாடுபட்டுட்டேன். நல்லா தேறி வந்தும், நீ எல்லாத்துக்கும் என்னையே எதிர்ப்பார்க்க ஆரம்பிச்ச! உங்க அம்மா மாதிரியே மத்தவங்கள சார்ந்து நிக்கப் பார்த்த! எனக்குள்ள இருந்த மிலிட்டரி மேன் படக்குன்னு முழிச்சுக்கிட்டான். நான் இல்லைனாலும் என் மக தனிச்சு இந்த பூமியில தைரியமா இருக்கனும்ம்னு முடிவெடுத்தேன்.

அதுக்காக உன்னை ட்ரைன் பண்ணேன். ஆனா நீ சுணங்கி சுணங்கி நின்ன! பாவமா பார்த்தே காரியம் சாதிக்க நெனைச்ச! அதனாலத்தான் கண்டிப்ப கையில எடுத்தேன். ஆனா அதுவே உன்னை இப்படிலாம் தற்கொலை அளவுக்கு சிந்திக்கத் தூண்டும்னு நான் நெனைச்சிப் பார்க்கல ஜீவா" என தொண்டையை செறுமி சொல்லி முடித்தார்.

"நீங்க போராடி ஜீவாவை வளத்தீங்க! யூ ஆர் க்ரேட், ஒத்துக்கறேன். ஆனா அவள அடிச்சு வளக்கற உரிமைய யார் உங்க கையில குடுத்தது?

கண்டிப்ப காட்டனா மட்டும்தான் பிள்ளைங்க உருப்படுவாங்கன்னு யார் சொன்னது உங்களுக்கு? உங்கள பத்தி ஒன்னும் தெரியாம அப்பா செய்யறதுலாம் அவுட் ஆப் லவ்லன்னு இவளுக்கு அட்வைஸ் வேற செஞ்சிருக்கேன் நான்!" என காட்டமாக சொன்னான் ஜோனா.

"நான் கண்டிப்பக் காட்டி சுயமா சிந்திக்கறவளா வளர்த்தப்பவே நீ அவ மேல அட்வாண்டேஜ் எடுத்து ப்ரேக்னண்டா ஆக்கி வச்சிருக்க. இன்னும் அன்ப காட்டி என் கைக்குள்ள வச்சி வளர்த்திருந்தா உன்னை மாதிரி எத்தனை

ஆம்பளைங்க என் பொண்ணு மேல
கை வைக்கத்
துணிஞ்சிருப்பாங்களோ!” என
குறிப்பார்த்து அடித்தார் ஜோனாவை.

ஜீவானந்தத்தின் கூற்றில் முகம்
கசங்கிப் போனான் ஜோனா. தன்னை
நண்பனாய் பார்த்தவளை, தன்னருகில்
அவளாகவே இருந்தவளை, தன்னை
ஆராதனை செய்தவளை தாம் தான்
காதல் எனும் வர்ணம் பூசி இந்த
நிலைக்கு மாற்றி
வைத்திருக்கிறோமோ எனும்
எண்ணம் நெஞ்சைத் தீயாய் சுட்டது.
இவ்வளவு நேரம் ஜீவாவின்
கைப்பற்றியபடி இருந்தவனின் கை

மெல்ல விலகியது. விலகிய அவன் கையை இறுக்கமாகப் பிடித்தாள் ஜீவா.

“அப்பா!”

என்ன என்பது போல மகளைப் பார்த்தார் ஜீவானந்தம்.

“ஐ லவ் ஜோனா!”

காதலித்தவனிடம் ஒத்துக் கொள்ளாததை தன் தகப்பனிடம் ஒத்துக் கொண்டாள் ஜோனாவின் ஜீவா.

## அத்தியாயம் 20

கதவைத் திறந்து உள்ளே வந்த தீரன் கண்டது முறைத்தப்படி நின்றிருந்த ஜோனாவையும் ஜீவானந்தத்தையும் கவலையாகப் பார்த்தப்படி இருந்த ஜீவாவைதான்.

“என்ன அக்கப்போருன்னு தெரியலையே மாமாவுக்கும் மருமகனுக்கும்!” என முணுமுணுத்தப்படியே வந்தான் தீரன்.

கையில் காபி ப்ளாஸ்கும் ஜோனாவுக்கான உணவும் இருந்தது. ஜீவானந்தத்தைப் பார்த்து,

“வாங்க சார்” என வரவேற்க,

அவரோ ஜோனாவை விட்டுவிட்டு இவனை முறைக்க ஆரம்பித்தார்.

‘ஓஹோ! அப்பாவும் மகளும் ஒரே டிசைன்ல முறைக்கப் பழகிருக்காங்க! முறைச்சே எதிரிய முக்காடு போட்டு ஓட வச்சிடுவாங்க போல இவங்க செக்குரிட்டி கம்பேனில!’ என மனதில்

நினைத்தவன், வெளியே வெள்ளந்தியாக சிரித்து வைத்தான்.

தீரனின் பின்னாலேயே டாக்டரும், நர்சும் வந்தார்கள். படுக்காமல் சோர்ந்துப் போய் நாற்காலியில் அமர்ந்திருக்கும் ஜோனாவைப் பார்த்த டாக்டர்,

“சார், ரெஸ்ட் எடுக்காம என்ன செய்யறீங்க நீங்க! ரிக்கவர் ஆகனும்னா யூ நீட் ரெஸ்ட்! பேஷண்ட தூங்க விடாம நீங்க எல்லாம் இங்க என்ன செய்யறீங்க? ப்ளீஸ் கோ அவுட்” என

மற்றவர்களையும் கடிந்துக் கொண்டார்.

“நான் படுக்கறேன்! இவங்க ரெண்டு பேரும் இருக்கட்டும். போக சொல்லாதீங்க” என்றவன் மெல்ல தள்ளாடி எழுந்தான்.

சட்டென அவனைத் தாங்கிப் பிடிக்க எழ முயன்றாள் ஜீவா. அவளை எழ விடாமல் ஜீவானந்தம் பிடித்துக் கொள்ள, தீரன் வந்து ஜோனாவைப் பிடித்துக் கொண்டான்.

என்னவோ, ஜீவா காதலை ஒத்துக் கொண்டது ஜோனாவுக்கு அப்படி ஒரு ஆசுவாசத்தைக் கொடுத்தது. இவ்வளவு நாள் பிடிக்கிறதோ அவளுக்கு பிடிக்கவில்லையோ, காதலிக்கிறாளா, இல்லை ஆராதிக்க மட்டும் செய்கிறாளா என மண்டையைக் குடைந்துக் கொண்டிருந்த கேள்விகளுக்கு அவள் வாய் வார்த்தையாய் வந்த பதிலில் உடம்பும் மனமும் பறப்பது போல இருந்தது அவனுக்கு. இது போதும் அவனுக்கு! அவளுடன் தனிமைக் கிடைக்கும் வரை அந்த வார்த்தைகள் போதும் அவனுக்கு.

கட்டிலில் அவன் ஜீவாவைப் பார்த்தபடி படுத்துக் கொள்ள, டாக்டர் தனது பரிசோதனையை ஆரம்பித்தார். ப்ளட் ப்ரெஷர் அதிகரித்திருப்பதாக சொல்லியவர், கண்டிப்பாய் தூங்க வேண்டும் என வலியுறுத்தினார். ட்ரிப்ஸ் வழி அவர் பேய்ன் கில்லரை செலுத்த, தூக்கம் கண்ணை சுழட்டியது இவனுக்கு. ஜீவாவையும் செக் செய்தவர், அவளுக்கும் கொடுக்க வேண்டிய மருந்துகளை கொடுத்து விட்டுக் கிளம்பினார்.

தான் கொண்டு வந்திருந்த உணவை, தீரன் ஜோனாவுக்கு சாப்பிட எடுத்து வைக்க, ஜீவானந்தத்தைக்

கைக்காட்டிய அவர் மருமகன், ஜீவாவிடம் லவ் யூ என வாயசைத்தப்படியே கண்களை மூடிக் கொண்டான்.

‘பார்டா நம்ம பாஸ! முறைக்கறப்பவே மாமனார சாப்பிட சொல்லி உபசரிப்பு. கொஞ்சம் சிரிச்சுப் பேசிட்டா தலையில தூக்கி வச்சிப்பாரு போல’

தீரன் உணவை ஜீவானந்தத்திடம் கொண்டு வந்துக் கொடுக்க, அவர் வேண்டாமென மறுத்தார். ஜீவாவுக்கும் ரொம்பவே களைப்பாய் இருந்தது. ஆனாலும் தன் அப்பா

பக்கத்தில் இருப்பதால் விழித்தே அமர்ந்திருந்தாள்.

“சாப்பிடுங்க டாடி!”

“நீ?”

“கொஞ்ச நேரம் முன்னதான் கஞ்சி சாப்பிட்டேன்”

ஜோனாவைக் காட்டி,

“அவர் எழுந்ததும் குடு! நான் காலையில வந்துப் பார்க்கறேன்

உன்னை” என்றபடி எழுந்துக் கொண்டார்.

வரேன் என்பது போல தலையசைத்தவரின் கரங்கள் அவள் தலை கோதிக் கொடுக்க உயர்ந்தது. ஆனால் செயலால் பாசத்தைக் காட்டி பழக்கமில்லையே அவருக்கு. மெல்ல கை நடுங்க, அவள் நெற்றியில் கைப் பதித்து காய்ச்சல் இருக்கிறதா என செக் செய்வது போல பாவ்லா காட்டி கையை இழுத்துக் கொண்டார்.

“பாய்ப்பா”

“பாய்! டேக் ரெஸ்ட் ஜீவா” என்றவர் திரும்பி நடக்க, கால்கள் அவள் வயிற்றின் அருகே ப்ரேக் அடித்து நின்றது.

‘என் குழந்தைக்கு ஒரு குழந்தை வரப்போகுதா!’ என நினைத்தவரின் கண்கள் லேசாய் கலங்கியது. அதோடு அங்கே நிற்காமல் விடுவிடுவென வெளியேறி விட்டார் ஜீவானந்தம்.

அங்கே நின்றிருந்த தீரனைப் பார்த்து,

“எதாச்சும் நியூஸ் கிடைச்சதா ஷூட் அவுட் பத்தி?” என கேட்டாள் ஜீவா.

“இன்னும் விசாரிச்சிட்டுத்தான் இருக்காங்க சிஸ்டரு! வாயத் தொறக்க மாட்ராானாம் அந்த அக்கியூஸ்ட்! உங்க டாடி அவரோட இன்ப்ளூவன்ஸ் யூஸ் பண்ணிருக்காரு போல! அவருக்குத்தான் பெரிய இடமெல்லாம் நல்லா தெரிஞ்சிருக்கே! கண்டிப்பா சீக்கிரம் கண்டுப்புடிச்சிருவாங்க!”

“ஹ்ம்ம் சரி”

“நீங்க ரெஸ்ட் எடுங்க! உங்கப்பா உங்க ரெண்டு பேர் பாதுகாப்புக்காக வெளிய செக்கியூரிட்டி அரேஞ் பண்ணிருக்காரு. நிம்மதியா ரிக்கவர் ஆகிற வேலைய மட்டும் பாருங்க. நானும் அப்பாவும் மத்தது எல்லாத்தையும் கவனிச்சிப்போம். எதாச்சும் வேணும்னா தீரான்னு சவுண்ட் குடுங்க. நானும் வெளியத்தான் இருப்பேன்” என்றவன் கதவை மூடி விட்டு வெளியேறினான்.

அவன் சென்றதும் மெல்ல கட்டிலில் இருந்து இறங்கினாள் ஜீவா. அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கும்

ஜோனாவின் கட்டிலில் ஏறி அவன் அருகே படுக்க முயன்றாள். தூக்க மயக்கத்தில் மெல்ல கண் விழித்தவன், அவளுக்கு இடம் கொடுத்து கொஞ்சம் நகர்ந்துப் படுத்தான். கரகரப்பான குரலில்,

“ஸ்லீப் மூலான்!” என்றவன் மீண்டும் கண்ணை மூடிக் கொண்டான்.

அவனது அடிப்படாத கையில் தலையை வைத்து, முகத்தைப் பார்த்தவாறு படுத்துக் கொண்டாள் இவள்.

ஐ லவ் ஜோனா என தன் தகப்பனிடம் ஒத்துக் கொண்ட பின் நடந்த நிகழ்வுகளை அசைப் போட்டப்படியே உறங்க முயன்றாள் ஜீவா.

“ஐ லவ் ஜோனா”

இன்று நான் சாம்பார் சாதம் சாப்பிட்டேன் என்பது போல குரலில் எந்த வித இமோஷனும் இல்லாமல் முன்னால் தெரிந்த கதவை வெறித்தப்படி சொன்னாள் ஜீவா.

ஆனந்த அதிர்ச்சியில் இவன் நிற்க, ஜீவானந்தமோ அமைதியாய் மகளை ஊடுருவிப் பார்த்தார்.

“இவனோட போஸ்டர அலமாரி கதவு பின்னால ஒட்டி வச்சிருந்தது, உனக்கு விளையாட வாங்கிக் கொடுத்த நாய்க்கு ஜோனானு பேர் வச்சது, புது பேனா வாங்கக் கூட்டிப் போனா ஜோனானு எழுதி டெஸ்ட் செஞ்சது, இவனப் பத்தி எங்க நியூஸ் வந்தாலும் சேகரிச்சு ஸ்க்ரேப் புக் செஞ்சது, பாக்கேட் மணி குடுத்தா சாப்பிடாம சேர்த்து வச்சி இவன் சீடி வாங்கனதுன்னு இவனை சுத்தியே உன் உலகம் இருந்தது எனக்கும்

தெரியும் ஜீவா! ஆனா அதெல்லாம் எல்லாருக்கும் வர க்ரஷ்தான்னு கண்டும் காணாம விட்டுட்டேன்! ஆஸ்திரேலியா போறியா படிக்கன்னு கேட்டப்போ அமெரிக்கா இஸ் பெட்டர் ஃபோர் திஸ் கோர்ஸ்னு அவ்ளோ டிடேயில்ஸ் கலேக்ட் செஞ்சு காட்டுன! சரி போகட்டும், அங்க போய் நேராவே இவன் வாழற லட்சணத்தப் பார்க்கட்டும். இந்த பைத்தியக்கார க்ரஷ் அப்பவாச்சும் உன்னை விட்டுப் போகுதான்னு பார்ப்போம்னு அனுப்பி வச்சேன்! திரும்பி வந்து கம்பெனில வேலைக்கு சேர்ந்ததும் தனியா வீடெடுத்துப் போய்ட்ட!" என்றவர் பெருமூச்சொன்றை இழுத்து விட்டார்.

“உனக்காக மாப்பிள்ளைப் பார்த்து வச்சிருந்தேன். அவங்க பேமிலியவே எனக்குத் தெரியும். ரொம்ப நல்ல மாதிரி. மாப்பிள்ளைப் பையனும்தான்”

மாப்பிள்ளை எனும் பதத்துக்கு தொண்டையை செருமி முறைப்பு ஒன்றைக் கொடுத்தான் ஜோனா. இவரும் திருப்பி முறைத்தார் அவனை.

“மேரேஜ் முடிச்சுட்டு கம்பேனி பொறுப்ப எடுத்துக்கறியா? இல்ல

கம்பேனி பொறுப்ப எடுத்துட்டு மேரேஜ் பண்ணிக்கறியான்னு ஆப்ஷன் குடுத்தேன் உனக்கு. நீ யோசிக்கனும் டைம் குடுங்கன்னு லீவ் எடுத்துட்டுப் போன. அதுக்குள்ள எனக்கும் அட்டாக் வேற வந்துடுச்சு. திரும்பி வந்து கம்பேனி பொறுப்பு மட்டும் போதும் மேரேஜ் வேணாம்னு சொன்ன! உன் முகமும் சோகமா எதுவோ சரியில்லாத மாதிரி இருந்துச்சு! சரி, விட்டுப் பிடிப்போம்னு நெனைச்சேன். அப்புறம் பார்த்தா இவன் நம்ம ஊருல இருக்கான்! நீயும் அவனுக்கே பாடிகார்ட்டா வேற போன! என் மனசுக்கு எதுவும் சரியாப் படல. என் பொண்ணு விஷயமாச்சே,

வெளி ஆள நம்பாம நானே இறங்கி விசாரிக்க ஆரம்பிச்சேன். ஏர்போர்ட்ல இவன பார்த்திருக்க! இவன் என்ன சொல்லி உன்னை கன்வீன்ஸ் பண்ணி உன் கூடவே பாண்டி வந்தான்னு தெரில. அவன் கூட ஒன்னா தங்கி இருந்தன்றதே எனக்குப் பெரிய அதிர்ச்சி! ஆனா உன்னை நம்பனேன்! என் பொண்ணு எந்தத் தப்பும் செஞ்சிருக்க மாட்டான்னு நம்புனேன்!" என சொல்லி கண்ணை இறுக மூடித் திறந்தவர்,

"இந்த ஷூட் அவுட்ல உனக்குக் காயம்னு கேள்விப்பட்டு ஓடி

வந்தேன். இங்க வந்தாதான் தெரியுது, ப்ரேக்ணன்டா இருக்கன்னு! எந்த மான ரோஷம் உள்ள அப்பனுக்குத்தான் கோபம் வராது? ஜோனா ஜோனான்னு பைத்தியம் முத்திப் போய் அவன் அட்வாண்டேஜ் எடுத்துக்கற அளவுக்கு விட்டிருக்க நீ!" என ஜோனாவை முறைத்தப்படியே முடித்தார்.

"டாடி! எல்லாத்துக்கு ஜோனாவையே குற்றம் சொல்லாதீங்க! அவன நான் தான்.." கடத்தினேன் என சொல்ல வந்தவளின் கையைப் பிடித்து அழுத்தினான் ஜோனா.

**தன் தகப்பனே ஆனாலும். ஜீவா தன்னைக் கடத்தியதை சொல்லி அவர் பார்வையில் தாழ்ந்துப் போவதை விரும்பவில்லை அவன்.**

**இவள் திரும்பி அவன் முகத்தைப் பார்க்க,**

**"நோ!" என வாயசைத்தான் அவன்.**

**"நான் சொல்வேன் ஜோனா! அவர் உன்னைத் தப்பா நினைக்கறாரு"**

**"பரவாயில்ல மூலான்! ஏற்கனவே அவருக்கு நான் தப்பாத்தான்**

தெரியறேன்! இதுவும் சேர்ந்துக்கறதுல ஒரு பிரச்சைனையும் இல்ல எனக்கு. உன் அப்பாவேயானாலும் நம்ம பெர்சனல் விஷயம் அவருக்குத் தெரியறதுல எனக்கு இஸ்டமில்ல!” என மெல்லிய குரலில் அவளைத் தடுத்தான் ஜோனா.

“ம்ப்ச்” என சலித்துக் கொண்டாள் அவள்.

இருவரும் மெல்லிய குரலில் மாற்றி மாற்றிப் பேசிக் கொள்வதை கவனித்தப்படித்தான் இருந்தார் ஜீவானந்தம். மகள் ஏதோ

கோக்குமாக்காக செய்திருக்கிறாள், அதை அவள் வெளியே சொல்வதை மிஸ்டர் மருமகர்(மரியாதையாம்!) விரும்பவில்லை என நன்றாகப் புரிந்தது இவருக்கு.

தகப்பனை ஏறிட்டு நோக்கியவள்,

“எதுவும் என் இஸ்டமில்லாமல் நடக்கலை டாடி!” என்றவள் தனது ஜே பெண்டனைத் தடவியவாறே,

“என் மனசாட்சிக்கு சரியாப்படாத எதையும் நான் செய்யல! அதனால எல்லாத்துக்கும் ஜோனாவையே தப்பு

சொல்லாதீங்க ப்ளிஸ். என்னால தாங்கிக்க முடியல! நீங்க எனக்கு எவ்வளவு முக்கியமோ அதே அளவு ஜோனாவும் எனக்கு முக்கியம் டாடி! தயவு செஞ்சு என்னைப் புரிஞ்சுக்கங்க" என்றவளுக்கு கண்ணில் நீர் தளும்பி நின்றது.

அவளது கண்ணீருக்கு காரணம் ஜோனாதான் என ஜீவானந்தம் அவனை முறைக்க, இவர்தான் காரணம் என ஜோனா தன் மாமனாரை முறைத்தான். அந்த நேரம் தான் தீரன் ரூமின் உள்ளே நுழைந்தது.

தூங்கிக் கொண்டிருந்த இருவரில் முதலில் விழித்தது ஜோனாதான். தன்னை ஒட்டிக் கொண்டு தூங்கும் பெண்ணவளை காதலாய் பார்த்தான் பாடகன். தனக்கே தனக்காய் யாரும் இல்லை இவ்வுலகில் என இத்தனை வருடங்கள் வாடிக் கிடந்தவனுக்கு, தன்னையே நினைத்தப்படி வாழ்ந்திருக்கிறாள் இவள் எனும் எண்ணமே உயிர்ப்பூவை மலர வைத்தது. கரைக் காணாத காதல் இவளிடம் கிடைப்பதற்காகத்தான் இத்தனை வருடங்கள் தன்னை அன்பில்லா பாலைவனத்தில் பரிதவிக்க விட்டானோ ஆண்டவன் என எண்ணினான் ஜோனா.

தூங்குபவளையே பார்த்தப்படி அசையாமல் படுத்திருந்தான் அவன்.

இவன் முழித்து ஒரு மணி நேரம் சென்றுதான் விழித்தாள் ஜீவா. சோம்பலாய் கண்ணைத் திறக்க, பச்சை நிற கண்கள் இரண்டு இவளை அன்பாய் பார்த்தப்படி இருந்தன. மெல்ல புன்னகைத்தவள்,

“லவ் யூ ஜோனா!” என சொல்லி அவன் கழுத்தில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

அடுத்த நொடி அவுச்செென சொல்லி எழுந்து அமர்ந்துக் கொண்டாள்.

“என்னம்மா?”

“தோள் வலிக்குது ஜோனா” என சலுகையாய் முறையிட்டாள் அவனிடம்.

தன் ஒற்றைக் கையைக் கொண்டு மெல்ல அவள் தோளைத் தடவிக் கொடுத்தான் இவன்.

“தடவிக் கொடுத்தா சரியா போயிடுமா ஜோனா?”

“டாக்டர கூப்பிடவா மூலான்?”

“ம்ப்ச்! ஒன்னும் வேணா! இப்ப நீ கை வலிக்குதுனு சொல்லேன்!”

“இல்லை, வலிக்கலியே! இன்னும் பேய்ன் கில்லர் வேர் ஆப் பண்ணல ஜீவா”

“வலிக்குதுன்னு சொல்லு ஜோனா!” என பிடிவாதம் பிடித்தாள் இவள்.

“ஓகே, ஓகே! எனக்கு கை வலிக்குது ஜீவா”

மெல்லக் குனிந்து அவன் கையில் மென்மையாய் முத்தமிட்டாள் இவள்.

இவனுக்கு குபீரென சிரிப்பு வந்தது.

“முத்தம் வேணும்னா, ஜோனா கிவ் மி எ கிஸ்னு கேளு! எந்த வேலையா இருந்தாலும் அப்படியே விட்டுட்டு வந்து குடுக்கறேன்! இப்படிலாம் இண்டைரக்டா கேக்காதே! எனக்குப் புரியாது மூலான்” என்றவன் அவள் தோளில் மெல்லிய முத்தமிட்டான்.

**“வலி போயிடுச்சா?” என அவன் கேட்க, கன்னத்தைக் காட்டி,**

**“இப்ப இங்க வலிக்குது” என்றாள்.**

**அங்கேயும் மென் முத்தம் வைக்க, நெற்றியைக் காட்டினாள் ஜீவா. மெல்லிய சிரிப்புடன் நெற்றியில் முத்தமிட்டவன்,**

**“இங்கயும் கண்டிப்பா வலி இருக்கும் மூலான்! நீ கேக்கற முன்னமே நானே தரேன்” என உதட்டில் அழுந்த முத்தமிட்டான்.**

இருவருக்குமே அந்த முத்தம் தேவையாய் இருந்தது. தன் காதலுக்கு இனி எந்தத் தடையும் இல்லை என சந்தோஷமாய் இவளும்,தடையாய் இருந்த காதலி அதைத் தாண்டி தன்னை நோக்கி எட்டெடுத்து வைத்து விட்டாள் என ஆனந்தத்தில் இவனும் விடாமல் தேன் கொடுத்து தேனெடுத்துக் கொண்டிருந்தார்கள். மூச்சு வாங்க இருவரும் விலகிய நொடி,

“உன் மேல நான் ரொம்ப கோபமா இருக்கேன் ஜோனா” என அடுத்த சண்டைக்கு பிள்ளையார் சுழி போட்டு வைத்தாள் ஜோனாவின் மூலான்.

## அத்தியாயம் 21

பிரசித்திப் பெற்ற அந்த முருகன் கோயிலில் ஓர் ஈ காக்காய் கூட நுழைய முடியாதபடி பலத்தக் காவல் போடப்பட்டிருந்தது. வாசலில் வாழை மரம் தோரணம் தொங்க, நாதஸ்வர ஒலி மங்களமாய் காதை நிறைத்தது.

தீரன் வேட்டி சட்டையில் ஆணழகனாய்(ஹீரோ ஆக சான்ஸ் இருக்கோ????) அங்குமிங்கும் ஓடியாடி ஐயர் ஏவிய வேலைகளை செய்தபடி

இருந்தான். ஜீவானந்தம் எப்பொழுதும் போல விறைப்பாய் நின்றப்படி நடந்துக் கொண்டிருக்கும் சாங்கியங்களை கவனித்துக் கொண்டிருந்தார். சூசன் அழகாய் பட்டுச் சேலை கட்டி, அது தடுக்கி தடுக்கி விட, நடக்கப் பயந்து அப்படியே ஒரு நாற்காலியில் அசையாமல் அமர்ந்திருந்தார். அவர் அருகே அவரது கணவர் கோயில் சிற்பங்களையும் அதன் கலை நயங்களையும் கண்டு வியந்தப்படி நின்றிருந்தார். பிள்ளைகள் இருவரும் வரப் பிரியப்படாததால் அவர்களை அழைத்து வரவில்லை இவர்கள். மேளதாளம் வாசிப்பவர்கள், ஐயர்,

குடும்பத்தினர் என வெகு சிலரே அழைக்கப்பட்டிருந்தனர் இந்த ரகசிய திருமணத்துக்கு.

என்ன ரகசியத் திருமணமா? ஏன் இந்த ரகசியத் திருமணம்? திரைத்துறையில் காலடி எடுத்து வைக்கப் போகும் இந்த அழகிய பாடகன் எலிஜிபள் பேச்சிலராய் இருந்தால் தானே படம் ஓடுவதற்கு அட்வாண்டேஜாய் இருக்கும்! கன்னியரின் கடைக்கண் பார்வை எல்லாம் அவன் மேல் விழுந்தால் தானே படம் வெற்றி நடைப் போடும்! படம் முடித்து திரையிட்டு நல்ல வரவேற்படைந்த பின்னே பெரிதாய்

வரவேற்பு வைத்துக் கொள்ளலாம் என படத்தின் டைரக்டரான தீரன் அபிப்பிராயப்பட, ஜோனா ஒத்துக் கொள்ளவேயில்லை. ஜீவானந்தமும் இந்த ஒரு விஷயத்தில் மருமகனை ஒட்டியேப் பேசினார்.

ஜீவாவோ இந்த விஷயத்தில் தீரனின் பக்கம் நின்றாள். அவளுக்கு என்றுமே ஜோனா எடுத்தக் காரியத்தில் வெற்றிப் பெற வேண்டும் என்பதுதான் முக்கியம். அவனது ஒவ்வொரு ஆல்பமும் வெளி வரும் போது அவன் பதட்டப்படுவானோ இல்லையோ, அது ஹிட்டடிக்க

வேண்டும் என இவள் எல்லா தெய்வத்தையும் வேண்டிக் கொள்வாள்! அவன் காலடி எடுத்து வைத்திருக்கும் திரைத்துறையில் தனது தடத்தை ஆழமாய் பதிப்பதற்கு இந்தத் திருமணம் தடையாய் இருக்குமென்றால் தான் திரை மறைவிலே இருந்துக் கொள்வதாக சொல்லிவிட்டாள் ஜீவா. எவ்வளவோ இரு ஆண்களும் போராடிப் பார்த்தும், இந்த விஷயத்தில் அவளை அசைக்க முடியவில்லை. அவள் ஆசைப்படியே நெருங்கிய சொந்தங்களை மட்டும் அழைத்துத் திருமணம் நடைப் பெற்றுக் கொண்டிருந்தது.

பூக்களைக் கொண்டு அழகாய் அமைக்கப்பட்டிருந்த மேடையில் அலெக்சாண்டர் ஜோனா பட்டு வேட்டி பட்டு சட்டையில் அம்சமாய் அமர்ந்திருந்தான். ஒரு கை இன்னும் தொட்டிலில் தான் இருந்தது. ஒற்றைக் கையால் ஐயர் சொல்லிய சாங்கியங்களை செய்துக் கொண்டிருந்தவனின் கண்கள் எங்கே இன்னும் ஜீவாவைக் காணோம் என தேடியபடி இருந்தது.

கடைசியாய் ஐயர் மணமகளைக் கூப்பிட, அழகான பச்சைப் பட்டில் கொஞ்சமாய் நகைகள் அணிந்து, லேசாய் ஒப்பனை செய்து, ஜடைப்

போட்டுப் பூ வைக்க முடி இல்லாததால் சின்னதாய் கிரீடம் வைத்த தலை அலங்காரத்தில் நேர் கொண்ட பார்வையுடன் நடந்து வந்தாள் ஜீவா. ஒற்றைப் பிள்ளையாய் போய் விட்டவளை, அண்ணன் ஸ்தானத்தில் கைப் பிடித்து அழைத்து வந்தான் தீரன். அவளைப் பார்த்த ஜோனாவின் கண்களில் காதல் கரையுடைத்து வழிந்தது என்றால், ஜீவானந்தத்தின் கண்களில் பாசம் பெருகி வழிந்தது. என்ன கண்டான் தன் மகன் இவளிடம் என அறிமுகப்படுத்தப்பட்ட நாளன்று உற்றுப் பார்த்தது போல இன்றும் தனக்கு மருமகளாய் வரப்

**போகிறவளை பார்வையால் அளந்தார் சூசன்.**

**ஜோனாவின் அருகே அமர்ந்தவள்,**

**“கை எங்கயாச்சும் வலிக்குதா ஜோனா?” எனதான் முதலில் கேட்டாள்.**

**“ஐம் குட்! உனக்கு பேய்ன் இருக்கா ஜீவா?” என இவன் கேட்டு, இல்லையெனும் பதிலையும் பெற்றுக் கொண்டான்.**

‘மணமேடையில உட்கார்ந்துக்கிட்டு கை வலிக்குதா கால் வலிக்குதான்னு கேள்வி ரெண்டுக்கும். கல்யாணம்னு ஒன்னு ஆனாலே நிம்மதி பேக் டோர்ல நடையைக் கட்டிரும், விதி ப்ரண்ட் டோர்ல எண்ட்டராகி பொரட்டிப் போட்டு அடிப் பின்னி எடுக்கும்னு யார் சொல்லுவா இவங்களுக்கு! இதெல்லாம் வெளிய சொன்னா என்னைப் பைத்தியக்காரன்னு சொல்லுவாங்க! ஃபன்னி பீப்பிள்’ என எண்ணிக் கொண்டான் தீரன்.

ஐயர் கெட்டிமேளம் சொல்ல, வாத்தியக்காரர்கள் மங்கள இசை

முழங்க, தொட்டிலில் இருந்த ஒரு கையையும் இன்னொரு கையையும் ஒன்று சேர்த்து, இவள் அவனுக்கு வாகாய் குனிந்துக் கொடுக்க, மங்கள நாணை ஜீவாவின் கழுத்தில் கட்டினான் ஜோனா. ஜீவானந்தம் ஆனந்தக் கண்ணீருடன் மஞ்சள் அரிசித் தூவி வாழ்த்தினார் அவர்களை.

கண்கள் கலங்கிப் போக, அதை அழுத்தித் துடைத்தாள் ஜீவா. கண் மை ஈஷிக் கொண்டது கூட அவளுக்குக் கவலையில்லை. கண்ணீர் தன்னவன் முகத்தைக்

காண விடாமல் மறைப்பதுதான் இம்சையாய் இருந்தது.

‘என் தோழன், என் ரட்சகன், என் நலன்விரும்பி, என் காதலன் இன்று என் கணவன்’

உள்ளமெல்லாம் உவகைப் பீரிட, உடல் நடுங்க அவனை நெருங்கி தோள் சாய்ந்துக் கொண்டாள் ஜீவா. ஒற்றைக் கையால் அவள் தோளை வளைத்துக் கொண்டவன்,

“ஆர் யூ ஓகே?” என பதட்டமாய் கேட்டான்.

ஆமென அவள் தலையாட்டினாலும், மற்ற சடங்குகளை சீக்கிரம் முடிக்க சொல்லி உடனே வீட்டுக்குக் கிளம்பி விட்டான் தன்னவளுடன். தீரன் கோயிலில் மற்ற வேலைகளை முடித்துக் கொண்டு வருவதாக சொல்லி விட, இன்னொரு காரில் ஜீவானந்தத்துடன் சூசனும் அவர் கணவரும் இவர்களைத் தொடந்தார்கள். காரில் பாடிகார்ட் சூழ தன்னருகே அமர்ந்தவளை, தோளில் சாய்த்துக் கொண்டான் ஜோனா.

“சாஞ்சிக்கோ! யூ லுக் சோ டையர்ட்! உங்க டாடி உன்னை நல்லா ரெஸ்ட்

எடுக்க விட்டாரா இல்லையா? ஒரு சுத்து இளைச்சுப் போன மாதிரி இருக்க மூலான்” என அவன் சொல்ல, இவளுக்கு சிரிப்புத்தான் வந்தது.

ஹாஸ்பிட்டலில் இருந்து டிஸ்ச்சார்ஜ் ஆனதும், இவளைத் தன்னோடு அழைத்துப் போக இவன் முனைய, திருமணம் முடியும் வரைக்கும் ஜீவா தன் மகள்தான் என ஜீவானந்தம் அழைத்துப் போய்விட்டார். தன் வீட்டுக்குத்தானே அவளை அனுப்ப மாட்டார், தான் அங்கே வருவதை யார் தடுப்பது என நாள் முழுக்க ஜீவானந்தத்தின் வீட்டில் ஜீவாவோடுதான் இருப்பான் ஜோனா.

நைட் மட்டும் தீரன் வந்து அழைத்துப் போவான்.

“நைட்டாச்சு கிளம்பலியா? மணி பதினொன்னு ஆச்சுக் கிளம்பலியா?“ என நொடிக்கொரு தடவை ஜீவானந்தம் ஜீவாவுக்குப் போன் போடுவதில்,

“ப்ளிஸ் கிளம்பு ஜோனா” என இவள் கெஞ்சவே ஆரம்பித்துவிடுவாள்.

அதற்கும் கூட,

“உனக்கு என்னை விட உன் டாடியத்தான் ரொம்பப் பிடிக்குது” என குறைப்பட்டுக் கொண்டே கிளம்புவான்.

மறுநாள் காலை இவன் தான் காலிங் பெல் அடித்து மிலிட்டரியை கரேக்ட் டைமுக்கு எழுப்பி விடுவான். இந்த மூவரின் அக்கப்போரில் தீரன் தான் காரோட்டியாய், சமாதானப் புறாவாய், பன்ச்சிங் பேக்காய் இத்து இடியப்பமானான்.(அதாங்க நொந்து நூசுல்ஸ்சானான்)

அவன் தோளில் சாய்ந்துக் கொண்டவள் அப்படியே கண்ணயர,

அவள் விழுந்து விடாதபடி பிடித்துக் கொண்டான் ஜோனா. அவனுக்கும் களைப்பாய்தான் இருந்தது. ஆனாலும் மனதில் நிறைந்திருந்த சந்தோஷம் தூங்க விடவில்லை அவனை. கெஞ்சல், கொஞ்சல், சிணுங்கல், செல்லக் கோபம், குழந்தைப் குறும்பு, சுட்டித்தனம், பிடிவாதம் என இந்தக் கொஞ்ச நாட்களாய் தன்னை சுழட்டி அடிக்கும் தன் மூலானை வாஞ்சையாய் பார்த்தப்படி அன்று அவள் மனதைத் திறந்த நாளை அசைப் போட்டான் ஜோனா.

“உன் மேல நான் ரொம்ப கோபமா இருக்கேன் ஜோனா”

“கோபப்படு மூலான்! நெறைய கோபப்படு! கோபத்துல ரெண்டு அடி கூட அடி! நான் சந்தோஷமா வாங்கிப்பேன்! எனக்கு இந்த மாதிரி கோபப்பட்டு என் கூட சண்டை போடற மூலான் தான் வேணும். நான் செய்யறத எல்லாமே ஏத்துக்கிட்டு என்னை தெய்வமா பார்க்கற ஜீவா வேணாம்! ஐ வாண்ட் யுவர் லவ் டார்லிங்! நாட் யுவர் வொர்ஷிப்” என சொன்னவனின் குரலில் அவ்வளவு ஆதங்கம்.

அவன் கழுத்தில் இன்னும் ஆழமாய் முகத்தைப் புதைத்துக் கொண்டவள்,

“அடிக்க மாட்டேன் என் ஜோனாவ! ஆனா அவன துன்பப்படுத்திப் பார்க்கறவங்கள சும்மா விடமாட்டேன்” என்றாள்.

தன்னிடமிருந்து அவளைப் பிரித்தெடுத்தவன்,

“இப்போத்தான் சொன்னேன் என்னைக் காதலி, ஆராதனை செய்யாதேன்னு! என் மனசு என்ன பாடுபடுது தெரியுமா ஜீவா? லெட்டர் எழுதி வச்சிட்டு என்னை காட்டேஜ்ல அப்படியே விட்டுட்டுப் போயிட்ட! உங்க அப்பா சொன்ன மாதிரி என் மேல பைத்தியமா இருந்த ஒரு

இன்னேஷண்ட் ரசிகையை என் ஆசைக்கு யூஸ் பண்ணிட்டனோன்னு எத்தனை நாள் துடிச்சுப் போயிருப்பேன் தெரியுமா! வலிக்குது ஜீவா, மனசு ரொம்ப வலிக்குது!”

என்றவன் குரலை செறுமி,

“உன்னை என்னோட தேவதையாப் பார்த்தேன்! உன்னாலத்தான் திரும்பவும் எழுத ஆரம்பிச்சேன், நல்லா சாப்பிட ஆரம்பிச்சேன், நிம்மதியா தூங்க ஆரம்பிச்சேன். மொத்தத்துல மனுஷனா வாழ ஆரம்பிச்சேன்! உன்னோட அக்கறை, அன்பு, பாசம் எல்லாமே என்னோட

செத்துக் கிடந்த ஒவ்வொரு செல்லுக்கும் உயிர் கொடுத்துச்சு. எனக்கே எனக்கான ஒரு சொந்தத்த கண்டுப்புடிச்சிட்டேன்னு அவ்ளோ ஹேப்பியா இருந்தேன். அந்த சந்தோஷத்த, அன்ப, காதல எனக்குக் காட்டத் தெரிஞ்ச விதத்துல காட்டினேன். என்னை உனக்குக் கொடுத்து, உன்னை எனக்காக எடுத்துக்கிட்டேன். உன் கிட்ட இருந்து மறுப்பு வந்திருந்தா கண்டிப்பா நான் நிறுத்திருப்பேன் ஜீவா. ஆனா என்னை நீ மறுக்கல! காலங்கடந்துதான் யோசிச்சேன், நீ குடுத்த சம்மதம் எனக்கான காணிக்கையா இல்ல காதலான்னு!”

என கலங்கியவனின் வாயை சட்டென பொத்தினாள் ஜீவா.

“நான் சொல்லறத எல்லாம் கேட்க உனக்குத் தெம்பு வேணும் ஜோனா! முதல்ல சாப்பிடுவியாம், அப்புறமா நாம பேசுவோமாம்!” என்றவள் கட்டிலில் இருந்து மெல்ல இறங்கினாள்.

தீரன் ஹாட் கண்டேய்னரில் மூடி வைத்திருந்த உணவை எடுத்தவள், அவன் அருகே வந்து நின்றாள். அதில் கரண்டியிட்டு, அவன் வாயருகே கொண்டு போனாள் ஜீவா.

“முதல் வாய் என் பேபிக்கும், நம்ம பேபிக்கும்!” என்றவன் ஒரு கையால் கரண்டியை வாங்கி அவளுக்கு ஊட்டி விட்டான்.

அதன் பிறகு அமைதியாய் இருவரும் ஒருவருக்கு ஒருவர் ஊட்டி விட்டு சாப்பிட்டு முடித்தனர். பாத்திரங்களை ஓரம் கட்டி வைத்தவள், அவனுக்கு ஈர டவல் கொண்டு வாயையும் துடைத்து விட்டாள். கட்டிலில் சாய்ந்து அமர்ந்திருந்தவன் அருகே போய் அமர்ந்துக் கொண்டவள், குண்டடி படாத கரத்தைத் தன் கரத்துக்குள் பிணைத்துக் கொண்டாள்.

“உன்னை நான் முதன் முதலா சந்திச்சது காதல் கத்திரிக்காய்லாம் என்னன்னே தெரியாத வயசு ஜோனா! எனக்குன்னு ஒரு ப்ரேண்ட் கிடைக்காதா, என்னையும் யாராவது விளையாட்டுல சேர்த்துக்க மாட்டாங்களா, என் கூட சேர்ந்துப் படிக்க மாட்டாங்களான்னு ஏங்கிக் கிடந்த வயசு அது. ஒன்பது வயசு ஜீவாவுக்கு வெள்ளைக்காரனான உன்னைப் பார்த்தது ஒரு அதிசய நிகழ்வு. இப்போ திடீர்னு ஒரு டைனசோர பார்த்தா நாம எப்படி அதிர்ச்சியாகிப் போவோம்! அந்த மாதிரி ஒரு ஆனந்த அதிர்ச்சி”

தன்னை டைனசோரோடு ஒப்பிட்டுப் பேசியதில் புன்னகை வந்தது ஜோனாவுக்கு.

“அப்படி அதிர்ச்சியாகி நின்னவ தோள் மேல நீ கையைப் போட்டு அந்த பயங்கர மலை ஓரத்தில இருந்து இழுத்துட்டுப் போன. ஏதோ தைரியத்துல சாக வந்துட்டாலும் ரொம்ப பயந்துப் போய் அழுதுட்டு இருந்தேன். நீ அங்கிருந்து என்னை இழுத்த நொடி, என் கண்ணுக்கு என்னைக் காக்க வந்த எங்க ஊரு சூப்பர் ஹீரோ சக்திமானா தெரிஞ்ச நீ! என் கிட்ட சிரிச்சுப் பேசுனப்போ,

என்னைப் பிடிச்சிருக்குன்னு சொன்னப்போ, எனக்காக பாட்டுப் பாடி என்னைக் கியூட்டி பைன்னு புகழ்ந்தப்போ, நான் சொன்ன மொக்க ஜோக்குக்கு சிரிச்சப்போ எனக்கும் ப்ரண்ட் கிடைச்சிருச்சுன்னு இந்த உலகுக்கே கத்திச் சொல்லனும்னு தோணுச்சு! என் கேப் பிடிச்சு ஆட்டி தலையைத் தடவனப்ப, நம்ம அம்மா உயிரோட இருந்திருந்தா இப்படித்தானே பாசமா தலை கோதிருப்பாங்கன்னு தோணுச்சு! என் கூட ஸ்பேண்ட் பண்ண அரை மணி நேரத்துல எனக்கு ஒரு நண்பனா, அம்மாவா, அப்பாவா, ஆசானா, பாதுகாவலனா எல்லாமுமா தெரிஞ்ச

நீ! உன் பிம்பம் என மனசுல பச்சக்குன்னு பதிஞ்சுப் போயிடுச்சு ஜோனா!”

அவள் மனதில் உள்ளதைத் தெரிந்துக் கொள்வதற்காக  பேசவிட்டு அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான் இவன்.

“சின்னப் புள்ளைங்க எல்லோரும் தினம் அவங்க வாழ்க்கையில நடக்கறத பெத்தவங்க கிட்ட ஷேர் பண்ணிப்பாங்க! இல்ல கூடப் பிறந்தவங்க, நண்பர்கள் கிட்ட ஷேர் பண்ணிப்பாங்க. என்னால அப்பா கிட்ட எதையும் ஷேர் பண்ணிக்க

முடியாது! நெருங்கிய நட்புன்னும் யாரும் இல்ல. அதனால என்னோட வாழ்க்கையில நடக்கறத எல்லாம் நீ பக்கத்துல இருக்கற மாதிரி உருவகப்படுத்தி உன் கிட்ட ஷேர் செஞ்சிக்க ஆரம்பிச்சேன். ஜோனா இன்னிக்கு ஓட்டப்பந்தயத்துல நான் கோல்ட் மெடல் அடிச்சேன், இன்னிக்கு மேத்ஸ் டெஸ்ட்ல எனக்குத்தான் ஹையஸ்ட் மார்க், நம்ம ஜோனா(நாய்—இப்பொழுது உயிரோடு இல்லை) இன்னைக்கு பச்சையா வாந்தி எடுத்தான். இப்படி என்னோட தனிமைக்குத் துணையா நீதான் இருந்த!”

“அமெரிக்காவுல நான் இருக்கேன்னு தான் அங்க படிக்க வந்தியா ஜீவா?”

“ஆமா, உனக்காகத்தான் வந்தேன்! என்னோட நிழலா இருந்த உன்னை நிஜத்துல மறுபடி ஒரு முறையாவது பார்த்திடனும்னு ஆசை! ஹ்ம்ம் வெறின்னு கூட சொல்லலாம். அந்த டைம்ல எல்லாம் நீ டாப் சிங்கர் ஆகிட்ட! உன்னைத் தனியா சந்திக்க முயற்சி செஞ்சேன், ஆனா முடியல. உன்னோட ஒவ்வொரு கான்சேர்ட்டுக்கும் கண்டிப்பா டிக்கட் வாங்கி வந்துப் பார்ப்பேன்! மேடையில பாடறது என் நண்பன் ஜோனான்னு அவ்ளோ பெருமையா

இருக்கும். ஒரு தடவை உனக்காக திருட்டுத்தனமா பேக் ஸ்டேஜ்ல காத்திருந்தேன். ஒரே தடவை உன் கிட்ட பேசிடனும், நான் தான் உன்னோட டேய் பையான்னு சொல்லனும்னு ஆசையா வேய்ட் பண்ணேன். நீயும் கான்சேர்ட் முடிச்சுட்டு கிளம்பி வந்த! நான் உன் முன்னுக்கு வந்து நிக்க, என்னை மாதிரியே சந்து பொந்துல ஒளிஞ்சிருந்த இன்னும் சில பொண்ணுங்களும் உன்னை சூழ்ந்துகிட்டாங்க! அவங்க சத்தத்துல, ஜோனா நாந்தான் உன்னோட டேய் பையான்னு நான் கத்தனது உனக்குக் கேக்கவேயில்ல! உன்னோட கார்ட்ஸ்

எங்க எல்லாரையும் புடிச்சு தள்ளி விட்டுட்டு உன்னைக் கூட்டிட்டுப் போய்ட்டாங்க! அவங்க தள்ளனதுல நான் கீழ விழுந்துட்டேன்! உன்னோட ரசிகைங்க என்னை ஏறி மிதிச்சிட்டு உன் பின்னால ஓடி வந்தாங்க! கண்ணுல கண்ணீர் வழிய, கைல ரத்தம் வழிய, கார்ல ஏறுன உன்னையேத்தான் பார்த்திருந்தேன். அப்போ நல்லா புரிஞ்சது இந்த மரமண்டைக்கு, நீ என் நண்பன் ஜோனா இல்ல, ஹாட் சிங்கர் ஜோனான்னு" என்றவள் அவன் தோள் சாய்ந்து குலுங்கி அழுதாள்.

இது போலெல்லாம் அடிக்கடி அவன் வாழ்க்கையில் நடப்பதுதானே! ஆனால் அப்போது அவன் அறிந்திருக்கவில்லையே கீழே தள்ளப்பட்ட பல நூறு பெண்களில் தன் உயிருக்கு மேலானவளும் இருந்திருப்பாள் என! இவனுக்குமே தொண்டை அடைத்தது. அவள் தோளணைத்துக் கொண்டவன், அன்று நடந்த சம்பவத்துக்கு இன்று மன்னிப்புக் கோரினான்.

“சாரி ஜீவா! சாரிடா!” என அவன் வாய் ஓயாமல் முணுமுணுத்தது.

“அப்போ முடிவு பண்ணேன், இனி எப்பவுமே நான் தான் டேய் பையான்னு உன் கிட்ட சொல்லவேக் கூடாதுன்னு. அதுக்கு பிறகும் உன் கான்சேர்ட்டு வருவேன், தூரத்துல இருந்து உன்னை ரசிப்பேன்! ஆனா உன்னை நெருங்கனும்னு நினைக்கல! எனக்குத்தான் நீ என் ஜோனா! உனக்கு நான் யாரோத்தானேன்னு மனச தேத்திப்பேன்! அப்புறம் படிப்பு முடிஞ்சு இந்தியாவுக்கே வந்துட்டேன்! வேலை வேலைன்னு என்னை பிசியா வச்சிக்கிட்ட வேளையில தான் அப்பாக்கிட்ட இருந்து கல்யாணத்துக்கு நெருக்கடி வந்தது! நீ சொல்லிட்டுப் போனதுல இருந்து,

அவர் எது சொன்னாலும் கேப்பேனே! அது போலத்தான் இதுக்கும் சம்மதம் சொல்லனும்னு நெனைச்சி வச்சிருந்தேன்! இந்த மாதிரி விஷயத்துக்கெல்லாம் உடனே ஒத்துக்கக் கூடாதே! என்னதான் ஆம்பள மாதிரி எங்கப்பா வளர்த்திருந்தாலும், நான் பொண்ணுதானே! உள்ளுக்குள்ள கொஞ்சம் வெக்கம், கூச்சம் எல்லாம் ஒட்டிக்கிட்டுத்தான் இருந்துச்சு! யோசிச்சு சொல்றேன்னு லீவுக்குக் கிளம்பிட்டேன்!”

**“அந்த டைம்லதான் உன் ஸ்பை கிட்ட இருந்து நான் வரத தெரிஞ்சுக்கிட்ட! கரேக்டா?”**

**“ஆமா! திரும்பவும் முனுமுனுன்னு உன்னைப் பார்த்து பேசனும்ங்கற ஆசை மனச அரிக்க ஆரம்பிச்சது! இங்க நடந்தது எல்லாத்தையும் மறக்கனும், புது வாழ்வு வாழனும்னு சொன்ன நீ, மறுபடி இங்க ஏன் வரேன்னு ஒரு குறுகுறுப்பு வேற! உடம்புக்கு முடியாம இருந்தியே, நலமாகிட்டயான்னு நேருல பார்க்கனும்னு மனசெல்லாம் அடிச்சிக்கிச்சு! கல்யாணம் செஞ்சிக்க முடிவெடுத்துட்டோம், நண்பனா**

நெனைச்சாலும் உன்னை மனசு முழுக்க பச்சைக் குத்தி வச்சிருக்கறது எனக்கு வரப் போகிற கணவருக்கு நான் செய்யற துரோகமா தோணுச்சு! ஐ நீட் எ க்ளோஷர்! என் வாழ்க்கை எனும் புத்தகத்துல உன்னுடைய சாப்டரா க்ளோஸ் செய்ய இந்தக் கடைசி சந்திப்பு உதவும்னு தோணுச்சு! அதான் தீரனா வந்தேன்! எவ்ளோ ஆசையா வந்தேன் தெரியுமா ஜோனா! தீரனா என்னை அறிமுகப் படுத்திக்கிட்டாலும் என்னைப் பார்த்ததும் உனக்கு ஞாபகம் வந்து, டேய் பையான்னு கூப்டுவியான்னு பேராசையோட நின்னிருந்தேன் உன் முன்ன! ஆனா நீ

கூப்பிடல! அதோட உன் பாடி லாங்குவேஜ்ல ஒரு அலட்சியம். மனசு ரொம்ப வலிச்சது தெரியுமா! எனக்குத்தான் நீ சகலமும், ஆனா உனக்கு என் நினைவு கூட இல்லைன்னு ஒரு கோபம் உன் மேல! அதுக்குப் பிறகு நாம வெளிய போனோம், சாப்டோம், கடத்தனோம்! ஐ மீன் கடத்தனேன்! அதெல்லாம் தான் நெறைய தடவைப் பேசிட்டோமே!”

“ஊட்டில உன்னை சந்திச்சப்போ நீ ரொம்ப சின்னப் பையனா இருந்த! எனக்கு இருந்த மன உளைச்சல்ல உன்னை நான் சரியாக் கூட பார்க்கல

ஜீவா! அழுது கலங்கி நின்ன கண்ண மட்டும்தான் பார்த்தேன்! அடிக்கடி காட்டேஜ்ல நீ என்னை நேருக்கு நேர் பார்க்கறப்போ, உள்ளுக்குள்ள என்னமோ பண்ணும்! உன் கண்ணுல என்னவோ இருக்குன்னு அடிக்கடி நினைப்பேன்! ஆனா டேய் பையாவையும் உன்னையும் நான் சம்பந்தப்படுத்திப் பார்க்கல ஜீவா! ஊட்டி எனக்குக் கொடுத்தது ஆறாத வடு மட்டும்தான். அதை நெனைச்சுப் பார்க்கவே விரும்பனது இல்லை நான்! அந்த சம்பவத்தோட இந்த அழகான குட்டிப் பையனையும் மறந்துப் போனது என் தப்புதான் ஜீவா! என் வாழ்க்கையில நான்

செஞ்ச பெரிய தப்பு இது! என்னை மன்னிச்சிடு ஜீவா”

“பைத்தியமா உனக்கு? எதுக்கு இப்ப மன்னிப்புலாம் கேக்கற? அந்த வயசுல புரியலைனாலும் வளர வளர உன்னோட மனசு பட்டபாடு எனக்கு நல்லாவே புரிஞ்சது ஜோனா! மிஸ்டர் ஜெய்க்குமார் பேசுன பேச்சோட என்னையும் சேர்த்து நீ மறந்ததுல தப்பே இல்ல! சின்னப்புள்ளைத்தனமா இதுக்கெல்லாம் உன் கிட்ட கோச்சிக்கிட்டது என் தப்புத்தான்” என அவன் குற்ற உணர்ச்சியைக் குறைக்க முயன்றாள் ஜீவா.

தலையை இடம் வலமாக ஆட்டியவன், அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

“என்னோட தப்ப ஒத்துக்க விட மாட்டர, என்னை உள்ளங்கையில வச்சித் தாங்கற, எனக்குன்னு ஒன்னுனா துடிச்சுப் போகிற, என் உயிர காக்க உன் உயிர குடுக்க முன் வர, ஏன்டி ஏன்? உனக்குன்னு நான் என்ன செஞ்சிட்டேன்னு இப்படிலாம் என்னை உசுரா நினைக்கற?” என கண் கலங்கினான் ஜோனா.

“இந்த உசுரே நீ காப்பாத்திக் குடுத்ததுதான் ஜோனா! என் உடம்புல

இந்த உயிர் இருக்கற வரைக்கும் அது இந்த ஜோனாவ ஆராதனை செஞ்சிட்டே இருக்கும்" என சிம்பிளாக முடித்து விட்டாள் ஜீவா.

"அப்போ உன் காதல் எனக்குக் கிடைக்காதா மூலான்?"

"காதல்னா என்ன ஜோனா? ஒருத்தர் எப்பொழுதும் நலமா ஆரோக்கியமா இருக்கனும்னு நெனைக்கிறது லவ்னா, யெஸ் ஐ லவ் யூ ஜோனா! ஒருத்தர் வாழ்க்கையில சக்சஸ்புல்லா இருக்கனும்னு வேண்டிக்கறது லவ்னா, யெஸ் நான் உன்னை காதலிக்கிறேன் ஜோனா.

**ஒருத்தர் எப்பொழுதும் சந்தோஷமா இருக்கனும்னு மனசு விரும்பறது லவ்னா, யெஸ் வோ ஐ நி(மேண்டரின்) ஜோனா. ஒருத்தர் குழந்தை குட்டின்னு மனசு நிறைஞ்ச வாழ்க்கை வாழனும்னு நாம ஆசைப்படறது லவ்னா, யெஸ் சாராங்ஹியோ(கொரியன்) ஜோனா."**

**இதே வார்த்தைகளை காட்டேஜில் ஒரு முறை சொல்லி இருந்தாள் ஜீவா. மறுபடியும் அதைக் கேட்ட ஜோனாவுக்கு கண்கள் இரண்டும் கலங்கி சிவந்தன. இவள் இப்படித்தான் என புரிந்துக் கொண்டான் பாடகன். அவளது**

**ஜோனா பக்தியென்பது அன்பு, பாசம், நேசம், காதல், காமம், நட்பு எல்லாம் கலந்துக் கட்டி ஒரு பேக்கேஜாக வருவது! அவளுக்கு காதலும் ஜோனாவிடம் காட்டும் பக்திதான், நேசமும் அவனிடம் காட்டும் பக்திதான், காதலில் விளைந்த காமமும் அவனிடம் காட்டும் பக்திதான்!**

**"நீ என்னைக் காதலிக்க வேண்டாம்! உன் விருப்பப்படியே வொர்ஷிப் பண்ணு! ஆனா நான் என் ஜீவாவ, என் மூலான காதலிச்சுத் தள்ளுவேன்! லவ் டார்ச்சர் பண்ணுவேன்! ஐ லவ் யூ மூலான்! லவ் யூ டூ தெ மூன்**

அண்ட் பேக்” என்றவன் அவளை மூச்சு முட்ட முத்தமிட்டான்.

கலகலத்து சிரித்தவளை ஆசையாய் கட்டிக் கொண்டான் ஜோனா.

“என் மேல இவ்ளோ பக்தி வச்சிருந்தவ ஏன்டி என்னை விட்டுட்டுப் போன?”

“உனக்காகத்தான் உன்னை விட்டுட்டுப் போனேன் ஜோனா! பாண்டில உனக்கு என் மேல ஒரு வித அட்டாச்மெண்ட் வர ஆரம்பிச்சது! அது உன்னை நான்

நல்லா பார்த்துக்கிட்டதனால வந்த உணர்வோன்னு எனக்குத் தோணுச்சு! ஓர் ஆணையும் பெண்ணையும் தனியாப் பூட்டி வச்சா, ஒன்னு வெறுப்புல அடிச்சிக்கிட்டு செத்துடுவாங்க! இல்லை ஈர்ப்புல ஒன்னா சேர்ந்து வாழ்ந்திடுவாங்க. அப்படித்தான் என் மேல உனக்கு ஈர்ப்பு வந்துடுச்சோன்னு நெனைச்சேன். தினம் முகத்தைக் கண்ணாடில பார்க்கறேனே என் அழகு என்ன லெவல்னு எனக்குத் தெரியாதா ஜோனா! உன்னை மாதிரி ஒருத்தன் என்னைத் திரும்பிப் பார்த்தா, அதுக்கு தனிமையின் கொடுமையைத் தவிர வேற என்ன

காரணமாயிருக்கும்னு தோணுச்சு! ஆனா அந்தக் கடைசி நாள் நீ காட்டுன காதல்ல நெஜமாலுமே என்னை ரொம்ப டீப்பா லவ் பண்ணறன்னு புரிஞ்சுக்கிட்டேன்! அதான் விலகி வந்தேன்”

“பைத்தியம்டி உனக்கு! தெ கிரேட் ஜோனாவோட டீப் லவ் உனக்கு சீப் லவ்வா போச்சு! பொசுக்குன்னு விட்டுட்டுப் போயிட்ட!” என்றவன் அவள் கன்னத்தை மெலிதாக கடித்து வைத்தான்.

“வலிக்குது ஜோனா! என சிணுங்கியவள்,

“நான் ஒரு கேள்வி கேக்கறேன்! ஹாணஸ்டா பதில் சொல்லனும்! சரியா?” என கேட்டாள்.

“கேளு!”

“நீ ஒருத்திய லவ் பண்ணுற, ஹ்ம்ம் சரி, என்னையே வச்சிப்போம் இந்த சிட்டுவேஷன்ல! நீ என்னை லவ் பண்ணற! எனக்கு கிப்ட் வாங்கனும்னு கடைக்குப் போற! அங்க தங்க நகையும் இருக்கு, வைர நகையும் இருக்கு! எது எனக்கு வாங்கித் தருவ நீ?”

“என் செல்லத்துக்கு தங்கத்தப் பூட்டி அழகு பார்க்கறத விட வைரத்தப் பூட்டித்தான் அழகுப் பார்ப்பேன்”

“அதே போலத்தான் என் செல்லத்துக்கு நானும் வைரத்தப் பூட்டி அழகு பார்க்கனும்னு நெனைச்சேன்! இந்தத் தங்கத்த விட உன் வாழ்க்கையில வைரமா ஒருத்தி இணைஞ்சா நீ இன்னும் பிரகாசிப்பன்னு நெனைச்சேன்! அதான் விட்டுட்டுப் போனேன். தோற்றத்துலயோ, திறமையிலயோ, பணத்துலயோ எதுலயும் நான் உனக்கு இணையில்ல! அது என்னை

உறுத்திட்டே இருந்துச்சு, இப்பவும் உறுத்திட்டேத்தான் இருக்கு! உன் கூட டேட் பண்ண லேடிஸ் மாதிரி நான் இல்லவே இல்ல! காட்டேஜ்ல நீ சொன்ன மாதிரி கையில சுருட்டிப் பிடிச்சிக்க நீள முடி இல்ல, உன்னைத் தாங்கிக்க மெத்து மெத்துன்னு பஞ்சு போல உடம்பு இல்ல, நீ வழுக்கி விழுந்துடாம இருக்க தேவையான இடங்கள்ல மேடு பள்ளங்கள் இல்ல! மொத்ததுல நான் பார்க்க பொண்ணு மாதிரியே இல்ல!”

இவளுக்கு எப்படி புரிய வைப்பது என மலைத்துப் போனான் ஜோனா. கண்டதையும் பேசி தனக்கு தானே

ஆப்பு வைத்துக் கொண்டது நன்றாகப் புரிந்தது அவனுக்கு.

“வைரம் தங்கம்னு நல்லா பேசற மூலான். பண மதிப்புப்படி பார்த்தா வைரம் பெருசுதான். ஆனா அன்பின் அடிப்படையில ஆசையா வாங்கிக் குடுக்கப்படற தங்கம், விலை மதிப்பில்லாதது. பளபளன்னு என் பக்கத்துல நிக்கிற வைரத்தோட, பாசமா, பாந்தமா எனக்குள்ள அடங்கிப் போகிற இந்த தங்கம்தான் எனக்கு வேணும்! இந்தத் தங்கம் குடுக்குற அன்பும், அரவணைப்பும் போதும் எனக்கு! ஒரு காலத்துல நீ சொல்லற புற அழகுல மயங்கிக்

**கிடந்தவன் தான் நான்! ஆனா இப்போ அக அழகுத்தான் என்னைக் கட்டி இழுக்குது மூலான்! எந்த அழகி கூடவும் கட்டிலில் விழுந்துப் புரளலாம்! ஆனா எனக்கு இந்த அழகி கூடத்தான் கூடி முடிச்சப் பின்னும் கட்டிப் பிடிச்சு, காதல் மொழி பேசி, தட்டிக் குடுத்து தாலாட்டுப் பாடனும்னு தோணுது! எத்தனையோ பேர கடந்து வந்த நான் முதன் முதலா, முழுசா மயங்கி நின்னது உன் கிட்ட மட்டும்தான் ஜீவா(தலைப்பு வந்திடுச்சுடா சாமி)!"**

**"ஐ லவ் யூ ஜோனா"**

“எது????? அந்த வொர்ஷிப் தானே! சரி பண்ணு பண்ணு!”

காதல் பல ரகம். அதில் இவள் காதலும் ஒரு ரகம்!

“உன்னை மாதிரியே மூனு குழந்தைங்க வேணும் ஜோனா! அவங்களயும் நான் கண்ணுக்குள்ள வச்சிப் பார்த்துக்கனும்”

“அது சரி! நான் கடவுள், நம்ம பிள்ளைங்க தெய்வக் குழந்தைங்க, நம்ம வீடு ஒரு கோயில், உங்க டாடி கோயிலுக்கு வரப் புள்ளைங்கள பயங்காட்டுற கோயில் யானை, நீ

இந்த தெய்வத்துக்கு பூஜை செய்யற பக்தை! மொத்தத்துல நம்ம குடும்பம் ஒரு டிவைன் குடும்பம்”

“ஏன் எங்க டாடி மட்டும் கோயில் யானை?” என்றவள் கோபமாய் அவன் அடிப்படாத கையில் அடித்தாள்.

“அடி இன்னும் அடி! என்னை விட உன் டாடி மேலத்தான் பாசம் உனக்கு” என ஆரம்பித்தவன், அவள் கோப முகத்தைப் பார்க்க ஆசை வரும் போதெல்லாம் தன் மாமனாரை வம்பிழுத்து வாங்கிக் கட்டிக் கொள்வதை வழக்கமாக்கி இருந்தான்.

தன் நினைவுகளில் மூழ்கி இருந்தவன், வீடு வந்ததும் தன்னை மீட்டுக் கொண்டான். இன்னும் உறங்கியபடி இருந்த ஜீவாவை,

“பேபி வேக் அப்! இப்போ கை மட்டும் எனக்கு நல்லா இருந்தது, மணப் பெண்ணான உன்னை என் கைகளில ஏந்தி அலுங்காம உள்ளத் தூக்கிட்டுப் போயிருப்பேன்” என பெருமூச்சு விட்டான்.

மெல்ல கண் விழித்துக் கொண்டவள்,

**“பரவாயில்ல விடு ஜோனா! ட்ரடிஷன மாத்தி நான் வேணா உன்னை உள்ளத் தூக்கிட்டுப் போகவா?” என கேட்டாள்.**

**“நீ செஞ்சாலும் செய்வ மூலான்!“ என்றவன் சிரிப்புடனே அவளை அழைத்துக் கொண்டு வாசலை நோக்கி நடந்தான்.**

**அங்கே மிலிட்டரியின் ஆர்டர் படி ஆரத்தித் தட்டைப் பிடித்தப்படி நின்றிருந்தார் சூசன். சேலை ஒரு பக்கம் நழுவவா என வம்பிழுக்க, தட்டில் வெற்றிலையின் மேல் இருந்த சூடத்தில் ஆரத்தித் தண்ணீர் பட்டு**

அணைந்து விடாமல் பேலன்ஸ் செய்யவென ஒரு டான்சே ஆடிவிட்டார் அவர். ஜீவாவுக்கு சிரிப்புப் பொத்துக் கொண்டு வரப்பார்த்தது.

பாடகன் பாடிகார்டாய் இருந்தவர்கள் ஒரு வழியாக கணவன் மனைவியாய் அந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தனர்.

தனக்குத் தெரிந்த வகையில் மற்ற சாங்கியங்களை செய்ய வைத்தார் ஜீவானந்தம். மாப்பிள்ளை பெண்ணுக்குப் பால் பழம் கொடுத்து, இந்த பேச்சிலர்கள் பூஜை அறை

வைத்திருக்காததால் தன் பர்சில் வைத்திருக்கும் மனைவியின் படத்தையே தெய்வமாய் வணங்க வைத்து தன் மகள் மங்களகரமாக வாழ்க்கையைத் துவக்க ஆவன செய்தார் அவர்.

எல்லாம் முடித்ததும் களைத்துப் போயிருந்த ஜீவாவை சோபாவில் அமர்த்தினான் ஜோனா.

“உட்காரு! சும்மா அங்கயும் இங்கயும் நடக்காத! செய்ய வேண்டியத எல்லாம் உன் டாடி கோயில் யானை செய்வாரு” என சொல்லி

தலையணை அடியையும் பரிசாகப் பெற்றுக் கொண்டான் ஜீவாவிடம்.

அந்த நேரம் செக்கியூரிட்டி உள்ளே வந்து,

“சார் உங்களப் பார்க்க சூர்யான்னு ஒரு அம்மா வந்திருக்காங்க!” என்றான்.

ஜீவாவும் ஜீவானந்தமும் விறைப்பாய் ஜோனாவின் இரு பக்கம் வந்து நின்றார்கள். மனைவியாய் இருந்தவளும் மாமனாராய் இருந்தவரும் நொடியில் பாடிகார்டாய் மாறிப் போனார்கள்.

## அத்தியாயம் 22

அந்த போலிஸ் ஸ்டேஷனில் கொடுக்கப்பட்டிருந்த தனியறையில் அமர்ந்திருந்தான் ஜோனா. அவனோடு அவனுக்குப் பாதுகாப்பாய் அவன் மனைவி ஜீவா.

“எனக்கு நீ செய்யறது கொஞ்சம் கூட பிடிக்கல ஜோனா” என்றவள் முகத்தை ஏழு முழம் தூக்கி வைத்திருந்தாள்.

அவள் கைப்பற்றி அதை தன் உதட்டில் வைத்து முத்தமிட்டவன்,

“ப்ளிஸ்டாம்மா, மறுபடி எனக்குப் புடிக்கல எனக்குப் புடிக்கலன்னு ஆரம்பிக்காதே! உன்னை விட என் மனசைப் புரிஞ்சவங்க யாருமில்ல! அந்த துப்பாக்கி சூட்டுக்கு காரணமானவங்க யார்னு தெரிஞ்சதுல இருந்து, என்னமோ மனசே சரியில்ல மூலான்! அந்த சூர்யா வந்து பேசற முன்னாடியே கண்டிப்பா இங்க வந்துப் பார்க்கனும்னு நெனைச்சி வச்சிருந்தேன்” என்றான்.

“அவனுங்க உனக்கு ஹால்ப் ப்ரதர்ஸா இருக்கலாம்! ரத்த சம்பந்தம் இருக்கறதுனால உன்னை ரத்தம் சிந்த வைப்பானுங்களா? அந்த குண்டு உன் நெஞ்சைத் துளைச்சிருந்தா, இப்படி உசுரோட உக்காந்து அவனுங்களுக்கு பாவம் பார்த்துட்டு இருப்பியா?” என்றவளுக்கு கண்கள் இரண்டும் கலங்கியது.

இத்தனை நாட்களாய் தகப்பனுக்கு பயந்து டேம் கட்டி சேகரித்து வைத்திருந்த கண்ணீரை எல்லாம், இப்பொழுது அடிக்கடி திறந்து விடுகிறாள் ஜீவா! ப்ரேக்னசி டைமில் இதெல்லாம் சகஜம்தான் என

அவளது கைனி சொல்லி இருந்ததால், ஜோனா முடிந்த அளவு அவளை அப்செட் ஆகாமல் பார்த்துக் கொண்டான். இங்கே வருவதைக் கூட ரகசியமாகத்தான் வைத்திருந்தான். அவள் தூங்கும் போது ஜோனா கிளம்பி வர, இங்கே வந்து பார்த்தால் அவனுக்கு முன்னே வந்து நின்றிருந்தாள்.

அவளை சமாதானப்படுத்திக் கொண்டிருக்கும் போது, கதவு திறக்கப்பட்டது. கையில் விலங்குடன் ஒருவனை அழைத்துக் கொண்டு வந்தார் போலிஸ் அதிகாரி.

“சார், உங்க மாமனார் பெரிய இடத்துல பேசி ரெக்வேஸ்ட் பண்ணதனால பார்க்க விடறோம்! பத்து நிமிஷம்தான் டைம், சீக்கிரம் பேச வேண்டியத பேசிடுங்க” என சொல்லி விட்டு சென்றார்.

உள்ளே வந்தவனின் அருகில் போய், ஆயுதம் எதாவது இருக்கிறதா என தன் திருப்திக்காக செக் செய்த ஜீவா, அவனை முறைத்தப்படியே நாற்காலியைக் காட்டினாள் உட்கார சொல்லி.

உள்ளே வந்ததில் இருந்தே அவன் பார்வை முழுக்க ஜோனாவின் மேல்

தான் இருந்தது. நாற்காலியில் அலட்சியமாக அமர்ந்தவன்,

“வாடா, எங்கப்பன் பெத்த மவனே!” என திமிராக அழைத்தான்.

“டேய், மரியாதையா பேசு! ஒன்னு விட்டேன், செவுனி திரும்பிடும்” என பொங்கினாள் ஜீவா.

“நீ யார்டி எனக்கு மரியாதையப் பத்தி கிளாஸ் எடுக்க?”

“அவங்க உன் அண்ணி! எனக்கு மரியாதை தரலனாலும் போகுது,

அவங்களுக்கு கண்டிப்பா தரனும்!” என அவன் கண்களை ஆழ்ந்து பார்த்தப்படி சொன்னான் ஜோனா.

இருவருக்கும் சில பல மாதங்களே வயது வித்தியாசம் இருக்கும். சூசன் இவனைப் பிரசவித்தப் போது சூர்யா கர்ப்பமாய் இருந்தார்.

“நீ ஏன் ஜோனா இந்தப் பன்னிக்கிட்ட போய் என்னை அண்ணின்னு கூப்பட சொல்லற!” என அதற்கும் பொங்கினாள் ஜீவா.

“ஹேற பார்த்து பேசு! பன்னி கின்னின்னு சொன்ன,பேசன வாய கிழிச்சிடுவேன்” என்றவனின் வாயோரம் ரத்தம் ஒழுகியது.

அவனை பளாரென அறைந்திருந்தாள் ஜீவா!

“பத்து மாசம் கஸ்டப்பட்டு பெத்த உசுரு உனக்கெல்லாம் மசுரா போச்சுல்ல! சர்வ சாதரணமா தோசை சுடற மாதிரி ஆள சுட சொல்லிருக்க! ஜோனாவாலத்தான் பேசாம இருக்கேன்! இல்லைனா உள்ளுக்கே ஆள் வச்சிப் போட்டுத் தள்ளிருப்பேன்

உன்னை! பரதேசி” என ஆங்காரமாய் கத்தினாள் இவள்.

அவள் அறைந்த அறையில் அரண்டுப் போய் பார்த்திருந்தான் அவன். இந்த குட்டி உடம்பில் இவ்வளவு சக்தியா என அதிர்ந்துப் போனான்.
ஜோனாவோ அவளை, ஒற்றைக் கையால் இழுத்து வந்து தன்னருகே அமர்த்தி,

“மூலான், கூல் டவுன்! இந்த மாதிரி நேரத்துல உனக்கு ஸ்ட்ரேஸ் வேணாம்னு தான் உன் அப்பாவ வச்சி இந்த சந்திப்ப ஏற்பாடு செஞ்சேன். என்னை ட்ரேக் பண்ணி வந்துட்டு,

இப்படி உணர்ச்சிவசப் படறது சரியா சொல்லு? நம்ம பேபிய பத்தி நெனைச்சுப் பார்த்தியா நீ?” என மெல்லிய குரலில் கேட்டான்.

பேபி மந்திரம் வேலை செய்ய, மெலிதாக தெரிய ஆரம்பித்திருந்த வயிற்றைத் தடவியபடி அமைதியாக அமர்ந்தாள் ஜீவா. ஆனால் பார்வை மட்டும் முன்னே அமர்ந்திருந்தவனை கோபமாக வெறித்தது.

“உனக்கு நான் என்ன தீங்கு செஞ்சேன்னு என்னைக் கொல்ல திட்டம் போட்ட?”

“என் அப்பாவின் அன்பை எல்லாம் அபகரிச்சுக்கிட்டியே அது குற்றமில்லையா? விவரம் தெரிஞ்சதுல இருந்து என்னை பாசமா பார்க்க மாட்டாரா, ஆசையா ரெண்டு வார்த்தைப் பேச மாட்டாரா, என் கூட டைம் ஸ்பேண்ட் பண்ணமாட்டாரான்னு ஏங்கி ஏங்கி நான் தவிச்சதுக்கு யார் காரணம்? நீ!!!!” என கத்தினான் அவன்.

அவனது குற்றச்சாட்டில் ஜோனாவுக்கு அதிர்ச்சியாகிப் போனது! அதிர்ச்சியில் இருந்து மீண்டவனுக்கு சிரிப்புப் பொத்துக்

கொண்டு வந்தது. கண்களில் நீர் வர சிரித்தான், பொங்கி பொங்கி சிரித்தான். தம்பிக்காரன் அவன் சிரிப்பை ஆத்திரமாகப் பார்த்திருக்க, ஜீவாவோ மனம் வலிக்கப் பார்த்திருந்தாள்.

“சிரிடா நல்லா சிரி! உன்னைப் பார்த்து கொஞ்ச எத்தனை தடவ வெளியூர் வந்திருக்காரு! வருஷத்துல முக்கால்வாசி நாள் உன் கூடத்தான். நானும் என் தம்பியும் அப்பான்னு ஒருத்தர் இருந்தும் அவர் நிழல் கூட படாமத்தான் வளர்ந்தோம்! வெளிநாட்டுல கொஞ்சனது பத்தலன்னு, இப்போ இங்கயே கூட்டி

வந்துட்டாரு உன்னை. உனக்காகப் பார்த்து பாத்து மாளிகைய அழகு படுத்தனது என்ன, புது கார் வாங்கிப் போட்டது என்ன, படத்துல ஹீரோவாக்க ப்ளான் போட்டது என்ன, அப்படியே உருகறாரு உன் மேல! இங்க நாங்கத்தான் என்னமோ வைப்பாட்டிக்குப் பொறந்த பிள்ளைங்க மாதிரி தீண்டத் தகாதவங்களா ஆகிட்டோம்" என தன் ஆதங்கத்தை எல்லாம் கோபமாக அவிழ்த்து விட்டான் அவன்.

அன்று ஜெய்க்குமாரின் லீகல் மனைவி சூர்யா வந்து கண்ணீர்

விட்டு கதறியதை நினைத்துப் பார்த்தான் ஜோனா.

“பொறந்தப்ப கூட தொட்டுத் தூக்கல பிள்ளைங்கல! அவரை வெறுத்திடக் கூடாதுன்னு அப்பாவுக்கு இந்த வேலை இருக்கு, அந்த வேலை இருக்கு, இத வாங்கித் தந்தாரு, அதை வாங்கித் தந்தாருன்னு சொல்லியே வளத்திட்டேன்! எல்லாம் ஒரு காலகட்டம் வரைக்கும் தானே நாம சொல்லறத நம்புவாங்க. இவரு உங்கம்மாட்ட பேசிட்டு இருந்தத ஒரு தடவைக் கேட்டுட்டான் பெரியவன். அவருக்கு வெளி நாட்டுல இன்னொரு பையன் இருக்கான்றதும் அவங்க

பேசனதுல தெரிஞ்சிடுச்சி இவனுக்கு! அப்போ பதினைஞ்சு பதினாறு வயசு இருக்கும். என் கிட்ட வந்து இதெல்லாம் உண்மையான்னு கேட்டு அழுதான். என்னதான் புருஷன் நம்ம கிட்ட மறைச்சு இந்த கேடு கெட்ட வேலைலாம் பார்த்தாலும், பொண்டாட்டிக்குத் தெரியாம போகுமா? நானும் ஆமான்னு ஒத்துக்கிட்டேன்! அப்போல இருந்து ரொம்ப அமைதியாகிட்டான்! அவன் தம்பிய எப்பொழுதும் வம்பிழுத்து அழ வச்சிட்டு இருந்தவன், டோட்டலா மாறிட்டான். அப்பா ஸ்தானத்துல இருந்து பாசமா பார்க்க ஆரம்பிச்சிட்டான். எல்லாம்

சரியாகிருச்சுனு நெனைச்சேன்! ஆனா இப்படி வெடிச்சி வரும்னு நெனைக்கல தம்பி. என்னதான் இருந்தாலும் அவங்க ரெண்டு பேரும் உனக்கு தம்பிங்க! தயவு செஞ்சு அவங்கள தண்டிச்சிடாதே" என அழுதவரை தேற்றி அனுப்பி வைத்தான் ஜோனா.

"ஜீவாம்மா! கொஞ்ச நேரம் காதைப் பொத்திக்கிட்டு அந்த மூலைல போய் உட்காரேன்!" என்றான் ஜோனா.

மறுபேச்சு பேசாமல் காதை இரு கரம் கொண்டு பொத்திக் கொண்டவள் ரூமின் மூலைக்குப் போய் அமர்ந்துக்

கொண்டாள். ஆனால் பார்வை மட்டும் ஜோனாவை விட்டு அகலவில்லை. தம்பியாகப்பட்டவன் ஜோனாவைத் தாக்க முனைவானோ என அலர்ட்டாகவே அமர்ந்திருந்தாள்.

“நீயும் அடால்ட், நானும் அடால்ட்! கொஞ்சம் ஓப்பனா பேசலாமா?” என கேட்க அவன் முறைத்தப்படியே பார்த்திருந்தான்.

“மிஸ்டர் ஜெய்க்குமார் என்னைக் கொஞ்ச வெளிநாட்டுக்கு வந்தாருன்னு நீ சொன்னதுல பாதி ரைட்டு பாதி தப்பு! என்னைன்னு சொன்னது தப்பு! கொஞ்சன்னு

சொன்னது ரைட்டு! என்ன, புரியலையா ப்ரோ? உங்கப்பா பாதி நாள் வெளிநாட்டுல இருந்தது என்னைப் பார்க்க இல்ல, இளசு இளசா பல தினுச பார்க்க! பிள்ளைங்கலாம் அவருக்கு ஒரு மேட்டரே இல்ல, பிள்ளை வரதுக்கு பண்ணற மேட்டர்தான் அவருக்கு பெரிய மேட்டர்! க்ரீனா சொல்லனும்னா அந்தாளு டாடி மெட்டிரியல் இல்ல, கட்டிலுக்கு வாடி மெட்டிரியல்! இந்த விஷயத்த என்னோட பதினாறு வயசுல மண்டையில ஆணியடிச்ச மாதிரி புரிய வச்சிட்டாரு அவரு! நான் அவர விட்டு ஒதுங்கி பல வருஷம் ஆகுது!

படம் நடிக்க கேட்டு டார்ச்சர் பண்ணறாரே, நேருல போய் ஃபோர் வோர்ட்ஸ் நல்லா கேக்கலாம்னு தான் வந்தேன்! கேட்டுட்டேன்! இப்போ என் பாதைய பார்த்துட்டுப் போய்ட்டே இருக்கேன் நான்! உங்க சங்காத்தமே எனக்கு வேணா! இனி என் வழியில வராதே ப்ரோ! நான் சும்மா இருந்தாலும் உங்கண்ணி வச்சி செஞ்சிடுவா!" என்றவன் தனது கைக்குட்டையால் அவன் வாயில் வழிந்த ரத்தத்தைத் துடைத்து விட்டான்.

ஜோனாவையே வெறிக்கப் பார்த்திருந்தான் அவன் தம்பி.

“நான் சொன்னத நீ நம்பனாலும் கவலையில்ல, நம்பலைனாலும் கவலை இல்ல! இத்தனை வருஷத்துல நீயே உங்கப்பா கேரக்டர பத்தி அரசல் புரசலா கேள்விப்பட்டிருப்ப! சோ ஐ டோண்ட் வாண்ட் டு வேஸ்ட் மை டைம் பை ப்ரூவிங் மைசெல்ப். கொலை பண்ணற அளவுக்கு கோபம் இருக்கறவன், என்னை ஏன் கொல்லனும்? பாசத்த குடுக்காத உங்கப்பன கொன்னிருந்தா அதுல ஒரு நியாயம் இருக்கு! உங்கப்பன மாதிரி இல்லாம, என் குடும்பம், என் மனைவி, என் குழந்தைன்னு ஆசை

ஆசையா வாழ நினைக்கற என்னைக் கொல்லப் பாத்தியே, தப்புத்தானே ப்ரோ? அந்தத் தப்புக்கு தண்டனை கிடைச்சித்தானே ஆகனும்?”

“எந்த தண்டனைனாலும் நான் ஏத்துக்குவேன். என் தம்பிய விட்டிட சொல்லு! அவன் மேல எந்தத் தப்பும் இல்ல!” என்றவனின் அலட்சிய பாவம் மாறி பரிதவிப்பு வந்திருந்தது.

அவனை ஆழ்ந்துப் பார்த்தவன்,

“வரேன் ப்ரோ!” என கிளம்பி விட்டான்.

ஜோனாவோடு கதவு வரை போன ஜீவா, மீண்டும் திரும்பி வந்து தம்பிக்காரனின் இன்னொரு கன்னத்தில் அறைந்தாள்.

“என் ஜோனாவ கொல்லப் பார்த்தல்ல! அவனுக்கு மட்டும் எதாச்சும் ஆகிருந்தது உன் குடும்பத்தையே டார்ச்சர் பண்ணி கைலாசத்துக்கு அனுப்பிருப்பேன்! உங்கப்பன் மேல வச்சப் கேடு கெட்ட பாசத்துக்காக நீ கொலை முயற்சில உள்ள கிடக்க. ஆனா அந்தாள் இப்போ எங்க இருக்கான் தெரியுமா? போரா போரா தீவுல, புதுபட நாயகியோட காரசாரமான

விவாதத்துல இருக்கான். என் ஜோனாவ பொறந்ததில இருந்து பாசத்துக்கு ஏங்க வைச்சு, இப்போ சாவோட விளிம்பு வரைக்கும் தள்ளன உங்கொப்பனுக்குப் பரிசு வேணா? நடந்துப் போன மாம்ஸ்சோட கையக் கால உடச்சு தவழ்ந்து வர ஏற்பாடு பண்ணிட்டேன்! என்ன இருந்தாலும் இந்திய மருமகளா போயிட்டேன்! அதுக்கு மேல தண்டனைக் குடுத்தா கலாச்சாரப் போலிஸ் ஒத்துக்காதுங்கறதால தப்பிச்சாரு உங்க நைனா!" என சொல்லி மீண்டும் கை ஓங்கியவளை,

“உன் ஜோனா பக்தி அளவே இல்லாம போயிட்டு இருக்குடி! போதும் விட்டிரு, அவன சாகடிச்சிடாதே” என சொல்லி வெளியே இழுத்துக் கொண்டுப் போக முயன்றான் ஜோனா.

“டேய் ஜோனா!” என அவன் குரல் ஒலிக்க, கதவருகே நின்று திரும்பிப் பார்த்தான் இவன்.

“உன்னை பயம் காட்டி அமெரிக்காவுக்கு ஓட வைக்கறது மட்டும் தான் என்னோட ப்ளான்! கொல்லறது இல்ல! என் பன்னி ஐ மீன் அண்ணி, நம்பலைனாலும் அதான் நெசம்” என சொல்லி

ஜோனாவைப் பார்த்து கண்ணடித்தான்.

இவள் மீண்டும் திமிறிக் கொண்டு அவனை அடிக்க வர, ஜோனா இறுகப் பிடித்துக் கொண்டான் ஜீவாவை.

“ஓ அண்ணி ஓ அண்ணி

ஓ அண்ணி எங்கள் அண்ணி

அங்கயற்கண்ணி

உன் உள்ளம் வெள்ளிக் கிண்ணி

பாசமென்னும் பால் புகட்டும்

தெய்வ கண்மணி

ஆஹா ஆஹா!!!!!!” என நக்கலாய் அண்ணி சீரியலின் தலைப்புப் பாடலைப் பாடினான் அவன்.

ஜோனாவுக்கு அவன் சேட்டையில் ஒரு பக்கம் சிரிப்பு வரப் பார்த்தாலும், பத்ரகாளி போல் பொங்கிக் கொண்டிருக்கும் தன் ஜீவாவைப் பார்க்க பாவமாய் இருந்தது.

“ஹி இஸ் க்ரேஷி! நீ வாடாம்மா நாம போகலாம்” என அழைத்துப் போய்விட்டான் ஜீவாவை.

வெளியே போனவர்களையேப் பார்த்திருந்த இவனுக்கு மெல்லிய புன்னகைப் பூத்தது.

“ஜோனாண்ணா!” முணுமுணுத்துக் கொண்டான்.

அன்றிரவு இரவு உணவுக்காக, மேசையில் அமர்ந்திருந்தார்கள் அனைவரும். சூசனும் அவர் கணவரும், வந்ததற்கு இந்தியாவை சுற்றிப் பார்க்கலாம் என டூர் போயிருந்தார்கள். மகளைப் பார்த்துப் போக வந்திருந்த ஜீவானந்தத்தையும் சாப்பிட அழைத்தாள் ஜீவா. தீரனும் மேசையில் அமர்ந்திருந்தான்.

மேசையில் படபடவென தாளம் தட்டிக் கொண்டே,

“இன்னிக்கு என்ன மெனு?” என கேட்டான் தீரன்.

“பழைய சோறும் பாவக்காயும்!” என்றாள் ஜீவா.

“எதே!!! ஏன்மா ஏன்? உனக்கு தெய்வப்புலவர் தெரியுமா தெய்வப்புலவர்?”

“உனக்கே தெரிஞ்சிருக்கறப்போ எனக்குத் தெரியாதா?” என கேட்டாள் ஜீவா.

“அவர் வீட்டுக்கு வந்த விருந்தாளிங்கள எப்படி கவனிக்கனும்னு உன்னை மாதிரி ஆளுங்களுக்காகவே விருந்தோம்பல்ல பத்து குறளு எழுதி வச்சிருக்காரு.

‘மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குநழ்யும் விருந்து’னு ஒரு குறள் இருக்கு. அப்படின்னா என்ன அர்த்தம்னு உனக்குத் தெரியுமா?”

“எங்க டாடிக்கு எல்லா குறளும் மனப்பாடம். அவர் பதில் சொல்வாரு இதுக்கு” என்றவள் நமுட்டு சிரிப்பு சிரித்தாள்.

“அதாவது மிஸ்டர் தீரன், திருவள்ளுவர் என்பவர் பழந்தமிழ் இலக்கியமான திருக்குறளை இயற்றிய தமிழ்ப்புலவர். அவரை தேவர், நாயனார், பொய்யாமொழிப் புலவர் இப்படி கூட அழைக்கலாம். அவர் மயிலாப்பூரில் வாழ்ந்திருக்கலாம்னு சான்றுகள்

சொல்லுது. திருக்குறளோட பியூட்டியே அது ரெண்டே வரியில இருக்கறதுதான். அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என மூனு பிரிவு இருக்கு அதுல" என அவர் அடுக்கிக் கொண்டே போக, தீரனுக்குப் பசி காதை அடைத்தது.

'மிலிட்டரி, அந்த மூனு பாலுக்கும் நீ விளக்கம் குடுத்து முடிக்கறதுக்குல்ல எனக்கே பால் ஊத்திடுவாங்கய்யா! ஸ்ட்ரேய்டா வள்ளுவர் கிட்டயே நான் போய் விளக்கம் கேட்டுக்கறேன் விட்டுருய்யா!' என மனதினுள்ளே அலறினான்.

அதற்குள் உணவு மேசைக்கு வந்திருக்க, ஜோனாவும் எடுத்துப் போட்டு ஜீவாவுக்கு ஊட்ட ஆரம்பித்தான். தீரனும் தட்டை எடுக்க,

“என்ன செய்யற நீ?” என கடுப்பாகக் கேட்டார் ஜீவானந்தம்.

“இல்ல சாப்பாடு..” என இவன் திணற,

“குரு கிட்ட பாடம் கேக்கறவன், பயபக்தியோட கேக்கனும்! அதென்ன பழக்கம், தின்னுக்கிட்டே திருக்குறள்

படிக்கிறது?” என மிரட்டினார் அவனை.

அவர் மட்டும் சப்பாத்தியைத் தட்டில் வைத்து கோழி குருமாவோடு தேய்த்து வாயில் போட்டு மென்று கொண்டே, திருக்குறளை எத்தனை மொழிகளில் மொழிப் பெயர்த்து இருக்கிறார்கள், அதற்கு யாரெல்லாம் விளக்க உரை எழுதி இருக்கிறார்கள் என அடுக்கடுகாய் எடுத்து விட்டார்.

‘யோவ் மிலிட்டரி, உங்க குடும்பத்தப் பத்தி தெரிஞ்சிருந்தும் வெளக்கம் தெரியுமான்னு கேட்ட என்னை

**வெளக்கமாத்தால அடிக்கனும்யா,**
**நல்லா அடிக்கனும்!!!**

**சோதனை தீரவில்லை,**

**மிலிட்ரி தொல்லைத் தாங்கவில்லை,**

**முன்னபின்ன அழுததில்லே,**

**காப்பாத்திட ஆளுமில்ல!**

**கொல்லுங்க கொல்லுங்க, மிலிட்ரிய கொல்லுங்க’**

**என பாடி மனதிலேயே அவரை கும்மிக் கொண்டிருந்தான் தீரன்.**

அவன் முகத்தைப் பார்த்து சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது ஜீவாவுக்கு. தந்தை முன்னே நல்லப் பிள்ளை போல சிரிப்பை அடக்கியப்படி அமர்ந்திருந்தாள். ஜோனாவோ நடப்பதெல்லாம் கண்ணில் விழுந்தாலும், கருத்தில் பதியாமல் தன் ஜிவாவுக்கு உணவை ஊட்டிக் கொண்டிருந்தான். அவள் சாப்பிட்டு முடித்ததும் நிமிர்ந்தவன், தீரனின் கெஞ்சும் பார்வையை அப்பொழுதுதான் கவனித்தான்.

“ஜீவாம்மா, உங்கப்பா வீட்டுல நடக்கற அராஜகம் போல, நம்ம வீட்டுக்கு வந்தவங்கள எப்போ

கிளம்பறீங்கன்னு கேட்டு கேட்டு டார்ச்சர் பண்ண மாட்டோம் நாம! ஏசி ரூம் குடுத்து, சூடா பால் குடுத்து, போர்த்திக்க போர்வைக் குடுத்து நல்லா பார்த்துப்போம்! உங்க டாடிய நைட்டு இங்கயே தங்கிக்க சொல்லு”

மாமானாரும் மருமகனும் வேலை விஷயமாய் நன்றாக பேசிக் கொண்டாலும், ஜீவா என வரும் போது இன்னும் முறைப்புத்தான்.

திருக்குறளில் இருந்து வெளியே வந்த ஜீவானந்தம்,

“கடல் போல வீடிருக்கு, அதுல ஏசியும் இருக்கு, போர்வையும் இருக்கு! யார் வீட்டுலயும் தங்க வேண்டிய அவசியமில்ல எனக்கு. ரொம்ப இருட்டிட்டதனால வேற வழி இல்லாம இங்க தங்கறேன்! ஜீவா, பால கீழ இருக்கற கெஸ்ட் ரூமுக்கு குடுத்து விடு! நான் போய் கொஞ்ச நேரம் படிச்சுட்டு தூங்கறேன்” என எழுந்துப் போய் விட்டார்.

“கோயில் யானைன்னு ஒரு பேச்சுக்கு சொன்னேன்! இவர் என்னான்னா நம்ம வீடான டெம்பிளையே சுத்தி சுத்தி வராரு!” என கேட்டு ஜீவாவிடம்

சில பல அடிகளையும் வாங்கிக் கொண்டான் ஜோனா.

அவர் நகர்ந்தக் கையோடு, தட்டில் உணவை அள்ளிப் போட்டுக் கொண்டான் தீரன்.

“தேங்க்ஸ் பாஸ், தேங்க் யூ சோ மச்!”

எங்கே மறுபடியும் ஜீவானந்தம் வந்து விடுவாரோ என அவசர அவசரமாக முழுங்கினான் இவன்.

“இனிமே எங்க விருந்தோம்பல நக்கலடிச்சு குறள் சொல்லுவ? குரலே

இல்லாம பண்ணிட்டோம் பார்த்தல்ல” என சொன்ன ஜீவா, ஜோனாவுக்கு உணவை அள்ளிக் கொடுக்க ஆரம்பித்தாள்.

“விருந்தும் மருந்தும் மூனு நாளைக்குடா தீரா! சீக்கிரம் இந்த லவ் பெர்ட்ஸ் வீட்டுல இருந்து பெட்டிய கட்டிருடா! இல்லைனா இந்த வீட்டுல உள்ள ரெண்டு ஜீவனும்(ஜீவானந்தம் + ஜீவா) நம்ம ஜீவன வாங்கிடுங்க” என முனகிக் கொண்டே சாப்பிட்டவன் முன்னே மட்டன் சுக்காவைக் கொண்டு வந்து வைத்தார் சமையல்காரர்.

“ஜீவாம்மா உங்களுக்காக செய்ய சொன்னாங்க!” என சொல்லியவர், பரிமாறி விட்டே சென்றார்.

கண்கள் கலங்க இவன் நிமிர்ந்து ஜீவாவைப் பார்க்க,

“தண்ணிய குடி, தண்ணிய குடி!” என விவேக் ஸ்டைலில் நக்கலடித்தாள் அவள்.

நட்போடு தோள் தழுவும் ஜோனா, முறைப்போடு பாசத்தைக் காட்டும் ஜீவா, மிரட்டிக் கொண்டே திரியும் ஜீவானந்தம் என அவனுக்கும்

சொல்லிக் கொள்ள உறவுகள்
வரமாய் கிடைத்தன இங்கே.
இவர்களுக்காக ஜோனா
சொன்னதைப் போல எத்தனை
மொட்டை வேண்டுமானாலும்
சலித்துக் கொள்ளாமல் போடுவான்
தீரன்.

அவர்கள் அறையின் பால்கனியில்
அமர்ந்திருந்தான் ஜோனா.
ஜீவானந்தத்துக்கு எல்லாம் வசதியாக
இருக்கிறதா என கேட்டு விட்டு,
அறைக்குள் நுழைந்தாள் ஜீவா.
அவன் அருகே போய் நின்றவள்,

“ஸ்டேஷன் போய்ட்டு வந்ததும் அப்பாட்ட என்ன பேசுன ஜோனா?” என கேட்டாள்.

அவளை அருகே இழுத்து மடியில் அமர்த்திக் கொண்டான் ஜோனா. தொட்டிலில் இருந்த கையை வருடிய ஜீவா அதை தாங்கி நிற்கும் கழுத்தைப் பிடித்து விட்டாள்.

“கேஸ வித்ட்ரா செய்ய கேட்டிருந்தேன்! அதப்பத்தி பேசிட்டு இருந்தோம்!”

“ஹ்ம்ம். தெரியும்! இன்னிக்கு ஜோனா சார் தம்பிய பார்த்த பாச

பார்வையிலேயே இப்படி எதாச்சும் வரும்னு தெரியும்”

மெலிதாய் நகைத்தான் இவன். கை மெல்ல அவள் வயிற்றை வருடியபடி இருந்தது.

“என் ஸ்டெப் சிப்ளிங்ஸ் ரொம்ப ஒட்டலைனாலும் கூட, நான் ஒதுக்கிடல அவங்கள. அவங்க காலேஜ் ஃபண்ட்க்கு நான் தான் ஹெல்ப் செய்யறேன் ஜீவா! என்னமோ இவன பார்த்ததும் ஒரு ஈர்ப்பு. எப்படி சொல்ல! ஹ்ம்ம் ஒரு ஒட்டுதல்! என்னை மாதிரியே அவனும் பாசத்துக்கு ஏங்கி

வளர்ந்திருக்கானேன்னு ஒரு பரிதாபம்! தம்பிய விட்டுட சொல்லி கேட்டப்போ அவன் பாசம் என் நெஞ்சைப் பிசைஞ்சது! அந்த தம்பிக்கு அப்பாத்தான் ஒழுங்கா இல்ல, இவனாச்சும் அந்த ஸ்தானத்துல இருந்துட்டுப் போகட்டும்னு தோணுச்சு! அதான் மன்னிச்சுட்டேன்!"

"நான் மட்டும் அவன மன்னிக்கவே மாட்டேன்! எவ்ளோ துருதுருன்னு இருப்ப நீ! உன்னை இப்படி ஒரே இடத்துல உட்கார வச்சிட்டான்"

“ஏன் ஜீவா பேபி, துருதுருன்னு இல்லைன்னு நீ என்ன மீனிங்ல சொல்லற?” என ஒரு மார்க்கமாய் கேட்டான் இவன்.

“கை நல்லா இருந்திருந்தா எனக்காக கிட்டார் வாசிச்சிருப்ப, என்னையே கிட்டாரா வாசிச்சிருப்ப! கை நல்லா இருந்திருந்தா எனக்காக பாடியிருப்ப, என்னையும் பாட வச்சிருப்ப! கை நல்லா இருந்திருந்தா பாடல் வரி எழுதிருப்ப, என் மேலயும் வரி வரியா எழுதிருப்ப! கை நல்லா இருந்திருந்தா பாட்டு வரிக்கு ஸ்வரம் சேர்த்திருப்ப, என் கூட சுகமா சேர்ந்திருப்ப” என சோகமாய்

தெரிந்தவனின் மூட்டை மாற்ற இரட்டை அர்த்தத்தில் பேசினாள் இவள்.

ஆவென வாயைப் பிளந்தான் ஜோனா.

“பச்சைப் புள்ள மாதிரி முகத்த வச்சிருக்கற என் மூலானா இப்படிலாம் பேசறது?”

“பச்சைப் புள்ளையாத்தான் இருந்தேன், என் ஜோனா என்னை நீலமா மாத்துற வரைக்கும்” என்றவள்

அவன் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள்.

“பச்சப் புள்ளையாத்தான் இருந்தேன், என் ஜோனா எனக்கு வெட்கம்னு ஒன்னை அறிமுகப்படுத்தற வரைக்கும்” என்றவள் அவன் மூக்கில் சின்ன கடி கடித்தாள்.

“பச்சைப் புள்ளையாத்தான் இருந்தேன், என் ஜோனா என்னை பெண்ணா உணர வைக்கற வரைக்கும்” என்றவள் அவன் நெற்றியில் மெல்ல முட்டினாள்.

“பச்சைப் புள்ளையாத்தான் இருந்தேன், என் ஜோனா என்னை காதலிலே குளிப்பாட்டற வரைக்கும்” என்றவள் அவன் உதட்டில் வந்து இளைப்பாறினாள்.

தன் தேவதைப் பெண்ணின் அன்பிலும், காதலிலும் நிலைத் தடுமாறிப் போனான் பாடகன்.

“என்னை யாருன்னு நெனைச்ச நீ? தெ கிரேட் ஜோனா! என் மூலான ஒரு கைப்பார்க்க இந்த ஒத்தக் கை போதும்டி” என சிரிப்புடன் சொன்னவன், தன் ஜீவாவை மெல்ல அணைத்துக் கொண்டான்.

காமனின் கோயிலில் அவன் தெய்வமாய் அருள் பாலிக்க இவள் பக்தையாய் மனம் மயங்க, நடந்தேறியது ராத்திரி நேரத்துப் பூஜை! (எல்லாப் பூஜையிலும் நமக்கு பஞ்சாமிர்தம் கிடைக்கும்! நான் எழுதற பூஜையில பெரிய நாமம் மட்டும்தான் கிடைக்கும்! கௌம்புங்க, கௌம்புங்க, கதவ சாத்திட்டாங்க )

## அத்தியாயம் 23

எபிலாக்

இரண்டு வருடங்களுக்குப் பிறகு.

கிழக்கு கடற்கரை சாலையில் அழகாய் அளவாய் அருமையாய் நின்றிருந்தது அந்த பங்களா. ஜே அண்ட் ஜே என தங்க முலாம் பூசப்பட்ட பெயர் பலகை வரவேற்க, வீட்டை சுற்றி மரங்களும், செடிகளும் அவ்விடத்தை ரம்மியமாய் காட்டின. வீட்டின் பக்கவாட்டில் கிட்டார் வடிவத்தில் பெரிய ஸ்வீம்மிங் ஃபூல் இருக்க, கூப்பிடு தூரத்தில் இருந்தது கடற்கரை. அந்த மாளிகையை சுற்றி பாதுகாவலர்கள் எப்பொழுதும் போல பணியில் இருந்தனர்.

கிச்சனில் அமர்ந்து தனது பேத்திக்கு உணவு ஊட்டிக் கொண்டிருந்தார் ஜீவானந்தம். வாயைத் திறந்து உணவை வாங்கமாட்டேன் என அடம் பிடித்துக் கொண்டிருந்த அந்தக் குட்டியின் பெயர் அலெக்ஷிஸ் ஜீவிகா. இந்நேரம் ஜீவா இப்படி அடம் பிடித்திருந்தால் பட்டென அடி விழுந்திருக்கும். ஆனால் பேத்தியின் அடம், மிலிட்ரிக்கு மனதில் கடம் வாசிப்பது போல இன்பமாக இருந்தது. பிள்ளை இன்பம் என்றால் பேரப்பிள்ளை பேரின்பம் அல்லவா!

வாரத்துக்கு இரண்டு தடவை தனது இல்லத்துக்கு சென்றுக் கொண்டிருந்த ஜீவானந்தம், பேத்தி பிறந்ததும் இங்கேயே செட்டில் ஆகிவிட்டார். ஜோனாவும் எங்கள் வீட்டில் இப்படி பார்த்துக் கொள்வோம் அப்படி பார்த்துக் கொள்வோம் என வம்பிழுப்பானே தவிர, பெரியவராய் அவர் தங்களோடு இருப்பதில் அவனுக்குமே சந்தோஷம் தான்.

இந்த வீட்டை வாங்கிக் கொண்டு வாடகை வீட்டில் இருந்து வெளியேறி இருந்தனர் ஜோனாவின் குடும்பம். கை குணமானதும், முழு மூச்சாக ஜோனாவும் தீரனும் பட வேலைகளில் இறங்கினர். அந்தப்

படத்தை முடிக்கும் முன்னரே ஜோனாவுக்கு இன்னும் பல படங்களில் இருந்து அழைப்பு வந்தது. எல்லாவற்றையும் தட்டிக் கழித்து விட்டான் பாடகன்.

ஏனென தீரன் கேட்க,

“சிங்கிங் இஸ் மை பேஷன்! மிஸ்டர் ஜெய்க்குமார வெறுப்பேத்தத்தான் நடிக்க வந்தேன், நடிச்சிட்டேன். அது போதும் எனக்கு தீரா! இனிமே என் கண்செண்ட்ரேஷன் முழுக்க பாடறதுல தான்” என தீர்க்கமாக சொல்லிவிட்டான்.

அவன் சொன்னதை அமைதியாக கேட்டிருந்த ஜீவா, தனியறையில் அவனைக் கொண்டாடி தீர்த்துவிட்டாள்.

“இந்த ஆக்டிங் கேரியர் உனக்கு எவ்ளோ கஸ்டமா இருந்ததுன்னு உன் கூடவே இருந்த எனக்கு நல்லாவே புரிஞ்சது ஜோனா! ரிவேஞ் எடுக்கறேன்னு இதுலயே மூழ்கிடுவியோன்னு பயந்துட்டே இருந்தேன். நவ் ஐம் சோ ஹேப்பி” என அவனை விட இவள்தான் அகமகிழ்ந்துப் போனாள்.

ஜே. ஜே ப்ராடக்ஷனின் அடுத்த படத்தை தீரனை டைரக்டராக வைத்து ஜெய்க்குமாரின் இரண்டாவது மகனை கதாநாயகனாய் அறிமுகப்படுத்த ஏற்பாடுகள் போய் கொண்டிருந்தன. சினிமாவில் வாரிசு அறிமுகம் என்பது சகஜம்தானே! பெரியவனோ, கேஸை இவர்கள் வாபஸ் வாங்குவதை அனுமதிக்காமல் செய்த தப்புக்குத் தண்டனையாய் இன்னும் ஜெயிலில் தான் இருக்கிறான். சில வருடங்களில் வெளி வந்துவிடுவான் அவனும். மிஸ்டர் ஜெய்க்குமாரோ, கால் இரண்டும் நசுங்கிப் போயிருக்க, படுத்தப் படுக்கையாய் கிடந்தார்.

அப்படி இருந்தும் உதவிக்கு இருந்த நர்ஸ் மேல் கை வைத்து, அடி இடியாய் வாங்கியது எல்லாம் வேற லெவல்!

தீரன் இப்பொழுது தனி வீடு எடுத்துத் தங்கிக் கொண்டாலும், இந்த வீட்டில் அவனுக்கென்று தனியறை ஒன்று நிரந்தரமாக இருந்தது. நினைத்தப் பொழுது இங்கே வந்து இவர்களோடு அளவளாவி தங்கிவிட்டுப் போவான். ஜீவிகா பிறந்தப் போது, இவன் மருதமலைக்குப் போய் மொட்டைப் போட்டுக் கொண்டு வந்தது இங்கே குறிப்பிடத்தக்கது.

பேத்தியுடன் ஜீவானந்தம் போராடிக் கொண்டிருக்க, வீட்டின் உள்ளே நுழைந்தான் தீரன்.

“எங்க சார் நம்ம வீட்டு லவ் பேர்ட்ஸ்? இன்னும் கிளம்பலையா?”

“தீர்மா(தீர் மாமா), லவ், லவ், லவ்” என அவன் சொன்ன வாக்கியத்தில் இருந்த லவ்வை மட்டும் பிடித்துக் கொண்டாள் ஜீவிகா.

“சின்னப் புள்ளை முன்னுக்கு என்ன பேசறது, ஏது பேசறதுன்னு ஒரு

விவஸ்த்தை வேணா! அவங்க கிளிப்பிள்ளைங்கன்னு உனக்குத் தெரியாது? நாம பேசறத அப்படியே பிடிச்சிக்கிட்டு, திரும்ப சொல்லுவாங்கன்னு தெரியாது? நீயெல்லாம் நூறு நாள் ஓடுன படம் குடுத்த டைரக்டருன்னு வெளிய சொல்லிடாதே!" என மெல்லியக் குரலில் திட்ட ஆரம்பித்தார் ஜீவானந்தம்.

'ஐயயோ மிலிட்ரி ஆரம்பிச்சிட்டாரே! தெரியாம வாயைக் குடுத்து, பேக்சைட புண்ணாக்கிக்கற திறமை எல்லாம் என் ஒருத்தனுக்கு மட்டும் அள்ளிக்

குடுத்துட்டாரு போல கடவுள்! சீனப் போட்டு தப்பிச்சிருடா தீரா!’

கால் வராத போனை காதுக்குக் கொடுத்து,

“ஹலோ. எஸ் டைரக்டர் தீரன் ஸ்பீக்கிங்! எதே! லியானார்டோ கப்புச்சினோ டைட்டானிக் பார்ட் 2 எடுக்க என்னோட கால் ஷீட் கேட்டாரரா? நோ மேன் நோ! உடல் அலியா பாட்டுக்கு, உயிர் என் தாய் நாட்டுக்கு! இந்த நாட்ட விட்டு படம் எடுக்கறதுக்கு கூட வெளிநாடு போக மாட்டான் தீரன்” என பேசிக் கொண்டே நழுவி விட்டான் அவன்.

“கப்புச்சினோக்கும் காப்ரியோவுக்கும் வித்தியாசம் தெரியல, இவன ஹாலிவூட்ல கூப்டறாங்களாம்! ஃப்ராடு பையன்!” என முனகியபடியே பேத்தியை கவனித்தார் ஜீவானந்தம்.

ரூமில் ஜீவாவோடு போராடிக் கொண்டிருந்தான் ஜோனா.

“இன்னைக்காச்சும் எனக்கு பாடிகார்ட்டா இல்லாம என் ஜோடிகார்ட்டா வரக்கூடாதா மூலான்?”

**“வீட்டுல மட்டும்தான் நான் உனக்கு ஜோடி ஜோனா! வெளிய போய்ட்டா இந்த ஜீவா என்னைக்குமே உன்னைப் பாதுகாக்கும் பாடிகார்ட் தான்! புரிஞ்சுக்கோயேன்! உன் கூட வெளிய வந்துட்டாலே எனக்கு லவ் செல் எல்லாம் வேலை நிறுத்தம் செஞ்சிடும் ஜோனா! எந்த நேரத்துல என்ன ஆபத்து வருமோ உனக்குன்னு என் ஃபுல் கவனமும் உன்னைக் காக்கறதுலத்தான் இருக்கும்”**

**இத்தனை வருடங்களில் ஜீவாவை நன்கு அறிந்து வைத்திருந்தவனுக்கு இதுதான் அவளின் பதிலாக இருக்கும் என நன்கு புரிந்துதான் இருந்தது.**

அவளது ஜோனா பக்தி நாளுக்கு நாள் அதிகரித்ததே தவிர, துளி கூட குறையவேயில்லை! தங்களது தேவதையைப் பிரசவிக்கும் வரை இவனின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தவள், அதன் பிறகு மீண்டும் தனது பணிகளை ஆரம்பித்து விட்டாள். குழந்தையைக் கவனிப்பது, செக்கியூரிட்டி ஆபிசை கவனிப்பது, ஜோனா வெளியே போகும் போது அவனுக்கு பாதுகாப்பாய் போவது என அவள் நேரம் இறக்கைக் கட்டிக் கொண்டு பறந்தது.

ஜோனாவும் தன் ஜீவாவை சுதந்திரமாகப் பறக்க விட்டான்.

பறந்து திரியும் பறவை பொழுது சாய்ந்ததும் தன் கூட்டை அடைந்து விடுவதைப் போல, அவளும் அந்தி சாய்ந்தால் தன் ஜோனா, தன் ஜீவி, தன் அப்பா, தன் வீடு என தன் கூட்டில் அடைந்துக் கொள்வாள். இரவு உணவை முடித்ததும் காதல் பறவைகள் இரண்டும் தங்கள் குட்டிப் பறவையோடு ஐக்கியமாகி விடுவார்கள். ஜோனாவின் பச்சை நிற கண்களோடு, அவன் மேனி நிறத்தையும் கொண்டிருந்த ஜீவிகாவுக்கு முக ஜாடை மட்டும் அச்சு அசல் ஜீவாவைப் போல இருந்தது.

குட்டி ஜீவா என இவன் கொஞ்சினால், குட்டி ஜோனா என அவள் கொஞ்சுவாள்.

“ல்ல! நான் குட்டி ஜீவி” என மகள் இவர்கள் இருவருக்குமே பெரிய பல்பு கொடுப்பாள்.

தூங்கும் போது காலை எடுத்து வாயில் வைத்துக் கொள்வாள் குட்டி! ஜீவா அவளை நேராய் படுக்க வைத்து விட்டு,

“எங்க ஊர்ல, முதல் குழந்தை வாயில தன்னோட கால வச்சிக் கடிச்சாலோ

சப்புனாலோ என்ன சொல்வோம் தெரியுமா ஜோனா?” என கேப்பாள்.

“ஹைஜீனிக் இல்லைன்னு சொல்வீங்களா மூலான்”

“இல்லைல! குழந்தையோட அம்மாவும் அப்பாவும் ஹைஜீனிக்க கை விடனும்னு சொல்வோம்”

“என்னடி சொல்லற? எனக்கு ஒன்னும் புரியல” என்பான் அவன்.

“நாம லிப் கிஸ் அடிக்கறப்போ 80 மில்லியன் பாக்டீரியா ஒருத்தங்க

கிட்ட இருந்து
இன்னொருத்தங்களுக்கு ட்ரான்ஸ்பர்
ஆகுதாம்”

“ஓஹோ! அப்புறம்?” என
புன்னகையுடன் கேட்பான் ஜோனா.

“அதத்தான் பெரியவங்க சொல்றாங்க,
கூட விளையாட யாரும்
இல்லாமத்தான் பிள்ளைங்க தன்
காலை வாயில வச்சிக்கிட்டு
விளையாடுதுங்க! இந்த
அன்ஹைஜீனிக் பழக்கம்
போகனும்னா, பெத்தவங்க
சுத்தபத்தத்த கை விட்டுட்டு, 80
மில்லியன் பாக்டீரியாவ

பகிர்ந்துக்கறது மட்டுமில்லாம, ஸ்வெட்டிங்கையும், இன்னும் சில பல ஊட்டச்சத்துகளையும் பகிர்ந்துக் கொண்டு இன்னொரு புள்ளைய அவங்களுக்கு விளையாட்டுத் தோழனா பெத்துக் குடுக்கனும்னு”

அவளது கில்லாடித்தனத்தில் வாய் விட்டு சிரிப்பான் ஜோனா.

“அடியே மை கியூட் என்சைக்ளோப்பீடியா! நீ எவ்ளோ சைன்டிபிக்கா பேசனாலும் ஜீவிக்கு மூனு வயசானாதான் ரெண்டாவது ஜீவனுக்கு அனுமதி. சீசர்னால டாக்டர் மூனு வருஷ கேப் விட

சொல்லிருக்காங்க! சோ டோண்ட் ப்ளே ட்ரீக்ஸ் மூலான்” என சொல்லி காதல் கணவனாய் சுத்தபத்தத்தைக் கைவிட்டாலும், அதற்கான தகுந்த பாதுகாப்பும் செய்து கொள்வான் பாடகன்.

கருப்பு வர்ண கோர்ட்டில் ஆணழகனாய் கிளம்பி நின்றிருந்தவனின் அருகே வந்து கட்டிக் கொண்டாள் ஜீவா.

“பாடு ஜோனா”

“என் மூலானுக்கு என்ன பாட்டு வேணும்?”

“நைட்ல என் காதுல பாடுவியே, அதைப் பாடு”

“அந்த பாட்டு பெட்ல படுத்தாத்தான் பாட வரும்டி! இப்போ போய் படுத்துக்கலாமா?”

“கோர்ட் கசங்கிடும் ஜோனா”

“நீ தந்தால் கசங்கலும் காவியம் ஆகுமடி என் கண்மணி”

“இங்கிலீசுல அழகா பாடிட்டு இருந்தவன, படம் நடிக்க கொண்டு வந்து இப்படி மொக்க வசனம் பேச வச்சிட்டாங்களே!” என சலித்துக் கொண்டவளை கட்டிலுக்குத் தள்ளிக் கொண்டுப் போனான் ஜோனா. தன் நெஞ்சத்தில் அவளை மஞ்சம் கொள்ள வைத்தவன்,

“சொந்தத்தில் இது என்ன வகை சொந்தமோ

இறைவன் தந்த வரம் இணைந்தது நெஞ்சம்

மொத்தத்தில் இது என்ன வகை பந்தமோ

இதழ்கள் சொல்லவில்லை புரிந்தது கொஞ்சம்

உன்னோடு இருக்கும் பொன்னான நிமிடம்

எந்நாளும் தொடர்ந்திட நெஞ்சம் ஏங்கும்" என அவன் பாடி முடிக்க, நீண்ட நேரம் மௌனம் மட்டுமே ஆட்சி செய்தது அங்கே.

கட்டிக் கொள்வதும் உடல் முட்டிக் கொள்வதும், மண வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் அருகிப் போய்விடுமல்லவா! அந்த இடைவெளியில் அங்கு காதலை இட்டு நிரப்புவது எது? கைப்பிடித்து

அமைதியாய் அமர்ந்து மூச்சு விடும் சத்தத்தை ரசிப்பது, பேச்சில்லாமல் அமைதியாய் தேநீர் அருந்துவது, பிள்ளைகள் கத்தி விளையாடும் போது அவர்கள் குறும்பை ரசித்து ஒருவருக்கொருவர் பார்வை பரிமாற்றம் செய்து கொள்வது என அழகான நொடிகள் கொட்டிக் கிடக்கும் நம் வாழ்க்கையில். ஆனால் அதை உணரத்தான் முடியாது நம்மால். ஏனென்றால் நாம் காதல் வார்த்தைகளை எதிர்ப்பார்த்து, செயலால் காட்டப்படும் காதல் உணர்வுகளை கடந்துப் போய்விடுகிறோம். தினம் சொல்லப்படாத ஐ லவ் யூவில் கூட

உயிர் காதல் கொட்டித்தான் கிடக்கிறது!

சென்னையின் மிக பிரமாண்டமான ஹோட்டலில் ஏற்பாடாகியிருந்தது அந்த விருது வழங்கும் விழா. ஜீவா மற்றும் அவளுடைய பாடிகார்ட் புடை சூழ உள்ளே வந்தான் ஜோனா. அவன் நடித்து வெளி வந்த படம் ‘காதல்காரா’ தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, இந்தியாவிலும், சர்வதேச அளவிலும் சக்கைப் போடுப் போட்டிருந்தது.

உள்ளே நுழைந்தவனைப் பார்த்து,

“ஜோனா, காதல்காரா, ஜோனா, ஜோனா, காதல்காரா” என ஒரே கூச்சல்.

சிரிப்புடன் அழகாய் கையசைத்தவன், மிடுக்காய் வணக்கம் வைத்தவாறே அரங்கத்துக்குள் நுழைந்தான். திமு திமுவென பத்திரிக்கை நண்பர்கள் சூழ்ந்துக் கொண்டார்கள் அவனை! ஜீவாவும் பாடிகார்ட்களும் அவர்களை தள்ளி நிறுத்தி, அதன் பிறகே கேள்விக் கேட்க அனுமதித்தனர்.

அவன் நடித்தப் படத்தைப் பற்றி, அதன் கதாநாயகியைப் பற்றி, அவன் இருக்கும் இசைத்துறையைப் பற்றி என பல கேள்விகள் முடித்து அவனின் பர்சனலில் வந்து நின்றது பேட்டி.

“ஜோனா சார்! உங்களுக்கு ரகசியமா கல்யாணம் ஆகிட்டதாகவும், ஒரு குழந்தை கூட இருக்குன்னும் வதந்தி உலவுதே! அது உண்மையா?” என ஒரு நிருபர் கேட்க, கண்கள் அங்கே இங்கே சுழல ஜோனாவுக்கு எங்கிருந்தாவது ஆபத்து வருகிறாதா என ஆராய்ந்துக் கொண்டிருந்த ஜீவாவின் மேல் இவன் பார்வை நிலைத்தது. அவளது பரிதவிப்பைக்

கண்டு கண்கள் அப்படியே மிருதுவாகிப் போனது இவனுக்கு.

“இன்னிக்கு ஸ்டேஜ்ல தெரிஞ்சுக்குவீங்க” என புன்னகையோடு சொல்லியபடி நடந்துவிட்டான் அவன்.

நிகழ்ச்சி ஆரம்பமாகி ஆடல் பாடல் என களைக்கட்டியது. ஆணும் பெண்ணுமாய் இரு அறிவிப்பாளர்களும் கலகலவென நிகழ்ச்சியை வழி நடத்தினார்கள். மேடைக்கு வந்த கலைஞர்களைப் பாட சொல்லி, வசனம் பேச சொல்லி என கலாட்டா செய்தனர்

**அறிவிப்பாளர்கள். ‘காதல்காரா’ படம் மீயூசிக், சினிமோட்டகிராபி, எடிட்டிங், பெஸ்ட் டைரக்டர் என பல கேட்டகரியில் விருதுகளை அள்ளியது.**

**பெஸ்ட் டைரக்டர் விருது வாங்க மேடையேறிய தீரன் கண் கலங்கிவிட்டான்.**

**“எத்தனையோ பேருக்கு நன்றி சொல்லனும் நான்! ஆனா இந்த நன்றி சொல்லற லெவலுக்கு என்னை உயர்த்தி விட்ட ஜோனாவுக்குத்தான் என் முழுமுதற் நன்றி. ஜோனா என்னை நம்பி**

வாய்ப்பு குடுக்கலைனா, இந்த தீரன் இன்னும் செட்ல டீ குடுத்துட்டுத்தான் இருந்துருப்பான். தேங்க்ஸ் ஜோனா!” எனும் அவன் பேச்சுக்கு கரகோஷம் அடங்க நேரமானது.

“பெஸ்ட் ப்ளேபேக் சிங்கர்- மேல்(male) அண்ட் ப்ரோமிசிங் ஸ்டார் ஆப் தி இயர் அவார்ட் கோஸ் டூ, ஜெங் ஜெங் ஜெங் ஜெங்!!!! அலெக்சாண்டர் ஜோனா” என அறிவிப்பு வர கரகோஷம் வானைப் பிளந்தது. ஜோனா அமர்ந்திருந்த வரிசையின் ஓரத்தில் நின்றிருந்த ஜீவாவுக்கு கண்கள் தன்னையும் மீறி கலங்கியது. ஸ்டைலாக எழுந்த ஜோனாவை தீரன் அணைத்துக்

கொண்டான். இவன் பார்வையோ தன்னவளின் பார்வையை கௌவி நின்றது. அவள் கலங்கிய கண்களும் சிரித்த முகமுமாக தம்ப்ஸ் அப் காட்டினாள்.

அங்கங்கே சிலர் அணைத்து விடுவிக்க, மெல்ல நடந்து மேடை ஏறினான் ஜோனா! பிரபல வெட்டரன் டைரக்டர் ஒருவர் கையால் விருதை வாங்கிக் கொண்டவனை மேடையில் பிடித்து வைத்துக் கொண்டனர் அறிவிப்பாளர்கள்.

“காங்ராட்ஸ் ஜோனா! அப்படியே கௌம்பிட்டா எப்படி? உங்கள பார்த்து

ரசிக்க, உங்க குரல கேட்டு ரசிக்க என்னை மாதிரி எத்தனை ரசிகைகள் காத்துட்டு இருக்காங்க தெரியுமா? ஆமாவா இல்லையா கேர்ல்ஸ்?" என கேட்க அரங்கமே,

"ஆமா ஆமா! வீ லவ் ஜோனா!" என அதிர்ந்தது.

புன்னகையோடு அனைவருக்கும் கை அசைத்தவன், மேடையின் பக்கவாட்டில் பார்த்து சமிக்ஞை செய்தான். அங்கிருந்து ஒருவன் உயரமான நாற்காலி ஒன்றையும், கிட்டாரையும் எடுத்து வந்து ஜோனாவிடம் கொடுத்தான். அதோடு

அவன் முன்னே ஒரு மைக் செட் செய்யப்பட்டது. ஒரு காலை தரையில் ஊன்றி நாற்காலியில் அமர்ந்தவன், புன்னகையுடன் கிட்டாரை டியூன் செய்ய ஆரம்பித்தான். அதற்கே கைத்தட்டல் காதைப் பிளந்தது.

“திஸ் சாங் இஸ் டெடிகேட்டேட் டூ மை பியூட்டிபுள் ஏஞ்சல், மை வைப் ஜீவா! திசை தெரியாம தத்தளிச்சிட்டிருந்த என் வாழ்க்கையில் துடுப்பாய் வந்து என்னைக் கரை சேர்த்த என் மனைவி, என் பாடிகார்ட், என் மகளின்

அம்மா ஜீவாவுக்கு சமர்ப்பணம் இந்தப் பாடல்!”

பாடிகார்ட் எனும் அவன் வார்த்தையில் ஸ்பாட்லைட் ஜீவாவின் மேல் போய் விழுந்தது. இவனும் மேடையில் இருந்து அவளைப் பார்த்து பறக்கும் முத்தம் ஒன்றைக் கொடுத்து,

“டார்லிங்! திஸ் இஸ் ஃபோர் யூ” என ஆரம்பித்தான்.

வீட்டில் இருந்து நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த

ஜீவானந்ததுக்கு ஆனந்தக் கண்ணீரே வந்துவிட்டது. ஜீவிகாவோ அம்மா, அம்மா என ஒரே ஆட்டம்.

ஜோனா எழுதி ஜீவா தமிழில் மொழிப் பெயர்த்திருந்த இப்பாடல், ஏற்கனவே 'காதல்காரா' படத்தில் இடம் பெற்று பட்டி தொட்டியெல்லாம் சக்கைப் போடு போட்டிருந்தது.

"கண்டேன் ஆயிரம் வானவில்லை

கண்மணி உன்னிரு விழிகளிலே

தந்தேன் என்னையும் மொத்தமுமாய்

பூவை உந்தன் பிடியினிலே

ஆயிரம் என ஆண்டானாலும்

எனையாளும் ஆண்டாள் நீயல்லவோ

காதல் ரதியே கண்மணியே

உன்னை காணத்தான்

கடல் கடந்து வந்தேனே

பித்தனும் நானானேன் உன்னாலே

சித்தனும் நானானேன் தன்னாலே

வா வா என் உயிரிசையே

வா வா என் முத்தமிழே

வா வா என் பைங்கிளியே

**கண்டேன் ஆயிரம் வானவில்லை**

**கண்மணி உன்னிரு விழிகளிலே**

**தந்தேன் என்னையும் மொத்தமுமாய்**

**பூவை உந்தன் பிடியினிலே**

**ஆயிரம் என ஆண்டானாலும்**

**எனையாளும் ஆண்டாள் நீயல்லவோ**

**கட்டிலில் சரசம் புரிய**

**கன்னிகைகள் பலர் உண்டு**

**என் மனதின் வலி களைய**

**உனைப் போல் ஒருத்தி உண்டோ**

**மடிதாங்கி தாலேலோ பாடிய தாயே**

கண்டிப்பாய் வழி நடத்திய தந்தையும் நீயே

வா வா என் உயிரிசையே

வா வா என் முத்தமிழே

வா வா என் பைங்கிளியே

கண்டேன் ஆயிரம் வானவில்லை

கண்மணி உன்னிரு விழிகளிலே

தந்தேன் என்னையும் மொத்தமுமாய்

பூவை உந்தன் பிடியினிலே

ஆயிரம் என ஆண்டானாலும்

எனையாளும் ஆண்டாள் நீயல்லவோ

ஓஓஓஓஓஓ என் ஜீவநாதமே நீ ஜீவா!!!!!!!!!”

என பாடிக் கொண்டே கீழே இறங்கி தன் மனைவியின் அருகே போய் அவளைக் கட்டிக் கொண்டான் ஜோனா.

ஜீவாவும் கண்ணில் கண்ணீருடன் தன்னவனின் அணைப்பில் அடங்கி நின்றாள். பாடிகார்டாய் நின்றவளை, பாருங்கள் இவள்தான் என் ஜோடிகார்ட் என உலகுக்கே அறிமுகம் செய்து வைத்தான் ஜோனா!

**வாழட்டும் வளத்துடன், நல்ல நலத்துடன்!**

**முதன் முதலாய் மயங்குகிறேன்**

**கண்ணாடி போல தோன்றினாய்**

**என் முன்பு என்னைக் காட்டினாய்**

**கனா எங்கும் வினா!!!!!!!**

**(முற்றும்)**

**(இதுதான் பாடலோட ஒரிஜினல் வரிகள். எழுதிக் கொடுத்த கவிஞர்**

அபர்ணாவுக்கு எனது அன்பும் நன்றியும். இந்த அழகிய கவிதையத்தான் நான் பாடலைப் போல பட்டி டிக்கரிங் செஞ்சிருக்கேன். ஆல் க்ரேடிட் கோஸ் டூ ஹேர்)

கண்டேன் ஆயிரம் வானவில்லை

கண்மணி உன்னிரு விழிகளிலே

தந்தேன் என்னையும் மொத்தமுமாய்

பூவை உந்தன் அடியினிலே

ஆயிரம் என ஆண்டானாலும்

**என்னை ஆளும் ஆண்டாள்**
**நீயல்லவோ**

**காதல் ரதியே கண்மணியே**

**நல்முத்தே உன்னை காணத்தான்**

**கடல் கடந்து வந்தேனே**

**பித்தனும் நான் ஆனேன் உன்னாலே**

**சித்தனுமாகி உன்னை தொழுதேனே**

**வா வா என் உயிரிசையே**

**வா வா என் முத்தமிழே**

**முத்த மழை பொழிந்தே**

**என் தரிசான வாழ்வை உயிர்விக்க**
**வந்தாய் என் ஆருயிரே**

அன்புக்கொரு அரிச்சுவடியாய்

என்னை ஆலிங்கனம் செய்த

நல்லுயிரே

இனியவளே என்னை ஈர்ப்பவளே

என்னுயிரே என் ஜீவநாதமே

கட்டில் சரசம் புரிய

கன்னிகைகள் பலர் உண்டு உலகில்

என் மனதின் வலி களைய

உன்னைப் போல் ஒருத்தி உண்டோ

மடிதாங்கி தாலேலோ பாடிய

தாயும் நீதானே

கண்டிப்புடன் வழி நடத்திய என்

தந்தையும் நீதானே

என் பிறப்பை உயிர்ப்பிக்க வந்த

என் கண்மணியும் நீதானே

நீயே எந்தன் சகலுமுமாய்

நீயே எந்தன் உலகமுமாய்

காதலி என் கண்மணி

என் கட்டிக்கரும்பே

ஜோனாவின் ஜோடி கிளியே

வாந்தாயே வாழ்வை வசந்தமாக்க

நீ என் வரமாய் வந்த தேவதை

என்றும் உள்ளும் புறமும்

அன்பினால் மிளிரும் என் அழகு தேவதை